T
6650

உ

கடவுட்டுணை.

மகாமகத்துவம்பொருந்திய

பதினெண்சித்தர்கள்

திருவாய்மலர்ந்தருளிய

RAJAVAITHIA BOTHINY

இராஜவயித்தியபோதிநி.

(முதற்பாகம்)

இஃது

மதுரை-புதுவை-சென்னை

இச்சங்கங்களில்

தமிழ்த்தலைமைப்புலமைநடாத்திய

களத்தூர்.

வேதகிரிமுதலியார் பௌத்திரன்

நேட்டிவ்டாக்டர்

அங்கமுத்து முதலியாரால்

பற்பலசெய்யுட்களிலிருந்தநுபவமாய்

மொழிபெயர்க்கப்பட்டதை

ம-ள-ள-ஸ்ரீ, பிடாரித்தாங்கல்

சிதம்பரமுதலியாரவர்களது

சிரோன்மணிவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

MADRAS.

1894.

Registered Copy Right.

இதன் விலை அணா—12

☞ நண்பர்களே! பின்னால் வரைந்த முகவுரையை நன்குகவனிப்பீர்களாக:—

உ

கடவுட்துணை.

முகவுரை.

மாட்சிமைதங்கிய எனதன்பர்களுக்குப் பெரும்பாலும் வந்தனம் அன்போடுதந்தனம்.

ஐயாபுத்திமான்களே!

கடல்சூழ்ந்த நெடியவுலகமெங்கும் புகழ்பெற்றோங்கிப் பெருமைவாய்ந்த நந்தியெம்பெருமான், கும்பமுனி, திருமூலதேவர், சட்டநாதர், காலாங்கிநாதர், போகமுனி, இடைக்காடர், ஜண்டிகேசர், ரோமரிஷி, கருவூரார், புண்ணாக்கீசர், மச்சமுனி, புலிப்பாணி, யூகிமுனி, கொங்கணர், வரரிஷி, தேரையர், தன்வந்திரிமுதலிய பதினெண்சித்தர்களும் திருவாய்மலர்ந்தருளிய மூன்றிலட்சங் கிரந்தங்களில் அடியேனுக்குக் கிடைத்தசிலசெய்யுட்களை என்னாற்கூடியளவு மொழிபெயர்த்து சுருதி, யுக்தி, அநுபவம் இம்மூன்றுக்கு மொவ்வுதலானவைகளைமாத்திரமொன்றாய்த்திரட்டிப் பண்டிதாளிலக்கணமும், ரோகிகளிலக்கணமும், வியாதியஸ்தர்களை கைப்பிடித்துப்பார்க்குமளவும், நாடிகள்நடைகளும், நாடிகள்நடைகளுக்கேற்ற வியாதிக்குறிப்புகளும், மரணநாடிநடைகளும், குருநாடிநடைகளும், பூதநாடிவகைகளும், பூதநாடியின் நடைகளுக்கேற்ற செய்கைக்குறிப்புகளும், நாடிகளின் தொகுப்புகளும், வியாதிகளின் தொகுப்புகளும்-௪௪௪௮-வியாதிகளின்பெயர்களும், வியாதிகள் வந்தவரலாறும், கன்மமும், ஒவ்வொருவியாதியின் உற்பத்தியும், அந்தந்தவியாதியின் தொகுப்புகளும், ஒவ்வொருவியாதிக்குமும்மூன்று அவுஷதங்களும், வேறுபொது அவுஷதங்களும், ஒவ்வொருவியாதிக்குத் தனித்தனிஅவுஷதங்களும், அவுஷதங்களைச் சுத்திசெய்யும்விதமும், பஞ்சபூதசரக்குகளும், சத்துருமித்துருசரக்குகளும், உப்புபுளிசரக்குகளும், நாதவிந்து சரக்குகளும், பஞ்சலோகசுத்திகளும், அட்டலோகமாரணவகைகளும், கட்டுவகைகளின் பரீட்சைகளும், வியாதியஸ்தர்களுக்குத்தக்க அநுபானங்களும், மருந்துகளைக்கொடுக்குங் காலஅளவும், பத்தியபாகங்களும், பாஷாணவகைகளுக்கு முறிவுகளும் அந்தந்ததேகங்களுக்குத்தக்க அவுஷதப்பிரயோகங்களும், அந்தந்ததேகிகளினிலக்கணங்களும், சிசுவாகடமும், அடங்கிய இராஜவயித்திய போதினியென்னுமியற்பெயரமைத்து மூன்றுபாகங்களாக இயற்றத்துணிந்தமையால், இம்முதற்பாகத்தில் சொற்குற்றம், வசனகாவிய நடைக்குற்றம் இயாதேனுமிருந்திடில் பெரும்பாலும் அடியேனை அங்கீகரிப்பீர்களெனக் கோருகின்றனன்.

அன்றி யானியற்றிய இராஜவயித்தியபோதிநியின் முதற்பாகத்தை ம-ா-ா-ஸ்ரீ, பிடாரித்தாங்கல் நாராயணசாமிமுதலியாரவர்கள் குமாரரும், சிரோன்மணிவிலாச அச்சுக்கூடத் தலைவருமாகிய சிதம்பர முதலியாரவர்கள் சகலசுதந்தரத்தூடன் தாமேபெற்றுக்கொண்டு வேறொருவர் அச்சிடாதபடிக்கு ரிஜிட்டர்காப்பிரயிட்செய்யப்பட்டது.

தற்காலம் இராஜவயித்தியபோதிநி இரண்டரம்பாகமும், சப்தரிஷிவாக்கியமும், போகர்மாந்திரீகம், அட்டமாசித்து இருநூறும், பூதானந்தர் சொரூபஞானம்முந்நூறும், தன்வந்திரிஞானம் ஐநூறும், தேரையர் வயித்தியசுருக்கம் ஐம்பதும், தேரையர் வாதச்சுருக்கம் நூறும் அச்சிட்டுக்கொண்டுவருகிறோம்.

இப்படிக்கு
முச்சங்கப்புலவர்
களத்தூர் - வேதகிரிமுதலியார்
பௌத்திரன்
அங்கமுத்துமுதலியார்.
நேட்டிவ்டாக்டர்,
மதிருஸ்.

விளம்பரம்.

ஐயா!

இந்த இராஜவயித்தியபோதிநியென்னும் புத்தகம் வேண்டுபவர்கள் சென்னை-பெரம்பூரைச்சார்ந்தகுசப்பேட்டை-கூசு-கூடு-நெ-வீட்டில் வசிக்கும் சிரோன்மணிவிலாச அச்சுக்கூடத்தலைவர் ம-ா-ா-ஸ்ரீ சிதம்பரமுதலியாரவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

இதன் விலை ரூபா-0-12-0

கிருஷ்ணலீலாவிநோதக்குளிகை என்னும் தாதுவிர்த்திலேகியம்	டப்பி-1-க்கு		விலை-ரூபா-	2-0-0
சகலமேகாதிமெழுகு	...	,, 1-க்கு	,,	0-8-0
பற்பொடி	...	,, 1-க்கு	,,	0-4-0
கொருக்குபுண்களுக்குமுலாம்	,,	1-க்கு	,,	0-4-0
சத்திமாத்திரை	...	1-க்கு	,,	0-2-0
பூநாகிபேதிமாத்திரை	...	1-க்கு	,,	0-1-0
குடல்வாதஎண்ணெ	ஆழாக்கு-1-க்கு		,,	1-0-0

ஆகமருந்துகளும், ஷர்பத்துவகைகளும், இந்நூலியற்றியவரால் மிகவநுபவமாய் செய்யப்பட்டு மேற்கூறிய அச்சுக்கூடத்தலைவரிடம் விற்பனையாய்வருகிறது.

உ

கடவுட்டுணை.

அட்டவணை.

பெயர்.	பக்கம்.
பண்டிதரிலக்கணம	உ
ரோகிகளிலக்கணம்	;;
வயித்தியர்களை அழைக்குந்திக்கு	ங
பண்டிதர்கள் உடுபாவனை	;;
பண்டிதர்கள் போஜனவிதியறிய	;;
தண்ணீர் அளவு	;;
தாம்பூலவிதியறிய	;;
சையோகவிதியறிய	;;
ஸ்தானவிதியறிய	;;
வயித்தியர்புரப்படுங்கால் ஆகாச் சகுனவிதியறிய	ச
நற்சகுனவிதி	;;
நான்முகம்	;;
நாடிகளின்விவரம்	;;
நாடிகளின்தொகைகள்	;;
நாடிபார்க்கும்வகை	ரு
புருடநாடிகள்நடை	
வாதம்	
பித்தம்	
சிலேற்பனம்	;;
ஸ்திரீகள் நாடிநடை	
வாதம்	
பித்தம்	
சிலேற்பனம்	;;
மூன்றுநாடிகளிருப்பிடம்	;;
ஷை நாடிகளினிறம்	சா
நாளொன்றுக்கு மூன்றுநாடிகள் பேசும் நாழிகைஅளவு	;;
திரிநாடிகளின்குறிப்பு	;;
நாடிகள் நடக்குங்காலம்	;;
நாடிகள்பார்க்கும்மாதக்காலம்	;;
நாடிகளின் மாத்திரைஅளவு	;;
பஞ்சநாடிகள் பார்க்கும்வகை	;;
குருநாடியின் செய்கைக்குறிப்பு	எ
வாரங்களில்பேதித்துநடிக்கும்நாடிகளின்குணம்	;;
நாடிகளறியப்படாமை	;;
மரணநாடி அறிதல்	;;

பெயர்.	பக்கம்.
ஷை உ-வது	அ
ஷை ங-வது	;;
ஷை ச-வது	;;
ஷை ரு-வது	;;
ஷை சா-வது	;;
ஷை எ-வது	;;
ஷை அ-வது	;;
ஷை கூ-வது	;;
ஷை ய-வது	;;
ஷை கக-வது	கூ
ஷை கஉ-வது	;;
ஷை கங-வது	;;
ஷை கச-வது	;;
ஷை கரு-வது	;;
ஷை கசா-வது	;;
ஷை கஎ-வது	;;
ஷை கஅ-வது	;;
ஷை ககூ-வது	;;
ஷை உய-வது	ய
தொடமரணக்குறி	;;
பூதநாடி	;;
ஸ்திரீகளுக்கு பைசாசுதொடர்ந்த குணம்பூதநாடியாலறியும் விவரம்	;;
உ-வது	;;
ங-வது	;;
ச-வது	;;
ரு-வது	கக
சா-வது	;;
எ-வது	;;
அ-வது	;;
கூ-வது	;;
ய-வது	;;
கக வது	;;
கஉ-வது	கஉ
பயித்தியநாடியறிய	;;
மரணக்குறிகள்	;;
உ-வது	;;
ங-வது	;;

பெயர்.	பக்கம்.	பெயர்.	பக்கம்.
௪-வது	௧௨	௨-வது மருந்து	௨௨
௫-வது	;;	௩-வது மருந்து	௨௩
௬-வது	;;	தொந்தசுரம்வருதல்	;;
௭-வது	௧௩	நிவர்த்திமருந்து	;;
௮-வது	;;	௨-வது மருந்து	௨௪
௯-வது	;;	௩-வது மருந்து	;;
௰-வது	;;	விஷசுரம்வருதல்	;;
தேகவிலக்கணம்	;;	பரிசாரமருந்து	;;
வாததேகக்குறி	;;	௨-வது மருந்து	;;
பித்ததேகக்குறி	;;	௩-வது மருந்து	௨௫
பித்தவாததேகக்குறி	௧௪	சுரங்கள்-௬௪-க்கும் அவுஷதங்கள்	;;
பித்தசேத்துமதேகக்குறி	;;	௨-வது மருந்து	;;
சேத்துமதேகக்குறி	;;	௩-வது மருந்து	;;
சேத்துமபித்ததேகக்குறி	;;	௪-வது மருந்து	;;
சேத்துமவாததேகக்குறி	;;	௫-வது மருந்து	௨௬
வேறுவிதக்குறிகள்	;;	மூலரோக உற்பத்தி	;;
மலக்குறி	;;	மூலரோகத்தொகைகள்	;;
நீர்க்குறி	௧௫	மூலரோகக்குணங்கள்	௨௭
கண்கள்குறி	;;	நீர்மூலம்வருதல்	;;
நாக்குறி	;;	நிவர்த்திமருந்து	;;
தந்தக்குறி	;;	௨-வது மருந்து	;;
நோய்கள்வரும்விதம்	;;	௩-வது மருந்து	;;
௪௪௮-வியாதிகளின்தொகுப்பு	௧௬	முளைமூலம்வருதல்	௨௮
சுரரோகங்களின்தொகைகள்	;;	நிவர்த்திமருந்து	;;
சுரங்கள் உற்பத்தி	௧௭	௨-வது மருந்து	;;
வாதசுரம்வருதல்	;;	௩-வது மருந்து	;;
நிவாரணக்கியாழம்	;;	சீழ்மூலம்வருதல்	௨௯
௨-வது மருந்து	;;	நிவர்த்திமருந்து	;;
௩-வது மருந்து	௧௮	௨-வது மருந்து	;;
பித்தசுரம் வருதல்	;;	௩-வது மருந்து	;;
நிவாரணக்கியாழம்	;;	சுருக்குமூலம்வருதல்	;;
௨-வது கியாழம்	;;	நிவர்த்திமருந்து	;;
௩-வது கியாழம்	௧௯	௨-வது மருந்து	௩௰
ஐயசுரம்வருதல்	;;	௩-வது மருந்து	;;
நிவர்த்திகியாழம்	;;	புறமூலம் வருதல்	;;
௨-வது மருந்து	;;	நிவர்த்திமருந்து	;;
௩-வது மருந்து	௨௰	௨-வது மருந்து	;;
வாதபித்தசுரம்வருதல்	;;	௩-வது மருந்து	௩௧
நிவாரணமருந்து	;;	மூலவகைகள்-௨௧-க்கும் பொது அவுஷதங்கள்	;;
௨-வது மருந்து	;;	௨-வது மருந்து	;;
௩-வது மருந்து	௨௧	௩-வது மருந்து	;;
வாதசிலேத்துமசுரம்வருதல்	;;	௪-வது மருந்து	௩௨
பரிகாரமருந்து	;;	௫-வது மருந்து	;;
௨-வது மருந்து	;;	௬-வது மருந்து	;;
௩-வது மருந்து	௨௨	௭-வது மருந்து	;;
சிலேத்துமபித்தசுரம்	;;	காசரோக உற்பத்தி	௩௩
நிவர்த்திமருந்து	;;		

பெயர்.	பக்கம்.
காசரோகத்தொகைகள்	௩௪
வாதகாசம்வருதல்	;;
நிவர்த்திமருந்து	;;
உ-வது மருந்து	;;
௩-வது மருந்து	௩௫
பித்தகாசம்வருதல்	;;
நிவர்த்திமருந்து	;;
வெள்ளிச்சுண்ணம்	;;
உ-வது மருந்து	௩௬
௩-வது மருந்து	;;
ஐயகாசம்வருதல்	;;
நிவர்த்திமருந்து	;;
உ-வது மருந்து	௩௭
௩-வது மருந்து	;;
தயிலம்	;;
சுவாசகாசம்வருதல்	௩௮
நிவர்த்திமருந்து	;;
தயிலம்	;;
உ-வது மருந்து	;;
௩-வது மருந்து	௩௯
தொந்தகாசரோகம்வருதல்	;;
நிவர்த்திமருந்து	;;
உ-வது மருந்து	;;
௩-வது மருந்து	௪௰
சகலகாசரோகங்களுக்கும் பொது அவுஷதங்கள்	;;
உ-வது மருந்து	;;
௩-வது மருந்து	௪௧
௪-வது மருந்து	;;
௫-வது மருந்து	;;
௬-வது மருந்து	;;
௭-வது மருந்து	;;
குன்மரோக உற்பத்தி	௪௨
குன்மரோகத்தொகைகள்	;;
வாதகுன்மம்வருதல்	;;
நிவர்த்திமருந்து	;;
உ-வது மருந்து	௪௩
௩-வது மருந்து	;;
பித்தகுன்மம்வருதல்	;;
நிவர்த்திமருந்து	;;
உ-வது மருந்து	௪௪
௩-வது மருந்து	;;
ஐயகுன்மம்வருதல்	;;
நிவர்த்திமருந்து	;;
உ-வது மருந்து	;;
௩-வது மருந்து	௪௫
எரிகுன்மம்வருதல்	;;

பெயர்.	பக்கம்.
நிவர்த்திமருந்து	௪௫
உ-வது மருந்து	;;
௩-வது மருந்து	௪௬
சத்திகுன்மம்வருதல்	;;
நிவர்த்திமருந்து	;;
உ-வது மருந்து	௪௭
௩-வது மருந்து	;;
அட்டகுன்மரோகங்களுக்கும் பொது அவுஷதங்கள்	;;
உ-வது மருந்து	;;
௩-வது மருந்து	;;
௪-வது மருந்து	௪௮
௫-வது மருந்து	;;
௬-வது மருந்து	;;
சூலரோகஉற்பத்தி	;;
சூலரோகத்தொகைகள்	௪௯
வாதசூலவருதல்	;;
நிவர்த்திகியாழம்	;;
உ-வது மருந்து	;;
௩-வது மருந்து	;;
பித்தசூலவருதல்	;;
நிவர்த்திகியாழம்	௫௰
உ-வது மருந்து	;;
௩-வது மருந்து	;;
தேசதான்லேகியம்	;;
ஐயசூலவருதல்	௫௧
நிவர்த்திகியாழம்	;;
உ-வது மருந்து	;;
௩-வது மருந்து	;;
குன்மசூலவருதல்	;;
நிவர்த்திமருந்து	௫௨
உ-வது மருந்து	;;
௩-வது மருந்து	;;
தொந்தசூல உற்பத்தி	;;
நிவர்த்திமருந்து	௫௩
உ-வது மருந்து	;;
௩-வது மருந்து	;;
சூலரோகம்-௫-க்கும் பொது அவுஷதங்கள்	;;
உ-வது மருந்து	;;
௩-வது மருந்து	௫௪
௪-வது மருந்து	;;
௫-வது மருந்து	;;
மேகரோக உற்பத்தி	;;
மேகரோகத்தொகைகள்	௫௫
வெள்ளைமேகம்வருதல்	;;
நிவர்த்திமருந்து	;;

பெயர்.	பக்கம்.
௨-வது மருந்து	௫௫
௩-வது மருந்து	௫௬
இரத்தமேகம்வருதல்	;;
நிவர்த்திமருந்து	;;
கல்நார்பற்பம்	;;
சிங்கியென்னும்மான்கொம்புபற்பம்	;;
பவளபற்பம்	௫௭
நாகபற்பம்	;;
௨-வது மருந்து	;;
௩-வது மருந்து	;;
மதுமேகம்வருதல்	;;
நிவர்த்திமருந்து	௫௮
௨-வது மருந்து	;;
௩-வது மருந்து	;;
தந்திமேகம் வருதல்	;;
நிவர்த்திமருந்து	;;
கல்மதம்	௫௯
கல்நார்	;;
கற்பூரசிலாசத்து	;;
ஆச்சியமேகம்வருதல்	;;
நிவர்த்திமருந்து	;;
௨-வது மருந்து	௬௰
௩-வது மருந்து	;;
மேகரோகங்கள்-௨௧-க்கும் பொது அவுஷதங்கள்	;;
௨-வது மருந்து	௬௧
௩-வது மருந்து	;;
நாகபற்பம்	௬௨
௪-வது மருந்து	;;
௫-வது மருந்து	;;
௬-வது மருந்து	;;
௭-வது மருந்து	;;
சகலரோகங்களுக்கும் குளிகை வகைகள்	௬௩
கோடாசூரிக்குளிகை	;;
ஷை குளிகைக்குஅனுபானங்களும் தீரும்வியாதிகளும்	௬௪
வச்சிரகோடாசூரிக்குளிகை	;;
அநுபானம்	௬௫
சுரங்களுக்கு ஏலாதிக்குளிகை	;;
அநுபானம்	;;
மிருதாதிகுளிகை	௬௬
அநுபானம்	;;
வசந்தகுலமகாரசக்குளிகை	;;
அநுபானம்	;;
கோரோசினைக்குளிகை	;;
அநுபானம்	;;
இரைப்பு, சுவாசம், இருமல், ஈளை காசத்திற்குதிப்பிலிக்குளிகை	௬௭
பேதிக்குபூபதிக்குளிகை	;;
சுத்திவகைகள்	;;
விரோசனத்திற்கு வாலசஞ்சீவிக் கருப்புகுளிகை	;;
விரோசனத்திற்குலிங்கக்குளிகை	;;
சித்தானந்தவயிரவக்குளிகை	;;
அநுபானம்	௬௮
காயமாத்திரை	;;
அநுபானம்	;;
சன்னிக்குளிகை	;;
அநுபானம்	;;
கன்னிகைசிந்தாமணிக்குளிகை	;;
அநுபானம்	;;
மூச்சுரத்திற்கும் பச்சைகுளிகை	;;
அநுபானம்	௬௯
திரிலோகச்சிந்தாமணிக்குளிகை	;;
அநுபானம்	0
புண்கிரந்திக்குக் கருந்துளசிக்குளி	0
மேகப்புண்கிரந்திக்குப்பூரக்குளி	0
மேகவாய்விறல் கைகால் பிடிப்புக்கும் மேகங்காண்கிறவர்களுக்கும் இரசக்குளிகை	0
வேறுபூரக்குளிகை	௭௰
தாளகக்குளிகை	0
கெவுரிக்குளிகை	0
அநுபானம்	0
சுரராமபாணக்குளிகை	0
அநுபான	௭௧
பூபதிக்குளிகை	0
அநுபானம்	0
வேறுசுரக்குளிகை	0
அநுபானம்	0
வாதராட்சதன்குளிகை	0
அநுபானம்	0
ஆயரசக்குளிகை	0
அநுபானம்	௭௨
வாந்திபேதிக்குநிவர்த்திகுளிகை	0
அநுபானம்	0
மகாபுன்னைவேர்க்குளிகை	0
அநுபானம்	0
மாந்தத்திற்குவாலசஞ்சீவிக்குளிகை	0
அநுபானம்	0
மகாலிங்காதிக்குளிகை	0
அநுபானம்	௭௩
கீரிழிவுமதுமேகத்திற்குகற்பூராதிகு	0

பெயர்.	பக்கம்.
அனுபானம்	௭௩
சன்னி-௰௩-க்கும் வீரக்குளிகை	0
அனுபானம்	0
கிராணிக்கு கபாடக்குளிகை	௭௪
அனுபானம்	0
சீதசுரம் சீதபேதிகளுக்கு ஆமையோடுகுளிகை	0
அனுபானம்	0
வீரியவிர்த்திக்குளிகை	0
அனுபானம்	0
வேறுவீரியவிர்த்திக்குளிகை	0
அனுபானம்	௭௫
வாலரசக்குளிகை	0
அனுபானம்	0
சூரணவகைகள்	0
கெந்தகச்சூரணம்	0
பஞ்சவர்னபூபதிச்சூரணம்	0
வேர்க்கொம்புசூரணம்	௭௬
தசமூலிச்சூரணம்	0
வசுவாசிச்சூரணம்	0
சத்திவிக்கலுக்குச்சூரணம்	0
கக்குவாய்க்கு திப்பிலிச்சூரணம்	0
ஈளைஇருமலுக்குச்சூரணம்	௭௭
வாதராட்சதன்சூரணம்	0
அசுவகெந்திசூரணம்	0
திராட்சாதிசூரணம்	0
பஞ்சதீபாக்கினிச்சூரணம்	0
அனுபானம்	௭௮
லேகியவகைகள்	0
கடுகுலேகியம்	0
குங்குமப்பூலேகியம்	0
தும்மட்டிக்காய்கடுகுலேகியம்	0
கண்டாத்திரிலேகியம்	0
சுக்குலேகியம்	௭௯
மகாகூழ்ப்பாண்டமதனசிந்தாமணிலேகியம்	0
கையாந்தகரைக்கிருதம்	௮௰
அயச்செந்தூரம்	0
உடும்புலேகியம்	0
பிரண்டைலேகியம்	௮௧
ஜாதிக்காய்லேகியம்	0
கருணைக்கிழங்குலேகியம்	0
சிவனார்வேம்புலேகியம்	௮௨
தாளிசப்பத்திரிலேகியம்	0
தாதுவிர்த்திக்குமன்மதலேகியம்	0
கிருஷ்ணலீலாவினோதக்குளிகை என்னும் தாதுவிர்த்திலேகியம்	௮௩
தாதுவிர்த்திக்குப்பாயாசங்கள்	௮௪
ஷை ௨-வது	0
ஷை ௩-வது	0
ஷை ௪-வது	௮௫
ஷை ௫-வது	0
எண்ணைவகைகள்	0
மேகவியாதிகளுக்கு நிலக்கடம்பு எண்ணை	0
மேகத்தினாலிளைத்தவர்களுக்கு நல்லெண்ணை	0
மேகவியாதிகளுக்குதேங்காயெண்	௮௬
சகலமேகங்களுக்குசஞ்சீவிஎண்ணை	0
இடியெண்ணை	0
கல்லுருவிஎண்ணை	௮௭
குமரிஎண்ணை	0
குளிர்ச்சிக்குஎண்ணை	0
கொட்டைப்பாக்கெண்ணை	0
சீதஇரத்தக்கழிச்சலுக்குஎண்ணை	0
நிம்பழஎண்ணை	௮௮
குழந்தைகளுக்குமாந்தஎண்ணை	0
தேங்காயெண்ணை	0
கணத்தெண்ணை	௮௯
வெள்ளெண்ணை	0
இரசகற்பூரஎண்ணை	0
குழம்புவகைகள்	0
விரோசனத்துக்கு பவழக்குழம்பு	0
பஞ்சசூதக்குழம்பு	0
சேத்துமக்குழம்பு	௯௰
இந்துப்புக்குழம்பு	0
சண்டமாருதக்குழம்பு	0
அனுபானம்தீரும்வியாதியும்	0
தயிலவகைகள்	௯௧
கெந்தகத்தயிலம்	0
வேறுகெந்தகத்தயிலம்	0
பரங்கிப்பட்டைபதங்கம்	0
மகாசந்தனாதித்தயிலம்	௯௨
இலகுசந்தனாதித்தயிலம்	௯௩
சந்தனாதித்தயிலம்	0
அரக்கெண்ணைதயிலம்	௯௪
அரக்குத்தயிலம்	0
பித்தம்-௪௰-க்கு மூதண்டத்தயிலம்	0
பித்தத்திற்குமிளகுதயிலம்	0
அழிஞ்சல்வேர்த்தயிலம்	௯௫
இலைத்தயிலம்	0
ஐந்தெண்ணைத்தயிலம்	0
சகலபீநிசத்திற்குதயிலம்	0
நேத்திரநோய்-௯௬-க்குதயிலம்	௯௬

பெயர்.	பக்கம்.
வில்வத்தயிலம்	௯௬
காதில்வரும்வியாதிகளுக்கு முசுறு முட்டைதயிலம்	0
பற்பவகைகள்	0
தாளகபற்பம்	0
வேறுதாளகபற்பம்	௯௭
தங்கபற்பம்	0
இரசவங்கபுட்டிபற்பம்	௯௮
வெள்ளைஅப்பிரகபற்பம்	0
இலிங்கபதங்கபற்பம்	0
செந்தூரவகைகள்	௯௯
இலிங்கச்செந்தூரம்	0
வேறுலிங்கச்செந்தூரம்	0
கறியுப்புசெந்தூரம்	0
சண்டமாருதச்செந்தூரம்	௱
அயகெந்திசெந்தூரம்	0
மண்டூரச்செந்தூரம்	0
பேதிமாத்திரைகள்	௱௧
௨-வது	0
௩-வது	0
௪-வது	0
௫-வது	0
௬-வது	0
௭-வது	0
பஞ்சபூதவிவரம்	௱௨
லோகபஞ்சபூதப்பெயர்	0
லோகபஞ்சபூதவர்ணம்	0
கருவிபஞ்சபூதவிவரம்	0
பாஷாணப்பஞ்சபூதவிவரம்	0
லவணபஞ்சபூதவிவரம்	0
பாஷாணப்பிரிவுபஞ்சபூதவிவரம்	0
உபரசபஞ்சபூதவிவரம்	0
அட்டலோகமாரணதினுசுகள்	௱௩
சத்துருமித்துருவிவரம்	0
தங்கச்சத்துரு	0
கருவங்கச்சத்துரு	0
கருவங்கமித்துரு	0
அயச்சத்துரு	0
அயமித்துரு	0
நாகச்சத்துரு	௱௪
நாகமித்துரு	0
துருசுசத்துரு	0
துருசுமித்துரு	0
சாரச்சத்துரு	0
சாரமித்துரு	0
வெடியுப்புசத்துரு	0
வெடியுப்புமித்துரு	0
கல்லுப்புசத்துரு	௱௪
கல்லுப்புமித்துரு	௱௫
காரசத்துரு	0
காரமித்துரு	0
சூதசத்துரு	0
சூதமித்துரு	0
உப்புபுளிக்கு	0
நாதவிந்துகளுக்கு	0
கட்டுவகைகளின் பரிட்சை	௱௬
எடைகளின்குணமறிய	0
பஞ்சலோகசுத்திகள்	0
பாஷாணவகைகள்சுத்தி	௱௭
கெந்தகச்சுத்தி	0
இரசச்சுத்தி	0
சங்குபாஷாணச்சுத்தி	0
கெவுரிசுத்தி	0
லிங்கசுத்தி	0
தாளகச்சுத்தி	0
பூரச்சுத்தி	0
வீரச்சுத்தி	0
வெள்ளைப்பாஷாணச்சுத்தி	௱௮
துருசுசுத்தி	0
பால்துத்தம்சுத்தி	0
மனோசிலைசுத்தி	0
நேர்வாளசுத்தி	0
உபரசவகைகள்சுத்தி	0
சிலாசத்துசுத்தி	0
கல்நார்சுத்தி	0
வெண்காரச்சுத்தி	0
கல்மதச்சுத்தி	0
படிகாரச்சுத்தி	௱௯
சிங்கிசுத்தி	0
பவழச்சுத்தி	0
பலகரைச்சுத்தி	0
முறிவுதினுசுகள்	0
பாஷாணமுறிவு	0
வீரமுறிவு	0
இரசகற்பூரமுறிவு	0
துருசுமுறிவு	0
கெந்தகமுறிவு	0
நாபிமுறிவு	0
இரசவேக்காட்டிற்குமுறிவு	௱௰
பொதுமுறிவு	0
ஊழிக்காற்றென்னும்வாந்திபேதியின் விவரம்	0
கொம்பன்விவரம்	0
குடற்படுவன்விவரம்	0

பெயர்.	பக்கம்.
அக்கரன்விபரம்	௱௰
வாந்திபேதியின்நிவர்த்திஅவுஷதம்	ககக
உ-வது மருந்து	0
ங-வது மருந்து	0
சசுசஅ-வியாதிகளுக்குமூதற்காரணமாகிய மஞேவலியின்விவரம்	
சிசுவாகடத்திரட்டு	ககங
மாதாபிதாவால்பிள்ளைக்குவரும்நோய்	0
மாந்தரோக உற்பத்தி	0
மாந்தரோகத்தொகைகள்	0
பொதுமாந்தரோகங்களின்குணம்	0
குழந்தைகளுக்குப்பொதுஅவுஷதங்கள்	ககச
மாந்தத்துக்கு பச்சிலைச்சாறு	0
மாந்தத்துக்கு குழம்பு	0
மாந்தத்துக்கு குடிநீர்	0
மாந்தத்துக்கு கியாழம்	0
மாந்தத்துக்கு குளிகை	ககரு
அநுபானம்	0
உளைமாந்தம், உட்சுரம், எலும்புரிக்கிக்கு மருந்து	0
சுழிகணம், உப்பிசம், கோழைக்கட்டு, இளைப்புக்குமருந்து	0
மாந்ததோஷம், வலிப்பு, மலக்கட்டுக்கு மருந்து	0
மாந்தம், வயிர்வலி, செரியாமாந்தத்திற்கு மருந்து	0
மாந்தவலிப்பு, காக்கைவலிப்புக்கு மருந்து	0
மாந்தவீக்கம், விஷவீக்கம், சுரம், நீர்க்கட்டுக்குகியாழம்	0
உப்பல்மாந்தத்திற்குமருந்து	ககசு
மாந்தப்பொருமலுக்குஎண்ணை	0
அமுர்தாதிக்குளிகை	0
கொதிப்புகணத்துக்குஎண்ணை	0
எரிகணத்துக்கு எண்ணை	ககஎ
முக்குகணத்திற்குஎண்ணை	0
முக்கல்வயிற்றுக்கடுப்புக்கு	0
சீதக்கடுப்புக்குமருந்து	0
கஅ-கணம் வெட்டைசுரம், உலர்ந்த தேகத்திற்கு எண்ணை	0
தோஷம்-கூ, மாந்தம்-கூ, தெற்கத்துக்கணமுதலாகிய-கஅ-கணத்திற்கும் எண்ணை	ககஅ
கணம்-கஅ-க்கு நெய்	0
அதிமதுரமாத்திரை	0

பெயர்.	பக்கம்.
அமிர்தசஞ்சீவிக்குளிகை	ககஅ
பூபதிமாத்திரை	0
பேதிக்கு அமிர்தசஞ்சீவி லிங்கக்குழம்பு	கககூ
பேதிபூபதிமாத்திரை	0
ஏலாதிமாத்திரை	0
சட்டுவாதிமாத்திரை	0
கற்பூராதிமாத்திரை	கஉய
கோடாசுழிமாத்திரை	0
கோரோசினைமாத்திரை	0
சஞ்சீவிக்குளிகை	0
விரோசனசண்பகப்பூமாத்திரை	0
இரசச்செந்தூரமாத்திரை	கஉக
கஸ்தூரிமாத்திரை	0
இராமபாணக்குளிகை	0
பச்சைகற்பூரமாத்திரை	0
பாலசஞ்சீவிமாத்திரை	0
குருமாத்திரை	0
பூரமாத்திரை	கஉஉ
வில்வாதிமாத்திரை	0
விழுங்குமாத்திரை	0
வேறு ஏலாதிமாத்திரை	0
பாசுபதக்குளிகை	0
வேறு பாலசஞ்சீவிமாத்திரை	கஉங
அடைக்கியாழம்	0
மசரைநோய்க்குநெய்	0
மாந்தகோடாரி எண்ணை	0
வல்லாரைநெய்	கஉச
இனிப்புச்சுகபேதிக்குழம்பு	0
வச்சிரகண்டிலேகியம்	0
வெந்தயக்களி	0
தேங்காய்எண்ணை	கஉரு
நல்லெண்ணை	0
சோதிரிஷிதயிலம்	0
கியாழம்	0
சாறுவகைகள்	0
சிறுநீர்வகைகள்	0
கற்கவகைச்சூரணங்கள்	கஉசு
ஜாதிக்காய்எண்ணை	0
சூரியபுடநல்லெண்ணை	கஉஎ
முடக்குதயிலம்	0
வேப்பெண்ணை	0
பதினெட்டுகரப்பானுக்குஎண்ணை	0
இருமலுக்குச்சூரணம்	0
அபினிமாத்திரை	0
உப்பல்மாந்தக்குளிகை	கஉஅ

அட்டவணை - முற்றிற்று.

உ

கடவுள்துணை.

மகாமகுத்துவம்பொருந்திய

பதினெண்சித்தர்கள்

திருவாய்மலர்ந்தருளிய

இராஜவயித்திய போதினி.

காப்பு.

ஓமென்னும் பிரணவத்தி னருளே காப்பு
ஒளிபெருகு மௌனதாயாள் பாதங் காப்பு
ஆமென்னு மயிலுடையோ னடியே காப்பு
அரகரா நூலொன்றாய்த் திரட்டி கூற
ஊமென்னும் பொருளதனின் ரகசி யத்தை
யுற்றுணர்ந்த பெரியோராஞ் சின்மயத் தோர்
தாமென்னுஞ் செறுக்கற்ற பதினெண் சித்தர்
தாளடிக்கு யென்னாளுங் காப்பு தானே.

அவையடக்கம்.

என்னாளுங் கற்றோர்முன் பேச வல்லேன்
யெழில்பெருகும் பாவினங்கள் கூற வல்லேன்
பொன்மேனிப் பதினெண்பேர் செய்த நூலில்
புகன்றிருக்கும் ரகசியத்திற் சிலதி யற்ற
உன்னினேன் வசனகா வியம தாக
வுரைத்தவிந்நூற் றனிற்குற்ற மிருக்கு மாயின்
தன்னியராம் பெரியோர்நூ லென மதித்து
சங்கைகளைத் தெரிந்துகொள்வீர் போற்றி தானே.

பண்டிதரிலக்கணம்.

நாடோறும் சிவபூஜைநடாத்தல், பொய்சொல்லாமை, சற்சனசகவாசம், பரர்களுக்கமுதளித்தல், பரதாரம்விரும்பாமை, தனக்குமேலாகிய பண்டிதரையோசித்தல், சரக்குகளை நன்றாய்ச் சுத்திசெய்யத் தெரிந்துகொள்ளல், நோயாளியின் தேகக்குறிப்பறிதல், அந்தந்ததேகங்களுக்குரிய அவுஷதங்களின்திடமறிந்து பிரயோகித்தல், கைப்பரிக்ஷை, நயனப்பரிக்ஷை, மெய்ப்பரிக்ஷை, சப்தபரிக்ஷை, நாடிப்பரிக்ஷை, நரப்பரிக்ஷை, ஜலப்பரிக்ஷை, மலப்பரிக்ஷை முதலிய அஷ்டவிதப்பரிக்ஷைகளை நன்கறிதல், கைபாகம், உருசிபாகம், செய்பாகம், சாசனபாகமென்னும் நான்குபாகங்களையும், வழிபாடு, தேவபாடு, முறைபாடு, குணபாடு ஆகிய நான்குபாடுகளையும், ஸ்நானபரிகாரம், நித்திரைபரிகாரம், சையோகபரிகாரம், போசனபரிகாரம் என்னுமிந்நான்குபரிகாரங்களையுங் கண்டறிதல், ரோகஸ்திரீகளை தங்கை தமக்கைகளெனப் பாவித்தல், அதிக ஆசையின்றி வியாதிகளுக்குத்தக்க அவுஷதச்செலவும், தனது ஜீவனத்துக்குப் போதுமானபொருளைப் பெற்றுக்கொள்ளல், தொந்தரோகங்களைத் தெரிந்துசொள்ளல், வியாதியஸ்தர்களுக்கு மருந்தூணு மூணுதெனக்கண்டறிதல், சாத்தியமசாத்தியம் வகுத்துரைத்தல், அவுஷதம் பிரயோகிக்குங்கால் ஆசானைத் தியானித்தல், ரோகஸ்தர்கள் வயித்தியரையழைக்கும்போது இவ்வியாதிநீங்கும் நீங்காதென்றுணர்ந்துரைத்தல், சோதிடம், அதர்வணமுதலிய சாத்திரங்களைக் கற்றுணர்தலாகிய வித்தகையகுணங்கள்வாய்த்தவர்கள் சிறந்தபண்டிதர்களாவார்களெனப் பதினெண்சித்தர்களும், நவகோடி ரிஷிகளும், நாற்பத்தெண்பேர் முனிவர்களும், திருவாய்மலர்ந்தருளிய பற்பலநூல்களிலிருந்தெடுத்துச்சுருக்கமாயெழுதலாயினோம்.

ரோகிகளிலக்கணம்.

தெய்வீகத்தன்மைவாய்ந்த பண்டிதரின்திருவாசல்கார்த்து உள்ளன்போடு ஆசானுபாகுவாயழைத்தல், வேண்டிய சைத்தியோபசாரஞ்செய்து மனங்களிப்பித்தல், பயபக்திவிசுவாசத்தோடு கைகாட்டல், பண்டிதர் மனம்நோகாமல்தன்னாற்கூடியபொருளுதவிசெய்தல், அவர் திருவடியில் முடிதாழ்ந்து அவுஷதம்பெற்றுண்ணல், அவர்களுக்குத் தாம்பூலம் பரிசளித்தலாகிய வித்தகையகுணங்கள்வாய்த்த ரோகிகளுக்கு மருந்தூணும், மற்றவர்களுக் கூணுதெனப் பதினெண்பேர்கள் விரிவாய்ச்சொல்லியதை இங்ஙனஞ் சுருக்கமாய்க் கூறலாயினோம்.

o

வயித்தியர்களை அழைக்கும் திக்கு.

இந்திரன்திக்கில் நின்றழைக்கவேண்டும். அன்றி, அக்கினிதிசையில் நின்றழைத்தால் உடனேமரணம், இயமன்திக்கில் நோய் நீங்காமையின்றிருந்துபோவன், நிருதியில் கலக்கச்சாவு, வருணதிசையில் அநுகூலமிருது, வாயுவில் மத்திபம், ஈசானியம், குபேரதிசையில் நின்றழைக்கில் வெகுசுலபமாய் வியாதிநீங்கி சுகமடைவரென்றறிக.

பண்டிதர்கள் உடுபாவனை.

சிவப்பு மஞ்சள் கறுசிறப்புள்ளி காவி முதலிய பற்பலநிறமுள்ள ஆடைகளைநீக்கி வெண்மைபொருந்திய ஆடைகளை உடுத்தி பரிமளமணிந்து பண்டிதஞ்செய்யவேண்டுமென்றறிக.

பண்டிதர்கள் போஜனவிதியறிய.

தத்தமது கைகளினால் முப்பத்திரண்டு கவளமுள்ளபோஜனத்தை பற்களூன்றுமறப்புசிக்கவும், அப்படியூன்றினல் கிராணிவந்தெய்துமென்றறிக, அன்றி அறுசுவைகளையுஞ் சமப்படுத்திப்புசிக்கவும்.

தண்ணீர் அளவு.

அவ்வவர்கள் உண்டபின் எட்டுமுணர்ஜலம் புசிக்கவேண்டுமென்றறியவும்.

தாம்பூலவிதியறிய.

வெள்ளிலை, பாக்கு, சுண்ணம் இவைமூன்றுமொன்றுகூடில் விஷமாகும், ஆகையால் முதல்கூட்டுமெச்சிலை உமிழவும், இரண்டாவதுகூட்டுமெச்சில் பித்தமாகையால் அதையுந்துப்பி மூன்றுவது எச்சில் உட்கொண்டால் தேவாமுதத்திற்கொப்பாகுமன்றி கபரோகமுதலியதையும் போக்குமென்றறிக.

சையோகவிதியறிய.

உண்டுதாம்பூலந்தரித்துக் கலவைச்சாந்தணிந்து இரவில் ஒருசாமத்திற்குமேல் லீலைபுரிந்தால், தேகவீனம்வாராது, அன்றியும்மாதத்திற்கிரண்டுவிசை நடாத்தவேண்டுமென்றறிக.

ஸ்நாநவிதியறிய.

மையலாரிட மணைந்தெழுந்தவுடன் ஸ்நாநம், சவா முதலியதுஞ்செய்துக்கொள்வதால் தேகங்கெட்டுசன்னிபாதம்வந்தெய்துமாகையால் அக்காலஞ் சையோகம்நீக்கவேண்டுமென்றறிக.

வயித்தியர் புறப்படுங்கால் ஆகாச்சகுனவிதியறிய.

ஒத்தைப்பிராமணன், மொட்டை, தலைவிரித்தான், சன்னியாசி, தட்டான், செட்டி, நெருப்பு, கத்தி, இரும்பு, அழுகைக்குரல், விறகு, தும்பல், பூனை, சாரை, சர்ப்பம், ஓரி, நாற்காலி, பஞ்சணை, சாணான், சக்கிலி, குயவன், எண்ணெ வாணியன், கைம்பெண்முதலியவை நேரிடில் துற்சகுனமென்றறிக.

நற்சகுனவிதி.

சுமங்கலி, வளையற்காரன், வேதகோஷ்டம், பரிமளம், வாத்தியம், சங்கீதசாரம், தாம்பூலம், காட்டானை, இராஜாளி, குரங்கு, அரசன், கண்ணாடி, பித்தன், தயிர், பால், நெய்க்குடம், சாணமுதலியதுமெதிரிடில் நற்சகுனமென்றறிக.

நான்முகம்.

நாடிகளின் விவரம்.

எழுபத்திராயிரநாடிகளை இடை, பிங்கலை, சுழினை, காந்தாரி, அத்தி, சிகுவை, அலம்புடை, புகுடன், குருவன், சங்கினியென்னும் தசநாடிகளாக்கியும், அதற்குற்ற பிராணன், அபானன், உதானன், சமானன், வியானன், நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்செயனாகிய தசவாய்வுகளாகவும், அதைச்சுருக்கி சோத்திரம், தொக்கு, சட்சு, சிங்குவை, ஆக்கிராணமென்னும் பஞ்சநாடிகளாக்கியும், அதற்குற்ற பிரிதிவு, அப்பு, வாய்வு, தேய்வு, ஆகாயமாகிய பஞ்சபூதங்களாகக்கூறியுங் காணவரிதெனத் தெளிவாய்ச்சுருக்கி பிரம்மா, விஷ்ணு, ருத்திரனென்னும் திரிமூர்த்திசொரூபமாயும், அகார, உகார, மகார வாத்மகமாகவிளங்கும், வாதம், பித்தம், சிலேற்பனநாடிகள்மூன்றாக்கி எடுத்துக்காட்டினர் அகஸ்தியர்முதலிய பெரியோர்களென்றறிக.

நாடிகளின் தொகைகள்.

சிரசில்-௭௲-நாடிகளும், இரண்டுசெவிகளில்-௯௰-நாடிகளும், விழிகளிரண்டில்-௪௲-நாடிகளும், மூக்கில்-௯௯௯௰-நாடிகளும், இரண்டுகன்னங்களில்-௫௲-நாடிகளும், தோள்களில்-௲-நாடிகளும், கண்டத்தானத்தில்-௲-நாடிகளும், இரண்டுகைகளில்-௯௲-நாடிகளும், தொண்டை தொப்பூழில்-௯௱௰௯-நாடிகளும், பிடரியின்கீழ்-௮௲-நாடிகளும் விலாவில்-௯௲-நாடிகளும், லிங்கம் யோனி அடிவயிற்றில்-௭௲-நாடி

களும், மூலத்தில்-ஙதூ-நாடிகளும்; இடைசந்தில்-உதூ-நாடிகளும், பாதங்களில்-தூா-நாடிகளும் ஆகிய எம௨தூ-நாடிகளும் பாதாதிகே சபரியந்தம் வியாபித்திருக்குமென்றறியவும்.

நாடிபார்க்கும் வகை.

வலதுகையை மெட்டைவாங்கி பெருவிரலின்கீழ் ஒருவிரல் அங்குலந்தள்ளி பண்டிதர் மூன்றுவிரல்களைவைத்து வேறெண்ணமின்றி உற்றுநோக்கில் நாடிகள்மூன்றும் பேசுமென்றறிக.

புருடநாடிகள் நடை.

வாதம்.

ஆள்தூண்டிவிரலில் அன்னம்போலும், சேவற்போலும், மயில்போலும் நடையுளதாயப்பேசுமாம் வாதநாடியென்றறிக.

பித்தம்.

நடுவிரலில் ஆமையைப்போலும், அட்டையைப்போலும் நடையுளதாய்ப்பேசுமாம் பித்தநாடியென்றறிக.

சிலேற்பனம்.

பவுத்திரவிரலில்தவளையைப்போலும்,பாம்பைப்போலும் நடையுளதாய்ப்பேசுமாஞ் சிலேற்பனநாடியென்றறிக.

ஸ்திரீகள் நாடிநடை.

மேற்கூறியதைப்போல் இடதுகையைப்பிடித்து கெட்டைமுதலியதும்வாங்கி உற்றுநோக்கில் அடியிற்சொன்னதைப்போன்று பேசுமென்றறிக.

வாதம்.

ஆள்தூண்டிவிரலில் சர்ப்பத்தைப்போன்று நடையுளதாய்ப்பேசுமாம் வாதநாடியென்றறிக.

பித்தம்.

நடுவிரலில் தவளையைப்போன்றுநடையுளதாய்ப்பேசுமாம் பித்தநாடியென்றறிக.

சிலேற்பனம்.

பவுத்திரவிரலில் அன்னத்தைப்போன்று நடையுளதாய்ப் பேசுமாஞ் சிலேற்பனநாடியென்றறிக.

மூன்றுநாடிகளிருப்பிடம்.

வாதம் மலத்திலும், பித்தம் ஜலத்திலும், ஐயம் விந்துவிலு மிருக்குமிடமென்றறிக.

ஷை நாடிகளினிறம்.

கறுமையும், செம்மையுமாயிருக்கும் வாதம், பச்சை பசுமையாம் பித்தம், வெண்ணிறமுள்ளது ஐயமென்றறிக.

{ நாளொன்றுக்கு மூன்றுநாடிகள் பேசும் நாழிகை அளவு. }

உதயத்தில் பத்துநாழிகை வாதம்பேசும், மத்தியானத்தில் பத்துநாழிகை பித்தம்பேசும், மாலை பத்துநாழிகை ஐயம்பேசுமென்றறிக.

திரிநாடிகளின் குறிப்பு.

உந்தியில் வாதமும், கண்டத்தானத்தில் பித்தமும், இதயத்தின்மேல் சிலேற்பனமுமிருக்குமாம்.

நாடிகள் நடக்குங்காலம்.

திங்கள் புதன் வெள்ளியில் வாதநடையாம், வியாழத்தில் ஐயநடையாம், செவ்வாய் ஞாயிறு சனிவாரங்களில் பித்தநடையாம்.

நாடிகள் பார்க்கும் மாதகாலம்.

வைகாசி சித்திரையில் உதயகாலத்திலும், கார்த்திகை ஐப்பிசி ஆனி ஆடியில் மத்தியானத்திலும், மார்கழி தை மாசியில் மாலைகாலத்திலும், பங்குனி ஆவணி புரட்டாசியில் நடுவிரவிலும், வைத்தியர் கைப்பிடித்துப்பார்க்க மூன்றுநாடிகளும்தெளிவாய்ப்பேசுமென்றறிக.

நாடிகளின் மாத்திரையளவு.

வாதம்-க-பித்தம்-உ-சிலேற்பனம்-வ-மாத்திரையுள்ள நடைகளாயிருந்திடில் தேகங்களில் ரோகமின்றி சுகமாயிருக்கும் சற்றுமாத்திரைகள் பிசகினின்றால் வியாதிகளுண்டாமென்றறிக.

பஞ்சநாடிகள்பார்க்கும்வகை.

பெருவிரலில் குருநாடியும், ஆள்காட்டியில் வாதமும், நடுவிரலில் பித்தமும், பௌத்திரத்தில் ஐயமும், சிறுவிரலில்பூதமுமாகமருவிநின்றநாடிகளில் வாதத்திற்கும், பித்தத்திற்கும் நடுவில் கத்தரிக்கோன்மாாலைப்போல் கிறுகிறுப்புடன் தமரகம்போலாடிநிற்கும்,அன்றியும்என்னுளும்மேற்கூறியஎழுபத்தீராயிரம் நரம்புகளினும்புகுந்துலாவிக்கொண்டிருக்கும் காணுதற்கரிய குருநாடியானது வாதத்தில் நிற்கும்போது கோழிஅன்னம்போலும், பித்தத்திலுலவும்போது ஆமை அட்டைபோலும், ஐயத்திலுறையும்போது விட்டிலைப்போலும் விளங்கும் மகாபெருமைவாய்ந்த குருநாடியாம், அதைக்கண்ட புண்

ணியசீலராகிய பண்டிதர்-சுசாசுஅ-வியாதிகளின் தொகுப்புகளெல்லாமுரைப்பார்களெனப் பதினெண்பேர்களறைந்தனரென்றறிக.

குருநாடியின் செய்கைக்குறிப்பு.

குருநாடியானது வாதத்தில் அட்டைபோல ஊரிநிற்கில் வாய்வுமிகுதல், தினவு சொரி, இருமல், தேகவாட்டம் இவைகளைத்தரும், பித்தத்தில் ஆமைபோன்றிருக்கில் சுரம், தலைச்சுழட்டல், வாய்நீரொழுகல், வியர்வுதோன்றல், நீர்க்கட்டல் முதலியகுணங்களை யுண்டாக்கும், சேத்துமத்தில் அரியென்னுஞ்சிங்கம்போன்றுநடக்கில் ஜன்னிபாதமும், மரணக்குறியும் உண்டாக்கும், குன்றிப்போகில் வயிர்கடுப்பும், கைகால்கள்வீக்கமும் உண்டாகும், பக்கம்பாய்ந்திடில் ஐயம் எதிரில்மோதும், நேர்நிற்கில் வாதபித்தம் இரண்டும் ஒன்றுசேரும், பின்வாங்கில் சாத்தியமுண்டாகும்பெருமைவாய்ந்த குருநாடியாம். குருநாடியையறிந்தபண்டிதர்கள் நோயாளிகளுக்கு அவுஷதங்கள் பிரயோகித்தால் வீண்போகாதென்றறியவும்.

வாரங்களில் பேதித்துநடிக்கும் நாடிகளின்குணம்.

ஞாயிறில் வாதம்நடக்கில் சளி இருமல் இறைப்புகளும், செவ்வாயில் சுரமும், சனியில் சீதளமும் சன்னியும், வியாழத்தில் தேகவலியுமுண்டாம், திங்களில் பித்தம்நடந்தால் ஜலதோஷமும், புதனில் நீரேற்றமும் தலைக்குத்தும், வெள்ளியிலே கண்ணோயும் காதுநோயும், வியாழத்தில் தாபசுரமும் தலைநோவுமுண்டாமென்றறிக.

நாடிகளறியப்படாமை.

அதிசையோகத்தோர் யானைகுதிரைகண்மேல் சவாரிசெய்வோர் தேர்மேற்செல்வர், அதிநடையுளோர், அதிபோசனமருந்துவோர், லாகிரியுண்போர், நீரிழிவு, வீக்கம், குட்டம், குறைநோயுள்ளோர், விஷமுண்டோர், ஓட்டமுள்ளோர், எண்ணெய்த்தலையோர், ஈரமாய்நின்றோர். அச்சங்கொண்டோர், வியாகுலமடைந்தோர், மதங்கொண்டோர், பாலியத்திலிளைத்தோர், அதிகசினங்கொண்டோர், விரதமுள்ளோர், நாட்சொண்டநோயோர், கெற்பமுள்ளோர், பெரும்பாடு, சோகை, பாண்டு, மகோதரமுள்ளோர், மாதவிடாயானோராகிய இத்தகையோர் நாடிகளைக்கண்டறியவரிதாகையால் மற்றையசப்தவிதபரீட்சைகளால் கண்டுகொள்க.

மரணநாடி அறிதல்.

வாதநாடியானது அரவின்நாப்போல அடிக்கடி உதறிவலித்துநின்று பித்தம்பதுங்கிடில் காலன் நெருங்கினனென்றறிக.

ஷை உ - வது.

காலையில் சிலேற்பனநாடியும், மத்தியானத்தில் பித்தமும்,மாலையில் வாதமும் முறைப்பிசகிநடந்தால் ஐந்துநாளையில் மரணமாவார்களெனக் கண்டித்துசொல்லவும்.

ஷை ந - வது.

வாதநாடியானது செம்போத்துபோல்புறந்துடித்தால் திங்களொன்றில் திராவிடில் மரணமென்றே நிச்சயித்துசொல்லவும்.

ஷை ச - வது.

ஐயநாடியானது அசுவத்தைப்போல திமிர்ந்துபேசில் ஒருமாதத்தில் வாழ்நாள்முடிந்ததென வச்சமின்றிசொல்லவும்.

ஷை ரு - வது.

சேத்துமநாடியானது மயிலைப்போலசைந்தும், அட்டையைப்போலுறைந்தும், நின்றுதரில் எ-நாளையில் மரணதிசைவந்ததென்றறியவும்.

ஷை சா - வது.

வாதபித்தமையமூன்றும் விட்டிலைப்போல் துடித்துபேசில் விசைநரம்புகுளிர்ந்துகாணும் உடனே நறநறெனப்பற்கடித்தும், நாவுலர்ந்தும், நடுக்கமுற்றும், மூச்சயர்ந்தும், அவன் ஆவிநீங்கும்.

ஷை எ - வது.

ஐயநாடியானது பெருவெள்ளம்போல் வெகுசுறுக்காய்மடமடென்றேகுமாயின் அடுத்தநாள் மரணமாவானென்றறிக.

ஷை அ - வது.

பித்தநாடியானது வகைதப்பிசிதறியோடில் மூன்றுவதுநாள்இறப்பானென்றறியவும்.

ஷை கூ - வது.

வாதநாடியானது வெகுஅதிகாரத்துடனிருக்குங் கொலுவகற்றிசிதறிப்பாயில்-அ-நாளையில் மரணமாவானென்றறிக.

ஷை ய - வது.

வாதபித்தமிரண்டுமொன்றுபட்டு ஊடுருவிச் சிதறிப் பாச்சல்காணில்-யரு-நாளில்மரணம் அத்துடன் ஐயம்பாயில் மண்டலத்தில் மரணம் இவைமூன்றும் ஒருங்குசேர்ந்து அரணைவால்போல துடிகாணில் அசாத்தியமரணமாகுமென்னவும்.

ஷை ௰க - வது.

வாதபித்தமையமூன்றும் சிநேகித்துவிசையாய் கருந்தேள்சொடு க்கைப்போன்றாடிக்கொண்டும், ஒடத்தைப்போலோடியும் காண்பிக் கில் ஒருமாதத்தில் மரணமாவானென்றறியவும்.

ஷை ௰உ - வது.

சன்னிவரும்போது நாடிகள்மூன்றும் சுழல்வண்டு நீரில்சுழலுத ல்போலும், பம்பரம்போலும், விட்டிலைப்போலும்ஓடில் மரணமாவா னென்றறியவும்.

ஷை ௰௩ - வது.

ஐயநாடியானது மந்தித்துழன்று புற்றீசலைப்போன்று பதறிநிற் கில் ஒருபகலுக்குள் மரணமாவானென்றறியவும்.

ஷை ௰௪ - வது.

ஐயம் பித்தத்தை அணைத்தெதுத்தேறுமாகில் ஒருதினத்தில் கா லன்வந்து அவன் ஆவியைக் கொள்வானென்பது நிச்சயமென்றறி யவும்.

ஷை ௰௫ - வது.

ஐயநாடிபாய்ந்து வாதத்தைப்பற்றிநின்றால் ஒரு நாழிகைக்குள் ஏமனூர்பதி சேர்வார்களென்பது நிச்சயம்.

ஷை ௰௬ - வது.

காலையில் மூன்றுநாடிகளும் கதிப்பெடுத்து குரூரமாயும், உச்சி யாகியபகலில் பித்தமழுந்தியும், மாலையில் வாதமானது ஐயத்திலுறை ந்தும்பேசினால் தடையின்றி-௬-மாதத்தில் இறப்பானென்றறிக.

ஷை ௰௭ - வது.

ஐயத்தில் வாதமும்,பித்தமும் தவளையைப்போன்றுதொங்கியும், அரவத்தைப்போல் புரண்டுநடந்தாலும், மரணம் சமீபித்ததென்றறி யவும்.

ஷை ௰௮ - வது.

சேத்துமநாடியானது மயிலைப்போலும், அட்டையைப்போலும் நடந்து நடுங்கிநின்றால்-௭-நாளில் மரணமாவானென்றறியவும்.

ஷை ௰௯ - வது.

வாதம்-௨-பித்தம்-௨-ஐயம்-௩-ஆகப்பேசில் பிணியாளர் கைகளை விட்டு அப்புறம்புறப்பட்டுப்போவதே பண்டிதர்க்கழகாம்.

ஷை உம - வது.

ஐயம்-உ-வாதம் உ பித்தம் வ ஆசப்பேசில் பிணியாளர் பக்கல் பண்டிதர் யாதொன்றும் சொல்லாமற்போவது மிகவுத்தமமெனக் கொள்க.

தொடுமரணக்குறி.

பண்டிதரை யழைக்கும்போது திருமுகத்தில்கைவைத்தால்பிணிகள்தீராது, மார்பில் கைவைத்தாலும், கை, கால், தோள்தொட்டாலும் இடுப்பில் கைவைத்தாலும் வியாதிகள் நீங்குமென்றறிக.

பூதநாடி.

பூதநாடியானது துடித்துநிற்கில் வாய்வுஅதிகரித்து திரேகமுழுதும் குத்தலாயும் ஜன்னிவந்தெய்தும் பித்தம்நோக்கிநின்றால்சாகான், ஐயம் சிதரித்தாக்கில் ஆவிநீங்கா.

{ ஸ்ரீகளுக்கு பைசாசு தொடர்ந்தருணம் பூதநாடியா லறியும்விவரம். }

ஸ்ரீகளுக்கு நாடிகள் பார்க்கும்போது ஆள்தூண்டும்விரல், நடுவிரல், பவுத்திரவிரலில்பேசும் திரிநாடியுந்தாண்டிசிறுவிரலில்பேசும் பூதநாடியானது பூனையைப்போல் நடக்குமாயின் சிரல், சிலவேளை பொறுமை, கிள்ளல், புரண்டல், திருடல், புருஷனை அடிக்கடிவெறுத்தல்முதலிய குணத்தைபுண்டாக்கும், செவ்வாயில் கழிப்புசெய்தால் தீருமென்றறியவும்.

உ - வது.

பூதநாடி வெள்ளெலிபோலக் குன்றிக்காட்டில் ஸ்தனம் வேறுபட்டும், தேகம்வற்றியும், அழலையுண்டாக்கியும், அதிநித்திரையுண்டாக்கியும், கண்களெரிச்சலை யுண்டாக்குமென்றறியவும், இனி அடியிற்சொல்லுங் குணங்களுக்கெல்லாம் அதர்வணவேதங்களாலும் தந்திரங்களாலும் ஒழிக்கவேண்டுமென்றறியவும்.

ங - வது.

பூதநாடி ஊசிமுனையைப்போல் நீண்டுதோற்றில் உதிரயாட்டன் வசிக்கும் இரவில் புணர்ச்சிசெய்யும் பாவனையாயும் தோற்றும், அன்றி தேகநோக்காடும், விகாரகுணமும் உண்டாகுமென்றறிக.

ச - வது.

பூதநாடி ஓணான் தலையிழுத்துக்கொள்வதைப்போல் பின்வாங்கில் பிரமராட்சசியென்னும் பேய்வசிக்கும், அதன்குணம் வாசனை

முதலியதும்நீக்கி, காரோகம்போல் தேகம்வற்றியும், தன்னையறியாத மயக்கமும் உண்டாகுமென்றறிக.

ரு - வது.

பூதநாடி வண்டைப்போன்றுறைந்தால், அக்கினிமாடன் வசிக்கும், அதன்குணம் பயப்படுந்தன்மை, வார்த்தைபிசகல், அக்கினியிடத்தில் பிரியமுதலிய குணமுண்டென்றறியவும்.

சு - வது.

பூதநாடி பாம்பைப்போல் நெளியுமாயின் இருளனென்னும்பேய் வசிக்கும் அதன்குணம் மதுபானத்தின்மேலிச்சையும், சில்லரைசேஷ்டையும் உண்டாக்குமென்றறியவும்.

எ - வது.

பூதநாடி வலியன்வால்போல் அசைந்துநடக்கில் சுடலைமாடன் வசிக்கும், அதன்குணம் விபூதி உடம்பெங்கும் பூசிக்கொள்ளுவதும், பயப்படாதநெஞ்சமுமாகிய குணத்தை உண்டாக்குமென்றறியவும்.

அ - வது.

பூதநாடி மடமடென்றுநடக்குமாயின் வண்ணாரமாடன்வசிக்கும் அதன்குணம், பிடரியும் கழுத்தும் நொந்தும், தேகம் கொதித்தும், உதிரம்கக்கியும் இத்தகையகுணத்தை உண்டாக்குமென்றறிக.

கூ - வது.

பூதநாடி தாயைக்காணுக்கன்று முன்னும்பின்னும்பார்க்குமாபோல் பின்னும் முன்னும் ஜாடிநிற்கில் காட்டேரியென்னும் பேய்வசிக்கும், அதன்குணம், தலைவிரித்தல், அசுத்தசெய்கை, முகம்பாழடைதல், கைகாலசதி, அதிகபோஜனம், இறைச்சிமுதலியது மருந்தலாகியகுணங்களை யுண்டாக்குமென் றறியவும்.

ய - வது.

பூதநாடி பிணத்தைப்போலசையாமனிற்கில் அகாலமரணமாய் விட்டவர்கள் காலமுடிவுவரை அலையையாயின பேய்வசிக்கும், அதன் குணம், தேகம்வற்றும், வாய்வுமிகுக்கும், பிரமித்திருக்கும் குணங்களை யுண்டாக்குமென்றறியவும்.

யக - வது.

பூதநாடி குரங்குபோலக்குதிக்கில் குட்டியென்னும்பேய்வசிக்கும் அதன்குணம், ஓரிடத்தில் உட்காரவொட்டாது, நாய்போலலையும், விகாரமாயிருக்குமாகிய குணங்களைத் தருமென்றறிக.

௰௨ - வது.

பூதநாடி ஜடராக்கினிபோலக் காங்கைமீறிப்பேசில் ஏவல்களா லே பற்பலகிரகங்கள்வசிக்கும், அதன்குணம், சொப்பனத்தில் குரங்கு, நாய்கூட்டங்களும், விசேடபயமும், உண்டாக்குமென்றறியவும்.

பயித்தியநாடி அறிய.

பித்தநாடி சவலைப்பிள்ளையைப்போலும், அன்னம், மயில்,காகம் போலும்,ஐயநாடியானது அடைக்கலம்,புறு,கோழிபோலும், வாதம், ஆமை, தேரை, காடையைப்போலும் நடந்திடினும், அல்லது மூன்றுநாடிகளும் தொந்தித்து ஒருங்குசேர்ந்து அரவத்தைப்போலும் நடக்கிலும் பயித்தியநோயெனக் கண்டுகொள்க.

மரணக்குறிகள்.

மூஞ்சூரைப்போல் முகம்நீண்டும், தேகமுழுமையும்வற்றி உலர்ந்து நரம்புகள் வெளிப்படையாயும், கண்களிரண்டும் பஞ்சடைந்துமிருந்தால் அதிசீக்கிரம் மரணம் வருமென்றறியவும்.

உ - வது.

பாயில்படுத்தும், எழுந்திருந்தும், மேல்மூச்சுவிட்டும், இளைத்தும், இருவிழிகளும் மலரவிழித்தும், நெஞ்சில் சேத்துமம் நடந்து அடைப்பித்துமாகிய இத்தகையகுணங்களிருக்கில் மரணம் அடுத்ததென்றறியவும்.

ங - வது.

திரிநாடிகளில் ஒருநாடி மார்பின்கீழ்பதறி நடந்தும், உடம்பு வீங்கியும் சுவாசமேற்கொண்டுமிருக்கில் இறப்பானென்பதற்கு ஐயமில்லையென்றறியவும்.

ச - வது.

முதுகும், வயிறும், காலும், சிசனம், அல்லது யோனியும்வீங்கி நினைவுதடுமாறிநிற்கில் மரணம் நிச்சயமெனக்கொள்க.

ரு - வது

செவியடைந்தும், கன்னம், நெற்றி, மூக்கு, வியர்த்தும், நாவு முள்போலாகியுமிருந்தால் நிச்சயமரணமென்றுணரவும்.

சா - வது.

மூகம் பஞ்சடைந்தும், கண்கள் இடிவிழுந்தும் நாளுக்குநாள் மேனிகுலைந்தும், புத்திதடுமாறியும், கண், மூக்கு, வாய், செவி, உள்ளங்கை கால்முதலியவை வெளுத்துக்காட்டில் மாதம் ஒன்றில் காலனூர்பதிபோவது நிச்சயமெனக்கொள்ளவும்.

எ - வது.

இருகண்கள் சொருகலிட்டும், நெஞ்சுலர்ந்தும், கண்கள் கொவ்வைப்பழம்போன்றும், யாதின்மேலும், பிரியப்படாமையுமிருந்தால் அந்தகன்பதி ஏகுவானென்றறிக.

அ - வது.

புறங்கை, புறங்கால், மார்புமுதலியவைவீங்கியும், நாவரண்டும், இளைப்பெய்தலும், நெஞ்சில் பயமாயிடித்தலும், தோலும், எலும்பும் படபடத்தசைதலும் ஆகியகுணங்காணில் மாலும் பிர்மனும் மீட்டப்படாதென்றறியவும்.

கூ - வது.

நாட்குநாள் பலயீனப்பட்டும், எச்சில் உமிழும்போது தூரம் போய்விழாமல் உதட்டிற்பட்டு தனதிடத்தில்விழுதலும், நடந்துபோகும்போது-ய-அடிக்கொருவிசை திரும்பி சற்று உறுத்துப் பார்ப்பதும், அகங்கையால் முகந்துடைத்தலும், நாவைஅடிக்கடிபாம்பைப் போல் நீட்டலும் ஆகியகுணங்கள் வாய்த்திருக்கில் யாதொன்றுக்கும் பயப்படாமல் கூடிய சீக்கிரத்தில் மரணமாவார்களென்று சொல்லலாம்.

ய - வது.

இராக்காலங்களில் நட்சத்திரங்கள்தெரியாமல் பகற்காலங்களில் புலப்படினும், பூரணச்சந்திரன் புகைபோல் மழுங்கிதோன்றினும், வானவெல்லை கரியென்னு மியானையைப்போன்று காணினும், என்ணை, நெய், தயிர், பால் இவைகளில் தன்முகம்தோன்ருவிடினும் மரணகாலம் சமீபித்ததென்றறிக.

இன்னும் மாணக்குறிகளும், மரணநாடிக்குறிகளும், தொடுமரணக்குறிகளும், திரிநாடிகளின பேதாபேதங்களால்வஞ்செய்தும் சாத்தியாசாத்தியங்களையும்-உ-ம்-பாகத்தில் அச்சிடுவோமாக.

தேகவிலக்கணம்.

வாததேகக்குறி.

கருஞ்செம்மைதேகமும், மடவார்மேல் அற்பவாசையும், அற்பவுண்டியும், அதிபோகமுமுமையும், எரிப்புள்ளவைகளை உண்ணுதலும், அற்பதாதுவுமுடையான் வாததேகியென்றறிக.

பித்ததேகக்குறி.

சிவப்பும் மிருதுவுமுள்ளதேகமும், சித்தினிமடவார்மே லதிகப்பிரியமும், இடைவிடாப்போகமும், நாணயவஸ்திரமுடுத்தலும், அற்

பபோஜனமும், புளித்தபதார்த்தமும், காரமுள்ளதையுண்ணலும், ஆசாரம்பொருந்தலும், பெரியோரைக்காணலும், ஞானமுதலியதுமுணர்தலும், கோபித்தவரைத்தணித்தலும், சொற்கவிவீரமும், தெளிவாய்ப்பேசலுமுடையவன் பித்ததேகியென்றறிக.

பித்தவாத தேகக்குறி.

பொதுநிறமுள்ளதேகமும், நற்குணமும், கிருபைகூர்தலும், சரியை கிரியா யோகஞானமுணர்தலும், பரிமளமணிதலும், கூரியபுத்தியும், குயிலீபோன்ற வினியசொல்லும், எரிப்பு, புளிப்பு, இவைகளைப்பிரியமாயுண்ணலுமுடையான் பித்தவாததேகியென்றறிக.

பித்தசேத்துமதேகக்குறி.

செண்பகமலர்போன்றமேனியும், புளிப்பினிப்புண்ணலும், மெலியராசையும், நயமுள்ளவாக்கும், இசையுள்ளகுரலும், நல்லறிவும், மூத்தோரை அடுத்தலும், அதியோகனுயும், இறப்பவர்க்கில்லையென்றுதளிப்பனவுமுடையவன் பித்தசேத்துமதேகியென்றறிக.

சேத்துமதேகக்குறி.

காவிபோன்றமேனியும், இனிப்புண்ணலும், சரீரம்வியர்த்தலும், தேனுற்பிரியமும், இடிபோற்குரலும், பொய்மெய்யாக்கலும், வணக்கமும் உடையவன் சேத்துமதேகியென்றறிக.

சேத்துமபித்ததேகக்குறி.

கோரோஜனநிறமேனியும், புளிப்பினிப்பு அதிசமாய் வேண்டலும், சிவந்தரோமமும், காம்பீரசொற்களும், பொய்சொல்லாத சத்தியமொழியும், வீரமும், மனத்திடமும் உடையான் சேத்துமபித்ததேகியென்றறிக.

சேத்துமவாததேகக்குறி.

கறுமைதேகமும், அதிகஉண்டியும், புளிப்பு, எரிப்புண்ணலும் தூலதேகமும், புவிபுகழ்தலும், மறையோரைப்போற்றலும், வீரமும், வேதமுணர்தலும், சத்தியநெறியும், பெரியோரைப்போற்றலுமுடையான் சேத்துமவாததேகியென்றறிக.

வேறுவிதக் குறிகள்.

மலக்குறி.

வாதரோகிகளுக்கு மலங்கறுப்பாம், பித்தரோகிகளுக்கு மஞ்சள்நிறமாம், சிலேற்பனரோகிகளுக்கு வெண்மைநிறமாம்.

நீர்க்குறி.

வாதரோகிகளுக்கு சிறுநீர்விடும்போது அத்துவாரவழியில்கடுத்தும், நொந்தும், சிறுத்தும் பொருமிவீழ்ந்தும், பித்தரோகிகளுக்கு நீர்சிவந்தும்,யெரிந்தும், சுருக்கும்,கடுத்தும்வீழும், சிலேற்பனரோகிகளுக்கு நீர்வெளுத்தும், உரைந்தும், பெருகியும் வீழும், தொந்தரோகிகளுக்குப் பற்பலவிதமாயிருக்குமென்றறியவும்.

கண்கள்குறி.

வாதரோகிகளுக்கு விழிகள்கறுத்தும், இமை தாழ்ந்துமிருக்கும்,—பித்தரோகிகளுக்கு விழிகள் மஞ்சளாயும், செந்நிறங்கலந்தாயுமிருக்கும், ஐயதேகிகளுக்கு விழிகள்வெளுத்திருக்கும், தொந்ததேகிகளுக்கு பற்பலநிறமுளதா யிருக்குமென்றறியவும்.

நாக்குறி.

வாதரோகிகளுக்கு நாவு உயரமதாய்த் தடித்திருக்கும், பித்தரோகிகளுக்கு கசந்து மஞ்சளாயிருக்கும், ஐயரோகிகளுக்கு வெளுத்து வழுவழுத்து நெய்ப்பலாயிருக்கும்.

தந்தக்குறி.

வாதரோகிக்கு தந்தங்கள் பழுப்பாயிருக்கும், பித்தரோகிக்கு மஞ்சளாயிருக்கும், சிலேற்பனரோகிக்கு வெளுத்திருக்கும், தொந்தரோகிக்கு பற்பலவிதமாயிருக்குமென்றறியவும்.

நோய்கள் வரும்விதம்.

இளந்தைப்பருவத்தில் தையலார்வலையிற்சிக்கி ஊடேயாடும்லீலாவிநோதம்புரிதலாலும், அதிகநடைநடத்தலாலும், அகாலபோஜனத்தினாலும், பதார்த்தபேதங்களினாலும், ஆகாரமில்லாக்காலங்களில் சையோகித்தலாலும், வயிறுநிறையப்புசித்து சிற்றின்பம் மூட்டுதலாலும், லாகிரிவஸ்துவைப்புசித்தலாலும், ஒருவர் மலஜலம் விட்டதின்மேல் சான்விடுதலாலும், உண்டவுடன் நித்திரைசெய்தலாலும், வெகுதூரம்போய்வந்தவுடன் காலில் ஜலம்விடுதலாலும், மிகக்கஷ்டவேலைசெய்துவந்தவுடன் குளிர்ந்தஜலத்தில்குளித்தலாலும், மாதர்கள் ரஜஸ்வலையான எட்டுநாளைக்குமுன் புணர்தலாலும், பொருளின்மையால் மிகவருந்தி துக்கித்தலாலும், மூலத்திலிருந்து விசேடதீப்பொறிஎழும்பி சிரசளவின்முட்டி அங்குஜொலித்திருக்கும் விந்துவை இகழச்செய்து அத்தீயானது உடலெங்கும் வியாபித்து வாய்வுசேர்ந்து வெள்ளை, சூலை, குட்டம், கிரந்தி, புத்து, பவுத்திரம், பிளவை, அரையாப்பு, கண்டமாலை, ஒட்டியப்புண்ணு, கரப்பன்சிரங்கு, குன்மம்,

மலநீர்க்கட்டு, காசம், பேதி, கிராணி, அதிசாரம், பாண்டு, காமாலை, பீனிசம், தந்திமேகமாகிய இன்னும் பற்பலவியாதிகளை உண்டாக்குமென்றறிக.

சசசஅ-வியாதிகளின் தொகுப்பு.

வாதம்-அசு-பித்தம்-சஅ-சேத்துமம்-கூசு-தநுர்வாய்வு-ஙா-சயம்-எ பெருவயிறு அ-சூலை-உா-பாண்டு-ய-நேத்திரநோய்-கூசு-சிலந்தி-சுஅ சன்னி-எசு-வழலை-கூரு-சுரம் - சுச -மகோதரம்-எ-வீக்கம்-ரு உதிரரோய்-யசு-பிளவை-ய-படுவன்-யக-பீலி-அ-உருவசியம்-ரு-பொறிகறப்பான்-கூய- கெண்டை-ய-குட்டம்-யஅ-கதிர்வீச்சு-ங-மதிவட்டை-ரு-இசிவு சு - மூர்ச்சை-எ-வேலிநோய்-சசு-மூலம்-கூ-சுழலை-ய-பீநிசம்-சுடிவிஷம்-எசு-கிராணி-உரு-பல்நோய்-எரு- மாலைக்கண்-உய-அதிசாரம்-உரு-கட்டி-யஉ-கிருமி-சு-முட்டுநோய்-ஙய - மூதிர்நோய்-உய-சத்தி-ரு-கல்லடைப்பு-அய-வாய்வு-கூய-திமிர்நோய்-ய- மேகம்-உக-நீராம்பல்-ரு-காதுநோய்-ய-விக்கல்-ய-அரோசியங்கள்-ரு- மூக்கறுப்பன்-ய, கடிவிஷம்-ரூா-குத்துவெட்டு-எா-கிரந்தி - சஅ - பொறிவிஷம்-அா-துடிநோய்-ா - பிள்ளைநோய் ா-குமுளி-எ-விப்புருதி யஅ-விஷபாகம்-யசு-பிறநீர்க்கோவை-உா-நடுக்கல்-சு-ஆக-சசசஅ - வியாதிகளெனப் பெயர்பெற்றது இந்நூலில் சிலவியாதிரோகங்கள் கூறுவோம் மற்றது உ-ம்-பாகம்-ங-ம் பாகமாக வழியே சொல்லிக்கொண்டுவருவோமாக.

சுரரோகங்களின் தொகைகள்.

வாதசுரம், பித்தசுரம், ஐயசுரம், வாதபித்தசுரம், வாதசிலேட்டுமசுரம், சிலேத்துமபித்தசுரம், சந்நிபாதசுரம், அபிகாதசுரம், தாபச்சுரம், அபிசாரசுரம், அபிஷங்கசுரம், பூதாவேசசுரம், அவுஷகாந்தசுரம், விஷசுரம், கோபச்சுரம், பயச்சுரம், நளிர்ச்சுரம், துக்கசுரம், காமச்சுரம், சந்தசுரம், சத்தசுரம்,அந்தியத்துகசுரம்,துவியாகிதசுரம், திரியாகிதசுரம், சாதுர்த்திகசுரம், சாரீரசுரம், மாதஸிகசுரம்,சௌமியசுரம், தீட்சண்யசுரம், உட்சுரம், புறச்சுரம், பிராகிருதசுரம், வைகிருதசுரம், சாத்தியசுரம், அசாத்தியசுரம், சாமச்சுரம், நிராமச்சுரம், வாதசரீரசுரம், வாதமானஸிகசுரம், வாதசௌமியசுரம், வாததீட்சண்ணியசுரம், வாதவுட்சுரம், வாதபுரச்சுரம், வாதபிராகிருதசுரம், வாதவைகிருதசுரம்; வாதசாத்தியசுரம், வாதஅசாத்தியசுரம், வாதசாமச்சுரம், வாதநிராமச்சுரம், குளிர்ச்சுரம் பிநாங்கிதசுரம், காளகண்டசுரம், நாரிசுரம், அநாகிதசுரம், கண்டசுரம், முறைச்சுரம், நாகசுரம், காந்தசுரம், மந்தசுரம், சோபசுரம், பராக்கிரசுரம், மைகிருதசுரம், பாதசுரம் வைசூரிசுரமுதலிய சுரங்கள் அறுபத்திநாலெனக் கூறலாயினர்.

சுரங்கள் உற்பத்தி.

மேற்கூறிய சுரங்கள்யாவும ஆறுசுவைப்பேதங்களினலும், நடக்கைபேதங்களினலும, வாதபித்தசிலேத்துமமென்னும் மூன்றுதோஷங்களினலும், நரம்புகளின்தமர்களையும், உரோமத்தமர்களையும்அடைப்பித்து சடராக்கினிமேலிட்டெழுப்பி சடமுழுதும் வியாபித்து, கைகால்கள்முதலிய அவயவாதிகளைநோப்படுத்தி சுரரோகங்கள்வருமென்றறியவும்.

வாதசுரம் வருதல்.

வாதநாடி சர்ப்பத்தைப்போல மெல்லச்சீறித் தனித்துநின்றால் கால்கைகள்பெருத்து நோக்காடும், குடலைப்பிறட்டியும், மலஜலங்களைக் கட்டியும், உடம்பெங்கும் குடைந்தும், குதத்தையிறுக்கியும், வியர்வைதந்தும், முகமும் உதடுங் கறுத்தும், சரீரமெல்லாம் தடித்தும், மெய்நடுக்கியும், நாவரண்டும், திமிரெடுத்தும், உஷ்ணம்பாரித்தும், மயிர்க்குச்சிலிட்டுமாகிய இத்தகையகுணங்களோடுவருமாம் வாதசுரமென்றறிக.

நிவாரணக்கியாழம்.

விஷ்ணுகாந்தி, கண்டங்கத்திரி, சிறுதேக்கு, பற்படாடம், பேராமுட்டி, நன்னரி, சித்திரமூலம், நற்சங்கன்வேர், வெள்ளறுகு, சதகுப்பி, சிறுகாஞ்சோரி, சிற்றரத்தை, கழற்சிப்பருப்பு, இவைகள்வகைக்குப்பலம்-க, இடித்துதூள்செய்து ஆறுபடிஜலம்விட்டு ஒ, படியாகக் காய்ச்சி வேளை ஒன்றுக்கு வ, படிவீதம்-ஈ-வேளை சுடவைத்து சாப்பிடவும், வாதசுரம் நீங்கும், இச்சாபத்தியம், அப்படிநீங்காவிடில்அடியிற்சொல்லியதுபோல் சாப்பிடவும்.

உ - வது மருந்து.

ஜாதிலிங்கம், பலம் ஒன்றை முலைப்பாலில் மூன்றுநாளூரவைத்து எடுத்துக்கொண்டு, வீரம், படிகாரம், வெடியுப்பு, அண்டோடு, இவைகளை வகைக்குப்பலம், காலாகச்சேர்த்து கோழிமுட்டையின் வெண்கருவிட்டாட்டி-ய-பங்குசெய்து, ஒருபங்கை மேற்படி லிங்கத்திற்கங்கிபூட்டி-ஈ-சீலைசெய்து, மணல்மறைவில் புடம்போடவும், இப்படி பத்துமுறைப்புடம்போட்டுப் பின் இஞ்சிச்சார், தேன், முலைப்பால், இவைமூன்றும், ஒன்றுபடுத்தி ஷை லிங்கத்தில் - ய - உறை உறைத்து மூன்றுநாள் ஆறுவேளை சாப்பிடவும், இச்சாபத்தியம், இனனுஞ்சொல்லுவோமாக.

ங - வது மருந்து.

சுக்கு, சிற்றரத்தை, ஓமம், வாய்விளங்கம், அதிமதுரம், கோஷ்டம், ஜாபத்திரி, லவங்கம், லவங்கப்பட்டை, பேய்ப்புடல், சீந்தில், நன்னாரி, சிறுகாஞ்சோரி, சிறுதேக்கு, கோரைக்கிழங்கு, தேவதாரம், குங்குமப்பூ, கோரோஜனை, பச்சைகற்பூரம் வகைக்கு விருகனெடை-உ, இவைகளைச் சூரணித்து மலைத்தேன்விட்டரைட்டி குன்றிமணிபோல மாத்திரைசெய்து பனவெல்லத்தில்ஒருமாத்திரைவைத்துஏழுநாள் பதினொன்குவேளை சாப்பிடில் நீங்காதவாதசுரம் வீடுவிட்டுக் காடுபோகுமென்றறிக. பத்தியம் கடுகு, நல்லெண்ணை, புளிப்பு, தயிர், பால், இறைச்சி, சீதளப்பண்டம், பொடி - சுருட்டு-லாகிரியுந் தள்ளி மூன்றுநாள் மறுபத்தியம்கார்க்கவும்,பதினொராளுள் நீரைவார்க்கவும், அன்றி மூன்றுதிங்கள் ஸ்திரீயோகமுதலியதும் தள்ளவும்.

பித்தசுரம் வருதல்.

பித்தநாடி சிட்டுபோல்குதித்து வாதத்திற்கும், ஐயத்திற்கும் மாத்திரை அதிகப்பட்டு அரசுசெய்யில் அதிகநித்திரையும், மலஜலம் மஞ்சள் சிவப்புநிறமாயும், வயிர்கழிதல், வாந்தி, விக்கல், வாய்பிதற்றல், வாய் வேம்பைப்போன்றிருத்தல், மூர்ச்சித்தல், நாவரண்டல், அசதி, எழுந்தோடல், பித்தனைப்போலிருத்தல், சந்தோஷித்தல்,வியசனப்படல், முகம், உள்ளங்கை, உள்ளங்கால்முதலியதும் வியர்வைவிடுதல், சுரம்வருதலாகிய இத்தகையகுணங்களோடு பித்தசுரம் வருமென்றறிக.

நிவாரணக்கியாழம்.

தேத்தான்கொட்டை, எட்டிவிரை, கண்டங்கத்திரி, பிரம்பின் மூலம், சிறுபயறு, சுக்கு, கிராம்பு, வாய்விளங்கம், நீலிவேர், நெற்பொறி, ஏலம், நீர்முள்ளி, நெல்லி, வில்வவேர், பிர்க்கு,கோஷ்டம், கொடிவேலி, பேய்ப்புடல், சித்தாமுட்டி, வில்வவோடு வகைக்குப் பலம்-க, இவைகளை இடித்து தூள்செய்து படிஜலம்விட்டுக்காயச்சி எட்டிலொருபங்காக்கி மூன்றுவேளைசாப்பிடத்தீரும். இச்சாபத்தியம் இன்னுஞ்சொல்லுவோமாக.

உ - வது கியாழம்.

சுக்கு, ஆனைத்திப்பிலி, நெல்லி, நீர்முள்ளி, வில்வவேர், பாதிரிவேர், விலாமிச்சு, சிறுகாஞ்சோரி, அதிமதுரம், கோஷ்டம், செவ்வல்லி, நன்னாரி, நிலவாகை, சீரகம், கொத்துமல்லி,தும்பைவேர், பேரீச்சங்காய், வகைக்குப்பலம்-க, இவைகளை இடித்துத் தூளாக்கி-ங, படி

ஜலம்விட்டு எட்டிலொன்றாகக் காச்சி இரக்கி மூன்றுவேளை கொடுக்கவும் பித்தசுரம் விட்டோடிப்போம், இச்சாபத்தியம் இன்னுஞ்சொல்லுவோமாக.

௩ - வது கியாழம்.

வில்வவேர், அதிமதுரம், இலுப்பைவேர், சுக்கு, பரங்கிச்செக்கை, கோரைக்கிழங்கு, பேய்ப்புடல், கருஞ்சீரகம், நாய்த்துளசி, கரசலாங்கண்ணி, தூதுவளை, நொச்சில், ஆடாதோடை, வகைக்குப் பலம் க, இவை இடித்துப் பொடித்து படிஜலம்விட்டு நாலிலொன்றாகக்காச்சி அறுவேளைத்தாக்க பித்தசுரம்விட்டோடிப்போகும், இச்சாபத்தியம்.

ஐயசுரம் வருதல்.

சிலேற்பனநாடியானது, வாதத்திற்கும் பித்தத்திற்கும் மாத்திரைகால் அதிகப்பட்டு பூனையைப்போலப்பதுங்கியும், பாச்சல்கொண்டும் நடந்தால் நாக்கு, முகம், மெய்வெளுத்தல், மார்நோதல், இருமல், இளைப்பு, ஈளை, வாய்துவர்த்தல், நாவுருசியில்லாமை, மூச்சுவிடுமுன் விக்கல்வருதல், நாவரட்சிகாணல், மேன்மூச்சுவிடுதல், தினவெடுத்தல், தியங்கலாகிய இத்தகையகுணங்களோடு ஐயசுரம் வருமென்றறிக.

நிவர்த்திகியாழம்.

சுக்கு, மிளகு, திப்பிலி, அதிவிடயம், பற்பாடகம், சிறுகாஞ்சோரி, தொட்டிவேர், கோரைக்கிழங்கு, நன்னாரி, வெட்பாலை, லவங்கம், வில்வவோடு, பொன்முசுட்டை, அதிமதுரம், பேரீச்சன், வேம்பு, பெருங்குரும்பை, நெய்தற்கிழங்கு, தூதுவளை, ஆடாதோடை, கண்டங்கத்திரி இவைகளைநசிக்கி இருநாழி நீரிற்போட்டு உழக்சாக்கி அந்த உழக்குகியாழத்தை மூன்றுபங்காக்கி மூன்றுவேளையும் தேன்விட்டுக்கொடுக்கவும், இன்னுஞ்சொல்லுவோமாக.

உ - வது மருந்து.

ஜாதிலிங்கத்தை-௩-நாள் முலைப்பாலில்ஊரப்போட்டு பின்எடுத்து இஞ்சிச்சார், தேன், குப்பைமேனிச்சார், நிம்பழச்சார் இவைநான்கையும் ஒன்றுபடுத்தி, லிங்கத்திற்கு-ச ஜாமம் சுருக்குதாக்கினலிங்கம் க, ஆவின்பாலில் ஒருஜாமம் வேகவைத்தெடுத்தநாபி-க, சாணிப்பாலில் ஊரவைத்துப்பின் உப்பு, புளி, மிளகாய் மூன்றையுங் கறைந்து-க-மணிநேரம் வேகவைத்தெடுத்த வாளம்-க, வெண்காரம்-க, திப்பிலி-க, மிளகு-க, இவைகளை-ச ஜாமம் நிம்பழச்சாற்றாலாட்டி குன்று

மணியளவு மாத்திரைசெய்து மாத்திரைஒன்றை இஞ்சிச்சாற்றில்கொடுக்கவும், மூன்றுநாள் ஆறுவேளை கொடுக்கத்தீரும். பத்தியம் - புளி, கடுகு, நல்லெண்ணைமுதலியதுமாகா.

ஈ - வது மருந்து.

மேற்சொல்லியதைப்போல் சுத்திசெய்தலிங்கம்-க, வெள்ளெருக்கம்பாலில்-ச-ஜாமம் சுருக்குதாக்கின சங்குபாஷாணம் க, வெண்மிளகு-க, இவைகளை எலுமிச்சம்பழச்சாற்றாலாட்டி சிறுபயறுவிதம்குளிகைசெய்து குளிர்ந்தஜலத்தில் ஆறுமாத்திரை, ஆறுவேளை தாக்கவும். பத்தியம்-உப்பு, புளி, ஆகாது-ரு-நாள் காலே மாலே மிளகுகியாழமீய்ந்து-கூ-ம-நாள் ஓமத்தால் ஸ்நானஞ்செய்து சுட்டபுளிகூட்டவும், ஐயசுரம் நீங்குமென்றறியவும்.

வாதபித்தசுரம் வருதல்.

வாதமும் பித்தமும் தொந்தித்து ஐயத்தில் வீசம்மாத்திரவாங்கிக்கொண்டு ஓநாய்போல்நடக்கில் கீல்கள்நோதல், இடுப்புளைவு, வாயூறல், வாந்தி, விக்கல், கொட்டாவி, விகாரபுத்தி, பிரமை, தாகம் உரோமஞ்சிலிர்த்தல், தேகந்தன்றல், ஏப்பம், வாய்கைத்தல், அதிகநித்திரை, நெஞ்சுலரல்; வாயூரல், மலம்வெளுத்தல் ஆகிய குணங்களோடு வாதபித்தசுரம் வருமென்றறிக.

நிவாரணமருந்து.

ஒருபலம்கெவுரியை மூன்றுநாள் முலேப்பாலில் ஊரப்போட்டுப்பின்மேற்படிபாலால்-ச-ஜாமம் சுருக்குதாக்கிடவும், ஒருபலம்தாளகத்தைக் கற்சுண்ணாம்புக் குள்வைத்து கழுதையின்சிறுநீரால்-எ விசைதாளிக்கவும், இவ்விதமாகச் சுத்திசெய்த கெவுரியையும் தாளகத்தையும் ஒன்றுபடுத்தி எலுமிச்சம்பழச்சாற்றால்-உ-ஜாமம் ஆட்டியும், முலேப்பாலில் ச-ஜாமம் ஆட்டியும், உளுந்துபோலக் குளிகைகட்டி மாத்திரை ஒன்றுவீதம் முலேப்பாலில்-ரு-நாள் கொடுக்க பித்தமெல்லாம் மேல்நோக்கும், அதிகவாந்தியானாலும், பத்தியம் தவறினாலும், மிளகுகியாழம் கொடுக்கவும். பத்தியம்-புளிதள்ளவும், துவரை, கத்திரிப்பிஞ்சு, அவரைப்பிஞ்சு முதலியதுமாகும், இன்னுஞ் சொல்லுவோமாக.

உ - வது மருந்து.

அபினி-விருகனெடை-சு, சுக்கு எ, திப்பிலி-அ, சீரகம்-கூ, மிளகு-௰, இவைகளையெல்லாம் ஒன்றாய்ச்சேர்த்து விஷ்ணுகாந்தி கியாழத்தால்-ச-ஜாமம் ஆட்டி குன்றிமணியளவு குளிகைசெய்து ஒருகு

ளிகையை விஷ்ணுகாந்தி, சீரகம், வெற்றிலைக்காம்பு ஒன்றுசேர்த்து கியாழமிட்டு-௩-வேளை கொடுக்கவும், பத்தியம் புளிதள்ளவும்.

௩ - வது மருந்து.

சுக்கு, மிளகு, சீரகம், ஏலரிசி, திப்பிலி, ஓமம், லவங்கம், வெண்காரம் இவைகள் வகைக்குச் சூரணம் விராகனெடை-உ, லிங்கம் உ, பாஷாணம்-வ, ஒக்கச்சேர்த்து நிம்பழச்சாற்றாலாட்டி உளுந்துபோலக் குளிகைசெய்து தேனில் ஆறுவேளைதாக்கவும், பத்தியம் புளியாகாது, வாதபித்தசுரம் விட்டோடிப்போகும், அன்றி மேற்கூறிய சூரணங்களை ஆவின்பாலில் பிட்டுவைத்துக்கொள்ளவும், பாஷாணத்தை மிளகுகியாழத்தில் சுருக்குதாக்கவும், லிங்கத்தை முலைப்பாலில் ஒருஜாமம் சுருக்கிடவும்.

வாதசிலேத்துமசுரம் வருதல்.

வாதத்தில் ஐயம்சார்ந்து ஊடுருவத்தாக்கி நேசித்து சௌதாரியைப்போன்றுநடுக்கில் குளிர்நடுக்கல், நாசியில்ஜலம்வழிதல், நெற்றிவியர்த்தல், இறைப்பு, மலர்சிக்கல், கீல்கள்நோதல், இருமல், உடம்புநெளிதல், நாவெளுத்தல், அரோசிகம், கண்களிருணடைதல், சோகமூர்ச்சை ஆகியகுணங்களோடு வாதசிலேத்துமசுரம் வருமென்றறிக.

பரிகாரமருந்து.

ஒருபலம் லிங்கத்தை எலுமிச்சம்பழச்சாற்றில்-ச ஜாமம் சுருக்குகொடுத்து நாட்சென்ற இரும்புச்சிட்டத்தைக் கொடிவேலி கியாழத்திலாட்டி லிங்கத்துக்கங்கிபூட்டி மணல்மறைவில் மூன்றுபுடம் போட்டெடுத்துப்பின் கற்பூரம்-பலம்-க பளிங்குசாப்பிராணி பலம்-க-ஒன்றாய்க்கூட்டி தீப்பறக்கமெழுகுபதமாகஆட்டி பத்துபங்காக்கிஒருபங்கை சீலையிலூட்டி மேற்படி லிங்கத்தை வைத்துருட்டி விளக்கில் கொளுத்திப்போட்டு ஆறினபின் சிட்டத்தைச் சுரண்டி இப்படி பத்துவிசைசெய்து லிங்கத்தைப் பதனம்பண்ணி தேனில்-ம உறைவுறைத்து திரிகடுகு சூரணமுங்குழப்பி ஆறுவேளைதாக்க வாதசிலேத்துமசுரம் நீங்குமென்றறியவும், இச்சாபத்தியம்.

உ - வது மருந்து.

லிங்கம்-க, பூரம்-க, வீரம்-வ, பாஷாணம்-ஒ, கெவுரி-வ, வெண்மிளகு-௩; இவைகளை ஒன்றுபடுத்தி, நிம்பழச்சாற்றால்-ச ஜாமம் ஆட்டி, சிறுபயறுவீதம் குளிகைசெய்து தேனில்-௩-வேளைதாக்கவும்; கடுமையாகியபத்தியம், மேற்கூறிய லிங்கத்தையும், பூரத்தையும், முலைப்பா

வில்-௩-நாள் ஊறப்போடவும், நெல்லிகெந்தகத்தை ஓட்டில்வைத்து அடியில் தீப்போட்டுருகும்போது வீரம், பாஷாணம், கெவுரியை தனித்தனியே பிரட்டி எடுத்துக்கொள்ளவும்.

௩ - வது மருந்து.

ஒருபலம் பூரத்தை, பாவையர்பாலில்-௰-நாள் ஊரப்போட்டுப் பின்வெள்ளைப்பூண்டு சாற்றில்-௩-ஜாமம் சுருக்குதாக்கி ஆறினவுடன் மேற்சுரண்டிவிட்டு ஓட்டில் வெடியுப்பு-பலம்-௫-வைத்து மேற்படி பூரத்தைவைத்து மேலும் ௫-பலம் வெடியுப்புகொட்டி கோழிமுட்டை-௫-உடைத்துவார்த்து ஓட்டடியில்தீயிட்டு கமலாக்கினியாக எறிக்க உப்புபொங்கி தீப்பிடித்துக்கருகியிருக்கும், அதனுள்புகையாமல் பூரம்நிற்கும், ஆறினபின் கருகியஉப்பை நீக்கிநீக்கி-௰-விசை முன் போலசெய்யில் பெருமைவாய்ந்த பூரமானது தந்தம்போல் உருகிநிற்கும், இஞ்சிச்சார் அல்லது தேனில்தாக்க வாதசிலேத்துமசுரம் நீங்குமென்றறிக.

சிலேத்துமபித்தசுரம்.

வாதம் ௯-பித்தம்-௨ ஐயம்-௨ ஆகநின்று பித்தமும் ஐயமும்ஒருங்குசேர்ந்துகுயிலைப்போலநடக்கில் சரீரம்தம்பித்தல், ஆயாசங்கொள்ளல், சேர்ந்துவிழல், கிறுகிறுப்பு, சுழலைமூர்ச்சை, சோம்பல், வாய் கசத்தல், இருமல், நாவரட்சியாகியகுணங்களோடு சிலேத்துமபித்த சுரம் வருமென்றறிக.

நிவர்த்தி மருந்து.

கெவுரி, தாளகம், கெந்தி, துருசு, பால்துத்தம், நாபி, வகைக்கு விராகனெடை-க, இவைகளை மிதிபாவையிலைச் சாற்றாலாட்டி சிறு பயறளவு குளிகைசெய்து இஞ்சிச்சாற்றில் மாத்திரை ஒன்றுவீதம் மூன்றுவேளை தாக்கவும், பத்தியம்-கடுமையாகியபத்தியம், மேற்கூறிய தாளகத்தை கற்சுண்ணாம்புக்குள்வைத்து பனங்கள்ளில் மூன்றுவிசை தாளிக்கவும், கெந்தகத்தை ஆவின்பாலில் ஒருநாள் ஊறவைக்கவும், துருசு, துத்தம், நாபி இவைகளை ஆவின்பாலில் வேகவைத்தெடுத்துக்கொள்ள யாவும் சுத்தியாகும்.

௨ - வது மருந்து.

வெள்ளாட்டுப்பிச்சு, நாபிவகைக்கு விராகனெடை-௬, ஜாதிலிங்கம், சுக்கு, மிளகு, சீரகம், ஏலரிசி, திப்பிலி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், கடுகுரோகணி வகைக்கு விராகனெடை க, இவைகளை எலுமிச்சம்பழச்சாற்றாலாட்டி-௨-ஜாமமானபிறகு பயறு பிரமாணம்

குளிகைசெய்து கொடிவேலிகியாழத்தில் மாத்திரைஒன்றுவீதம் ஆறு வேளைதாக்கவும், சடுமையாகியபத்தியம் - மேற்கூறியநாபி, லிங்கத்தையும் முன்கூறியவண்ணம் சுத்திசெய்யவும், சூரணங்களையெல்லாம் ஆவின்பாலில் பிட்டுவைத்துக்கொள்ளவும்.

௩ - வது மருந்து.

வெள்ளைப்பாஷாணம் விருகனெடை-௬, ஜாதிலிங்கம்-௭ இவைகளை ஊமத்தைவேர்கியாழமிட்டு ஒருஜாமம்மைபோலரைட்டி பயறுபிரமாணம் மாத்திரைசெய்து-௩-வேளை மிளகுநீரில்தாக்கவும், சடுகெனணையாகாது வெள்ளைப்பாஷாணத்தைக் கற்சுண்ணாம்பில்வைத்து மிளகுகியாழத்தில் மூன்றுவிசைதாளிக்கவும், ஜாதிலிங்கத்தை முலைப்பாலிலும், எலுமிச்சம்பழச்சாற்றிலும் - ௰ - நாள் ஊறவைக்கவும் சுத்தியாம் சிலேத்துமபித்தசுரம் விட்டோடிப்போமென்றறிக.

தொந்தசுரம் வருதல்

சிலவேளை வாதம்-க, பித்தம் காலேஅரைக்கால், ஐயம் - காலே அரைக்கால் மாத்திரையாகவும், பித்தமும் ஐயமும் ஒருங்குகூடுதலும். சிலவேளை வாதம் முக்காலேஅரைக்கால், பித்தம்-காலேஅரைக்கால், ஐயம்-அரைமாத்திரையாகவும், வாதமும் ஐயமும் ஒருங்குசேர்தலும், சிலவேளை தனித்தனிப்பாய்தலும், சிலவேளை வாதம் ஆமைபோலும், பித்தம் கோழிபோலும், ஐயம் அட்டை தவளைபோலும் பற்பலவிதமாய்நடக்கில் பித்தனைப்போல்பேசல். தெளிந்துபேசல், மயக்கம், கைகால்களுளைவு, இடுப்புநோதல், ஆசனக்கடுப்பு, நீர்ச்சுருக்கு, கவலையுற்றல், மெய்நடுக்கல், அசதி, ஏப்பம், பசித்தல் ஆகிய குணங்களோடும், சிலவேளை மாலையிலும், சிலவேளை காலையிலும், சிலவேளை மத்தியானத்திலும், நாள்முழுமையும் தொந்தசுரம வந்தரசு செய்யுமென்றறிக.

நிவர்த்தி மருந்து.

அரிதாரம்-இடை-௫, துருசு-௨ இவைகளை சீலையில் தோளாந்தரமாகக்கட்டி கற்சுண்ணாம்பில்வைத்து ஆண்குழந்தைகள் மூத்திரத்தால்-எ-விசைதாளித்துப்பின் கற்சுண்ணம் எடை-௭, நாபி க இவைகளை கற்றாழைச்சோற்றாலாட்டி பயறளவு குளிகைசெய்து ஓட்டில் வைத்து மேலோடுமூடிசீலைசெய்து கோழிபுடம்போட்டாறியபின்மறுபடியும் ஒருவிருகனெடை நாபிசேர்த்து, இஞ்சிச்சாற்றில் உ-ஜாமம் அரைத்து பச்சைப்பயறளவு குளிகைசெய்து தேனில்தாக்கவும், வாந்தியானல் மிளகுகியாழம்கொடுக்கவும், பத்தியம் பசும்பால், வெந்நீர்,

துவரை, அரைக்கீரை, முருங்கைப்பிஞ்சு, அவரைப்பிஞ்சு ஆகும், சுட்டபுளி வறுத்தவுப்புஆகும், மேற்கூறியஅவுஷதங்களுக்கெல்லாம் பத்தியம்தவறினல் நோய்கள் தீராதென்றறிக.

உ - வது மருந்து.

தாளகம் கழஞ்சிரெண்டு, கற்சுண்ணம் கழஞ்சிநாலு, மிளகு கழஞ்சிநாலு இவைகளைக் கோழிமுட்டை வெண்கருவாலாட்டி துதுளங்காய்ப்பிரமாணம் குளிகைசெய்து திரிகடுகுகிய மூத்தில்கொடுக்கவும் தாளகத்தைச் சுண்ணாம்பில் வைத்து இரண்டுஜாமம் எரித்து சேர்த்துக்கொள்ளவும் முன்கூறியபத்தியம்.

ந - வது மருந்து.

தாளகம் விராகனெடை-ரு, துருசு-உ, நாபி க, சற்சுண்ணம்-ச இவைகளைக் கற்றாழஞ்சோற்றால்-ச-ஜாமம் ஆட்டி துவரைப்பிரமாணங் குளிகைகட்டி மிளகுநீரில் அல்லது இஞ்சிச்சாற்றில்தாக்கவும், முன்கூறியபத்தியம்.

விஷசுரம் வருதல்.

வாதம் பித்தத்திலும், பித்தம் ஐயத்திலும், ஐயம் வாதத்திலுமாசப் பிரண்டு பிரண்டு நன்குகம்போற் சீறிசிறிப்பேசுமாயின் இம்மைதெரியார்மூர்ச்சை அசைவற்றிருத்தல், முகம கொள்ளிபோன்றிருத்தல், எரிச்சல் கருநாகம்போல் தேகமிருத்தல்இடைவிடாமல்அகோரசுரம் ஆகியவண்ணமாய் மகாகொடுமைவாய்ந்த விஷசுரம் வருமென்றறிக.

பரிகாரமருந்து.

கெந்தகம் பணவெடை, ரசம் பணவெடை, நாபி பணவெடை, வெள்ளைபாஷாணம் பணவெடை, பொன்னூமத்தைவிரை பணவெடை, மிளகுகழஞ்சி-ல இவைகளை ஊமத்தஞ்சாற்றாலாட்டி குன்றிமணியளவு வுண்டைசெய்து எலுமிச்சம்பழச்சாற்றில்தாக்கவும் கடும் பத்தியம்.

உ - வது மருந்து.

ரசம், நாபி, கெந்தி, தாளகம், லிங்கம், வாளம், வெண்காரம், சுக்கு, மிளகு, திப்பிலி வகைக்குகழஞ்சி ஒன்றுவீதம் எடுத்து கருப்பஞ்சாற்றாலாட்டி சிறுபயறளவு குளிகைசெய்து இஞ்சிரசத்தில் கொடுக்கவும், மேற்கூறியசரக்குகளை இதற்குமுன்சொல்லியிருக்கும்வாறுபோன்று சுத்திசெய்துக்கொள்ளவும் கடும்பத்தியம்.

ஙு - வது மருந்து.

கெந்தகம், ரசம், தாளகம், வெள்ளைப்பாஷாணம், கடுகுரோகணி, பேய்ச்சுரைவிரை, வாளம்,பொன்னூமத்தைவிரை சிவதைவேர், வெள்ளைக்காவளைவேர், சுக்கு மிளகு திப்பிலி வகைக்குக் கழஞ்சி-உ, மிளகுபலம்-ச-இவைகளை அல்லிப்பூச்சாற்றால் ஒருஜாமமும் வெந்நீரில் ஒருஜாமமும் ஆட்டி மிளகு அளவு குளிகைசெய்து வெந்நீரில் தாக்கிட விஷசுரம்ஓடிப்போம். மேற்கூறியபத்தியம், பாஷாணவகைகளையும், சூரணவகைகளையும் முன்கூறியதைப்போன்று சுத்திசெய்யவும்.

சுரங்கள்-கூச-க்கும் அவுஷதங்கள்.

ஜாதிலிங்கம், பச்சைநாபி, இந்துப்பு, ரசம், கெந்தி,வெண்காரம், சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், சிவதைவேர், எட்டிவிரை, சித்திரமூலம் வேர்பட்டையாகிய இவைகளெல்லாம் சதுரக்கள்ளிப் பாலாலாட்டி மிளகுஅளவு குளிகைசெய்து அனுபானங்களறிந்துகொடுக்கவும்

உ - வது மருந்து.

வெள்ளைப்பாஷாணம் விருகனெடை-ஙு,பச்சரிசிதவுடு-ச இவைகளைக் கொத்துமல்லிகியாழத்தால் ஒருசாமமாட்டி பயறளவு குளிகைகட்டி சிரகக்கியாழத்திலிடவும்.

ஙு - வது மருந்து.

பெரியநத்தையைக் கொண்டுவந்து ௫-விருகனெடை தாளகத்தை அதன்வாயிற்செலுத்தி நாலுசீலைசெய்து குப்பைமேட்டில் மண்டலம் சமாதிவைத்து பிறகு கல்வத்திலிட்டு மிதிப்பாவைச்சாற்றாலாட்டி மிளகுஅளவு குளிகைகட்டி ஷை குளிகைஒன்று மிளகுஐந்து ஆறுவேளை கொடுக்கநீங்கும்.

ச - வது மருந்து.

சுக்கு, அதிமதுரம், ஏலம், ஜாதிக்காய், லவங்கப்பட்டை, சந்தனம், தேவதாரம், நன்னாரி, கோரைக்கிழங்கு, கோரோஜனம், கடுகு; கடுகுரோகணி, கோஷ்டம், இலுப்பைப்பூ, விலாமிச்சம்வேர், முந்திரிகை, பேரீச்சன்,சடாமாஞ்சில்,திப்பிலி, பச்சிலை வகைக்குக்கழஞ்சி-க-வீதம் கல்வத்திட்டு கறுப்பஞ்சாற்றாலும், இளநீராலும்-ச-ஜாமமாட்டி சுண்டக்காயளவு குளிகைசெய்து அந்நீரில் சீனிகூட்டி. மாத்திரை ஒன்றுதாக்கவும்.

ச

௫ - வது மருந்து.

வீரம்விருகனெடை-வ, பூரம் ௨, லிங்கம்-௩, பாஷாணம்-௨, நாபி ௩, கெவுரி-௨, தாளகம்-வ, கெந்தி-உ, மிளகுபலம்-க இவைகளை எலுமிச்சம்பழச்சாற்றாலாட்டி சிறுபயறளவு குளிகைசெய்து மிளகுகியாழத்திலிடவும், சுரங்கள்-கூ௪-ம் நீங்குமென்றறிக; அன்றியும் சுரங்களுக்குச்சொன்ன அவுஷதங்களில் பாஷாணவகைகள்சேர்ந்தஅவுஷதங்கள் புசிப்பவர்களுக்கு பத்தியங்கள் சர்வசாக்கிறதையோடு காக்கவும், சுரரோகம் நீங்கினபிறகு ஒருமண்டலம் மிளகுகியாழம் உண்ணச்செய்யவும், அவுஷதங்களின் வேகங்களியாவும் வீறுசெட்டோடுமென்றறிக.

ஒவ்வொரு அவுஷதங்களும் இந்நூலிற்கூறியவாறுபோல் சுத்திசெய்துசேர்க்கவும், சுத்திசெய்யாஅவுஷதங்கள் ரோகத்தை வெல்லாதென்றறியவும்.

மற்றையசுரரோகங்களின் வரலாற்றையும், நாடிகள் நடைகளையும், செய்கைக்குறிப்புகளையும், அவுஷதபாகங்களையும், அதற்குற்ற பத்தியங்களையும், சுத்திசெய்யும் விவரங்களையும் முறைமுறையேமுதற்பாகம், உ-ம்-பாகம், ௩-ம் பாகமாக அச்சிட்டுக்கொண்டு வருங்கால் கொஞ்சங்கொஞ்சமாகச் சேர்க்கப்படும்.

இனி மூலரோகநாடிநடைகளையும், அதனாலுற்ற செய்கைகளையும், நிவர்த்திக்கு மவுஷதபாகங்களையும், சுத்திசெய்யும்வகைகளையும் சிலதுசொல்லுவோமாக.

மூலரோக உற்பத்தி.

அதிசையோகத்தாலும், அதிககாரமுள்ளவஸ்துவை யுண்ணுதலாலும், அகாலபோஜனத்தினாலும், தனங்களைப்போக்கடித்தலாலும், மூத்தோரைவைதலாலும், கற்பழித்தலாலும், அதிதிகளைமனம்நோகச்செய்ததாலும், மோசம்பண்ணியதாலும், பசித்தோர்பார்க்க உண்டதாலும், வாக்கிலொன்றும் மனதிலொன்றுமாக வஞ்சனைகொள்ளுதலாலும் மூலரோகம் வந்தெய்துமென்றறிக.

மூலரோகத் தொகைகள்.

நீர்மூலம், செண்டுமூலம், முளைமூலம், சிற்றுமூலம், வரண்மூலம், இரத்தமூலம், சீழ்மூலம், ஆழிமூலம், தமரகமூலம், வாதமூலம், பித்தமூலம், சிலேற்பனமூலம், தொந்தமூலம், வினைமூலம், மேகமூ

லம், பவுத்திரமூலம், கிரந்திமூலம், குதைமூலம், புறமூலம், சுருக்கு மூலம், சவ்வுமூலம் ஆகிய மூலவகைகள் இருபத்தொன்றாய் விளங்குதென்றறிக.

மூலரோககுணங்கள்.

ஆசனத்தின் சுற்றிலும் கிழங்குமுளைகளைப் போன்றிருத்தலும், மலஞ்சிக்கலும், மலபாதைக்குப் போகுங்கால் உள்ளங்கால் தொடங்கி உச்சிபரியந்தம் வலித்தலும், அடித்தொடைச்சதைநோதலும், உடம்பு நோதலும், இளைத்தலும், நாபியின்கீழ் வாய்வுதங்கி அடிவயிறுநோக்காடும், அதிகசத்தத்தோடு வாயுபேசலும் ஆகிய இத்தகையகுணங்களைத் தருமாம் மகாகொடிய மூலரோகமெனக்கொள்க.

நீர்மூலம் வருதல்.

பித்தமும், வாதமும் ஒருங்குசேர்ந்து வால்நீண்டான்பரவையின் வாலைப்போலும், வேங்கையின்வாலைப்போலு மாடிநடக்கில் தொப்பூழ்மிகவலித்தும் அடிவயிற்றைச்சுழட்டிப் பொருமியும், மலம்வரண்டும், வாய்நீரூறியும், மலம்வருதல்போல் இறக்கியும், அடிக்கடி மலம் நீராய்ப்போதலுமாகிய குணங்களைத்தருமாம் நீர்மூலமென்றறிக.

நிவர்த்தி மருந்து.

வேப்பெண்ணெயில்-உக-விசை உருக்கிச்சாய்த்த சிறுகண்ணாகம் பலம்-க-க்கு விளாங்கனிப்பிரமாணம் வில்வஇலையையரைத்துக்கவசித்து ஏழுசீலைசெய்து வராகபுடமிடபற்பமாம். சுக்குச்சூரணமும், பனைவெல்லமும் சமன்சேர்த்து கழல்பருப்பு பிரமாணம் உண்டைக்குள் ஷை நாகபற்பம்பணவெடைவைத்து ஏழுவேளை உண்ணவும், இச்சாபத்தியம்.

உ - வது மருந்து.

மேற்படி சுத்திசெய்தநாகம் பலம்-உ, நாட்டுசர்க்கரையில்அரைத்தெடுத்த இரசம்-உ, இவ்விரண்டும் தொந்தித்து ஐந்தாங்காச்சல் வெடியுப்பு பலம்-க, சேர்த்து உத்தாமணிச்சாற்றால் நாலுஜாமமாட்டி வில்லைசெய்து ஓட்டில்வைத்து ஓடுமூடி சீலைசெய்து பத்தெருவில் புடம்போட்டெடுத்து குன்றியிடை தேத்தான்கொட்டைச் சூரணத்தில் வைத்துண்ணவும், கடும்பத்தியம்.

௩ - வது மருந்து.

இலுப்பெண்ணெயில்-எ-விசை உருக்கிச்சாய்த்த வெள்வங்கம் பலம்-க, சர்க்கரையில் சுத்திசெய்த இரசம் பலம்-க, சலாசத்து பலம் உ, இவைகளை சுண்ணநீரால் நாற்சாமமாட்டி வில்லைசெய்து ஓட்டில்

வைத்து ஓடுமூடி-ங-சீலைசெய்து-ம-எருவில் புடம்-க, உரு-எருவில் புடம்-க, ருய-எருவில் புடம்-க இப்படி சுண்ணநீரால் அரைத்தரைத்துப் புடமிட்டு-ங குன்றிவீதம் வெண்ணெயில் சாப்பிட நீர்மூலரோகம் நீங்குமென்றறிக, இச்சாபத்தியம்.

முளைமூலம் வருதல்.

வாதநாடியானது பித்தத்திலுறைந்து குரங்கின்வாலைப்போன்று தாவிடக்கில் ஆசனத்திற்கடுப்பும், ஆசனம்தடித்து எரிச்சலும், அடிவயிறு கல்லுபோன்றும், ஆசனம் சுருங்கியும், தினவுண்டாகியும், இரத்தம் பீறிட்டும், வயிற்றில் இரைச்சலும், ஏப்பமும், மலம்தீப்பிடித்துகறுகலும், அபானத்தில் முளைதோற்றலும் ஆகிய குணங்களோடு முளைமூலம் வந்தெய்தமென்றறிக.

நிவர்த்தி மருந்து.

சிற்றாமணக்கெண்ணெ பலம்-ருய, மெருகன்கிழங்கு ப ரு, கெருடன்கிழங்கு-ப-ரு, இவைகளைத் துண்டுதுண்டுகளாக்கி ஷை எண்ணை கொஞ்சம்விட்டு சிவக்கவறுக்கி சங்கன்குப்பியிலை, நொச்சி, கொட்டைகரந்தை, முருங்கிலை, செருப்படை, வெள்ளைவெங்காயம், அத்திப்பட்டை, பூவரசன்பட்டை, பூவரசுபழுப்புவகைக்குசார் படி-வ-இவைகளைச்சேர்த்து காச்சிவடித்து கருஞ்சீரகம், சாதிபத்திரி, வகைக்குப் பலம்-உ, ஜாதிக்காய் ப-க, பரங்கிசெக்கை ப-க, சிவன்வேப்பு ப-க, இவைகளைச் சூரணஞ்செய்திட்டுவேளைக்கு ப உ, வீதம் எண்ணை எ-நாள்கொடுத்து இரண்டுநாட்சென்றபின் முத்தெண்ணையால் ஸ்நாநஞ் செய்துவைக்கவும், இப்படி-ங-விசை கொடுக்கவும், இச்சாபத்தியம்.

௨ - வது மருந்து.

பிரண்டை, ஆமணக்குவேர், புளியன்வேர், நன்னாரி, கொடிவேலி, சீரகம், அக்கிராகாரம் இவைகளை சித்தாமணக்கெண்ணையில் காச்சிவடித்து-எ-நாள் சாப்பிடவும், இச்சாபத்தியம்.

ங - வது மருந்து.

வசம்பு, வாய்விளங்கம், சீரகம், சுக்கு, வெண்மிளகு, திப்பிலி, கோஷ்டம், கடுக்காய், ஓமம், சித்திரமூலம், கழற்சிவேர், அப்பைக் கிழங்கு வகைக்குப்பலம்-க இவைகளைச்சூரணித்து ஆவின்பாலில்பிட்டுவைத்து வெண்காரம், எவாச்சாரம், இந்துப்பு வகைக்கு விருகனெடை-க, சேர்த்து ஆவினெய்யில் ஜாமமாட்டி கழற்சிக்காய்ப்பிரமாணமுண்ணவும், முளைமூலரோகம் காணுதோடுமென்றறிக, இச்சாபத்தியம்.

சிழ்மூலம் வருதல்.

வாதமுமையமுங்கலந்து எருமையைப்போலசைந்தசைந்து நடக்கில் குதங்கடுத்தும், எரிப்புதோன்றியும், தேகம் மஞ்சணித்தும், நடைகுறைந்தும், நீர்மஞ்சணித்தும், மாமிசங்கள்கறைந்தும், சீழும் ஜலமும் கலந்துவருதலுமாகிய குணங்களோடு சிழ்மூலரோகம் வந்தெய்ததென்றறிக.

நிவர்த்தி மருந்து.

சுத்திசெய்தசூதம் விராகனெடை-க, செம்புபொடி வி-எ, கெந்தி வி-கூ, இந்துப்பு வி-ரு இவைகளை எலுமிச்சம்பழச்சாற்றில்-கு ஜாமமாட்டி அபானதுவாரத்தில்-ங-நாள்-கூ-வேளை உட்பூசவும்

உ - வது மருந்து.

நெறிஞ்சில், வில்வம், சித்தாமுட்டி, பேராமுட்டி, பாதிரி, கொன்றை, முள்ளி, கண்டங்கத்திரி, நன்னாரி, சுக்கு, சோம்பு வகைக்குப் பலம்-க, இவைகளை-உ-படி ஜலத்தில்போட்டு ஆழாக்குஜலமாகக்காச்சி வெண்ணெயிட்டு-சய-நாள் சாப்பிடவும், பத்தியமில்லை.

ங - வது மருந்து.

அதிவிடயம், பற்பாடகம், பரங்கிப்பட்டை; ஜாதிக்காய் இவைகள் வகைக்குபலம்-உ, வெள்ளாட்டுப்பால் படி-உ-விட்டு சுண்டக்காச்சி சூரணித்து பனைவெல்லம் பலம்-உ ரு, போட்டு மெழுகாக இடித்து நெய்கலந்து புன்னைக்காயளவு உட்கொள்ள சிழ்மூலரோகம் அகன்றுபோமென்றறிக, பத்தியமில்லை.

சுருக்குமூலம் வருதல்.

பித்தமும், ஐயமும் ஒருங்குசேர்ந்து காக்கையைப்போல் நடக்கில் ஆசனம் சுருங்கியும், பொருமலாயும், வலியும், இரத்தமும் ஜலமும் ஆசனவழியாயொழுகலும், ஆசனம்வெளுத்து அழலாய்த்தோற்றலும், சுருக்குசுருக்கெனப்பாதித்தலும், தேகமெலிதலுமாகிய குணங்களோடு சுருக்குமூலரோகம் வந்தெய்ததென்றறிக.

நிவர்த்தி மருந்து.

பாலில்வேகவைத்தெடுத்த நெல்லிகெந்தகம் பலம் க, கற்சுண்ணம் பலம் க இவைகளிரண்டையும் பொடித்து ஓட்டில்வைத்து கரிநெருப்பைமேல்வைக்க எரிந்து சிட்டமாகும், அச்சிட்டத்தை எலுமிச்சம்பழச்சாற்றாலாட்டி ஒருபலம் கற்பூரசிலாசத்துக்கு கவசித்து ங-சிலைசெய்து-கறு-எருவில் புடம்போட பற்பமாகும் ஆகிய பற்பத்

தில் பனைவெடை வெண்ணெயிற்கலந்து-உ௰-நாள் பொசிக்கவும், இச்சாபத்தியம்.

உ - வது மருந்து.

தூதுவளைவேர், ஆவாரைவேர், அருகன்வேர், நன்னாரிவேர், கீழ்ககாய்நெல்லிவேர், பிரண்டைவேர், சித்தாமணக்கன்வேர், சுக்கு, சீரகம், திப்பிலி, ஏலரிசி, அதிமதுரம் இவைகளைச்சூரணித்து ஆவின்பாலில் பிட்டவித்து எடுத்துணர்த்தி திரிகடிப்பிரமாணம் சீனியிற்கலந்து க-மாதம் உண்ணவும், பால்சேர்க்கவும், புத்தியமில்லை.

ந - வது மருந்து.

பவழம்பலம்-க, வீரம் விரா-கவ, சடாமாஞ்சில் விரா-சுவ, மிளகு விரா-ரு, இவைகளைக் குமரிச்சாற்றால்-ச ஜாமமாட்டி வில்லைசெய்து ஓட்டில்வைத்து ஓடுமூடி-எ சீலைசெய்து-௰-விரட்டியில் புடம் க, மறுபடியும் முன்சாற்றாலாட்டி உ௰-எருவில் புடம்-க, ரு௰-எருவில் புடம்-க, ர-எருவில் புடம்-க போட்டெடுத்து பணவெடை தேனிற்கொள்ள சுருக்குமூலரோகம்விட்டோடிப்போம் கடும்பத்தியம், பவழத்தை எலுமிச்சம்பழச்சாற்றால் சுத்திசெய்யவும், வீரத்தை மிளகுநீரில் தோளாந்தரமாய்க்கட்டி-க-ஜாமம் எரிக்கவும்.

புறமூலம் வருதல்.

வாதமும், பித்தமும்சேர்ந்து கோழிநடைநடக்கில் ஆசனத்தின்மேற்புறத்தில் சிறுசிரங்குகளும், சொரியும், ஆசனத்திற் பிளவுபோலும், திமிர்த்தும், நமைச்சலும், கடுப்பும், சீழும்ஆகிய குணங்களைத்தருமாம் புறமூலரோகமென்றறிக.

நிவர்த்திமருந்து.

தூதுவேளைமூலம், மருளங்கிழங்கு, கருணைமூலம், பிரண்டைமூலம், நல்லாரைவேர், காட்டுக்கருணைமூலம், மிளகரணைமூலம், வெள்ளறுகுமூலம், நீர்முள்ளிமூலம், வகைக்குப்பலம்-க இவைகளையுணர்த்திச் சூரணித்து பாலில்சுத்திசெய்து திரிகடிப்பிரமாணம் கோவெண்ணெயில்-௰-நாள் கொள்ளவும், பத்தியமில்லை அன்றியும்ஆசனத்தில் அப்பைக்கோவையிலையை யரைத்துக்கட்டவும்

உ - வது மருந்து.

நாகத்தை இலுப்பைநெய்யில்-எ விசை உருக்கிச் சாய்த்து ஒரு பலம்கட்டியை ஓட்டில்வைத்துருக்கி சிறுதுத்திவேரால் கிளறிக்கிளறித்தேய்க்க பற்பமாகும், அப்பற்பத்தைக் கற்றாழைச்சோற்றில்பணவெடைகலந்து-உ௰-நாள் கொடுக்கவும், இச்சாபத்தியம்,

௩ - வது மருந்து.

வேப்பெண்ணெயில்-௭ விசைஉருக்கிச்சாய்த்த கருவங்கம்பலம்-௧, நாட்டுச்சக்கரையில் சுத்திசெய்த இரசம்-பலம்-௧ இவைகளைத்தொங்கித்து சவ்வுநீக்கின சிற்றண்டத்தோல்பலம்-௩-சேர்த்துவெள்ளெருக்கன்பாலாலாட்டி சிறுவில்லைகளாக்கி மூசையில்போட்டு ஓடுமூடி-௭-சீலைசெய்து ஒருஜாமம் உலையில்வைத்தூத சுண்ணமாகும், அச்சுண்ணத்தை-௹-அரிசி பிரமாணம் கோவெண்ணெயிற்கலந்து-௭-நாள்உண்ண புறமூலரோகம்விட்டகலுமென்றறிக, கடும்பத்தியம்.

{ மூலவகைகள் இருபத்தொன்றுக்கும் பொது அவுஷதங்கள். }

ஒருபடி ஆநெய்யில் ஈறுள்ளிச்சார்-௪-படிவிட்டு ஆவின்பால் படிகலந்து அதிமதுரம் ஒருபலமறைத்துப்போட்டு சலமில்லாமல் சுண்டக்காச்சி மெழுகுபதமாய்வாங்கியபின் உச்சிக்கரண்டிவீதம் அந்திசந்தி-உ௰-நாளுண்ணவும் இச்சாபத்தியம்.

உ-வது மருந்து.

நாயுருவிசமூலம் பலம்-௰௬-இடித்துப் பாண்டத்திட்டு கையாந்தகரைச்சார்படி-௧, ஆவிநெய்படி-உ, ஒன்றாய்க்கலந்ததில் சித்திரமூலம்வேர்பட்டை, சிவதைவேர், மூக்குவெட்டி சாணிப்பாலில்சுத்திசெய்த சேங்கொட்டை, நாவல்பட்டை, சுக்கு, மிளகு, திப்பிலி, முன்னைவேர், தான்றிக்காய், நெல்லிக்காய், கடுக்காய், முசுட்டைவேர், வெட்டிவேர், புங்கம்பட்டை, உப்பு, புளி,மிளகாயில், கொதிக்கவைத்தெடுதவாளம், இந்துப்பு, சிறுகாஞ்சோரி, கஸ்தூரிமஞ்சள், புளியரணை, பிரண்டை, மருட்கிழங்கு, நன்னாரிவேர் வகைக்குப்பலம் ௨ இவைகளை இடித்துப் பாலிலறைத்து ஒக்கச்சேர்த்து இளந்தீயாக-௪-நாள் எரித்துப் பரமாய்க்காச்சி உச்சிக்கரண்டிவீதம் நெய்யை உ௰-நாள்அந்திசந்திகொள்ளவும், இச்சாபத்தியம்.

௩ - வது மருந்து.

சுக்கு, வெண்மிளகு, திப்பிலி, சீரகம், ஏலரிசி, அதிமதுரம், கோஷ்டம், வாய்விளங்கம், கடுகுரோகணி, மாசிக்காய், சோம்பு, நன்னாரி, வில்வவோடு, விளாங்கனிஓடு, நெல்லிவேர், பேய்ப்பீர்க்கு, சிறுகாஞ்சோரி, திரிபலை, சிவதைவேர், சித்தாமுட்டி, அறுகன்வேர், கட்டுக்கொடிவேர், வகைக்குப்பலம்-௧ இவைகளைப் பொடித்து-உ௰-படி ஜலம்விட்டு-௹-படி ஜலமாகச்சுண்டக்காச்சி, அரை ஆழாக்கு வீதம்,

சீனிபால்கூட்டி சாப்பிடவும்-ரு-படி ஜலம்ஆகும்வரை சுடவைத்து சுடவைத்து சாப்பிடவும், பத்தியமில்லை.

௪ - வது மருந்து.

நன்னாரி, முக்காவேளை, சிரா, செங்கழுநீர்; ஓரிலைத்தாமரை; வகைக்குப்பலம்-௩, மிளகு, திப்பிலி, சீரகம், அக்கிராகாரம், கருஞ்சீரகம், ஏலரிசி, லவங்கம், கொத்துமல்லி, குராசானிஓமம், வகைக்கு விராகனெடை-ரு, ஜாதிக்காய், கிராம்பு வகைக்கு விராகனெடை-க இவைகளை இடித்துச்சூரணித்து ஆவின்பாலில்பிட்டுவைத்து உணர்த்தி திரிகடிப்பிரமாணம் சீனிகூட்டி இருவேளை இருபதுநாட்கொள்ளவும், பத்தியமில்லை.

ரு - வது மருந்து.

நிலப்பனை, புளியமடல், வெருகங்கிழங்கு, மணிப்பிரண்டை; அமுக்கரா, அப்புகோவை, வகைக்குப்பலம்-ரு, சித்திரமூலம்,மிளகு, திப்பிலி, சீரகம், ஏலம், தேவதாரம், தேசாவரம், கடுகுரோகணி, அதிவிடயம், இந்துப்பு, கல்லுப்பு, வெடியுப்பு, வளையலுப்பு, கருஞ்சீரகம், அதிமதுரம், கோஷ்டம், வசம்பு, ஓமம் வகைக்கு விராகனெடை-உ, ஜாதிபத்திரி விராகனெடை-க, வெள்ளைப்பூண்டு பலம்-க இவைகளை இடித்துச் சூரணஞ் செய்துக்கொண்டு வேளையொன்றுக்கு திரிகடிப்பிரமாணம் இருவேளை அரைமண்டலம்கொள்ளவும்.

சா - வது மருந்து.

கோநெய் படி-வ, தென்னம்பூச்சாறு படி-௨ ஒன்றுகூட்டிஅதில் மாதுளத்தோடு, காட்டுக்கருணை, கரிக்கருணை, நிலக்கருணை, பேய்க்கருணை, செங்கத்தாரிபட்டை, ஆவாரம்வேர்பட்டை, புளியன்விரைத்தோல், ஆவாரையரிசி, களிப்பாக்கு வகைக்குப்பலம்-வ, கோஷ்டம், அதிமதுரம், விளாம்பிசின், நற்சீரகம், வால்மிளகு, காசுகட்டி வகைக்குவிரா சா, ஏலம்விராகனெடை-க, லவங்கப்பட்டை. பலம்-க, கிராம்பு, ஜாதிக்காய், வெண்மிளகு, வகைக்குவிராகனெடை-உ, ஜாதிபத்திரி விராகனெடை-க, இவைகளை ஆவின்பாலி லறைத்துப்போட்டு, சீனிபலம்-க, ஒன்றாய்க்கலந்து லேகியஞ்செய்து நாழி ஒன்றுக்கு கொட்டைப்பாக்களவு இருவேளை எட்டுநாட்கொள்ளவும்.

எ - வது மருந்து.

கையாந்தகரை, பொடுதலை, கீழ்க்காய்நெல்லி, பொன்னாங்கண்ணி, வீழி, மணத்தக்காளி, கொவ்வைமுதலிய தழைகளின்சாறு

வகைக்குப்படி-௨, சித்தாமணக்கெண்ணெய்படி-௪, இளநீர்படி ௨, எலுமிச்சம்பழச்சாறுபடி-௫, ஆவின்பால்படி ௨, சுக்கு, மிளகு, திப்பிலி, ஏலரிசி, அதிமதுரம், கடுகுரோகணி, ஜாதிக்காய், கிராம்பு, லவங்கப்பட்டை, கோஷ்டம், சீரகம், வெண்மிளகு, கடுக்காய், சித்திரமூலம், சித்தாமுட்டி, பேராமுட்டி வகைக்குப்பலம் ௨, இந்துப்பு, வளையலுப்பு, வெடியுப்பு, கரியுப்பு, கல்லுப்பு, வகைக்கு விராகனெடை-௪௨ இவைகளைப் பொடித்துப்போட்டு நீர்வற்றக்காச்சி வடித்துக்கொண்டு பின்படிகாரத்தைத் தூளித்து பூரம்வைத்து ஷை காரத்தூள்கொட்டி குடுவைக்குள்ளிட்டு மேல்மூடி-௩-சீலைசெய்து-௫-எருவில் புடம்போட்டு பற்பத்தை ஒருவிராகனெடை ஷை எண்ணெயிற்கலந்து உச்சிக்கரண்டிவீதம்-௨௰-நாள் இருபோது உட்கொள்ள சகல மூலரோகங்களும் வீடுவிட்டுக் காடுறையுமென்றறிக, இச்சாபத்தியம்.

மற்றைய மூலரோகங்களின்வரலாற்றையும், நாடிகளினடைகளையும், அவுஷதபாகங்களையும், அதற்குற்ற பத்தியபாகங்களையும், சுத்திசெய்யும்விவரங்களையும் முறைமுறையே முதற்பாகம், ௨-ம்-பாகம், ௩-ம்-பாகமாக அச்சிட்டுவருவோமாக.

இனி காசரோகவிவரங்களையும், நாடிகளினடைகளையும், நிவர்த்திக்கு மவுஷதபாகங்களையும், சிலதுசொல்வோமாக.

காசரோக உற்பத்தி.

நாடோறுஞ்சையோகித்தலாலும், பற்பலஸ்திரீகளிட புணர்ச்சியாலும், அதிகமாமிசபங்கை புசித்தலாலும், அதிகவெய்யலில் திரிவதாலும், திரேகத்துக் கேற்றுக்கொள்ளாப்பதார்த்தங்களைப் புசித்தலாலும், துக்கசாகரத்தில்மனதை ஓட்டியதாலும், அதிகாமமானோர் பிந்தைவிடாமல் இருந்ததாலும், தேவதைகளுக்குப் பிரார்த்தனைசெய்ததை நிறைவேற்றாததாலும், பிறர்பொருளை அபகரித்ததாலும், ஒருவர்மேல் நிந்தைவார்த்தைக்கூறியதாலும், செய்நன்றிமறந்ததாலும், கடன்கொடுத்தோரை அடித்தலாலும், ஒருவர்பசிக்க உண்டதாலும், வஞ்சகமனத்தினாலும், பதிவிரதாசிரோன்மணியைக் கற்பழித்ததாலும், சிநேகன்மனைவியைப் புணர்ந்ததாலும், ஆசான்மொழி கடந்ததாலும், பெரியோர்களைமதிக்காதுநிந்தைசெய்ததாலும், தேவதாதூஷணைசெய்ததாலும், மதபேதம்பேசினதாலும் மகாகொடுமைவாய்ந்து காசரோகம் வந்தெய்ததென்றறிக.

காசரோகத் தொகைகள்.

வாதகாசம், பித்தகாசம்; சேத்துமகாசம், வாதபித்தகாசம், பித்தசேத்துமகாசம், மந்தாரகாசம், சுவாசகாசம், சயகாசம், சுடர்காசம், பீநிசகாசம், நாதகாசம், தொந்தகாசம் ஆகிய காசரோகவகைகள் பன்னிரண்டாக வகுத்துரைத்தனரென்றறிக.

வாதகாசம் வருதல்

வாதநாடியானது கிறமியைப்போல்நடக்கில் நெஞ்சுணர்ந்தும், நெஞ்சில் தினவுண்டாகியும். செவிகளில் இன்றச்சலேத்தந்தும், மேற்சுவாசம்வாங்கியும், உந்திக்கமலத்தில் அதிகசதைவளர்ந்தும், நடுமுதுகுநொந்தும், கில்கள்விட்டும், இருமல் அதிகப்பட்டும், கோழைவந்தும் ஆகியகுணங்களோடுவருமாம், வாதகாசரோகமென்றறிக.

நிவர்த்திமருந்து.

வெடியுப்பு பலம்-ரு, பழம்புளி பலம்-ரு, ஒன்றுசேர்த்துகல்லுரலிலிட்டு ஜாடிபில்லேசெய்து அடியில்தீயிட்டெரிக்க எரிந்துகரியாகும், அதைப்பொடித்துப் பீங்கானில்வைத்துமேல்மூடிகுழிவெட்டிப்புதைத்து மூன்றுநாட்சென்றெடுக்க செயநீராகும், இப்படியேநாடோறும் காற்றுடாமல் புதைத்துபுதைத்து ஒருபக்கமாகநிற்கும் ஜெயநீரைஎடுத்துக்கொண்டு-க பலம் தாளகத்தை செயநீரில் தோய்த்து தோய்த்து நெருப்பில்-உக-விசைவாட்டி ஷை செயநீரால் தாளகத்தை நாற்சாமமாட்டி இலேசாகவில்லேதட்டி ரவியில்காய்ந்தபின் ஓட்டில் * சிப்பிச்சுண்ணம்பரப்பி ஷை தாளகம்வைத்து அதன்மேல் ஷை சுண்ணங்கொட்டி ஓடுமூடி-எ-சீலைமண் வலுக்கச்செய்து-ய-எருவில் புடம்-க, மேற்படிநீராலாட்டி முன்போல-யரு-எருவில் புடம்-க, உய-எருவில் புடம்-க-போட தவளநிறம்போன்றபற்பமாம், தேனில்பணவெடைபற்பம் கால்மண்டலம் சாப்பிடவும், கடும்பத்தியம்.

உ - வது மருந்து.

ஒருபலம் நற்பவழத்தை நிம்பழச்சாற்றிலும், முசுமுசுக்கைச்சாற்றிலும்-௩-நாளூரவைத்துப் பின்முசல் இரத்தத்தால்-௪-ஜாமமாட்டி இலேசாகவில்லேசெய்து-ய-எருவில் புடம்-க, முன்போலச்செய்து உரு-எருவில் புடம் க, ருய-எருவில் புடம்-க போடபற்பமாம், அன்

* சிப்பிச்சுண்ணமாவது:—ஏரிபிண்டமென்றும், கைசூப்பியென்றும் வழங்கும் ஓட்டைகுடுவையிலிட்டு மேல்மூடி உலையில்வைத்து ஒருசாமமூதச் சுண்ணமாம்.

றி சிங்கியென்றுவழங்கும் புள்ளிமான்கொம்பை முந்திசுட்டெடுத்து ௧-பலம்கொம்பை கல்வத்தில் பொடித்து கழற்சியிலை ரசத்தால்-௨-ஜாமம், நச்சுயிலைச்சாற்றால்-௩-ஜாமம், சிறுதுத்தியிலைச் சாற்றால்-௪-ஜாமமாட்டி வில்லைசெய்து-௨௰-எருவில் புடம்போட்டு மேற்கூறிய பவழ்பற்பம் குன்றியெடையும், சிங்கிபற்பம் பணவெடையுங்கலந்து தேனில்-௨௰-நாட்கொள்ளவும், இச்சாபத்தியம்

௩ - வது மருந்து.

ஒருபலம் கருவங்கத்தை வேப்பெண்ணெயில்-௨௧-விசை உருக்கிச்சாய்த்து வில்லைதட்டி பச்சைகெஞ்சாயிலையை விளாங்காய்ப்பிரமாணமறைத்து ஷெ வங்கத்திற்கு கவசித்து,ஒருமுழம் வேப்பங்கட்டையைத்துளைத்து அதனுள்கவசித்த மருந்தைவைத்து வேம்பின்கொம்பாலே தமரடைத்து-௭ சீலைவலுக்கச்செய்து கெசபுடம்போடப் பற்பமாகும், குன்றிஎடை தேனிற்கலந்து ௭-நாளிருபோதுசாப்பிட வாதகாசரோகம் விட்டோடிப்போமென்றறிக, கடும்பத்தியம்.

பித்தகாசம் வருதல்.

பித்தநாடியானது மந்நைநடையைப்போன்றுல்லாசமாகநடக்கில், இருமல், பிரட்டல், நாவினிப்பு, சத்தியென்னும்வாந்தி, சிலவேளை நாவுவர்த்தல், குரள்கம்மல், வாயில் இரத்தம்வீழல், தேகமிளைத்தல், புளியேப்பம்விடல், தீபனக்குறைவு, ஆகாரஞ்செல்லாமை, சைகாலசதி, சோம்பல், ஆயாசம், மூர்ச்சை, தலைவலி, உடம்புவலி, மலச்சிக்கல், நித்திரைபங்கம், நாவரட்சி, கோபித்தல், சிலவேளைசந்தோஷித்தல், துக்கித்தல், சிலவேளை விரத்தனம், எழுந்துஓடல், உதடுவரளல், ஆடல் பாடலாகிய குணங்களோடு பித்தகாசரோகம் வருமென்றறிக.

நிவர்த்தி மருந்து.

தேத்தான்கொட்டைபலம்-௫, சுக்கு, மிளகு, திப்பிலி,கடுக்காய், தான்றிக்காய், நெல்லிக்காய், சிற்றரத்தை, சீரகம், வகைக்குப்பலம்-௧, சூரணித்து ஆவின்பாலில்பிட்டுசெய்து சீனிபலம்-௪, ஆவின்பால் படி-௧ ஒன்றாய்க்கலந்து பாகுசெய்து ஷெசூரணத்தைக்கொட்டிக்கிளறி பதமாகுஞ்சமயத்தில் ஆவிநெய்படிகலந்துக்கிண்டி இறக்கி தேன் பலம்-௫-விட்டு சுண்டைக்காயளவு லேகியஞ்செய்து அதில் குன்றியிடை கீழ்க்குறித்த வெள்ளிபற்பம்வைத்துண்ணவும்.

வெள்ளிச்சுண்ணம்.

ஒருரூபாயெடை சொக்கவெள்ளியை மகிழம்பூச் சாற்றில் ௭ விசை உருக்கிச்சாய்த்துப் பொடித்து சிற்றண்டஓடுபலம்-௨-சேர்த்து

ஷி சாற்றால் ௪-ஜாமமும், கற்சுண்ணநீரால்-௪-ஜாமமாட்டி, சிறுவில்லைகளாக்கி மூசையில்வைத்து மேல்மூடி-௭-சீலைவலுக்கச்செய்து இரட்டைதுருத்திகொண்டு ௯-ஜாமம் உலையில்வைத்தூத சுண்ணமாகும், இச்சாபத்தியம்.

௨-வது மருந்து.

முத்துபலம் ௧, பவழம்பலம்-௧, சிங்கிபலம் ௧, கற்பூரசிலாசத்து பலம் ௧, கல்மதம் பலம்-௧ இவைகளை நிம்பழச்சாற்றிலூரப்போட்டு மூன்றுநாளெடுத்துக்கல்வத்திலிட்டு கையாந்தகரைச்சாற்றில்-௨-ஜாமமாட்டி-௰-எருவில் புடம்-௧, குப்பைமேனிச் சாற்றில்-௨௰-எருவில் புடம்-௧, பொடுதலைச்சாற்றில்-௨௫-எருவில்புடம்-௧, பொன்னாங்கண்ணிச்சாற்றில்-௩௰-எருவில்புடம்-௧, முசுமுசுக்கைச்சாற்றில்-௩௫-எருவில் புடம்-௧ போட்டு சீரகச்சூரணத்தில்பணவெடைவைத்துக்கொடுக்கவும், பத்தியமில்லை.

௩-வது மருந்து.

எருமைக்கொம்பு கஸ்தூரிபலம்-௫, வெள்ளாட்டுக் கோமயத்தில் ௯-நாள் ஊரப்போட்டுப் பின்கறுஊமத்தன் இலை-௪-விளாங்காய்ப்பிரமாணம் அரைத்துக்கவசித்து சீலைசெய்து-௱-எருவில் புடம்-௧, மறுபடியும் கவசநீக்கி, முன்போல்-௨௱-எருவில்புடம்-௧-போட பற்பமாகும், இதில்பணவெடையும் மேற்கூறியபவழபற்பத்தில் பணவெடையுங்கலந்து திரிகடுகுசூரணத்தில் ஒருமண்டலம்தாக்க பித்தகாசரோகம் நீங்கிப்போமென்றறிக.

ஐயகாசம் வருதல்.

ஐயநாடியானது சேவல்சிய்க்கும் வாறுபோன்று அதிநடையுளதாயில் தாழ்ந்தஇருமல், இறைப்பு, இளைப்பு, ஈளை, மதமூச்சு, அடிவயிறு கற்போன்றிருத்தல், பசியின்மை, உடம்புவற்றல், சுரம்வருதல், தியங்கல், வாந்தி, சிறுகடுப்பு, உடம்பெங்கும் உஷ்ணகாந்தலாகிய குணங்களோடு ஐயகாசரோகம்வருமென்றறிக.

நிவர்த்தி மருந்து.

நாட்டுச்சர்க்கரையில் சுத்திசெய்த இரசம்பலம்-௭, நல்லெண்ணை, நிம்பழச்சார், கொவ்வைச்சார், கொடிவேலிச்சார், வேளைச்சாரிவைகளில் வகைக்கு-௭ விசையாக உருக்கிச்சாய்த்தகருவங்கம்பலம்-௪, தொந்தித்து அயச்சட்டியிலிட்டு உருகும்போது ஆவாரபஞ்சாங்கம், வேளைவேர், துத்திவேர்ப்பொடியைத் தூவிதூவி வெள்ளெருக்கன்வேரால்-௪-ஜாமம் கிளறிக்கிளறிப் பின்வெள்ளெருக்கம்பாலாலாட்

டி கோழிபுடம்போட்டு பணவெடை தேனில் அல்லது நெய்யில்கொடுக்கவும், கடும்பத்தியம்.

௨ - வது மருந்து.

மேனிச்சார்படி-௨, பழங்காடிபடி ௨, வெடியுப்புபலம்-ரு. ஒன்ருய்ச்சேர்த்துக்கடைந்ததில் கொம்புக்கள்ளிப்பாலில்-௪-ஜாமம் சுருக்குகொடுத்துப் பின்செந்நாயுருவிச்சாம்பலில்வைத்து-௰௨-ஜாமம் எரித்ததாளகம்-௨-பலத்தைத் தோஷாந்தரமாகக்கட்டி தண்ணீர்வற்றுமட்டுமெரித்துப் பின்வெடியுப்பு ஜெயநீரில் ௪-ஜாமம் சுருக்குகொடுத்து பத்துவிசைதீட்சைசெய்த பூநீறுவிருகனெடை-௨-சேர்த்து அம்பைக்கிழங்குசாற்றில்-௮-ஜாமமறைத்து சிறுவில்லைகளாக்கி காய்ந்தபின் சட்டியில் கற்சுண்ணம்பரப்பி ஷை தாளகத்தைவைத்து மேலும் கற்சுண்ணங்கொட்டிமேல்சட்டிமூடி-௭-சீலைவலுக்கச்செய்து-௬-ஜாமம்காடாக்கினியாகஎரிக்க தவளநிறம்போன்ற பற்பமாகும்-௨-அரிசிப்பிரமாணம் தேனில்-௰-நாள் இருவேளைசாப்பிடவும், சுட்டபுளி வறுத்தவுப்பு கூட்டவும்.

௩ - வது மருந்து.

தேத்தான்கொட்டை பலம்-ரு, சித்திரமூலம், மிளகு, ஏலரிசி, திப்பிலி, லவங்கம், கார்போகவித்து, அதிமதுரம், கோஷ்டம், தான்றிக்காய் நெல்லிக்காய், ஏலம், வால்மிளகு, சண்பகப்பூ, செங்கழுநீர், நற்சீரகம், சிறுதேக்கு, கோரைக்கிழங்கு, சாதிக்காய், இருசீரகம், பூலா, சாதிபத்திரி, லவங்கப்பட்டை, வகைக்குவிருகனெடை இவைகளைச்சூரணித்து ஆவின்பாலில்பிட்டுவைத்து பின்கலியாணபூசனிக்காய், சிறுகீரை, பொன்னுங்கண்ணி, பொடுதலை, கையாந்தகரைசாறு வகைக்குபடி அரைக்கால்,ஆவின்பால்படி-வ,பனைவெல்லம் வீசை வ-சேர்த்து பாகுசெய்து ஷை சூரணத்தைக்கொட்டிக்கிண்டி ஆவினெய்வீசை ௨, சேர்த்துக்கிளறி இரக்கி தேன்பலம்-ரு விட்டு கொட்டைப்பாக்களவுதிரட்டி இந்நூலிற்கூறியபடி பவழபற்பம் காசெடைவைத்து இருவேளை உட்கொள்ளவும், அன்றி-௮-நாளைக்கோர்விசை அடியிற்கூறிய தயிலத்தை ஸ்நாநஞ்செய்யவும்.

தயிலம்.

கையாந்தகரை, பொன்னுங்கண்ணி, கொடிவேலி, அருகன்சாறு வகைக்குப்படி-வ, எள்ளெண்ணெபடி-௨ சேர்த்து அதிமதுரம், கோஷ்டம், ஏலம், குராசானிஓமம், பூலா, கஸ்தூரிமஞ்சள், சடாமாஞ்சில், ஜாதிபத்திரி, ஜாதிக்காய், லவங்கப்பத்திரி, லவங்கப்பட்டை, சுக்கு,

மிளகு, திப்பிலி, கடுக்காய், தான்றிக்காய், நெல்லிக்காய், பூஞ்சாந்து, சேரம்பு, வால்மிளகு, கார்போகவித்து, சந்தனத்தூள், வெட்டிவேர், விலாமிச்சை, அருகன்வேர், கோரைக்கிழங்கு, வகைக்குப்பலம்-க, பொடித்துப்போட்டு நீர்வற்றக்காய்ச்சி முழுகிவர ஐயகாசரோகம்விட்டோடிப்போமென்றறிக, இச்சாபத்தியம்.

சுவாசகாசம்வருதல்.

வாதநாடியும் பித்தநாடியும் ஒருங்குசேர்ந்து ஆமையைப்போல் மெள்ளஊர்ந்துநடக்கில் வயிறுஇரைச்சல், அன்னஞ்செரியாமை, கோழைகட்டல், இருமல், நாசிவரட்டல், குரல்கம்மல், முதுகெலும்பு எரிச்சல், மேற்சுவாசம், படுக்கைபொருந்தாமை, தேகவாட்டமாகிய குணங்களோடு சுவாசகாசரோகம் வருமென்றறிக.

நிவர்த்தி மருந்து.

பேய்ப்புடல், பேய்ப்பீர்க்கு, நெரிஞ்சி, நீர்முள்ளிவித்து, சீரகம், சந்தணம், சாம்பிராணி, பச்சைகற்பூரம், கோரோசனை, கலைக்கொம்பு பற்பம், நெல்லிக்காய்மிளகு, திப்பிலிவகைக்குப்பலம்-க சூரணித்து, செவ்விளநீரில்ஆட்டி குன்றியளவுகுளிகைகட்டி மாத்திரைஒன்றை சுக்குச்சூரணத்தில்வைத்து மண்டலம்புசித்து அடியிற்சொல்லியதயிலத்தை ஸ்நாநஞ்செய்யவும்.

தயிலம்.

அகிற்கட்டை, அறுகங்கட்டை, வகைக்குவீசை-வ, ௨-படிஜலம் விட்டு-௭ படிஜலமாகஇறக்கி ஒருவீசைஎண்ணெயிற்கலந்து நீர்வற்றக்காச்சி-அ-நாளைக்கொருவிசை ஸ்நாநஞ்செய்துவரவும், இச்சாபத்தியம் முழுகுநாள் மருந்தைநீக்கவும்.

௨ - வது மருந்து.

நான்குவிரற்கடைப்பிரமாணம் அகலமாயும், ஓலைகனமாயுமுள்ளதைப்போல் கருவங்கத்தை தகடதாக்கி-க-பலம் படிகாரத்தை கேசரிநீராலாட்டி தகட்டில்-ம-விசைபூசிபூசி குழிகெல்லி-ம௨-படி ஜலம் கொள்ளும்படியானபாண்டம்வைத்து அப்பாண்டத்தில்-௨ ௭ படிபுளியம்பரணைகொட்டி ஷை வங்கத்தகடுவைத்துமேலும்முன்போல-௨ ௭ படி புளியம்பரணைவைத்து பாண்டத்தில்தீவைக்க எரிந்துகரியாகும், அதற்குள்ளிருக்கும் வங்கத்தைக்கல்வத்திலிட்டு-வ-பலம் ரசம் தொந்தித்துப் பின்சிற்றண்டவோடுபவம்-௩-சேர்த்து வெள்ளெருக்கன்பாலால்-௪ ஜாமமாட்டி வில்லைசெய்து ஓட்டில்வைத்து ஓடுமூடி-வ-சீலை

வலுக்கச்செய்து-௫ம்-எருவில் புடம்போடநீறும், நீற்றியபற்பத்தை குன்றியிடை கோவெண்ணெயில் கால்மண்டலம் இருவேளை சாப்பிடவும், கடும்பத்தியம், கருவங்கத்தை வேப்பெண்ணெயில்-௨௧-விசை உருக்கிச்சாய்க்க சுத்தியாம்.

௩ - வது மருந்து.

ஆவின்பாலில்-௩-நாளூரப்போட்ட தாளகம்பலம்-௧, படிகாரம் பலம்-௨, சலாசத்துபலம்-௮ இவைகளைக்கற்றாழஞ்சோற்றால்-௪-ஜாமமாட்டி சிறுவில்லைகளாக்கி ஓட்டில்வைத்து ஓடுமூடி-௭-சீலைவலுக்கச்செய்து-௰-எருவில்புடம்போட நீறும், நீற்றியபற்பத்தைதிரிகடுகுசூரணத்தில் பணவெடைவைத்து சீனிநெய்கலந்து கால்மண்டலம் இருவேளையுண்ண சுவாசகாசரோகம் நீங்குமென்றறிக, கடும்பத்தியம்.

தொந்தகாசரோகம் வருதல்.

மூன்றுநாடிகளும் ஒன்றுக்கொன்றுபேதித்து வாதம் அட்டைபோலும், பித்தம் அன்னம்போலும், ஐயம் ஆமைபோலும்நடக்கில், இரத்தங்கக்கல், வெதும்பல், எரிச்சல், குத்திகுத்தி இருமல், அரோசிசம், பேதி, படுக்கைபொருந்தாமை, உடம்பூதல், தேகம்கடுத்தல், கோழைகட்டல், எழுந்திராமை ஆகியகுணங்களோடு மகாகொடுமைவாய்ந்த தொந்தகாசரோகம் வருமென்றறிக.

நிவர்த்தி மருந்து.

வேம்பின்பட்டையைக் கொண்டுவந்து சிறுபிளவைகள்சிறுநீர்வார்த்திடித்துச்சார்பிழிந்து சிறுகண்ணுகத்தை-௨௧-விசை உருக்கிச்சாய்த்துப்பின் ஒருபலம் எடுத்துக்கொண்டு அயக்கரண்டியிலுருக்கி கொஞ்சிவேரால் ஒருஜாமம்தேய்த்து பணவெடைக்கு கடுக்காய், திப்பிலி, கோஷ்டம், அதிமதுரம், கிராம்பு, ஜாதிக்காய், அக்கிராகாரம், அரத்தை வகைக்கு ஓரிடைதூக்கிச்சூரணித்ததில் திரிகடிப்பிரமாணஞ் சலந்து கால்மண்டலம் இருவேளைகொள்ளவும், கடும்பத்தியம்.

௨ - வது மருந்து.

இரும்பு விருகனெடை-௧, நாகம் விரா-௨, வெள்ளி விரா-௨, செம்பு விரா-௧, தங்கம் விரா-௨, காந்தம் விரா-௨, ஒன்றாயுருக்கி பூவரத்தால்ராவி கல்வத்திலிட்டு, இரசம் விரா-௫, கெந்தி விரா-௰, இந்துப்பு விரா-௪, அன்னபேதி விரா-௫-சேர்த்து பொற்றலைக்கையாந்தகரைச்சாற்றால்-௨௪-ஜாமமாட்டி உணர்த்திப்பொடித்து காசிகுப்பி

யில் பாதிநிரப்பி கல்கார்க்குபோட்டு-எ சீலை வலுக்கச்செய்து சட்டியில்-சு-விரற்கடை மணல்கொட்டி குப்பிவைத்து கழுத்தளவு மணல்போட்டு மேல்சட்டிமூடி சட்டிவாய்சீலை வலுக்கச்செய்து தீபாக்கினியாய்-உ-ஜாமம் கமலாக்கினியாய்-உ-ஜாமம் காடாக்கினியாய-சு-ஜாமமெரிக்கச் செந்தூரமாம் ஆகிய செந்தூரத்தில் பணவெடை திரிகடுகுசூரணத்திற்கலந்துண்ணவும், கடும்பத்தியம், அன்றி மேற்கூறியசரக்கில் அயப்பொடியை சம்பழச்சாற்றில்-ரு-நாளூரவைக்கவும், நாகத்தை இலைக்கள்ளிப்பாலில்-எ-விசை உருக்கிச்சாய்க்கவும், வெள்ளியைமகிழம்பூச்சாற்றில்-எ-விசை உருக்கிச்சாய்க்கவும், செம்பைகேசரிலைத்தியைப்பூசி ய-புடம்போடவும், காந்தத்தை நல்வேளைச்சாற்றில்-ரு-நாளூரப்போடவும், தங்கத்துக்கு சாவிக்கல்லை நிம்பழச்சாற்றிலாட்டிப் பூசிப்பூசி ய-புடம்போடவும், இரசத்தை நாட்டுச்சர்க்கரையில் அரைக்கவும், கெந்தகத்தைப்பாலில் ஒருமணிநேரம் ஊரப்போடவும், அன்னபேதியை ஆவின்கோமயத்தில்போட்டு காச்சவும், சுத்தியாம்.

ரு - வது மருந்து.

முருங்கைவேர், கல்லுப்பு, அன்னபேதி, காக்கணமூலி, பொன்னிமிளை ஆகிய இந்த ஐந்தையுஞ் சமனெடையாய்த்தூக்கி நிம்பழச்சாற்றால் ஒருசாமமாட்டிப் பின்கொடிவேலிச்சாற்றில்-உ-ஜாமமாட்டி விருகனெடை தாம்பரத்தகட்டிற்பொதிந்து சீலைசெய்து கெசபுடமிட செந்தூரிக்கும் ஆகிய செந்தூரத்தை திரிகடுகுசூரணத்தில் பணவெடைவைத்துண்ண மகாகொடிய தொந்தகாசரோகம் வீடுவிட்டுக் காடுறையுமென்றறிக, இச்சாபத்தியம்.

சகலகாசரோகங்களுக்கும் பொதுஅவுஷதங்கள்.

தாளகம்பலம்-க-க்கு ஐவிரலிச்சாறுபடி-க, பசளைச்சாறுபடி-க, எருக்கம்பால்படி-வ, இவைகளை ஒன்றுபடுத்தி சுருக்கிப்பின்பு பின்படிகாரம்பலம்-உ-சேர்த்து எருக்கம்பாலாலாட்டி சிறுவில்லைகளாக்கிசுண்ணாம்புக்குள்கவசித்து சீலைசெய்து-ய-எருவில் புடம்போடச் சுண்ணமாம், பணவெடை தேனிற்கொள்ளவும், கடும்பத்தியம்.

உ-வது மருந்து.

மிருதார்சிங்கி, குஞ்சிபொரித்தஅண்டோடு, வெடியுப்பு இவைகளைச் சமனெடையாய்த்தூக்கி வெள்ளெருக்கம்பாலாலாட்டி சிறுவில்லைகளாக்கி மூசையில்வைத்து மேல்மூடிசீலைசெய்து ஒருசாமம் உலையில்வைத்தூதச் சுண்ணமாம், பணவெடை கோவெண்ணெயிற்கலந்து கால்மண்டல மிருவேளைகொள்ளவும், இச்சாபத்தியம்.

ங - வது மருந்து.

ஒருபலம் பவழத்தை வெள்ளெருக்கம்பாலில்-உ-ஜாமமாட்டி-ம-எருவில் புடம்போட்டு பணவெடை வெண்ணெயில்-உம-நாள் இருவேளைகொள்ளவும், இச்சாபத்தியம்.

ச - வது மருந்து.

ஒருரூபாஎடைவெள்ளியை மகிழம்பூச்சாற்றில் எ-விசை உருக்கிச்சாய்த்து ஓலைகனம் தகடதாக்கி வில்வப்பழத்தில்வைத்து கெஜபுடம்போட்டு பணவெடை சீரகச்சூரணத்திலுண்ணவும், இச்சாபத்தியம்.

ரு - வது மருந்து.

நெல்லிகெந்தகம் விரா-க, வீரம் விரு-க, கற்பூரம் விரு-க இவைகளை எருக்கன்பாலாலாட்டி ஒருரூபாயெடை வெள்ளிக்குப் பூசிபூசி-ம-புடம்போட்டெடுத்து பொடியாய்ராவி குஞ்சுபொரித்தபுருவோடு இரட்டிசேர்த்து படிகாரம் ஒன்றுங்கூட்டி வெள்ளெருக்கம் பாலாலாட்டி சிறுவில்லைசெய்து மூசைக்குள்வைத்து ஒருஜாமம் உலையில்வைத்துாதசுண்ணமாம், காசெடை சுக்குச்சூரணத்தில்வைத்துண்ணவும்.

சா - வது மருந்து.

ஒருபலம்தாளகத்தைச் சுண்ணாம்பிலும், சிறுபிள்ளைகள் சிறுநீரிலும் வேகவைத்தெடுத்து, உத்தாமணிச்சாற்றில் நாலுஜாமம்; பனங்கள்ளில் நாலுஜாமம் சுருக்கிட்டெடுத்து படிகாரமிரட்டிசேர்த்து நிம்பழச்சாற்றால்-உ-ஜாமமாட்டி சிறுவில்லைகளாக்கி சுண்ணாம்புடொதிந்து-ம-எருவில் புடம்போடநீறும் பணவெடை வெண்ணெயில்-ம-நாள் இருவேளைகொள்ளவும். இச்சாபத்தியம்.

எ - வது மருந்து.

சிவப்புமுள்ளுக்கீரையைக் கொளுத்திச் சாம்பலாக்கி சிறுநீரில் கரைத்து சுண்டக்காச்சி உப்பெடுத்து விருகனெடைதங்கத்தகட்டிற்கு வாய்நீரால்மத்தித்து-ம-விசை கனக்கப்பூசி ஒருசீலைசெய்து-ஙா-எருவில் புடம்போடநீறும், பணவெடை சீரகலேகியத்தில் வைத்துண்ண சகலகாசரோகங்களும் விட்டோடிப்போமென்றறிக.

மற்றையகாசரோகத்தொகைகளையும், நாடிகளின்கிரமவரிசைகளையும், அவுஷதபாகங்களையும், அதற்குற்றபத்தியவகைகளையும் முறைமுறையே முதற்பாகம், உ-ம்-பாகம், ங-ம்-பாகமாக அச்சிட்டுவருவோமாக.

இனி குன்மரோக உற்பத்திகளையும், அதன்நாடிகளின்நடைகளையும், அவுஷதப்போக்குகளையும், அதற்குற்றபத்தியபாகங்களையுஞ்சுருக்கமாய்ச்சொல்வோமாக.

குன்மரோக உற்பத்தி.

நாடோறும் மையலாரிடமணைதலாலும்; துவர்ப்புள்ளவைகளையுண்ணுதலாலும், பற்பலகிழங்குவகைகளை யருந்துதலாலும், அதிககாரவஸ்துவையுண்ணுதலாலும், காலந்தப்பிக்காலங்களில் ஊணெடுப்பதினாலும், பசியை அடக்குவதாலும், கோபத்தினாலும்,குருநிந்தைசெய்குவதாலும், சிசுக்களை பட்டினிவைப்பதாலும், நால்வகை ஜாதிகளில் முதலவளாகிய பதுமினியம்மாளை கற்பழிக்க எண்ணுவதாலும், தாய்தந்தையர்களை மனம்நோகச்செய்வதாலும், மநுதூஷணைப்பேசுவதாலும், வஞ்சனைசெய்வதாலும், பிறர்பசிக்க உண்ணுவதாலும், சிவதூஷணைசெய்வதாலும், ஒருவன்குடியைக்கெடுக்க எண்ணுவதாலும், அதிதிகளைவைவதாலும், பெரியோர்களைப் பழிப்பதாலும், அவயவப்பழுதுள்ளவர்களை ஏசுவதாலும், கொடுமைவாய்ந்த குன்மரோகம் வந்தெய்துமென்றறிக.

குன்மரோகத்தொகைகள்.

வாதகுன்மம், பித்தகுன்மம், ஐயகுன்மம், எரிகுன்மம், வலிகுன்மம், சத்திகுன்மம், காசகுன்மம், தொந்தகுன்மம் ஆகிய குன்மரோகங்க ளட்டவிதமெனக் கண்டுகொள்க.

வாதகுன்மம் வருதல்.

வாதநாடியானது துடித்து பித்தத்திலுறைந்து சாரையைப்போல்நடக்கில் மலஞ்சிக்குதல், நடைகுறைதல், தேகங்கடுத்தல், சரீரம் பளுவாய்த்தோன்றல், தியங்கல், அன்னஞ்செல்லாமை, கைகால்களோச்சல், நாவரட்டல், தலைநோக்காடு ஆகிய குணங்களோடு வந்தெய்துமாம் வாதகுன்மரோகமென்றறிக.

நிவர்த்தி மருந்து.

ஜாதிலிங்கம், நாபி, கெந்தகம், மிளகு, சுக்கு, மனோசிலை, வகைக்குப்பலம்-வ இவைகளைக்கல்வத்திலிட்டுஊமத்தைச்சார்விட்டு-உ-ஜாமமாட்டி குகைசெய்து குகைக்குள் * இரசம் பலம்-கவ-வைத்து மூடி சு-அங்குலசட்டியில் சோத்துப்புபோட்டு ஷை குகைவைத்துமேலும்

அன்றி * இரசத்தை பிரம்மராக்காசியிலைச்சாற்றில் ஒருசாமமாட்டியெடுக்க சுத்தியாகும்.

உப்புகொட்டி சட்டிமூடி எ-சீலை வலுக்கச்செய்து-ரு-எருவில் புடம் போட பற்பமாகும் ஆகியபற்பத்தை () பஞ்சதீபாக்கினிச்சூரணத்தில் சீனிநெய்கலந்து-உ-குன்றிவீதம்-மஉ-வேளைவைத்துண்ணவும், கடும் பத்தியம்

உ-வது மருந்து.

நாட்டுச்சர்க்கரையில் சுத்திசெய்த இரசம் பலம்-க, ம-அங்குல சட்டியில் செய்யூர்உப்புபடிகொட்டி குழிபண்ணி ஷை இரசம்விட்டு மேல்சட்டிமூடி எ-சீலை வலுக்கச்செய்து-சும-நாழிகைக் காடாக்கினி யாயெறிக்க மேல்சட்டியில் மருந்துஒட்டியிருக்கும் ஒட்டிய மருந்தை யெடுத்து பணவெடை சுக்குசூரணத்தில்கலந்து-ம-நாள் இருவேளை உண்ணவும்.

ந - வது மருந்து.

சாதிலிங்கம், பூரம், வீரம், ரசச்செந்தூரம், சுக்கு, திப்பிலி, லவங்கம், அதிமதுரம், அக்கிராகாரம், ஏலரிசி, சாயபிராணி, கற்பூ ரம், கெந்தகம், கோஷ்டம் வகைக்குப்பலம்-வ, மிளகுபலம்-க இவை களை மலைத்தேன்விட்டு-உ-ஜாமமாட்டிபட்டாணிப்பிரமாணம்-ரு-நாள் இருவேளைசாப்பிடவும், இச்சாபத்தியம்.

பித்தகுன்மம்வருதல்.

பித்தநாடியானது தனித்துச்சிமிர்ந்து அன்னநடை மயிலைப்போல் நடக்கில், அடிவயிறுநோதல், வாய்நீரூறல், வாந்தியாகல், முகம்மஞ்ச ணிறம்போன்றிருத்தல், கிறுகிறுப்பு, மூர்ச்சை, நெஞ்சில் கோழை கட்டல், தேகமெங்கும் எரிச்சல், கைகாலெரிச்சல், வெய்யலில் தலை சுழற்றல், சிறுநீர் சிவந்திருத்தல், மலம் முக்கிவிழுதல், புளியேப்பம், நெஞ்சில் குத்துண்டாதல் பசியில்லாமை, நாவரட்டலாகிய குணங்க ளோடு வருமாம் மகாகொடியவினையாகிய பித்தகுன்ம ரோகமென் றறிக.

நிவர்த்திமருந்து.

கல்லுப்பு, வெடியுப்பு, சாரம், படியாரம், பூநீறு, வளையலுப்பு, இந்துப்பு, கறுப்புஉப்பு, நுரையுப்புவகைக்குப்பலம்-வ, மிளகு, சுக் கு, திப்பிலி, ஏலரிசி, சீரகம், வகைக்குப்பலம் உ இவைகளை மலைத்

() பஞ்சதீபாக்கினிச் சூரணமாவது:—சுக்கு, மிளகு, திப்பிலி, ஏலரிசி, சீரகம் சமனெடைகொண்டு பொன்வறுப்புசெய்து சூரணம் செய்யவும்.

தேன்விட்டாட்டி சுண்டைக்காய்ப் பிரமாணம்-உ௰-நாள்-௬௰-வேளை கொள்ளவும், இச்சாபத்தியம்.

உ - வது மருந்து.

தோல்போக்கி வில்லையாக்கிப் பசுநெய்யால் பொன்வறுப்பாய் வறுத்தெடுத்த இஞ்சிபலம்-௰, சுக்கு, மிளகு, திப்பிலி, ஏலரிசி, லவங்கம், ஓமம், வாலுளுவை, சாதிக்காய், ஆனைத்திப்பிலி, சீரகம், அதிமதுரம், குராசானிஓமம், அமுக்கரா, கசகசா, லவங்கப்பத்திரி, கொத்துமல்லி, பேரீச்சு, மோடி, முந்திரிகை வகைக்குப்பலம்-வ இவைகளைச்சூரணித்து சீனிபலம்-௰ கூட்டி திரிகடிப்பிரமாணம். ஒருமண்டலம் உட்கொள்ளவும், பத்தியமில்லை.

ந - வது மருந்து.

வளையலுப்பு, சிவப்புஉப்பு, கறுப்புஉப்பு, கல்லுப்பு, திப்பிலி, ஓமம், ஏலக்காய்அரிசி, லவங்கம், வகைக்குதொலா-உ, நிலவாகைதொலா-உ இவைகளைச் சூரணித்து, சர்க்கரைதொலா-சு-கூட்டி இரவில் போஜனஞ்செய்தபின் ஒரு விறாகனெடை-௰-வேளை புசிக்க பித்தகுன்மரோகம்விட்டோடிப்போமென்றறிக.

ஐயகுன்மம் வருதல்.

ஐயநாடியானது கோழிபோன்றூடந்து பித்தத்திலுறைந்திடில் வாய்நீரூறல், இளைப்பு, உடல்வற்றல், பெலன்குறைதல், அன்னஞ் செல்லாமை, தலைவலித்தல், மேனிவெளுத்தல், நெஞ்சிற்புகைதல், மெய்நடுக்கல், திடுக்கிடல், உள்ளங்கை கால்வியர்த்தல், மூர்ச்சித்தல், அடிவயிறு, பக்கம், கீல்கள், இடுப்புமுதலியவைகளைநோப்படுத்தலாகிய குணங்களோடுவருமா மையகுன்மரோகமென்றறிக.

நிவர்த்தி மருந்து.

ஆத்துதும்மட்டிக்காய் சாறுபடி-உ-ல், செய்யூருப்புபடி ௧-கறைத்து அடுப்பில்வைத்து சுண்டக்காச்சி விறாகனெடை-௰ரு-வேளை தேனிற்கொள்ளவும், இச்சாபத்தியம்.

உ - வது மருந்து.

நாயுருவிஉப்பு, வாழைஉப்பு, தாழைஉப்பு, தென்னைஓலைஉப்பு, சவ்வீரம், பூரம், சாரம், பூநீறு, இந்துப்பு, வளையலுப்பு, எள்ளுப்பு, சங்குஉப்பு, கல்லுப்பு, வெடியுப்பு, கறுப்புஉப்பு, படிகாரம், வெண்காரம் வகைக்குப்பலம்-க, மிளகுபலம்-ந இவைகளை மலைத்தேனில் ந-ஜாமமாட்டி சுண்டக்காயளவு குளிகைசெய்து கால்மண்டலம் இரு

வேளையுண்ணவும், கடும்பத்தியம், அன்றியும், மேற்கூறியசவ்வீரத்தை கெந்தகத்தில் வாட்டியெடுக்கவும், பூரத்தை படிகாரம்துளைத்து வைத்து மேலும் படிகாரத்தூள்கொட்டி-க-சீலைசெய்து-க-எருவில் புடம்போடபற்பமாம் அதைசேர்த்துக்கொள்ளவும்.

க - வது மருந்து.

கெழுட்டைப்பாசியையும், சமூற்சியிலையையும்; வெடியுப்பையும் சமன்கொண்டு பேய்த்தும்மட்டிக்காய்ச்சாற்றில் ஒருசாமமாட்டி சிறுசுண்டக்காய்வீதம்-ரு-நாள் இருவேளைகொள்ள ஐயகுன்மரோகம்விட்டகலுமென்றறிக.

எரிகுன்மம் வருதல்.

பித்தநாடியும், ஐயநாடியும், சமன்மாத்திரைகொண்டு புறாப்போலும், அன்னம்போலும் நடக்கில், குடல்பிறட்டல், திடுக்கிடல், என்பெல்லாம்பற்றியெறிதல், அடிவயிறு சற்றுஎரிச்சலாகி இழுத்துப்பிடித்தல், வாய்நீரூறல், தலைசுழட்டல், வாந்தி, வயிறுப்பல், கிறுகிறுத்தல், புளித்தயேப்பம், வியர்வைதோன்றல், வயிறுபசிபோலிருத்தல், மயிர்க்குச்சிலிடுதல், பொருமல், வயிறுகழிதல், அன்னஞ்செல்லாமை, இளைப்பு, மூர்ச்சை, சரீரம்வற்றல், நாவரட்டலாகியகுணங்களோடு வந்தெய்துமா மெரிகுன்மரோகமென்றறிக.

நிவர்த்தி மருந்து.

நிலவாகையை வெள்ளெருக்கம்பாலாலாட்டி விளாங்காய்ப்பிரமாணமுண்டைசெய்து செய்யூருப்பை அதனுள்வைத்துமூடி ஒருசீலைசெய்து கோழிபுடம்போடவும், இவ்வண்ணம்-ய-விசை புடம்வைத்து விருகனெடை தேனில்தாக்கவும், இச்சாபத்தியம்.

உ - வது மருந்து.

கல்லுப்பு, வெண்காரம், வெடியுப்பு வகைக்குப்பலம்-வ, சத்திநாதஉப்புபலம்-க, சப்ஜாசாற்றிலாட்டி உணர்த்திஎடுத்த பளிங்குருடன் பலம்-க, ஆவினெய்யாலறைத்து, பயிரவனஸ்தி, வால்மிளகு, ஏலக்காயரிசி, சிறுலவங்கப்பட்டை வகைக்குப்பலம்-வ ஒன்றாக்கி சந்தன அத்தர் பலம்-வ, புழுகுவிருகனெடை ஒன்றுகூட்டிப்பிசைந்து பீங்கானிலிட்டு மேல்பீங்கானில்மூடி வாய்புரம் உளுந்துமாவால் சீலைசெய்து நாலுவிரற்கடைஉயரம் மணல்சட்டியில் கொட்டி ஷெ பீங்கான் வைத்து-க-ஜாமமெரிக்க பதங்கமாகும் ஆகியபதங்கத்தில் காசெடை திரிகடுகு சூரணத்தில்வைத்து சீனிநெய்கலந்து கால்மண்டலம்-உய-வேளைகொள்ளவும், இச்சாபத்தியம்.

க - வது மருந்து.

காரிபலம்-உ, இரசம், ஜாதிலிங்கம், நெல்லிகெந்தி, மனோசிலை படிகாரம், வெண்காரம் வகைக்குப்பலம்-க, சுக்கு, மிளகு, திப்பிலி வகைக்குப்பலம்-உ, சூரணித்து ஒன்றுசேர்த்து மலைத்தேனில்-ரு-ஜாமமாட்டி சிறுபட்டாணிவீதம்-ரு-நாள் இருவேளைசாப்பிட எரிகுன்ம ரோகம்விட்டகலுமென்றறிக, இச்சாபத்தியம், அன்றி நாபியை நீலி கொழுந்தில் வேசவைத்தெடுக்கவும், இரசத்தை நாட்டுச்சர்க்கரையி லரைக்கவும், கெந்தியை ஆவின்பாலில் வேகவைத்தெடுத்துக்கொள்ளவும், லிங்கத்தை முலைப்பாலில்-ங-ஜாமம் சுருக்கியவும், மனோசிலையை கற்சுண்ணத்தில்வைத்துக் கழுதைசிறுநீரில்தாளிக்கவும், திரிகடுகுசூரணத்தை ஆவின்பாலில் பிட்டுவைக்கவும்.

சத்திகுன்மம் வருதல்.

பித்தநாடியானது வாதத்திலுறைந்து தவளையைப்போலும், அடைக்கலத்தைப்போலும் எகிரிப்பாயில், இருமல், வாந்தி, விக்கல், கொட்டாவி, திமிரு, ஈரலெரிச்சல், ஏக்கம், தூக்கமில்லாமை, என்பெல்லாம்நோதல், மயக்கம், திபக்கம், நெஞ்சில்கறகறத்தல், குத்தல், முளையடித்ததுபோன்றிருத்தல், வயிறுபொறுமல், பெலன்குறைதல், மலஞ்சிக்கல், அன்னஞ்செரியாமை, புளியேப்பம், நடையில்கால்பின்னல், அரோசிகம், நெஞ்சுணரல், நரம்புகள்நோதல், வயிறூதல், மேனிவாடல், கோழைகட்டல், மேன்மூச்சுவாங்கல், மனஞ்சிதறல், அன்னஞ்செல்லாமை, யாதின்மேலும் பிரியப்படாமை, விலாவெலும்பில் இரும்புக்கார்சொருகுதல்போன்றிருத்தல், முதுகந்தண்டெலும்புநோதல், இடுப்புகடுத்தல், குத்தல், சிலவேளை சுரம்போன்றிருத்தலாகிய குணங்களையுண்டாக்குவதும் சத்திகுன்மரோகமென்றறிக.

நிவர்த்தி மருந்து.

சோற்றுப்பு, வெடியுப்பு, படிகாரம், சாரம், இந்துப்பு, வளையலுப்பு, வெண்காரம் வகைக்குப்பலம்-க இவைகளை தும்மட்டிச்சாற்றால்-உ-ஜாமமாட்டிப் பில்லைசெய்துணர்த்தி ஓட்டில்வைத்து ஓடுமூடி சீலைசெய்து-உ௰-எருவில் புடமிட்டுப்பின் இரசம்பலம்-க-சேர்த்துநிம்பழச்சாற்றாலாட்டிப் பில்லையைமுன்போல்வைத்து எழுசீலைவலுக்கச்செய்து புடம்போட்டெடுத்துப் பின் பூரம் விராகனெடை ஒன்றுசேர்த்து பழச்சாற்றாலாட்டி புடம்போட்டுவிராகனெடை தேனில்-௰-நாள் கொள்ளவும், கடும்பத்தியம்.

உ - வது மருந்து.

சுக்கு, மிளகு, திப்பிலி, சீரகம், ஏலரிசி, பரங்கிச்செக்கை, நன்னாரி சிறுபூலா, நெல்லிவேர்க்கு; விலாமிச்சு, கோரைக்கிழங்கு இவைகளைச்சூரணித்து சீனிநெய்கலந்து திரிகடிப்பிரமாணம்ஒருமண்டலம் கொள்ளவும், பத்தியமில்லை, சூரணங்களை ஆவின்பாலில் பிட்டுவைக்கவும்.

ங - வது மருந்து.

சோத்துப்புபடி-க, எருக்கம்பாலால்-ங-நாள்ஆட்டி வில்லைதட்டிக்காயவைத்துக் கோழிபுடம்-சு, புளியம்பூச்சாற்றால் வீசைக்கு-௬-ஜாம மாட்டியாட்டிப் புடம்-ம-போட்டெடுத்து-ஒ - விருகனெடைப் பிரமாணம் தேனில் அரைமண்டலம்கொள்ள சத்திகுன்மரோகம்வீடுவிட்டுக் காடுறையுமென்றறிக, இனி அட்டகுன்மரோகங்களுக்கும் பொதுஅவுஷதங்கள் சொல்லுவோமாக.

அட்டகுன்மரோகங்களுக்கும் பொது அவுஷதங்கள்.

சுக்கு, மிளகு, திப்பிலி, ஏலரிசி, சீரகம், நெல்லிக்காய், கடுக்காய், தான்றிக்காய், வில்வவோடு, நெற்பொறி, அதிமதுரம், கோஷ்டம், பிர்க்கு, சித்தாமுட்டி, பேராமுட்டி, சந்தனத்தூள், வில்வவேர், வெட்டிவேர், விலாமிச்சு, நன்னாரி, சோம்பு, வெண்மிளகு, அறுகன்கட்டை, பேய்ப்புடல். பன்னீர்ப்பூ, விளாஓடு, பரங்கிச்செக்கை, முல்லை இவைகளைச் சமன்கொண்டிடித்துப்பொடியாக்கி நாளொன்றுக்கு அரைஆழாக்குப்பொடிபோட்டு மூன்ழாக்குஜலம்விட்டு முக்காலாழாக்காக சுண்டக்காச்சி ஆவின்பால் ஆழாக்கு விட்டு சீனிபலம்-க-சேர்த்து நாளொன்றுக்கு இருவேளை மண்டலம்கொள்ளவும், பத்தியமில்லை, உஷ்ணபதார்த்தம நீக்கவும்.

உ - வது மருந்து.

சீரகம், ஏலம், சுக்கு, அதிமதுரம், தேவதாரம், நன்னாரி, நெற்பொரி, விளாயிலை, கொத்துமல்லி, சித்தாமுட்டி, பச்சைப்பயறுஇவைகளைச்சமன்கொண்டு முன்போலக்கியாழமிட்டுமண்டலம்கொள்ளவும்.

ங - வது மருந்து.

சழல்பருப்பு, வெள்ளைப்பூண்டு, கடுகு, வசம்பு, சுக்கு இவைகளைச் சமன்கொண்டுபொடித்து முன்போல்கியாழமிட்டு கால்மண்டலம் கொள்ளவும்.

ச - வது மருந்து.

நெற்பொறி பயறு, வில்வம், முல்லை, சீரகம், ஏலம், சுக்கு, நெல்லி, பேய்ப்புடல், பன்னீர்ப்பூ இவைகளைச்சமன்கொண்டு முன்போல செவ்விளநீர்விட்டுக்காச்சி இருவேளை-உ0-நாள் கொள்ளவும்.

ரு - வது மருந்து.

பூரம் விருகனெடை-கவ, லிங்கம்-வ, மிளகுபலம்-க இவைகளை மலைத்தேனுல்-ச-ஜாமமாட்டி தூதுளங்காய்ப்பிரமாணம்-ரு-நாள் இருவேளைகொள்ளவும், கடும்பத்தியம்.

சா - வது மருந்து.

வெண்காரம், தாளகம், கெந்தி, பூரம், லிங்கம், காந்தம், மனோசிலை, சுக்கு, மிளகு, திப்பிலி, தான்றிக்காய், நெல்லிக்காய், கடுக்காய் வகைக்குப்பலம் க இவைகளைத்தேனில் ஜாமமாட்டி தூதுளங்காய்ப் பிரமாணம் குளிகைசெய்து-0-நாட்கொள்ள கொடியவினைசம்மந்தமாகிய குன்மரோகங்கள் விட்டோடிப்போமென்றறிக.

தாளகத்தைச் சுண்ணத்தில்வைத்தெரிக்கவும், கெந்தியை ஆவின்பாலில் வேகவைத்தெடுக்கவும், லிங்கத்தை முலைப்பாலிலூறப்போடவும், காந்தத்தை நிம்பழச்சாற்றில்-ங-நாளூரப்போட்டெடுக்கவும், பூரத்தைப் படிகாரநீரில்-ங-நாளூறப்போடவும், மனோசிலையை மிளகுநீரில்-ங-நாளூரப்போடவும், சூரணங்களை ஆவின்பாலில்பிட்டுவைக்கவும் சுத்தியாம், கடும்பத்தியம்.

மற்றைய குன்மரோகத் தொகைகளையும், நாடிநடைகளையும், வியாதிக்குறிகளையும். பத்தியபாகங்களையும்-க-ம் பாகம், உ-ம் பாகம், ங-ம் பாகமாக முறைமுறையே அச்சிடுவோமாக.

இனி சூலைரோகங்களையும், நாடிநடைகளையும். ரோகநிதானங்களையும், அவுஷதபாகங்களையும், பத்தியகிரமங்களையும், சுத்திவகைகளையும், சூலைரோகத்தொகுப்புகளையும், சிலதுகூறுவோமாக.

சூலைரோக உற்பத்தி.

சித்தினிமடவாரிடஞ் சையோகித்தலாலும், ஓயாத நடையினுலும், அக்கினிமந்தத்தினுலும், பனியில் திரிதலாலும், துவர்ப்புள்ளவைகளை யருந்துதலினுலும், லாகிரிகளுண்பதினுலும், பிறர்பசிக்க உண்ணுதலாலும், அதிதிகளை அடித்தலாலும், பொறாமை வஞ்சகத்தினுலும், பொருளின்மையாலும், சூலைரோகம் வந்தெய்துமென்றறிக.

சூலேரோகத்தொகைகள்.

வாதசூலே, பித்தசூலே, ஐயசூலே, மேகச்சூலே, முதிர்சூலே, கார்சூலே, பக்கசூலே, குன்மசூலே, அத்திசூலே, சுரச்சூலே; தூரச்சூலே, கரச்சூலே, அடிவயிறுசூலே, விலாசூலே, தொந்தசூலே ஆகியசூலேரோகவகைகள் பதினைந்தாகவிளைந்ததென்றறிக.

வாதசூலே வருதல்.

வாதநாடியானது திமிர்த்து மத்தகஜம்போல்நடக்கில் கைகாலுளைவு, திமிறு, அதிநித்திரை, தேகமினுமினுப்பு, பசியில்லாமை, மலபந்தம், அசீரணம், மார்பு, விலாப்பக்கம், வயிறுமுதலியவிடங்களில் ஈட்டியால் குத்துதல்போன்றிருத்தல் ஆகியகுணங்களோடு வந்தெய்துமாம் வாதசூலேரோகமென்றறிக.

நிவர்த்தி கியாழம்.

சுக்கு, மிளகு, சீரகம், திப்பிலி, ஏலரிசி, வாய்விளங்கம், கடுகுரோகணி, கழல்பருப்பு, வில்வவோடு, நெல்லிவேர்க்கு. கொத்துமல்லி, சீந்தில், நன்னாரி, பேய்ப்புடல்இவைகள்சமன்கொண்டுநறுக்கிப்பாண்டத்திட்டு-உ-படி ஜலம்விட்டு அழாக்குஜலமாக்கி சீனிபால்சேர்த்து உ௰-நாள் இரண்டுவேளைசாப்பிடவும், இச்சாபத்தியம்.

உ - வது மருந்து.

கிளைமான்கொம்பைச் சுட்டெடுத்து வெள்ளாட்டுச்சாணத்தில் ௰-நாளூறப்போட்டுக் கடுரவியில் வைத்து கறுநொச்சிச் சாற்றால்-௬-ஜாமமாட்டி சிறுவில்லேசெய்துகெஜபுடமிட்டெடுத்து திரிகடுகுசூரணத்தில் பணவெடைவைத்து நெய்கலந்து-உ௰-நாள் இருபோதுசாப்பிடவும், இச்சாபத்தியம்.

௩ - வது மருந்து.

பரங்கிவைப்புசூதபற்பம் பலம்-க, படிகாரத்தில் வைத்தெடுத்த பூரபற்பம் விருகனெடை-உ௦, பாலில்வேகவைத்தெடுத்தநெல்லிகெந்தி விரு-டு இவைகளைக் கற்றாழைச்சோற்றால்-௩-ஜாமமாட்டியாட்டி மணல்மறைவில்-௰-புடம் போட்டெடுத்து காசெடைவெண்ணெயில்-௰-நாள்கொள்ளவும் வாதசூலேரோகம் விட்டோடிப்போமென்றறிக, கடும்பத்தியம்.

பித்தசூலே வருதல்.

பித்தநாடியானது கொதித்துக்கிறுகிறுத்து சாரையைப்போல் நடக்கில் கிறுகிறுப்பு, சுழலேமூர்ச்சை, நாவரட்சி, தேகம் கனகனத்

திருத்தல், மேனிவுலரல், முகஞ்சோர்தல், அடிவயிற்றில் நமநமப்பா யிருத்தல், தொண்டையில் கார்போன்றிருத்தல், மாரில்எரிச்சல்,உள் ளங்கைகால் எரிச்சல், அக்கினியேகுடிகொண்டு வாய்வாய்ப்பிரண்டு தேகத்தில் பலவிடந்தங்கி பிடித்துநோக்காடும், குணம்வேறுபட்டும் ஆகியகுணங்களோடு பித்தசூலைரோகம் வந்தெய்துமென்றறிக.

நிவர்த்தி கியாழம்.

திப்பிலி, சீரகம், ஏலரிசி, சுக்கு, நன்னாரி, பற்பாடம், பேய்ப் புடல், நெல்லி, முள்ளி, ஆவாரைவேர், முத்துக்கொட்டைவேர், தே வ்தாரம், பன்னீர்ப்பூ, சித்தாமுட்டி, நெற்பொறி, பரங்கிசெக்கை, நெல்லுபொறி இவைகள் சமன்கொண்டு நறுக்கிப் பாண்டத்திட்டு-க-படிஜலம்விட்டு ஆழாக்குஜலமாகச் சுண்டக்காச்சி சீனி,ஆவின்பால் கூட்டி-உ௰-நாள் அந்திசந்திகொள்ளவும், இச்சாபத்தியம்.

உ - வது மருந்து.

எள்ளெண்ணை படி-உ-கழற்சியிலைச்சாறு, பொன்னாங்கண்ணிச் சாறு, பொடுதலைச்சாறு, இஞ்சிச்சாறு, நிம்பழச்சாறு, கொத்துமல் லிச்சாறு, புதினாச்சாறு, கீழ்க்காய்ச்சாறு, கையாந்தகரைச்சாறு,மண த்தக்காளிச்சாறு வகைக்குப்படி-வ, சுக்கு, மிளகு, சீரகம், ஏலரிசி, திப்பிலி, கோஷ்டம், வால்மிளகு; அதிமதுரம், அக்ராகாரம், வாய்வி ளங்கம், வகைக்குப்பலம் க, ஆவின்பால்படி-வ, ஒன்றுசேர்த்து நீர்வ ற்றமெழுகுபதத்தில் காச்சிஇறக்கி, மூன்றுநாள் முலைப்பாலில் ஊரப் போட்ட இரசகற்பூரம் விருகனெடை-க-பொடித்துப்போட்டு உச்சிக் கரண்டிவீதம்-எ-நாள் மூன்றுமுறைசாப்பிடவும், கடும்பத்தியம்.

ங - வது மருந்து.

விளக்கெண்ணெயில்-உக-விசை உருக்கிச்சாய்த்த சிறுகண்ணுகம் பலம்-க, நாட்டுச்சர்க்கரையில் சுத்திசெய்த இரசம் பலம்-உ, நெல்லி கெந்தி பலம்-க இவைகளை நிம்பழச்சாற்றாலாட்டி கற்பூரசலாசத்து பலம்-உ-க்கு கவசங்கட்டி-எ-சீலைசெய்து-உரு-எருவில்புடம்போட்டு அடியிற்கூறிய தேத்தான்லேகியத்தில்பணவெடைவைத்து-உ௰-நாள் அந்திசந்திகொள்ள பித்தசூலைரோகம் விட்டோடிப்போமென்றறிக.

தேத்தான் லேகியம்.

தேத்தான்கொட்டை பலம்-ரு, சுக்கு, மிளகு, திப்பிலி, ஏலரிசி, சீரகம், ரோகணி, விளங்கம், தான்றிக்காய், கடுக்காய், நெல்லிக்காய் வகைக்குப்பலம்-உ, சூரணித்து பனைவெல்லம் பலம் எஉ, பாகுசெய்

து ஷி சூரணத்தைப்போட்டுக்கிண்டி நெய்வார்த்துப்பதமாயினபின் இறக்கி தேன்பலம-உ ௨ விட்டு தூதுளங்காய்ப்பிரமாணம் குளிகை செய்யவும், இச்சாபத்தியம்.

ஐயசூலை வருதல்.

ஐயாதியானது துடித்து வாதத்திலுறைந்து சோழியைப்போலச்சீய்த்திடில் தொண்டைவலித்தல், சோழைகட்டல், அடிவயிறு நோதல், தேகமெங்கும் புண்போலிருத்தல், வியர்வைதோன்றல், மெய் கண் வெளுத்தல், வாய்நீரூறல், சுரமடித்தல், ஒவ்வோரிடங்களில் பிடித்துநோதல், முதுகந்தண்டெலுமபு, மார்பு, விலாப்புரம், இந்த அவயவாதிகளில் வாய்வுதங்கிபிடித்து மூச்சுவிடமாட்டாமல் நோதலாகிய குணங்களோடு வந்தெய்துமாம் ஐயசூலைரோகமென்றறிக.

நிவர்த்தியாழம்.

சுக்கு, மிளகு, திப்பிலி, சீரகம், ஏலரிசி, பெருங்காயம், வெள்ளைப்பூண்டு, ஓர்நிறையாய்ச் சிதைத்துப்போட்டு-௮ படி ஜலம்விட்டு ஆழாக்குஜலமாகக்காச்சி இறக்கி-௫-நாள் இருபோது கொடுக்கவும், இச்சாபத்தியம்.

௨-வது மருந்து.

சாரம், பூநீறு, பூரம், படிகாரம்,வெடியுப்பு வகைக்குப்பலம்-வ மிளகுபலம்-கவ, சுக்கு, திப்பிலி, ரோஜாப்பூ வகைக்குப் பலம்-க இவைகளை நிம்பழச்சாற்றாலாட்டி சிறுசுண்டக்காய்வீதம் குளிகை செய்து-ம-நாள் இருபோதுசாப்பிடவும், சடும்பத்தியம்.

௩ - வது மருந்து.

படிகாரபற்பம், பூரபற்பம், லிங்கம், இரசபற்பம் வகைக்குவிருகனெடை-க இவைகளைப் பொன்னாங்கண்ணிச்சாற்றில் ௩-ஜாமமாட்டிப் பின்நிம்பழச்சாற்றில்-௬-ஜாமமாட்டி மிளகுப்பிரமாணம் குளிகை செய்து கால்மண்டலம் இருபோதுசாப்பிடவும், இச்சாபத்தியம்-அன்றிபடிகாரத்தை குடுவைக்குள்வைத்துக் கீழும்மேலும் ஆவின்வெண்ணெயைப்பொதித்து வாய்மூடி-௩-சீலைசெய்து புடம்போடவும், பூரத்தைப்படிகாரத்துக்குள் துளைசெய்துவைத்து துவாரம்மூட ஷி படிகாரத்தூள்கொட்டி-௩-சீலைசெய்து புடம்போடவும். ஐயசூலைரோகம் விட்டகலுமென்றறிக.

குன்மசூலை வருதல்.

பித்தமும் வாதமு மொருங்குசேர்ந்து நண்டைப்போலக்கிளறி நடக்கில் வயிறுபொருமல், அடிவயிறு வில்போன்றிருத்தல், வாய்நீ

ருதல், சத்தியுண்டாதல், கிறுகிறுப்பு, மூர்ச்சை, நாவரட்டல், மேனி கறுத்தல், தேகம்வாடல், மலஞ்சிக்கல் ஆசனத்தில் குத்தல், பத்துவி தக்கறிகளோடு போசனமருந்தியதுபோல் ஏப்பம்விடல், வியர்வை தோன்றல், நாவுருசியில்லாமை, பசியில்லாமை, புளித்தஏப்பம், நாட் குநாள் மேனிவாடல், நாவரட்டல் ஆகியகுணங்களோடு வந்தெய்து மாம் குன்மசூலைரோகமென்றறிக.

நிவர்த்தி மருந்து.

செய்யூருப்புபடி-க, ஆத்தும்மட்டிக்காய்ச்சாறு, நிம்பழச்சாறு, கழற்சியிலைச்சாறு, சீரகக்கியாழம் வகைக்குப்படி-க இவைகளை ஒன் றாய்டுத்திக்கறைத்து நீரெல்லாஞ்சுண்டக்காச்சி உப்பாக்கி ஒருபலமெ டுத்து சீரகம் சமன்சேர்த்து மிளகுநீரில் மெழுகாகஆட்டி தூதுளங் காய்ப்பிரமாணம் பத்துநாளிருபோதுகொள்ளவும் இச்சாபத்தியம்.

உ - வது மருந்து.

சுக்கு, மிளகு, சீரகம், ஏலரிசி, திப்பிலி வகைக்குப்பலம்-க, சூர ணித்துப்பின் இஞ்சிச்சார், நிம்பழச்சார், புதினாச்சாறு ஒன்றுபடுத்தி ங-ஜாமமாட்டி ஒருமலதுவரைப் பிரமாணம் குளிகைகட்டி-ம-நாள் இருபோது சாப்பிடவும், புளிமிளகாய்க்குப்பதில் மிளகு எலுமிச்சம் பழம்சேர்க்கவும், உஷ்ணபதார்த்தமும், கடுகு நல்லெண்ணெயும் நீக் கவும்.

ங - வது மருந்து.

இஞ்சி, மிளகு, திப்பிலி, சீரகம், ஏலரிசிவகைக்குப்பலம்-க,இந் துப்பு, வளையலுப்பு, வெடியுப்பு, சோத்துப்பு, வெண்காரம், வகைக் குப்பலம்-உ இவைகளை மலைத்தேனில்-ங-ஜாமமாட்டி சிறுசுண்டக் காய்வீதம் குளிகைசெய்து நிம்பழச்சாறுபடி அரைக்காலில் கலந்திய குன்மசூலைரோகம் விட்டோடிப்போமென்றறிக, இச்சாபத்தியம்.

தொந்தசூலை உற்பத்தி.

வாதம், பித்தம், சிலேற்பனமாகிய மூன்றுநாடிகளும் சிலவேளை ஒன்றுக்கொன்று உயர்ந்தும், தாழ்ந்தும், சமப்பட்டும், உராய்ந்தும், கிடுகிடுத்தும், அமர்ந்தும், கொதிப்பெடுத்தும், அந்தந்தநடைகள்பிச கியும்நடக்கில் தேகமெங்கும் வலித்தும், கைகால்களோய்ந்தும், கீல் கள்பிடித்தும்,நாவுதினவெடுத்தும், நெஞ்சில்கார்போன்றிருந்தும், வா ந்தியெடுத்தும், ஏப்பம்விடுத்தும், மனம்பேதித்தும் ஆகியகுணங்க ளோடுவந்தெய்துமாம் தொந்தசூலைரோகமென்றறிக.

நிவர்த்தி மருந்து.

வெண்காரம், சாரம், படிகாரம், பூநீறு, சோத்துப்பு வகைக்குப் படி அரைக்கால் பொடித்து படிநிம்பழச்சாற்றில் கறைத்து சுண்டக் காச்சி உப்பாக்கிப் பின்வங்காரவாசிச்சாற்றால்-ச-ஜாமமாட்டிப் பில்லை செய்து-உ௰-எருவில் புடம்போட்டெடுத்து விராகனெடைவீதம் சீர கச்சூரணத்தில்வைத்துண்ணவும், இச்சாபத்தியம்.

உ - வது மருந்து.

பூரம், படிகாரம், இரசச்செந்தூரம், அயச்செந்தூரம், சோத்துப்பு, இந்துப்பு வகைக்கு விராகனெடை-க இவைகளை இஞ்சிச்சாற்றில்-ச-ஜாமம்,நிம்பழச்சாற்றில்நாலுஜாமமாட்டிப்பில்லைசெய்துணர்த்தி ஓட்டில்வைத்து ஓடுமூடி-எ-சீலைசெய்து-௰-எருவில்புடம்போட்டெடுத்து விராகனெடை-வ-வீதம் இஞ்சிச்சூரணத்தில் வைத்துண்ணவும் கடும்பத்தியம், இஞ்சியை ஆவினெய்யில் பொன்வறுப்பாய்வறுத்துலர்த்திச் சீரகம் சமன்சேர்த்துச் சூரணிக்கவும்.

ங - வது மருந்து.

இரசம், கெந்தி, இரசபற்பம், காந்தம், மனோசிலை வகைக்குவிராகனெடை-க இவைகளைமிளகுநீரில்-அ-ஜாமமாட்டிப் பின்நிம்பழச்சாற்றில்-ச-ஜாமமாட்டி துவரைப்பிரமாணம் குளிகைசெய்து சீரகம், திப்பிலி, ஏலரிசி, சமன்சேர்த்த சூரணத்தில்-ரு நாளிருபோதுவைத்துண்ண மகாகொடியதொந்தசூலைரோகம் விடுவிட்டுக் காடுறையுமென்றறிக, கடும்பத்தியம்.

சூலைரோகம்பதினைந்துக்கும் பொதுஅவுஷதங்கள்.

கல்லுப்புபடிஒன்றை ஆடுதீண்டாப்பாளைச்சாறு,பொற்றலைக்கையான்சாறு வகைக்குப்படி-க-ல் கறைத்து சுண்டக்காச்சி உப்பாக்கிஅந்தஉப்பை ஷை ஆடுதீண்டாப்பாளைச்சாற்றால் விசைக்கு-ச-ஜாமவீதமாட்டியாட்டிப் பில்லைசெய்து-உ௰-எருவில்-௰-புடம்போடச் செந்தூரமாகும், செந்தூரத்தை பணவெடை சீரகலேகியத்தில் வைத்து-௰-நாள் இருபோதுண்ணவும், இச்சாபத்தியம்.

உ - வது மருந்து.

கடுக்காய், தான்றிக்காய், நெல்லிக்காய், முள்ளி, வாய்விளங்கம், சீரகம், மல்லி,அதிமதுரம், தாளிசப்பத்திரி, ஏலரிசிவகைக்குப்பலம் க, சூரணித்து ஆவின்பாலில் பிட்டுவைத்து சீனிபாகுசெய்து சூரணத்தைக்கிண்டி நெய்விட்டிறக்கி தேன்கலந்து கொட்டைப்பாக்களவு லேகியத்தை-௰-நாள் சாப்பிடவும், இச்சாபத்தியம்.

௩ - வது மருந்து.

உப்புபலம் ஐந்தை சித்தாமணக்கு இலைச்சாற்றில்-௪-ஜாமம்-சிமைகரசலாங்கண்ணிச் சாற்றில் - ௪ - ஜாமமாட்டிப் பில்லைசெய்து-௰-எருவில்புடம்போட்டு சிங்கிபற்பம்,திப்பிலி,சீரகம் வகைக்குப்பலம் க சேர்த்து தேன்விட்டாட்டி தூதுளங்காய்ப் பிரமாணம்-௫-நாளிருபோதுகொள்ளவும், இச்சாபத்தியம்.

௪ - வது மருந்து.

கல்லுப்பை எருக்கம்பாலிலூரப்போட்டுப்பின்சதுரக்கள்ளிக்கட்டையைத்துளைத்து அதனுளுப்பைவைத்துஷ்டிபிரடைகொண்டுமூடி சீலைசெய்து முழப்புடம்-௩-போட்டெடுத்து சுக்குலேகியத்தில் வைத்துண்ணவும், இச்சாபத்தியம்.

௫ - வது மருந்து.

ஆவின்பாலில்வேகவைத்தெடுத்த கெந்தி,சுக்கு,மிளகு,திப்பிலி; தான்றிக்காய், நெல்லிக்காய், கடுக்காய், வாய்விளங்கம், ஓமம், கடுகு, கிராம்பு, ஜாபத்திரி, கடுகுரோகணி, சிவதைவேர், கோஷ்டம், பரங்கிப்பட்டை அமுக்கராவகைககுப் பலம்-க-சூரணித்து நெய்சீனிகலந்து திரிகடிப்பிரமாணம்-௰-நாளிருபோதுண்ணசகலசூலைரோகங்களும் விட்டோடிப்போமென்றறிக.

மற்றையசூலைரோகங்களையும், நாடிக்குறிகளையும்; வியாதிரூபங்களையும், அவுஷதபாகங்களையும், சுத்திசெய்யும்வகைகளையும், பத்தியபாகங்களையும், க-ம்-பாகம், உ-ம்-பாகம், ௩-ம்-பாகமாக முறைமுறையே அச்சிடுவோமாக.

இனி மேகரோகங்களும், நாடிநடைகளும், வியாதிக்குறிப்புகளும், அவுஷதப்போக்குகளும், சுத்திவகைகளும், பத்தியபாகங்களும், சிலதுசொல்வோமாக.

மேகரோக உற்பத்தி.

இளந்தைப்பருவத்தில் பற்பலமாதர்களிடம்பகலிரவின்றிநாடோறும் லீலைபுரிவதினால் மூலத்திலிருந்து சடராக்கினிமேலெழுந்து விந்துவைநீற்றச்செய்து வெளிகாணுகையில் நாபியிலிருந்து அக்கினிமந்தம்பற்றி ஆண்குறியின் துவாரவழிமுழுமையுமிரணமாகி மேகரோகத்தை விளைவிக்குமென்றறிக.

மேகரோகத்தொகைகள்.

வெள்ளைமேகம், இரத்தமேகம், மதுமேகம், தந்திமேகம், ஆச்சியமேகம், சுத்தமேகம், பிரமியமேகம், மாங்காவிமேகம், அப்பியமேகம், ஆபிரம்மியமேகம், சாம்பீர்ணமேகம், சாத்தியமேகம், ஆவிருதமேகம், வாசமேகம், உத்தமமேகம், கிரந்திமேசம், அழகுமேகம், மச்சமேகம், சுராரிமேகம், சுக்கிலமேகம், உதகமேகம் ஆகிய மேகரோகவகைகள் இருபத்தொன்றாகவழங்கியதென்றறிக.

வெள்ளைமேகம்வருதல்.

பித்தநாடியானது அழலையுண்டாகி மான்போலக் குதித்துநடக்கில் பசியில்லாமை, கைகால்களசதி, சோம்பல், தூக்கம், நாவரட்சி, மனஞ்சோர்தல், லிங்கத்துவாரத்திலெரிச்சல், சிறுநீர்விடுமுன்இந்திரியத்தைப்போல்கீழ்வீழ்தல், ஆண்குறிக்கு அதிகாரகாலத்தில் அடித்தண்டுநோக்காடு, நீர்ச்சுருக்கு ஆகியகுணங்களோடு வந்தெய்துமாம் வெள்ளைமேகரோகமென்றறிக.

நிவர்த்திமருந்து.

சுக்கு, சீரகம், ஏலரிசி, திப்பிலிவகைக்குப்பலம்-க, சூரணித்து இரசகற்பூரம் விராகனெடை-க-சேர்த்து சித்தாமணக்கெண்ணைபடி-வ-கூட்டிக் கலக்கி உச்சிக்கரண்டிவீதம்-ம-நாளிருபோதுண்ணவும், அன்றி சூரணங்களை ஆவின்பாலில் பிட்டுவைக்கவும், இரசகற்பூரத்தை-௩-நாள் முலைப்பாலிலூறப்போடவும், கடும்பத்தியம்.

உ - வது மருந்து.

கருவேலன்பட்டை, முருங்கைப்பட்டை, நாவற்பட்டை, இலவம்பட்டை, ஊஞ்சல்பட்டை, ஒதியம்பட்டை, அத்திப்பட்டை இவைகளை கரும்புஇரசத்தில் தோய்த்துதோய்த்து இடித்து வகைக்குசாறுபடி-வ, நெல்லிரசம்-௭, பொற்கையான்சாறு-வ, கூரெள்ளெண்ணை நாழி, பசுவெண்ணை நாழி ஒன்றாய்க்கலந்து சித்தரத்தை, தேத்தான்கொட்டை, தாளிசப்பத்திரி, நிலப்பனை, கோரைக்கிழங்கு, கோஷ்டம் தேவதாரம், அமுக்கரா, வெந்தயம், சாதிக்காய், லவங்கப்பத்திரி சாரப்பருப்பு வகைக்குப்பலம்-வ, நிம்பழச்சாற்றால் க-ஜாமம் தேங்காய்ப்பாலாலொருஜாமமாட்டி ஷை எண்ணெயிற்கலக்கி அடுப்பேற்றி மெழுகுபதத்திற் சுண்டக்காச்சி இறக்கி முன்போலச் சுத்திசெய்தபூரம் விரா-கவ-பொடித்துப் போட்டு-உ உச்சிக்கரண்டி வீதம்-ம-நாளிருபோதுண்ணவும் இச்சாபத்தியம்

கூ - வது மருந்து.

காரீயம்பலம்-க-உருக்கி இரசம்பலம்-க மத்தித்து இருப்புக்கடாயில்வைத்துமறுபடியுமுருக்கிகருந்துளசிச்சாறுகொஞ்சம்கொஞ்சமாக விட்டு பொற்றலைக்கையான்வேரால் செந்தூரமாகும்வரை தேய்த்து ஷை செந்தூரத்தை தேத்தான்கொட்டைலேகியத்தில்-உ-அரிசியெடை வைத்து-ரு-நாளுண்ண வெள்ளையென்னும் மேகரோகம் விட்டகலுமென்றறிக, கடும்பத்தியம்.

இரத்தமேகம் வருதல்.

பித்தநாடியானது ஐயத்திலுறைந்து சமன்மாத்திரை கொண்டு அன்னம்போலசைந்துநடக்கில் ஆண்குறித்துவாரமிரணமாகி உதிரப்பிரவாகங்கொண்டு அத்துவாரவழியேவந்தும் கைகால்களசந்தும் குறியில் எரிச்சலும், குத்தலும் பசியில்லாமையும், யாதின்மேல் பிரியப்படாமையும் இடுப்புமுதலிய அவயவாதிகள்நொந்தும் ஆகியகுணங்களோடு இரத்தமேகம்வந்தெய்துமென்றறிக அன்றி மேற்கூறியவண்ணம் மாதர்களுக்குண்டாகில் பெரும்பாடெனக்கொள்க.

நிவர்த்தி மருந்து.

அடியிற்கூறியபாகத்தைப்போல கல்நார், சிங்கி,பவளம், நாகமென்னுமிந்நான்கையும் தனித்தனிநீற்றிஞ்செய்து ஒன்றுகூட்டி அதில்காசெடையெடுத்து சுத்தஜலத்தில்-எ-விசை அலம்பியெடுத்த கற்றாழைச்சோற்றிலிட்டு சீனிகூட்டி-ம-நாளுண்ணவும், மாலையில் வெண்ணைகூட்டி புண்ணவும், இச்சாபத்தியம்.

கல்நார் பற்பம்.

எருமைக்கொம்பு கல்நார்பலம்-உ, ஆவின்கோமயத்தில்-ம-நாளூறப்போட்டுப் பின்கறுஊமத்தையிலையை தேங்காய்ப்பிரமாணமறைத்து ஷை கல்நாரைஉட்பொதிந்து-ரும-எருவில்புடம்போட்டெடுத்துக்கல்வத்திலிட்டு ஆடுதிணடாப்பாளைச்சாற்றில்-சு-ஜாமமாட்டி ரா-எருவில் புடம்-க ஷை சாற்றால்-உ-ஜாமமாட்டி-ராரும-எருவில் புடம்-க-போடநீறும்.

சிங்கியென்னும் மான்கொம்புபற்பம்.

வெள்ளாட்டுச்சாணத்தில் சிறுபிள்ளைகள்சிறுநீர்விட்டுக்கரைத்து சிங்கிபலம்-உ,ம-நாளூறப்போட்டு-உம-எருவில்புடம்வைத்தெடுத்துக் கல்வத்திலிட்டுக் கருநொச்சிச் சாற்றால்-சு-ஜாமமாட்டி-உம-எருவில் புடம்-க கழற்சி இலைச்சாற்றில்-உ-ஜாமமாட்டி-ம-எருவில் புடம்-க-போடநீறும்.

பவளபற்பம்.

நிம்பழச்சாற்றில் பவளம் பலம்-உ, ங-நாள்ஊறப்போட்டுப்பின் முசல் இரத்தத்தால்-ங-ஜாமமாட்டி வில்லைசெய்துலர்த்தி ஓட்டில் வைத்து ஓடுமூடிசீலைசெய்து கெஜபுடம்போடநீறும்.

நாகபற்பம்.

இலுப்பைஎண்ணெயில்-உக-விசை உருக்கிச்சாய்த்த நாகம்பலம்-உ, வில்வயிலை விளாங்காய்ப்பிரமாணமரைத்து ஷை நாகத்தையுட்பொதிந்து-எ-சீலைவலுக்கச்செய்து ஈ-எருவில் புடமிடப்பற்பமாம், அல்லது நாகத்தை அயக்கரண்டியில் வைத்துருக்கி வில்வவேரால் தேய்க்கத் தேய்க்க நீறும்.

உ - வது மருந்து.

சிற்றாமணக்கெண்ணை படி உ, காணிச்சாறு, ஆதண்டைச்சாறு, வல்லாரைச்சாறு, மேனிச்சாறு, கையான்சாறு, வில்வஇலைச்சாறு, அறுகன்வேர்சாறு, வள்ளிச்சாறு, வெங்காயச்சாறு, சாணிச்சாறுவகைக்குப்படி-க கலக்கிப் பின் வெந்தயம், சீரகம், கொத்துமல்லி, சிறுநாகப்பூ, சாதிக்காய், லவங்கம், அதிமதுரம், கூகைநீர், சீனம் வகைக்கு விரா-க, சேர்த்து மெழுகுபதமாக நீர்வற்றக்காச்சி, உச்சிக்கரண்டி வீதம்-உ௰-நாளுண்ணவும், இச்சாபத்தியம்.

ங - வது மருந்து.

நாவல்பட்டை, அத்திப்பட்டை, கலியாண முருக்கன்பட்டை சமன்கொண்டு எருமைமோரில் தோய்த்துத்தோய்த்திடித்துப் பிழிந்தசாறுபடி அரைக்கால், சந்தனத்தூள்பலம் - ரு, நிம்பழச்சாறுபடி அரைக்கால், புளித்தமோர்படி அரைக்கால் இவைகளை ஒன்றுகூட்டி அரைஆழாக்குவீதம்-ரு-நாள் காலையில்சாப்பிட இரத்தமேகரோகம் விட்டகலுமென்றறிக, இச்சாபத்தியம்.

மதுமேகம் வருதல்.

வாதநாடியானது கிறுகிறுத்தயர்ந்து ஐயத்திலுறைந்து ஆமையைப்போன்றுநடக்கில் தேகமிளைத்தல், நாவினித்தல், வயிறுகழிதல், சோம்பல், சித்திரைபங்கம், சிறுநீர் வெண்மைநிறமாயிருத்தல், மலஜலம்விட்டஇடத்தில் ஈஎறும்புகளூறல், நெஞ்சிலிருந்து சளிவிழுந்திடில் உடனே ஈ எறும்புகளூறல் ஆகியகுணங்களோடு வந்தெய்துமாம் மதுமேகரோகமென்றறிக.

நிவர்த்தி மருந்து.

சிறுகுடுவையில் வெடியுப்பு பலம்-க-கொட்டி, அப்ரேக்வைத்து மேலும்முன்போல் வெடியுப்புகொட்டி வாய்புரம்வேளையையடைத்து ஓடுமூடி சீலைசெய்து அரைசெஜபுடமிடச்சுண்ணமாம், வெண்ணெயில் அரிசியெடைவைத்து-ம-நாள் காலைமாலையுண்ணவும், கடும்பத்தியம்.

உ - வது மருந்து.

வேப்பெண்ணெயில்-உக விசை உருக்கிச்சாய்த்த வெள்வங்கம் பலம் ௧, வேப்பங்கட்டையைத்துளைத்து ஷிவங்சம்வைத்து பிரடை கொண்டுமூடி எ சீலை வலுக்கச்செய்து-௱-எருவில் புடமிட்டெடுக்க பற்பமாம், வெண்ணெயில்-ம-நாளிருபோதுண்ணவும், கடும்பத்தியம்.

௩ - வது மருந்து.

கோழிமுட்டைஓட்டைப்பூநீரில்வைத்து சுத்திசெய்து வெள்ளெருக்கம்பாலலாட்டி சிறுவில்லையளாக்கி அகலில்வைத்துமேல்மூடிசீலை செய்து-௱ம-எருவில்புடமிட சுண்ணமாம், மிளகுசூரணத்தில் பணவெடைவைத்து-உம-நாளுண்ண மதுமேகரோகம் விட்டகலுமென்றறிக.

தந்திமேகம்வருதல்.

பித்தநாடியானதுதனித்து ஒன்றன்தலை நீட்டிநீட்டிவாங்குவதைப்போல் வாதத்திலுறைந்தும் இருப்பிடஞ்சேர்ந்தும்பேசில் நடுமூதுகுளைவு, மாரடைத்தல்போலிருத்தல், இடுப்புகடுத்தல், மயக்கம்,கீல்களெல்லாம்நோதல், கழுத்துநோதல், கை, கால், மார்பு, அடிவயறுமுதலியவை எரிச்சல், அசதி, நித்திரைபங்கம், மனந்தடுமாற்றம், சீரல், சிலவேளை சந்தோஷம், பசியில்லாமை, யாதின்மேலும் பிரியப்படாமை, லிங்கத்துவாரமிரணமாகி எரிச்சல், குத்தல், தினவெடுத்தல், சிறுநீர்விடு முன்னும்பின்னும் தந்திக்கம்பியைப்போல் நிகண்டு வெள்ளைவீழ்தலாகிய குணங்களோடுவந்தெய்துமாம் தந்திமேகரோகமென்றறிக.

நிவர்த்திமருந்து.

அடியிற்கூறிய பாகத்தைப்போல சல்மதம், கல்நார், கற்பூரசிலாசத்து இம்மூன்றையும் நீற்றினஞ்செய்து ஒன்றுபடுத்தியதில்பணவெடைதூக்கி கற்றூழச்சோற்றில்வைத்துண்ணவும், இச்சாபத்தியம்.

கல்மதம்.

கல்மதத்தைப்பொடுதலைச்சாற்றில்-௩-நாளூரப்போட்டுப்பலமெடுத்து சுண்ணாம்பில்பொதிந்து ஒருசிலைசெய்து-௨௫-எருவில் புடமிட்டுப்பின் கல்வத்திலவைத்து வேளைச்சாற்றால்-௬-ஜாமமாட்டி வில்லைசெய்து ஷ சுண்ணத்தில்வைத்து -௫௰-எருவில்புடமிடப்பற்பமாம்.

கல்நார்.

எருமைக்கொம்பு கல்நாரை ஆவின்கோசலத்தில்-௩-நாளூரப்போட்டுப்பலமெடுத்து தேங்காய்ப்பிரமாணம் கருவூமத்தையும், நல்வேளையுமறைத்து கெஜபுடமிட்டுப் பின்வேளைச்சாற்றில்-௮-ஜாமமாட்டிவில்லைசெய்து சுண்ணாம்பில்வைத்துக் கவசித்துக் கெஜபுடமிடப்பற்பமாம்.

கற்பூரசிலாசத்து.

கற்பூரசிலாசத்தை துண்டுகளாக்கி நிம்பழச்சாற்றில்-௧-நாளூரப்போட்டுப்பலமெடுத்து இலைகனம் சுண்ணாம்புகவசஞ்செய்து ஒருகுடுவையில்வைத்து முசுமுசுக்கைச்சாறு பொடுதலைச்சாறு வகைக்குப்படி-௰; நறுவுளிகொழுந்து நாரத்தங்காயளவுகறைத்து ஷ குடுவையில்வைத்து மேல்லோடுமூடி சீலைசெய்து-௫௰-எருவில் புடமிடப் பற்பமாம், இம்மூன்று மொருதொடர்.

ஆச்சியமேகம் வருதல்.

ஐயநாடியானது மிகக்கொதித்து பித்தத்திலுலைந்து நாகம்போலச்சீறிப்பாய்ந்திடில் மலஜலஞ்சிக்கல், உள்ளங்கைகால் வியர்த்தல், நாவிற்சலமூறல், லிங்கத்துவாரம்பெருத்துக்கடுத்தும் எரிச்சலாகியும் தினவெடுத்தும், நீர்விடுமுன் அல்லது பின் நெய்போலிறங்கலுமாகிய குணங்களோடுவந்தெய்துமாம் மகாகொடிய ஆச்சியமேகரோகமென்றறிக, அப்படி இறங்கியநெய்யை சீலையில்ஊட்டி விளக்கில்கொளுத்தஎரியும்பரீட்சையால் கண்டுகொள்க.

நிவர்த்தி மருந்து.

ஆலம்விழுது இரண்டுபிடி, பரித்திவேர்த்தோல், அசுவகெந்திக்கிழங்கு, ஆவாரைவேர்ப்பட்டை, வெள்வேலம்பட்டை, நாவற்பட்டை, ரேவல்சின்னிப்பட்டை வகைக்குப்பிடி-௧, பரித்திப்பிஞ்சு பருத்திப்பருப்பு வகைக்குச் சிரங்கை-௧, ஏலம், அதிமதுரம வகைக்குவிரா-௰, செங்கழுநீர்க்கிழங்கு, கோஷ்டம், கிராம்பு, ஜாதிக்காய், சாதிபத்திரி வகைக்குவிரா ௫, திப்பிலிவிரா ௬, பொரிகாரம், ஜாதிலிங்கம்

வகைக்கு விரு-உ, முந்திரிகைப்பழம், தேன்மெழுகு வகைக்குப் பலம் ௨, பேரீச்சம்பழம் விரு-அ, நெரிஞ்சிக்காய் எலுமிச்சைஅளவு இவைகளை ஆவின்பாலாலாட்டி நாழிஆவின்பாலிற் கரைத்து அதில் நெல்லிக்காய்ச்சாறுநாழி-வ, ஆவினெய்நாழி ௩, ஒக்கவிட்டுக்காச்சிக் கிருதபாகச்செய்து நாளொன்றுக்கு மாகாணிப்படிவிதமுண்ணவும், இச்சாபத்தியம்.

உ - வது மருந்து.

துளசிச்சாறு, இஞ்சிச்சாறு, கையான்சாறு, வேளைச்சாறு, தக்காளிச்சாறு, விழிச்சாறு, பிரண்டைச்சாறு, அத்திப்பட்டைச்சாறு, வேப்பம்பட்டைச்சாறு, நுணச்சாறு, சின்னியிலைச்சாறு, நற்சங்கன் சாறு, மேனிச்சாறு, கலவைச்சாறு நிம்பழச்சாறு வகைக்குப்படி-வ, ஆவினெய்வீசை-உ, ஆவின்பால்படி-௨ இவைகளை ஒன்றுபடுத்திப் பாண்டத்திலிட்டு சீரகம், ஏலரிசி, திப்பிலி, கடுகுரோகணி, விளங்கம், மதுரம், கோஷ்டம், கடுக்காய் வகைக்குப்பல மொன்றுசேர்த்து நீர்வற்றக்காச்சி இறக்கிப் பூரம் விரு உ௨, பொடித்துப்போட்டு உச்சிக்கரண்டி-உ-வீதம்-உய-நாளிருபோதுண்ணவும் கடும்பத்தியம்.

௩ - வது மருந்து.

சித்தாமணக்கெண்ணை படி-க, முள்ளங்கி, வெள்ளறுகு, கற்றாழை, வல்லாரை, தாளி, பூவரசன்பட்டைச்சாறு வகைக்குப்படி-க, அத்திப்பால், ஆவின்பால் வகைக்குப்படி-க, கோஷ்டம், மதுரம், சுக்கு, மிளகு, திப்பிலி, சீரகம், ஏலரிசி, சடாமாஞ்சி, வெந்தயம், பரங்கிச்செக்கை ரோகணி, வால்மிளகு, கடுக்காய்ப்பிஞ்சு, சிறுதேக்கு வகைக்குப்பலம்-க-பொடித்து செவ்விளநீரால் மைபோலாட்டி இவ் எண்ணெயும், சாறும்பாலும் ஒன்றுபடுத்தி யதில்கரைத்து நீர்வற்றக் காச்சி கால்கரண்டிவீதம்-சய-நாளிருபோதுண்ண மகாகொடிய ஆச்சியமேகரோகம் விட்டகலுமென்றறிக, கடும்பத்தியம்.

மேகரோகங்கள்-உக-க்கும் பொதுஅவுஷதங்கள்.

மிளகறணை, வெள்ளைச்சாரணைவேர், முந்திரிகைவேர், முருங்கை, வேம்பு, கற்றாழை, வள்ளி, சீந்தில் கட்டுக்கொடி கரிசலாங்கண்ணி, பொன்னாங்கண்ணி, அமுக்கரா, சங்கங்குப்பி, நீர்பூலா, விழுதி, நிலப்பனைவேர், அழிஞ்சில்பட்டை, சிறுவிளா, வெள்ளறுகு, வல்லாரை, ஆவாரை, முடக்கொத்தான், அகத்திவேர் வகைக்குப் பலம் ய, வெந்தயம், சீரகம்வகைக்குப்பலம்-அ இவைகளைக் கல்லுர

லிஸ்தாக்கி ௰சு-படி ஜலம்விட்டு-ரு-படியளவு சுண்டக்காச்சி, வெள்ளைப்பூண்டு சாறுபடி-உ, ஆவின்பால்படி-உ, சித்தாமணக்கெண்ணை படி-உ, வெள்ளைச்சர்க்கரைபலம்-அ இவைகளையொன்றுபடுத்திநீர்வற்ற மெழுகுபதமாகக்காச்சிஇறக்கி மேல்மூடிநெல்லுதானியத்தில் பட்சம் சமாதிவைத்துப் பின்னாளொன்றுக்கோர்சரண்டிவீதம மண்டலங்கொள்ளவும், பத்தியம் கடுகெண்ணையும், ஊஷ்ணபதார்த்தங்களுமாகா.

அன்றி மேற்கூறியஎண்ணையை உட்கொள்ளுமுன் கல்யாரப்பம் பணவெடைவெண்ணெயிலுண்ணவும்.

உ-வது மருந்து.

சித்தாமணக்கெண்ணை படி-௧, மூலைப்பால்படி-௨, கேசரியென்னும் கழுதையின்சிறுநீர், ஆவின்பால், அத்திப்பால்வகைக்குப்படி-௧, விழுதி, குமரி, வல்லாரை, ஈன்னரி நறுதாளி, கும்மட்டிசாறுவகைக்குப்படி-௧, செவ்விளநீர் படி-௧ இவைகளை ஒன்றுபடுத்தி சுக்கு, மிளகு, திப்பிலி, நெல்லிக்காய், தான்றிக்காய், கடுக்காய், சீரகம், கொத்துமல்லி, கோஷ்டம், மதுரம், ரோகணி வகைக்குப்பலம்-ரு; வால்மிளகுபலம்-௧, செவ்விளநீராலாட்டி ஷை எண்ணையிற்குழப்பி அடுப்பேற்றி மெழுகுபதமாகக்காச்சி உச்சிக்கரண்டி-௧-வீதம்-௬௰-நாள் கொள்ளவும் கடும்பத்தியம்.

௩ - வது மருந்து.

நிலப்பனை, ஓரியம்பட்டை, கருங்காலிப்பட்டை, நாகப்பட்டை, அரசம்பட்டை இவைகளை இடித்து-அ-படி ஜலம்விட்டு-ரு-படி ஜலமாகக்காச்சி, ஆவின்பால்படி-உ, புளியாரை, கொவ்வை, நற்சங்கன் சாறு வகைக்குப்படி-௧-சேர்த்து பொன்முசுட்டை, சிறுகாஞ்சோறி, விளாம்வித்து, கொத்துமல்லி, சுக்கு, மிளகு, திப்பிலி, நெல்லிக்காய், தான்றிக்காய், கடுக்காய், பேரீச்சன், முந்திரிகை, மாம்பருப்பு, காட்டத்தி, கீழ்க்காய்நெல்லி, அதிவிடையம், வில்வப்பிஞ்சு, விளாம்பிஞ்சு, மாதளம்பிஞ்சு, சந்தனம், சாத்திரபேதி, புளிவிரைத்தோல், கோரைக்கிழங்கு, சிறுநாகப்பூ, லவங்கப்பட்டை, குராசானிஓமம், அமுக்கரா வகைக்குக்கழஞ்சி-உ யாவையும் ஆவின்பாலாலாட்டி ஆவின்நெய் படி-உ-ல் கலந்து மேற்கூறியவைகளையும் ஒன்றுபடுத்தி மெழுகுபதமாகக்காச்சி உச்சிக்கரண்டிவீதம் எடுத்து அடியிற்கூறிய நாகபற்பம் அரிசிஎடைகலந்து ௨௰-நாளிருபோதுண்ணவும், கடும்பத்தியம்.

நாகபற்பம்.

வேப்பெண்ணெயில் உக-விசை உருக்கிச்சாய்த்த சிறுகண்ணுகம் பலம் ஒன்றைத்தட்டாக்கி வேளையை விளாங்காய்ப்பிரமாண மறைத்துக் கவசித்து சுண்ணும்புபொதிந்து எழுசீலைசெய்து முழப்புடம்போட நீறும்.

சு - வது மருந்து.

சொவ்வைச்சாறு, காணி, வல்லாரை, செருப்படை, ஆனைநெருஞ்சி சிந்தில்தண்டு, அரசன்பட்டைசாறு வகைக்குப்படி-உ, சித்தாமணக்கெண்ணெ, எள்ளெண்ணெ வகைக்குப்படி-ஒ, ஒன்றுபடுத்தி சாதிக்காய், சாதிபத்திரி மாசக்காய், கற்கடகச்சிங்கி, சணபகப்பூ,காட்டாத்திப்பூ, சிறுநாகப்பூ, ஏலம், குராசானி, திப்பிலி வகைக்குக் கழஞ்சி-உ இவைகளை ஆவின்பாலாலாட்டி ஷை எண்ணெயிற்கலக்கிஅடுப்பேற்றி மெழுகுபதமாகக்காச்சி கற்கண்டுபலம்-ரு பொடித்துப்போட்டு உச்சிக்கரண்டி ஒன்றுவீதம் ஒருமண்டலம்கொள்ளவும், இச்சாபத்தியம்.

ரு - வது மருந்து.

சித்தாமணக்கெண்ணெ, ஆவினெய் வகைக்குப்படி க, விழுதிச்சாறுபடி-க-சேர்த்து சுக்கு, மிளகு, திப்பிலி, வசம்பு சுருள்ளி, கோஷ்டம், லவங்கம் ஏலம், வெள்ளுள்ளி, வகைக்குப்பலம்-வ ஆவின்பாலாலாட்டி ஷை நெய்யிற்கறைத்து அடுப்பேற்றி மெழுகுபதமாகக்காச்சி வ-ஆறாக்குவீதம்-ஙு-நாள் கொள்ளவும், பத்தியம் உப்புமுதலியவை தள்ளவும்.

கூ - வது மருந்து.

இலுப்பெண்ணெயில்-உக - விசை உருக்கிச்சாய்த்த கருவங்கம் பலம் ஒன்றைத் தகடதாக்கி தாளகம், இரசம் வீரம் அண்டோடு வகைக்கு விரா-க. வாய்நீராலமத்தித்து ஷை தகட்டிற்குப்பூசிசுண்ணும்புக்குள்பொதிந்து சிறுகுடுவையில்வைத்து-எ-சீலைசெய்து செஜபுடம்-உ-போடவும் நீறும், இதைசிரகலேகியத்தில் உ-அரிசிஎடைவைத்துண்ணவும், கடும்பத்தியம்.

எ - வது மருந்து.

மிளகுபலம் க, கசகசாபலம் உ. வால்மிளகு பலம்-க பொன்வறுப்பாக்கிச்சூரணித்து ஆவின்பால் பலம் உ, சர்க்கரைபலம் ச-சேர்த்துப்பாகுசெய்து ஷை தூள்கொட்டிக்கிண்டி இறக்கிதேன்பலம்-உ சேர்

ந்து கொட்டைப்பாக்களவு லேகியஞ்செய்து ஷ வங்கபற்பம் அரிசி யெடைவைத்துண்ணவும், மேகரோகங்கள் உக-ம் நீங்குமென்றறிக.

மற்றையமேகரோகத் தொகைகளையும், நாடிசிரானங்களையும், வியாதிக்குறிகளையும், அவுஷதபாகங்களையும், சுத்திவகைகளையும்,பத்தியகிரமங்களையும், க-ம் பாகம், உ-ம்பாகம், ௩-ம் பாகமாக முறை முறையே அச்சிடுவோமாக.

அன்றி இந்நூலிற்கூறியவைகள்போக மற்றையஅதிசாரரோகம், கிராணிரோகம் பிரமியரோகம், பாண்டுரோகம், சோபைரோகம், மகோதரரோகம், விஷபாகரோகம், பெரும்பாடுரோகம், உளமாந்த ரோகம், சல்லடைப்புரோகம், விற்புருதிரோகம், கரப்பன்ரோகம், பவுத்திரரோகம் சன்னிரோகம், நேத்திரரோகம், வலிரோகம், வை சூரிரோகம், பிரிசரோகம், சிரரோகம், தாகரோகம், விக்கல்ரோகம், சுவாசரோகம் வாந்திரோகம், மார்புரோகம், கம்மல்ரோகம், ஆண்கு றிரோகம், பெண்குறிரோகம், மலட்டுரோகம், சாமளாரோகம், பால ரோகம் ஆகிய ரோகத்தொடுப்புகளும் அதுகளில் கிளைரோகசம்மந் தங்களும் நாடியிலக்கணமும் அந்தந்தநாடிநடைகளுக்கேற்ற வியாதிக் குறிப்புகளும், அவுஷதபாகங்களும்,சுத்திசெய்யும்வகைகளும் பத்திய கிரமவரிசைகளும் முறைமுறையேசொல்லப்படுமாகையால்,மேகரோ கம்வரையிலெழுதலாயினோம்.

ஏனெனில் ௪௪௪அ-வியாதித்தொகுப்புகள்யாவும் ஓர்நூலாகவச் சிடுவோமாகில் சுமார்-உ௱-பாரமடங்கிய புத்தகமாகுமானதால்நம்மை ப்போன்ற எளியவர்கள் அதிகவிலைகொடுத்துவாங்கவரிதெனச்சிந்தித் து மூன்றுபாகங்களாக வகுக்கலாயினோம்.

இனிவியாதிரூபங்களுக்குத் தனித்தனி அவுஷதங்களும், தக்க அநுபானங்களும், சுத்திசெய்யும் விவரங்களும் பத்தியபாகங்களும் சிலதுசொல்லுவோமாக.

சகலரோகங்களுக்கும் குளிகைவகைகள்.

கோடாசூரிக்குளிகை.

சுத்திசெய்த இரசம், கெந்தகம் வெண்காரம், லிங்கம், தாளகம், மனோசிலை, கருநாபி, இந்துப்பு சூடன், சுக்கு,மிளகு, திப்பிலி நெல் லிக்காய், தான்றிக்காய், கடுக்காய், அக்கிராகாரம், கருஞ்சீரகம், சித்

திரமூலம், உடுகுரோகணி வகைக்கு விரு க வாளம் விரு டு, சித்தா மணக்குபருப்பு விரு டு இவைகளைஒன்றாபடுத்திக்கல்வத்திலிட்டுஅவு ரிச்சாரில் மூன்றுநாள் மூன்றுஜாமம், கையாந்தகரையில்-சு-ஜாமம் நிம்பழத்தில்-க-ஜாமமாட்டி மிளகளவுகுளிகைகட்டிநிழலுலர்த்திவை த்துக்கொள்ளவும்

ஷை குளிகைக்கு அநுபானங்களும்
தீரும்வியாதிகளும்.

ஷை குளிகை இரண்டை டு-நாளிருபேர்து தயிரில்தாக்க செரி யாமந்தமும், ஊமத்தைச்சாற்றில் சன்னிசயித்தியம் சுரமும், பசளைச் சாற்றில் சுரோணிதவாதமும், சாதிக்காய்ப்பொடியிற்கொள்ள இரத் தக்கழிச்சலும் சீரகச்சூரணத்தில் மூலமும்தீரும், நற்கோவைச்சாற் றில்கொடுக்கத் தாதுவிர்த்தியுமுண்டாம், பசுநெய்யிற்கொள்ள கிரா ணிக்கழிச்சலும் தீரும், ஆமணக்கெண்ணெயிற் கொடுக்க விரோசன மாகும், பாம்பு, தேள்முதலிய விஷந்தீண்டியவிடத்தில் உமிழ்நீரா லு ரைத்துப்போட விஷம்நீங்கும், சீனியிற்கொள்ளப் பொருமல்தீரும், கஞ்சாசாற்றிலுண்ணக்காலெரிவுநோவுதீரும்.நொச்சிச்சாற்றிலுண்ண பதினெண்பிரமியமும்தீரும்,வெள்ளாட்டுப்பாலிற்கொள்ள மேகநோய் தீரும், பழச்சாற்றிலுண்ண செவ்வட்டைக்கடிநீங்கும் தகரைச்சாற் றிலுண்ண தீபனமுண்டாம்,மேற்சுவாசம்தீரும்,தேனிற்கொள்ளசரீர மிளைக்கும், புளியங்கொட்டையை ஊறவைத்த தண்ணீரிற்கொள்ள உஷ்ணமுண்டாம், வெற்றிலையிலுண்ண முகவசிகரமுண்டாம், காலை யில் வெற்றிலைப்பாக்கிற்கொள்ள பயித்தியநோயகலும், திரிகடுச்சூர ணத்திற்கொள்ள நெஞ்சுகட்டுத்தீரும், முருங்கைச்சாற்றில்நெய்கலந் துண்ண அட்டகுன்மம்போம், சீரகச்சூரணத்தில் சீனிகலந்து ஷை குளிகையைவைத்துண்ண ஊஷ்ணகாந்தலகலும், தண்ணீர்மிட்டான் நன்னாரிக்கியாழத்திலுண்ண நீரொழுக்குதீரும், நொச்சிச்சாற்றில் வா தசுரமும், சுக்குகியாழத்தில் பித்தசுரமும், இஞ்சிச்சாற்றில் திரிகடு குப்பொடிகலந்து குளிகைவைத்துண்ண ஐயசுரமும் நீங்கும், கண் ணில்வாய்நீராலுரைத்துதீட்ட பேய்ஓடிப்போம், வெந்நீரிற்கொள்ள தீபனமுண்டாம மேற்கூறிய அநுபானங்கள் தவரிடாவண்ணஞ்செய் யில் நோய்கள்வீடுவிட்டுக் காடுறையுமென்றறிக, கடும்பத்தியம்.

வச்சிரகோடாசூரிக்குளிகை.

சுத்தித்தநாபி, இருவி, இரசம்,கெவுரி,கெந்தி,லிங்கம்,வெள்ளைப்பா ஷாணம், வெண்காரம்,வங்காளப்பச்சை,தாளகம், திரிபலை, திரிகடுகு,

அக்கிராகாரம், வாளம்வகைக்குப்பலம்-க கல்வத்திட்டு கையான்சாறு, துளசிச்சாறு, நொச்சிச்சாறு, நிம்பழச்சாறு இவைகள் சமன்கொண்டு கஉ-ஜாமமும்,வெற்றிலை-ள,பாக்கு-ருவ இடித்த ரசத்தைவிட்டு-ந-ஜாமமும், வெள்ளாட்டுப்பாலில்-ந ஜாமமுமாட்டிப் பயறளவு குளிகை செய்து நிழலுலர்த்திவைக்கவும்.

அநுபானம்.

ஷை குளிகை இரண்டை-எ-நாளிருபோது முலைப்பாலில்கொடுக்க சுரமும், சீரகச்சூரணத்தில் பித்தசுரமும், ஓமச்சூரணத்தில் அக்கினிமந்தமும், ஆவினெய்யில் சூலையும், முருங்கைச்சாற்றில்வாய்வும், ஆடாதோடைச்சாற்றில் நெய், தேன், திரிகடுகுகூட்டிகுளிகைவைத்துண்ண இருமலும், சுக்கு, மிளகு, சூரணத்தில் ஊஷ்ணமும்போம். மாதுளங்காய், வில்வக்காய், தான்றிக்காய், கடுக்காய் இவைகளை சமன்கொண்டு எருமைமோரிலாட்டி தூதுளங்காய்ப்பிரமாணத்தில் குளிகைவைத்துண்ண வயிர்கடுப்புபோம், கோஷ்டம். கிராம்பு, ஆனைத்திப்பிலி, சித்தரத்தை, மதுரம் வகைக்கு விரா-க. தேங்காய்ப்பாலிலாட்டி-ந-குளிகைவைத்துண்ண கெற்பவிற்புருதிபோம், வில்வச்சாற்றில் குன்மம்போகும் ஊமத்தைச்சாற்றிலிட பயித்தியநோயகலும் நா-குடம் நல்லஜலம் சிரசிலூத்தவும், கடும்பத்தியம்.

சுரங்களுக்கு ஏலாதிக்குளிகை.

ஏலம்; லவங்கம், மதுரம். நன்னாரி, தாளிசப்பத்திரி, தேவதாரம், மாசக்காய், சந்தனம், இலுப்பைப்பூ, நிவதாட்சிப்பழம், பேரீச்சம்பழம், உருத்திராட்சம். கோரோசனை வகைக்கு விராகனெ-க, கடுகுரோகணி விரா-மந கல்வத்திலிட்டு இளநீர்விட்டு இரண்டுஜாமமரைத்துக் குன்றிக்காயளவு குளிகைசெய்து நிழலுலர்த்திவைக்கவும் புளிதள்ளவும்.

அநுபானம்.

ஷை குளிகை இரண்டை-எ-நாளிருபோது இளநீர் ஜலத்திலூட்ட தாபசுரம், ஊஷ்ணசுரம், அதிசாரசுரம், நாவரட்சிசுரம் பழைய சுரம், முறைக்காச்சல்போம், முலைப்பாலில்தீட்ட தோஷசுரம்தீரும், நீராகாரத்திலிட உஷ்ணகாந்தல் சுரம்நீங்கும், பரங்கிச்செக்கை கியாழத்தில் குளிகையைத்தீட்ட கணச்சுரம் நிவர்த்தியாம், பத்தியம் புளிதள்ளவும்.

மிருதாதிகுளிகை.

கோரைக்கிழங்கு, இருவேலி நன்னாரி, விலாமிச்சு, திரிபலை, கருடப்பச்சை, அகில், தேவதாரம், தாளிசம், கல்நார், தக்கோலம், கோஷ்டம், சண்பகப்பூ, கோரோசனை, பச்சைகற்பூரம், மதுரம், ஏலம், லவங்கம் இவைகளைச் சமன்கொண்டு இளநீரால்-ச ஜாமமாட்டி மிளகளவு குளிகைசெய்யவும், இச்சாபத்தியம்.

அநுபானம்.

ஷை குளிகை இரண்டை-ய-நாளிருபோது சீரகக்கியாழத்திலுண்ண பித்தசுரமும், தேனில் வாதசுரமும் இஞ்சிச்சுரசத்தில் ஐயசுரமும், பஞ்சதிபாக்கினிச் சூரணத்தில் தொந்தசுரமும் விட்டோடிப்போம், பத்தியம் புளிதள்ளவும்.

வசந்தகுலமகாரசக்குளிகை.

லவங்கம், திப்பிலி, கோஷ்டம், அக்கிராகாரம், அதிமதுரம், வெண்காரம், லிங்கம், இரசச்செந்தூரம் வகைக்கு விரு-க, வெங்காரத்தைப் பொரித்துக்கொள்ளவும், முதல்லிங்கமும் இரசச்செந்தூரமும் முலைப்பாலில்சற்று அரைத்துப் பிறகுமற்றையமருந்துகளைப்போட்டு இஞ்சிரசம்விட்டு இரண்டுஜாமமரைத்து கோரோசனைக் குங்குமப்பூ, பச்சைகற்பூரம் வகைக்கு விரு உ கூடப்போட்டு நிம்பழச்சாத்தாலாட்டி சிறுபயறளவுகுளிகைசெய்து நிழலுலர்த்திவைக்கவும்.

அநுபானம்.

ஷை குளிகை இரண்டை-எ-நாளிருபோது லவங்கம் திப்பிலியைப்பொடித்து தேன்கூட்டிவைத்துண்ண சீதளம், வாய்வு, சுரம் நீங்கும் முலைப்பால், துளசிச்சாறு, தேன்சமன்கூட்டி மாத்திரையை வைத்துண்ண விடாசுரம்போகும், பத்தியம் புளிதள்ளவும்.

கோரோசனைக்குளிகை.

செண்பகப்பூ, விலாமிச்சு, கோஷ்டம், ஏலம் கோரோசனை, சாத்திரபேதி, மதுரம், வெட்டிவேர்வகைக்கு களஞ்சி-க, தண்டுச்சாற்றில் உ-ஜாமமாட்டி குன்றியளவு குளிகைசெய்யவும்.

அநுபானம்.

ஷை குளிகைஇரண்டை முலைப்பாலில்தாக்க வாதசுரமும், தேனில் இஞ்சிரசத்தில் பித்தசுரமும், கொடிவேலிக்கியாழத்தில் சிலேத்துமசுரமும்போகும், இச்சாபத்தியம்.

இரைப்பு, சுவாசம், இருமல், ஈளை, காசத்திற்கு திப்பிலிக்குளிகை.

திப்பிலி பலம்ஒன்றை அரைஆழாக்கு எருக்கம்பாலிலூறப்போட்டு சுண்டும்வரையில் ரவியில்வைத்துப் பின்அதைக்காயில்விரைநீக்கி ஷை மருந்தைவைத்துமூடி ஆவின்சாணத்தால் கவசஞ்செய்து புடம்வைத்துக் கஙய்கருகினபதத்தில்தள்ளி உள்ளிருக்கும் மருந்தையெடுத்து தேன்விட்டரைத்து குன்றியளவு குளிகைசெய்து-ம௫-நாட்சென்றபின் ஒருமாத்திரைவிதம் அந்தி சந்தி தேன், முலைப்பால், இஞ்சிச்சுரசம் இவைகளில் சாப்பிட இரைப்பு, சுவாசம், இருமல், ஈளை, காசம் முதலியவைநீங்கும், இச்சாபத்தியம்.

பேதிக்குபூபதிக்குளிகை.

இரசம், கெந்தகம், வெண்காரம், சுக்குவகைக்குக் களஞ்சி-க வாளம்கழஞ்சி-ச இவைகளைக்கல்வத்திலிட்டு குளுந்தநீரில்-உ-ஜாமமாட்டி பயறளவு குளிகைசெய்யவும், இச்சாபத்தியம்.

சுத்திவகைகள்.

சூதத்தை வெந்நீர்விட்டரைக்கவும், கெந்தியை ஆவின்பாலிலுருக்கிச்சாய்க்கவும், வெண்காரத்தைச்சாணத்திலும், வாளத்தைமுளைநீக்கி உப்பு, புளி, மிளகாயில் கொதிக்கவைத்து விளக்கெண்ணெயில் வதக்கவும், சுத்தியாம்.

விரேசனத்திற்கு வாலசஞ்சீவிக் கறுப்புகுளிகை.

வெண்காரம், நெல்லிகெந்தி, இரசம், சுக்கு இவைகள் ஓரிடையாயெடுத்து வாளம் நாலிடைசேர்த்துப் பொற்றலைக்கையான்சாற்றால் உ ஜாமமாட்டி மிளகளவுகுளிகைகட்டவும் முன்போலச் சுத்திசெய்யவும்.

விரேசனத்துக்கு லிங்கக்குளிகை.

நேர்வாளம் பலம்-க, சீலையில்பொட்டணங்கட்டி சுத்தஜலத்தில் ரூம-நாழிகை ஊறப்போட்டு நஞ்சுபோக்கி முலைப்பாலி லூறவைத்த ஜாதிலிங்கம் பலம் உ, வெண்காரம் பலம்- உ, கடுக்காய்த்தோல் பலம்-வ ஒன்றுபடுத்தி கல்வத்திலாட்டிமெழுகுபதமாய்வரும்போது மிளகளவுருண்டைசெய்து நிழலுலர்த்தி அநுபான மறிந்துகொடுக்க விரேசனமாகும், இச்சாபத்தியம்.

சித்தானந்த வயிரவக்குளிகை.

சுத்திசெய்த இரசம், நாபி, இணங்கன் வகைக்குப்பணவெடை இங்கிலியம்-ச பணவெடை வாளம்-அ எடை இவைகளை இஞ்சிச்சாற்றிலோர் சாமமாட்டி உளுந்துப்பிரமாணம் குளிகைசெய்யவும்.

அநுபானம்.

ஷை குளிகையை இஞ்சிச்சாற்றிலும், தேன், நெய், சுக்கு கியா ழுத்திலுமிட விஷசுரம், சூலை, குடல்வாதம், மலபந்தம், பாண்டு, பீலிகை, வாய்வுமுதலிய ரோகங்கள் விட்டோடிப்போம், கடும்பத் தியம்

காயமாத்திரை.

சுத்திசெய்த சாதிலிங்கம், பெருங்காயம், நாபி, வெண்காரம், மிளகு வகைக்குக்கஞ்சி-க, வாளம் கஞ்சி-ங இவைகளைக் கற்று ழைச்சாற்றாலாட்டி மிளகளவு குளிகைசெய்துலர்த்திடவும்.

அநுபானம்.

இஞ்சிச்சாற்றிலும் கருப்புக்கட்டியிலுமுண்ண சுரங்கள். அதி சாரம், சீதசுரம், தாபசுரம், வாதபித்தசுரம், குளிர்சுரமியாவும்விட் டோடிப்போம். பத்தியம் புளிதள்ளவும்.

சன்னிகுளிகை.

சுத்திசெய்த இரசம் நாபி, பாஷாணம், லிங்கம், அரப்பொடி, நீமுறுவல் சமன்கூட்டி இஞ்சிச்சாற்றாலாட்டி பயறளவு குளிகைசெ ய்துவைக்கவும்.

அநுபானம்.

ஷை குளிகையொன்றை வெள்ளைப்பூண்டுதயிலத்தில்தாக்க சன்னி ௰௩, பிறவீச்சு, உட்குத்து, குதிரைவலி, வாய்வு, பிறநோய் முதலி யனவைபோம், கடும்பத்தியம்.

கன்னிதை சிந்தாமணிக்குளிகை.

வெண்காரம், லிங்கம், நாபி, காயம்வகைக்குச் சமனெடைகொ ண்டு வாளம் எடை-ச இவைகளைக் குமரிச்சாற்றாலாட்டி மிளகளவு குளிகைசெய்யவும்.

அநுபானம்.

ஷை குளிகை ஒன்றை இஞ்சி, தேன், மூலைப்பால், திரிகடுகில் தாக்க பக்கசூலை, கெற்பசூலை, மண்டைசூலை, மலபந்தம்முதலியரோ கங்கள்போகும், கடும்பத்தியம்.

முச்சுரத்திற்குப் பச்சைகுளிகை.

துத்தம், நாபி, கெந்தகம் சூதம், காரம், அரிதாரம் இவைகளைச் சமன்கொண்டு காக்கணச்சாற்றில்-௩-ஜாமமாட்டி உளுந்தளவுகுளிகை செய்யவும்.

அநுபானம்.

ஷ குளிகைஒன்றை முலைப்பால், சீனி மிளகு, சுக்கு, தேன், இஞ்சிச்சார் இவைகளில்தாக்க மாறல்சுரம், குளிர்ச்சுரம், ளிர்ச்சுரம், சன்னிசுரம், பித்தசுரம், சிலேத்துமசுரம் வாதசுரம், முறைச்சுரம், விடாச்சுரம் முதலியவைபோம், சுடும்பத்தியம்.

திரிலோகச்சிந்தாமணிக்குளிகை.

சீமைஇரசபற்பம் விரா சு, இரசகற்பூரம் விரா-க, இரசச்செந்தூரம் விரா-க சீமைசாவிக்கல் விரா-க இவைகளைப் பசளைச்சாற்றால் ச-ஜாமமாட்டிப் பின்விளாம்பிசின்ஊறவைத்த ஜலம்விட்டொருஜாம மறைத்து சிறுபயறளவு உண்டைசெய்யவும்

அநுபானம்.

ஷ குளிகைஒன்றைபனைவெல்லத்தில்வைத்துண்ணவாய்வு,மலபந்தம், கெற்பஸ்திரீகள் வயற்றில்தங்கியஅழுக்கு, சன்னிசூலை, குன்மம், பித்தவாய்வு முதலியவைபோகும், சுடும்பத்தியம்.

புண்கிரந்திக்குக் கருந்துளசிக்குளிகை.

வெண்காரம் விரா-ரு,சட்டியிலிட்டு உருகிறபோது பூரம் விரா-க, இரசச்செந்தூரம் விரா-ஒ பொடித்து உருகிநிற்கும்வெண்காரத்திற் போட்டு நீர்வற்றியபின்னெடுத்துக் கல்வத்திலிட்டு ஓமம் பலம்-உ சற்றுவறுத்து கருந்துளசி இலைபலம்-உ போட்டு நிம்பழச்சாற்றால் செகிழவரைத்து தூதுளங்காய்ப்பிரமாணம்குளிகைகட்டி-ரு-அலைது நி-நாளந்திசந்திகொடுக்க புண், கிரந்தி, மேகவாய்வு, கொறுக்குபாரிசவாய்வுமுதலியவைநீங்கும் பத்தியம் புளிபுகைதள்ளவும், சீக்கிரம் வியாதிபோக வெந்நீருஞ்சாதமுண்ணவும், வாய்பிடிக்கவேணுமென்றால் இரசச்செந்தூரம் விரா அரையாகச்சேர்க்கவும்.

மேகப்புண்கிரந்திக்குப் பூரக்குளிகை.

பூரம், சித்திரமூலவேர்ப்பட்டை, ஓமம், பனைவெல்லம் இவைகளைச்சமன்கொண்டு ஒருஜாமமாட்டி மிளகுப்பிரமாணம் குளிகைசெய்து குளிகை ஒன்றுவீதம்-ம-நாளிருபோதுண்ண வெள்ளை, கிரந்தி, கொறுக்கு, புத்துமுதலியவைபோம், சுடும்பத்தியம்.

மேகவாய்வினால் கைகால்பிடிப்புக்கும் மேகங் காண்கிறவர்களுக்கும் இரசக்குளிகை.

வாலைரசம் பலம்-க, கெந்தி பலம்-உ, இரசபற்பம் பலம்-உ,பூரம் பலம்-க, மிளகு பலம்-க இவைகளைநிம்பழச்சாற்றிலாட்டி கடலைப்பிரமாணம் குளிகைசெய்து-க-நாளிருபோதுண்ணவும், சுடும்பத்தியம்.

வேறுபூரக்குளிகை.

பூரம்-விரு-க, கரண்டியில்கொஞ்சம்நெய்விட்டு பூரத்தைப்போட்டுக்காச்சி பற்றிஎரிகிறசமயத்தில் ஷை பூரத்தைப் பிறட்டிக்கொடுத்துவரவும் ஆறியபின்கீழ்சாய்த்து அலம்பிப்போட்டுக் கல்வத்திலிட்டு லவங்கம் விரு-உ-சேர்த்து நிம்பழச்சாறுவிட்டறைத்து-சய-குளிகை செய்து அந்திசந்தி ஒவ்வொரு குளிகைசாப்பிட, மேகம், கிரந்தி, வெள்ளை, கொறுக்குமுதலியவைபோகும், பத்தியம்-புளிபுகை புலால் நீக்கவும்.

தாளகக்குளிகை.

காட்டுத்தாளகம் பலம்-க, சுக்குபலம்-க, கிளிஞ்சில் சுண்ணம் பலம் அரைக்கால் இவைகளைநெகவறைத்துச்சட்டியிற்போட்டு அரை ஆழாக்கு எருமைச்சாணிப்பால்விட்டுக் குழைத்துக் கொதிப்பித்து சுண்டினபின்வறுத்தெடுத்து மறுபடியரைத்துசெம்பருத்திச்சாறுபடி கொதிக்கவைத்து வறுத்தெடுத்தறைத்து துளசிச்சாறுவிட்டுக்கொதிப்பிட்டுவறுத்தெடுத்தறைத்து கஞ்சாங்கோரைச்சாறுவிட்டுக் கொதிப்பித்து வறுத்தெடுத்தறைத்து கம்மாறுவெற்றிலைச் சாறுவிட்டுக்கொதிப்பித்து வறுத்தெடுத்தறைத்துகுன்றியளவுண்டைசெய்துமுலைப்பால் பனவெட்டு சீரகச்சூரணத்தில் வைத்துண்ண நளிர்ச்சுரம், மாறல் சுரம், நாட்சென்றசுரம் விடாச்சுரம்முதலிய சுரரோகங்கள்விட்டோடிப்போம் பத்தியம்-கருவாடு, கத்திரிப்பிஞ்சு, முருங்கைப்பிஞ்சு, மிளகுநீர் புளியிட்டுச்சமைத்துக்கூட்டவும், அரைக்கீரை, நல்லெண்ணை, பூண்டு, கடுகு, சீரகம் நீக்கவும்.

ஷை மருந்தை சாறுவகைக்கு அரைஆழாக்குவீதம் கூட்டிக்கொதிப்பிக்கவும்.

கெவுரிக்குளிகை.

கெவுரிபாஷாணம் நெரிவிஷம், சாதிக்காய், குங்குமப்பூ,வாளம் வகைக்கு விரு-க, கல்வத்திலிட்டு மந்தஞ்சாறுவிட்டு ஒருஜாமமறைத்து சிறுபயறளவு குளிகைகட்டி நிழலுலர்த்திவைக்கவும்.

அநுபானம்.

ஷை குளிகைஒன்றை முலைப்பாலில்தாக்க சகலவிஷசுரங்களும் விட்டோடிப்போம் பத்தியம் புளிகூட்டவும்.

சுராமபாணக்குளிகை.

நெல்லிகெந்தி பலம்-உ ஏலிபாஷாணம் பலம்-க ஊமத்தைச் சாற்றுல்-கூ-நாளாட்டிப் பின்நிம்பழச்சாற்றுல்-உ-ஜாமமாட்டவும் சிறுபயறளவு குளிகைசெய்யவும்.

அநுபானம்.

முலைப்பால், சர்க்கரை, தேன், இஞ்சிசுரசம் இவைகளில் ஷை குளிகை ஒன்றைத்தீட்ட சகலசுரங்களும் விட்டோடிப்போம் கடும் பத்தியம்.

பூபதிக்குளிகை.

இரசம், கெந்தகம், வெண்காரம், லிங்கம்,சிலை, நாபி, திரிகடுகு இவைகளைச் சமன்கொண்டு இஞ்சிரசத்தா லொருஜாமமாட்டி மிளகளவு உண்டைசெய்துவைக்கவும்.

அநுபானம்.

முலைப்பால்,தேன்,இஞ்சி,திரிகடுகு சூரணம், மிளகுதியாழத்தில் ஷை மாத்திரை ஒன்றைத்தாக்க சகலசுரங்களும்தோஷங்களும் நிவர்த்தியாகும், கடும்பத்தியம்.

அன்றி ஷை மருந்துகளைச் சூரணித்து நசியம் கலிக்கம் செய்யத்தீரும்.

வேறுசுரக்குளிகை.

கடுகுரோகணிவேர்க்கொம்பு கடுக்காய், நேர்வாளம், நொச்சிக்கொழுந்து இரசம், நாபி, வெண்காரம் அரிதாரம், ஜாதிலிங்கம் வகைக்கு களஞ்சி-க-பொற்றலைக்கையான்சாற்றால்-உ-ஜாமமாட்டி பயறளவு குளிகைகட்டவும்.

அநுபானம்.

ஷை குளிகையை முலைப்பாலிலுண்ண சகலசுரங்களும் விட்டோடிப்போகும்.

வாதராட்சதன்குளிகை.

இரசம் விறு-அ, நாபி விறு-எ, கெந்தி விறு-சு, வெண்காரம் விறு-ரு, ஊமத்தன் விறு-ச இவைகளைத்தனித்தனியே சுத்திசெய்து கல்வத்திலிட்டு சித்திரமூலவேர்க்கியாழம்விட்டு-உ-ஜாமமறைத்துமிளகளவுண்டைசெய்து வைக்கவும்.

அநுபானம்.

தேன்முலைப்பால் இன்னும்தக்க அநுபானங்களில் ஷை மாத்திரை ஒன்றைத்தாக்க சன்னிவாதசுரம் வாய்வுகளுந்தீரும், கடும்பத்தியம்.

ஆயரசக்குளிகை.

இரசபஸ்பம், கோஷ்டம், அக்கிராகாரம், திப்பிலி, லவங்கம், காயம், குங்குமப்பூ, கோரோசனை, கஸ்தூரி, மூசாம்பரம் இவை

களைச்சமன்சேர்த்து வெந்நீர்விட்டாட்டி களாக்காய்ப்பிரமாணம் குளிகைசெய்யவும்.

அநுபானம்.

வியாதிரூபங்களுக்கேற்ற அநுபானமறிந்துசெய்ய சீதளம், அழுக்கு, சன்னி, வாய்வுமுதலியவைபோம், கடும்பத்தியம.

வாந்திபேதிக்கு நிவர்த்திகுளிகை.

பெருங்காயம் எடை-௰௫, கறியுப்பு, மிளகு, வெள்ளெருக்கன் நரம்புவகைக்கு எடை-எ, பளிங்கு எடை-௰௭, இரசபற்பம் எடை-க இவைகளை எட்டிக்கியாழத்தாலாட்டி அரைசுண்டக்காய்வீதம் குளிகைசெய்யவும்

அநுபானம்.

எட்டி திரிகடுகு கியாழத்திலிடவும் பத்தியம் கஞ்சி கொடுக்கவும்.

மகாபுன்னைவேர்க்குளிகை.

இரசம், காந்தம், கல்நார்பற்பம் வெண்காரபற்பம், திரிகடுகு சூரணம், காயம், கோரைக்கிழங்கு இவைகளைச்சமன்கொண்டு புன்னைவேர்ப்பட்டையைப்புட்டாக்கி இடித்து இரசம்பிழிந்து ஷை மருந்தை-உ-ஜாமமாட்டி பருத்திவிரையளவு குளிகைசெய்யவும்.

அநுபானம்.

ஷை குளிகையொன்றை இஞ்சிரசத்தில்தாக்க சுவாசகாசம், இருமல், மேல்மூச்சு, கோழைமுதலியதும்போம், இச்சாபத்தியம்.

மாந்தத்திற்கு வாலைசஞ்சீவிகுளிகை.

வெள்ளைகாக்கட்டான்வேர்ப்பட்டை விரா-உ, இரசச்செந்தூரம் விரா-௨ பொரித்தவெண்காரம் விரா-க, சுக்குத்தூள் விரா-௨ இவைகளை நிம்பழச்சாற்றாலாட்டி குன்றியளவுண்டைசெய்யவும்.

அநுபானம்.

இஞ்சிச்சாற்றிலும், தேன், முலைப்பாலிலும், திரிகடுகு கியாழத்திலும் ஷை மாத்திரையைத்தீட்ட சகலமாந்தமும் விட்டோடிப்போம் பத்தியம் புளிதள்ளவும்.

மகா இலிங்காதிக்குளிகை.

முலைப்பாலில்சுத்திசெய்த லிங்கம்பலம்-௨ க்கு கரண்டிக்கீரைச்சாறுபடி-வ சுருக்கீய்ந்து சாம்பிராணிசத்துபலம்-க இவைகளை விளாம்பிசின் ஊறவைத்தஜலம்விட்டரைத்து 60-உண்டைசெய்யவும்.

அநுபானம்.

போஸ்தக்காய் பலம்-உ, தூள்செய்து ஒருபடிசலத்தை அரைப் படியாய்க்காச்சி அந்தஜலத்தில் முன்தூளைப்போட்டு சற்றுமூடிவைத்து நன்றாய்ப்பிசைந்து வடிகட்டி அதில்-சூ-பலம் சர்க்கரைசேர்த்து பாகுகாச்சி அப்பாகில் அந்திசந்தி ஒவ்வொருமாத்திரைஉறைத்துசாப்பிட்டபிறகு இரண்டுநாழிகையானவுடன் சாம்பிராணிசத்து பணவெடைதேனிலிழைத்து சாப்பிடவும். பசியெடுத்தால் அரிசியுடைத்துக் கஞ்சிகாச்சிக்குடிக்கவும் பிறகு மத்தியானத்திற்கு முருங்கைப்பிஞ்சு, கத்திரிப்பிஞ்சு, வாழைக்கச்சல், புளியாரை, தூதுவளைவத்தல், ஆதண்டைவத்தல், நெய்ஆகும், ஒவ்வொருவேளை இறைச்சியாகும் புளிலே சாய்க்கூட்டவும். ஈளை, இருமல், இரத்தகாசம், சுரம் முதலியவை போம்.

நீரிழிவுமதுமேகத்திற்கு கற்பூராதிக்குளிகை.

பச்சைகற்பூரம், ஆவாரம்வித்து வகைக்குப் பலம்-க, வேப்பன்பிசின் விளாம்பிசின், முள்ளிலவம்பிசின், முருங்கைப்பிசின், ஒதியம்பிசின் கருவேலம்பிசின், பனைமரப்பிசின், வெள்ளைக்குங்கிலியம், தேத்தான்வித்து, கடலழிஞ்சில்வித்து, கஸ்தூரி, கோரோசனை, குங்குமப்பூ, அபின் வகைக்கு விரா-ரெ-உ, செவ்வகத்திச்சாறு, அத்திநீர், திரிபலைக்கியாழம் இதுகளில் ஒவ்வொன்றை ஒவ்வொருஜாமம் விட்டறைத்து தூதுளங்காய்ப்பிரமாணம் குளிகைசெய்யவும்.

அநுபானம்.

எருமைத்தயிர் தேன், நல்லெண்ணெ இவைகளில் ஷ குளிகை வைத்து-எ நாளுண்ண நீரிழிவு, மதுமேகம், நீரருகல், நீர்ச்சுருக்கு முதலியவைபோம். இச்சாபத்தியம்.

சன்னி-ம்ரு-க்கும் வீரக்குளிகை.

சுத்திசெய்தவீரம்-வி-னெ-க, பச்சைகற்பூரம்-வி-னெ-க, மிளகு வி-னெ-க இவைகளைக் குளிர்ந்தநீர்விட்டறைத்து மிளகளவு குளிகை செய்யவும்.

அநுபானம்.

தேன், கொடிவேலிக்கியாழம், மிளகுநீர் இவைகளில்தாக்க சன்னிபதின்மூன்றும் விட்டோடிப்போம், பத்தியம்-புளிமுதலியவை தள்ளவும்.

கிராணிக்கு கபாடக்குளிகை

ஜாதிக்காய், ஜாதிபத்திரி, காயம், சீரகம், விடையம், கிராம்பு, அபினி வெங்தயம், வன்னிசெற்பம், கழற்சிப்பருப்பு குராசானிஓமம் இவைகளைச் சமன்கொண்டு செஞ்சாக்கியாழத்திலாட்டி இலந்தைப் பிரமாணம் குளிகைசெய்யவும்.

அநுபானம்.

ஷ குளிகையை ஆவாரம்பஞ்சாங்கத்தில் வைத்துண்ண சகல கிராணிவகைகளும்தீரும். இச்சாபத்தியம்.

சீதசுரம் சீதபேதிகளுக்கு ஆமையோடுகுளிகை.

ஆமையோடுசுட்டது பலம்-க, கற்பூரசலாசத்துபஸ்பம் பலம்-க விளாம்பிசின்ஊறவைத்த தண்ணீர்விட்டரைத்து மிளகளவுஉண்டை செய்யவும்.

அநுபானம்.

ஷ குளிகையை மாதுளம்சூரணத்திலும், சுக்குச்சூரணத்திலும் வைத்துண்ண சீதசுரம், சீதபேதிபோம், இச்சாபத்தியம்.

வீரியவிர்த்திக்குளிகை.

ஜாதிலிங்கம் வி-னெ-க, அபின் வி-னெ-க, முருங்கைவிரை வி-னெ-௬ இவைகளை ஆவின்பால்விட்டரைத்து கடலைப்பிரமாணம் உண்டைசெய்யவும்.

அநுபானம்.

ஷ குளிகைஒன்றை ஆவின்பாலிற்கொள்ள வீரியவிர்த்தியாகும், பத்தியம்-காடை, புறா, கிளுவை, அடைக்கலம், ஆட்டிறைச்சி முதலியவையாகும், அன்றிபதார்த்தங்களுக்கு மிளகு எலுமிச்சம் பழம் சேர்க்கவும்.

வேறுவீரியவிர்த்திக் குளிகை.

ஜாதிக்காய் லவங்கம் வகைக்கு வி-னெ-ல, கோதும்பைஅரிசி வி-னெ-௪, கசகசா வி-னெ-உ, லிங்கம் வி-னெ-உ, அபின் வி-னெ-க, ஊமத்தைவித்து வி-னெ-க, கஞ்சாவித்து வி-னெ உ இதுகளைப்பொடித்துக் கல்வத்திலிட்டுப் பின்வெட்டிவேறுக்கு தண்ணீர்விட்டிடித்துப்பிழிந்து அந்தசாற்றால் ௪-ஜாமமாட்டியும். மலைவேம்புபட்டைச் சாற்றால்-உ ஜாமமரைத்தும் கழுதைப்பால்விட்டுப் பனிரெண்டுஜாமமரைத்துக் குன்றியளவுண்டைசெய்யவும்.

அநுபானம்.

ஷை குளிகையொன்றை தேங்காய்ப்பாலிற்கொள்ளவும், குன்மரோ இக்கு வெள்ளாட்டுப்பாலிற் கொடுக்கவும், வாதசரீரத்திற்குப் பசும் பாலிற்கொடுக்கவும், மேகசரீரத்திற்குதேனிற்கொடுக்கவும், பித்தசரீரத்திற்கு கரும்பின்ரசத்திற்கொடுக்கவும், மேற்கூறிய வியாதிகளைப் போக்கி விந்தூறுங்கேணியாகும். பத்தியம் மேற்கூறியவை.

அன்றிமேற்கூறிய தாதுவிர்த்திக்குளிகைக்கு நிம்பழத்தால்முறிப்பெனச் சொல்லப்படும்.

வாலரசக்குளிகை.

வாலேரசம் வி-னெ-க, இரசச்செந்தூரம் வி-னெ-க, விடத்தாரி வேர்ப்பட்டை வி னெ கவ இம்மூன்றையும்மூலேப்டால்விட்டு மயனம் போலாட்டி கடலேப்பிரமாணங் குளிகைசெய்யவும்.

அநுபானம்.

ஷை குளிகையைவெந்நீரில்தாக்க பவுத்திரம், கைகருப்பு, சர்வ மேகரிணங்கள், கண்டமாலே, சொரிகுஷ்டம்,மேகத்தடிப்பு இவைகள் தீரும், இச்சாபத்தியம்.

சூரணவகைகள்.

கெந்தகச்சூரணம்.

கெந்திவி-னெ - க, இரசகற்பூரம் வி-னெ-க, அயச்செந்தூரம் வி-ரு இவைகளே ஆர்க்கப்பொடிசெய்து சுக்குபலம்-க, கரிமஞ்சள் பலம்-க சூரணஞ்செய்து ஷை சூரணத்தோடுகலந்து கல்வத்திற்போட்டு நெசவறைத்து அந்திசந்தி வெருகடிப்பிரமாணம்-கூ-நாள்தேனிற் கொள்ள மேகவாய்வுபிடிப்பு,குடைச்சல், சூலே, மேகரிணங்கள்தீரும், பத்தியம் புளி புகை புலால் நீக்கவும்.

பஞ்சவர்ணபூபதிச்சூரணம்.

காந்தம், அபினி, சுக்கு, மிளகு, திப்பிலி, ஏலக்காய், ஜாதிலிங்கம், ஜாதிக்காய், நற்சீரகம் செவ்வல்லி,கருஞ்சீரகம்,குராசானிஓமம், அதிவிடையம், கோரக்கர்மூலி மதுரம், தாளிசப்பத்திரி, கசகசா, கோரோசனே, காமப்பூ, சாதிபத்திரி, மாசக்காய், சடாமாஞ்சில், சிறுநாகப்பூ,லவங்கம்,சித்தரத்தை,வால்மிளகு வகைக்குகளஞ்சி-க இவைகளேப்பொடிசெய்து தேனிலுண்ண இருமல், ஈளே, காசம், குளிர்

ஜன்னி, நீர்க்கடுப்பு, வட்டை, காமாலை, கிரந்தி, கழிச்சல்முதலியவை போம்.சவும்பத்தியம்.

வேர்க்கொம்பு சூரணம்.

இருசீரகம், குராசாணிஓமம், ஏலம், லவங்கம், திப்பிலி, காயம், கோஷ்டம், இந்துப்பு, சித்தரத்தை, வசுவாசி, ஜாதிக்காய், வெள்ளுள்ளி, கொத்துமல்லி, சுக்கு, பூரம் வகைக்கு வி-னெ-க இவைகளைச் சூரணித்து தேனிலுண்ண ஜன்னி, மந்தம், பொருமல், பழையபுண், இருமல், திமிர், பித்தவாய்வு, சூலை, குன்மம், முதலியவைபோம்.

தசமூலிச் சூரணம்.

சிவனார்வேம்பு, சீந்திற்கொடி, சிறுகுறுஞ்சான்வேறு, நன்னாரிவேர், சங்கம்வேர், அமுக்கராவேர், நிலப்பனைக்கிழங்கு, பூவரசம்பட்டை, பரங்கிச்செக்கை, வெள்ளறுகு, திரிகடுகு, சிறுநாகப்பூ, வெளிச்சம்பிசின், ஏலம், பெருங்காயம், சந்தனம், தக்கோலம், மதுரம், கஸ்தூரிமஞ்சள், சடாமாஞ்சில், லவங்கம், கருவேப்பிலை, அபின்வகைக் குப்பலம்-க கஞ்சாவித்து பலம்-ச, பனைவெல்லம் பலம்-அ இவைகளை இடித்து மெழுகாக்கிசுண்டைக்காய்வீதம்கொள்ள கருங்குட்டம் மேகத்தடிப்பு, மேகப்படை, வாய்வுமுதலியவைபோம்.

கெஞ்சாவை ஒருநாள் ஜலத்திலூறவைத்து மறுநாள் ஏழுசலம் விட்டுக்கழுவி எடுத்துலர்த்திசேர்க்கவும்.

வசுவாசிசூரணம்.

வசுவாசிகளஞ்சி-உ, லவங்கம், ஏலம், மதுரம், மரமஞ்சள், சீரகம், சிறுநாகப்பூ திரிகடுகுவகைக்கு களஞ்சி க இவைகளைப் பொன் வறுப்பாய்வறுத்துச்சூரணித்து திரிகடிப்பிரமாணம் தேனிலுண்ண உட்குத்து, சுவாசகாசம், இருமல், பித்தவாய்வுமுதலியவைநீங்கும். இச்சாபத்தியம்.

சத்திவிக்கலுக்குச்சூரணம்.

திப்பிலி வி-னெ-அ, சீரகம் வி-னெ-ய, அத்தி-வி-னெ-ரு இவைகளைப் பொன்வறுப்பதாக்கிச்சூரணித்து மயிலிறகைச்சுட்டுக்கரியாக்கி வி-னெ-க கலந்துதேனிலுண்ண சத்திவிக்கல்நீங்கும்.

கக்குவாய்க்கு திப்பிலிச்சூரணம்.

செருப்புபற்பம், திப்பிலி இவைகளைச் சமன்சேர்த்து தேனிலுண்ண கக்குவாய்நீங்கும்.

ஈளை இருமலுக்குச்சூரணம்.

நெல்லி, திப்பிலி, நெற்பொரி இவைகளைச்சமன்கொண்டுசூரணி த்து தேன்நெய்யிற்கலந்துண்ண ஈளை இருமல்போம்.

வாதராட்சதன் சூரணம்.

திரிகடுகு, சன்னராஷ்டகம் திப்பிலி, கெண்டுபராங்கி, லவங்கம், மதுரம், கோஷ்டம், சீரகம், அக்கிராகாரம், லவங்கப்பட்டை, கருஞ் சீரகம், ஓமம் வகைக்குப்பலம்-வ, இரசம், கெந்தகம், பொரித்தவெ ண்காரம் வகைக்கு விடனெ-உ, முன்மருந்துகளைச்சூரணித்துப் பின் ரசம், கெந்தகம், பொறித்தவெண்காரம் இவைகளைக் கல்வத்திலிட்டு ஆட்டிக்கொண்டே ஷை கற்கவகைச்சூரணத்தைக் கொஞ்சம் கொஞ் சமாய் சேகிக்கச்செய்து வெருகடிப்பிரமாணம் தேனிற்கொள்ள மேக ப்பிடிப்பு, சூலை, குடல்வாதம், கைகாலில்வாய்வு, குன்மம் முதலிய ரோகங்கள்விட்டோடிப்போம் பத்தியம்-புளிபுகைபுலால்தள்ளவும்.

அசுவகெந்தி சூரணம்.

இலிங்கம் பலம்-வ, சிறுநாகப்பூ பலம்-உ ஏலம் பலம்-க, மிளகு பலம்-உ, திப்பிலி பலம்-ச, சுக்கு பலம்-அ, அசுவகெந்தி பலம்-கசு இவைகளைச்சூரணித்து திரிகடிப்பிரமாணம் சர்க்கரையிலுண்டு ஆவி ன்பால் உடனருந்த மேகவகைகள், அஸ்திசுரம், வட்டை, மேகபாண்டு, சுவாசகாசம், ஈளை, ஊறல்முதலியவைபோகும். இச்சாபத்தியம்

திராட்சாதி சூரணம்.

தீவ்தாட்சி, பேரீச்சு, மதுரம், ஏலம் சந்தனம், நெற்பொரி, விலாமிச்சுவேர் வகைக்குப்பலம்-உ நெல்லிமுள்ளி, கிராம்பு, லவங் கப்பட்டை, லவங்கப்பத்திரி, தாளிசப்பத்திரி, சிறுநாகப்பூ, வெட்டி வேர், வால்மிளகு, ஜாதிக்காய், கொத்துமல்லி, கோஷ்டம், சீரகம், தாமரைதாது நெய்தற்கிழங்கு, கூகைநீறு, கல்நார், கற்பூரசலாசத்து வகைக்குப்பலம் வ இவைகளைச்சூரணித்து குங்குமப்பூ விரா-க, பச் சைக்கற்பூரம்-விரா-வ ஒக்கச்சேர்த்து சீனிபலம்-அஉ,யுங் கலந்தொன் றுபடுத்தி ஒரு விராகனெடைப் பிரமாணமுண்ண பித்தம்-சய, அக் கினிமந்தம், அரோசிகம், சயம், இருமல், விக்கல், மூத்திரக்கிரிச்சனம், மேகவட்டை முதலியவை நிவாரணம், இச்சாபத்தியம்-அன்றி மேற் கூறிய கல்நாரையும், சலாசத்தையும், தனித்தனி ஆவின்பாலில்நெக வறைத்து புடம்வைத்து நீற்றிச்சேர்த்துக்கொள்ளவும்.

பஞ்சதீபாக்கினிச்சூரணம்.

சுக்கு, மிளகு, திப்பிலி, சீரகம், ஏலரிசி இவைகளைப்பொன்வறு ப்பாக்கிச்சூரணித்து சீனிகலந்து திரிகடிப்பிரமாணம் கொள்ளவும்

அநுபானம்.

தேனிற்கொள்ள வாதநோயகலும், நல்லஜலத்திற்கொள்ள வாய்வுநீடைபோம், வெந்நீரிற்கொள்ள மந்தம்நீங்கி பசியுண்டாம், வெள்ளைசர்க்கரையிற்கொள்ள பித்தநோயகலும், வெண்ணெயிற்கொள்ள உஷ்ணநோய்கள்விட்டோடிப்போம, இச்சாபத்தியம்.

லேகிய வகைகள்

கடுகுலேகியம்.

கடுகு பலம்-உ, மஞ்சள் பலம்-க, அப்பளாகாரம் பலம்-க இதுகளைச்சூரணித்து, பனைவெல்லம் பலம்-ரு, பாகுசெய்துஷெ சூரணத்தைப்போட்டுக்கிண்டி கழற்சியளவுலேகியம்கொள்ள குழந்தைபெற்றவர்கள் வயிற்றில்தங்கிய அழுக்குநீங்கும-இச்சாபத்தியம்.

குங்குமப்பூலேகியம்.

பருத்தியிலை பிடி-க, சீரகம் வி-ளெ-க, மிளகு வி-ளெ-வ, சட்டியிலிட்டுச்சாம்பலாக்கி நிம்பழச்சாறு உழக்குவிட்டுசுண்டக்காச்சி ஏலக்காய், கடுக்காய், திப்பிலி, சுக்குவகைக்குப் பலம்-உ-சேர்த்துச் சூரணித்து ஷெ சாம்பலில்கலந்து குங்குமப்பூ ஒருரூபாயெடைசேர்த்து அரைபடிபன்னீரில் வெள்ளைசர்க்கரைபலம்-கரு-சேர்த்துப்பாகுசெய்து ஷெ மருந்துகளைக்கொட்டிக்கிளறிக்கொண்டே ஆவினெய்பலம்-ம விட்டுக்கலக்கிக் கிளறி இறக்கி தேன் பலம-உ விட்டு கழற்சியளவு சாப்பிட அட்டகுன்மம், அன்னத்துவேஷம், அரோசிகம், கண்ணெரிவு, காலெரிவு, மார்நோய் பித்தஎரிச்சல், சூடு, பித்தம், மேகம், மூலம், கடுப்பு, வெள்ளை, டயித்தியம் முதலியவை நீங்கும்-இச்சாபத்தியம்.

தும்மட்டிக்காய் கடுகுலேகியம்.

தும்மட்டிக்காய்சாறுநாழி, நிம்பழச்சாறுநாழி, வெண்ணொச்சிச்சாறுநாழி இஞ்சிச்சாறுநாழி, வெள்ளுள்ளிச்சாறுநாழி இவைகளை நாலிலொன்றாகக்காச்சி யதில் ஜாதிலிங்கம, காயம், சூதம், கெந்தி. நாய்க்கடுகு மிளகு, மஞ்சள், சுத்திசெய்தவாளம் வகைக்குக்களஞ்சி மூன்றாகப்பொடித்துத்தூவி பழம்புளியதமாகும்வரையிலெரித்துண்ண அட்டகுன்மம், சூலை, பெருப்பாடு, பெருவயிறுமுதலிய ரோகங்கள்விட்டோடிப்போம்-கடும்பத்தியம்.

கண்டாத்திரிலேகியம்.

இஞ்சிபலம்-அ, பொன்வறுப்பாக்கி இடித்துத்தூளாக்கி மிளகு, திப்பிலி தாளிசப்பத்திரி, சிறுநாகப்பூ, ஏலம், சீரகம், ஜாதிக்காய்,

லவங்கம், ஜாபத்திரி, கோஷ்டம், கடுக்காய்,மதுரம்வகைக்குப்பலம்-உ சேர்த்து சூரணித்து தேனிலேபிசைந்து தான்றிக்காயளவுண்ண குன்மம், சனுர்வாய்வு, வயிற்றுவலி, அக்கினிமந்தம், இருமல்முதலியவை போகும்-இச்சாபத்தியம்.

சுக்குலேகியம்

சுக்கு பலம்-ரு, பழச்சாத்திலூறவைத்துலர்த்திமறுபடியும்கீழா நெல்லிச்சாற்றிலூறவைத்து ஓமம் அரிசி பலம்-கவ இவைகளைச் சூரணித்து சர்க்கரைபலம்-எஉ,பாகுகாச்சிபதத்தில் ஷை சூரணத்தைத் தூவி நெய் பலம்-ரு-சேர்த்துக்கிண்டி இறக்கி தேன் பலம்-கவ-விட்டு சுண்டக்காயளவு அந்திசந்திகொள்ள வயிற்றிரைச்சல், உஷ்ணபேதி முதலியவைபோகும், இச்சாபத்தியம்.

மகாகூழ்பாண்டமதனசிந்தாமணிலேகியம்.

கலியாணபூசனிக்காய் சாறுபடி-அ, கறுப்பஞ்சாறு, விழுதிச்சாறு. கதலிச்சாறு, தென்னம்பாளைச்சாறு, கற்றாழைச்சாறு, இஞ்சிச்சாறு, வல்லாரைச்சாறு எலுமிச்சைச்சாறுபால்வகைக்குபடி-உ,ஆவாரம்பட்டைபூவித்து, சீந்தில், சித்தாமுட்டி, வெட்டிவேர், வில்வம், நெல்லி, அசுவகெந்தி, கோரைக்கிழங்கு, நெறிஞ்சில், செந்நெறிஞ்சில், மிளகரணை, சங்கன்வேர், களாவேர், துத்தி, நிலப்பனைக்கிழங்குவகைக்கு பலம்-ரு, துணித்துப் பாண்டத்திட்டு மூன்றுதாணிநீர் விட்டு எட்டிலொன்றாய்வற்றக்காச்சி முன்சாற்றிலூட்டி ஒன்றாயின பின், திரிகடுகு, ஏலம், திரிபலை, வாய்விளங்கம், கோஷ்டம், மதுரம், அக்கிராகாரம், லவங்கப்பட்டை, சடாமாஞ்சில், சிறுநாவல், புன்னைவித்து, பருத்திவித்து, அரத்தை, ஜாதிப்பத்திரி, லவங்கம்,குருசானி ஓமம், கூகைநீறு, சந்தனம், சீரகம், குறுவேர், கொத்துமல்லி, கெஞ்சாயிலை ஜாதிக்காய், தாளிசப்பத்திரி, மாசக்காய், மைசாட்சி, வால்மிளகு, செவியம், அபின். சீந்திற்சக்கரை, பன்னீர்ப்பூ, துளசிவித்து, கஞ்சாவித்து, அத்திவித்து, ஆலம்வித்து, அரசம்வித்து, முருங்கைவித்து, துத்திவித்து பூமிசர்க்கரைக்கிழங்கு,சோம்பு, வெந்தயம்,வில்வப்பழம்,கிழப்பனை பூனைக்காலிவித்து.தாமரைக்கிழங்கு,அசுவகெந்தி தகரை, விசுப்புகோல்வித்து, சிலாசத்து, வேப்பம்பிசின், விளாம்பிசின். முந்திரிகைப்பழம்,மாம்பருப்பு, மாதளைவித்து முள்ளிவித்து, கல்நார், சூரிவித்து,கசகசா, வகைக்குப்பலம்-க இடித்து சூரணித்து சீனிபாகுசெய்து மேற்படிசூரணத்தைப்போட்டுக்கிண்டி ஆவினெய்படிவிட்டுக்கிளறி இறக்கி தேன்பலம்-ம-ஒக்கச்சேர்த்து லேகியமாயின ன்பி இந்நூலிற்கூறியபவளபற்பமும், நாகபற்பமும்வைத்தொருமண்டல

முண்ண கிருணி, அதிசாரம், பித்தவட்டை, அஸ்திசுரம், ஈளை, காசம், சோகை, பாண்டு, காமாலை, அட்டகுன்மம், கபாலச்சூடு, நவமூலம், சுரசூலை, தலைசுழட்டல், சத்தி, இரத்தப்பிரமியம். விக்கல், வலிகிரந்தி, குத்து, வெண்குட்டம், விப்புருதி, நீராம்பல், துடைவாழை, விரைவாதம், சூதகவாய்வுமுதலிய ரோகங்கள்நீங்கி, விந்தூறுங்கேணியாகும்-இச்சாபத்தியம்.

கையாந்தகரைக்கிருதம்.

கையாந்தகரைச்சாறுபடி-௨, பனைவெல்லம் பலம்-ரு-கரைத்துப் பாகுபதமாகக்காய்ச்சி, திரிகடுகு, திரிபலை, திப்பிலிக்கட்டை வகைக்குப் பலம்-௨-சூரணித்து. அடியிற்கூறிய அயச்செந்தூரம் பலம்-க-ஒக்கச்சேர்த்து ஷைபாகிற்கலந்து தேன்பலம்-கரு-விட்டு இளகினபதமாயிறக்கி சுண்டைக்காயளவு அந்திசந்தியுண்ண சோகை, காமாலை, கணச்சூடு, வீக்கம், தேகத்தில் இரத்தம்சுண்டி வெளுத்தல், ஊது காமாலை, பொருமல்முதலியரோகங்கள் நீங்குமென்றறிக. இச்சாபத்தியம்.

அயச்செந்தூரம்.

நிம்பழச்சாற்றில் மூன்றுநாளூறப்போட்ட அயம் பலம்-ரு, கல்வத்திட்டு கையாந்தகரைச்சாறுவிட்டாட்டி யுலர்த்தி சிறுவில்லைகளாக்கி ஓட்டில்வைத்துமூடி மண்சீலைசெய்து முழப்புடம்போடவும்மேற்கூறியதைப்போல் பதின்மூன்றுபுடம்போடச் செந்தூரமாம்.

உடும்பு லேகியம்.

உடும்பு இரண்டை தலை, தோல், குடல், விரல், போக்கியபின் கொத்துமல்லி, சோம்பு, இவைகளைச்சமன்கொண்டிடித்து அரிசியாக்கியதில் பலம்-ய-ஈருள்ளிவிதை ௨ சேர்த்து கெவறைத்து ஷைஉடும்பின்வயிற்றினுள்பூசி காராக்கருணைபலம்-உய-கீழ்மேலிட்டு சட்டியில் வைத்து ஜலம்நிறப்பி தீயிட்டெரிக்க பிட்டாகும், அப்பிட்டைப்பிசைந்து எலும்புகளையிடித்து ஒக்கச்சேர்த்து சிறுவில்லைகளாக வடகஞ்செய்து இரவியில்வைத்து திரிகடுகு, வால்மிளகு; சிறுநாகப்பூ, மதுரம், அக்கராகாரம் ஏலம் லவங்கம், சிறுதேக்கு, ஜாதிக்காய், ஜாதிபத்திரி, சிறுலவங்கப்பட்டை, வாய்விளங்கம், நிலப்பனைக்கிழங்கு, பரங்கிப்பட்டை, வகைக்குப்பலம்-ரு-முள்ளிலவம்பிசின், முளளிவித்து, வகைக்குசேரு-வ, சடாமாஞ்சில், தாளிசம், ஆலம்வித்து, அத்திவித்து, துத்திவித்து, ஆளிவித்து, தேத்தான்வித்து, துளசிவித்து வெள்ளரிவித்து, சட்ஜாவித்து, சந்திசாரணைக்கிழங்கு, வெட்டிவேர், நன்னாரி, சதாவேரி, அசுவகெந்தி, கோஷ்டம், கசகசா, வகைக்குப்பலம்-௨

சூரணித்து மேற்படி உடும்புவடகத்தையும் ஒன்றுபடுத்தி இடித்து சர்க்கரையிற் கலந்து ஆவினெய் வீசை உ-சேர்த்து கிளறி இறக்கி தேன்வீசை-ய-கூட்டி புன்னைக்காயளவு அந்திசந்தி ஒருமண்டலம் கொள்ள மேகரோகங்கள் இருபதுத்தொன்றும் நீங்கி குளிர்ச்சிதந்து தாதுவிர்த்தியுண்டாம் பத்தியம்-காடை, அடைக்கலம், விலாங்கு, முருங்கைப்பிஞ்சு, கத்திரிப்பிஞ்சு சுண்டக்காய், அவரை, புறா, வெள்ளாட்டிறைச்சி, ஆவின்பால், நெய் முதலியவைஆகும், கடுகெண்ணை நீக்கவும்.

பிரண்டைலேகியம்.

பிரண்டைக்கிழங்கு, மருட்கிழங்கு, புளிகருணைக்கிழங்கு, கொடிவேலிவேர், செங்நாயுருவிவேர் வகைக்குபலம் ய, சிறுகநறுக்கிப்பாண்டத்திட்டுப் பதக்குஜலம்விட்டு எட்டொன்றாய்க்காய்ச்சிறக்கி பழஞ்சர்க்கரை பலம்-உ0-சேர்த்துப் பாகுசெய்து கொட்டைநீக்கிய கடுக்காய்-ஈ, திரிகடுகு, சீரகம், கருஞ்சீரகம், சதகுப்பி, விழலரிசி, குடபாலைஅரிசி, கோஷ்டம், நிலப்பனைக்கிழங்கு, லவங்கம், ஆனைத்திப்பிலி, லவங்கப்பத்திரி, சிறுநாகப்பூ, தான்றிக்காய், நெல்லிப்பருப்பு, மரமஞ்சள், ஓமம் வகைக்குப்பலம் க, பிரமியிலைச்சூரணம் பலம்-உ இவைகளைச்சூரணஞ்செய்துஷை பாகிற்போட்டுக்கிண்டிநெய்பலம்-அ, நல்லெண்ணை பலம்-ச-ஒன்றுசேர்த்துக் கிளறி இறக்கி தேன்பலம் ரு-விட்டுக்கலந்து புன்னைக்காயளவுஅந்திசந்தி-உ0-நாளுண்ண மூலம் மூலக்கிராணி, மூலகுன்மம், சதையடைப்பு, மலபந்தம், மூலஇறைச்சல், சரீர்மினைப்பு, யோனி, சதையடைப்பு, மலஜலதாரையில் சதையையுண்ணல், மூலவீக்கம், மூலத்தினவு, மேல்நோக்கியவாய்வு, அக்கினிமந்தம், மூலபாண்டு ஆகியரோகவகைகள் நீங்குமென்றறிக பத்தியம் கைப்பு புளிப்புவகைகள் நீக்கவும்.

ஜாதிக்காய் லேகியம்.

ஜாதிக்காய், கசகசா, முருங்கைப்பிசின், ஆவாரம்பிசின், கோதும்பைநொய் வகைக்குப்பலம்-உ-ஏலம், இலவங்கம், இலவங்கப்பட்டை வகைக்குப்பலம்-உ இவைகளைச்சூரணித்து-ரு-தேங்காய்ப்பாலில்நாட்டுச்சர்க்கரைபலம்-ய-சேர்த்துப் பாகுசெய்து ஷை சூரணத்தைத்தூவிக்கிளறி பதத்தில் நெய்பலம்-ய-விட்டு அலுவாபோல்செய்துஅந்திசந்தி-ய-நாளுண்ண லேபனபுஷ்டியுண்டாம்.

கருணைக்கிழங்கு லேகியம்.

காராக்கருணையை மேல்பரணிசீவி ஆவின்பாலில் வேகவைத்துக்கடைந்து பனைவெல்லப்பாகில்விட்டு நெய்சேர்த்துக்கிளறி பாக்

களவு அந்திசந்தி-ம-நாளுண்ண நவமூலங்களும் விட்டோடிப்போ மென்றறிக.

சிவனார்வேம்பு லேகியம்.

சிவன்வேம்பு ஆள்சுமை-க-கொண்டுவந்து உலர்த்திடித்து நாலு பானையிற் போட்டு தண்ணீர்விட்டு-ந-நாளூறிப்பின் எட்டிலொன் ருய்க்காய்ச்சிறக்கி சங்கம்வேர் விரு-க, துறட்டுமுள்வேர் விரு-க ஒரு பானையில்போட்டு ஜலம்விட்டு மூன்றுநாளூறியபின்முன்போலஎட்டி லொன்ருகக்காய்ச்சிறக்கி ஷை கியாழத்தில்லொன்றுபடுத்தி வேறுபாண் டத்திட்டு ஒருபடியாகக்காய்ச்சி யதில்வெள்ளாட்டுநெய்படி-உ சர்க் கரைபலம்-ம சேர்த்து சுண்டக்காய்ச்சி லேகியபதத்திலிறக்கிகழற்சிக் காயளவு அந்திசந்திமண்டலம்கொள்ள கன்னப்பிளவை, மேகப்படை, மேகரணம் ஊறல், கிரந்திப்புண், வெள்ளை, வெண்மேகம், திமிர் வாய்வு, கீல்வாய்வு, தமரகவாய்வு, பாரிசவாய்வுமுதலிய ரோகங்கள் நீங்குமென்றறிக பத்தியம்-வியாதிகளுக்குத்தக்கதாக வைத்துக்கொள் ளவும்.

தாளிசப்பத்திரிலேகியம்.

தாளிசப்பத்திரி, அரத்தை, வெண்மிளகு, சிறுநாகப்பூ, திப்பிலி, ஆனைத்திப்பிலி; இலவங்கப்பத்திரி, இலவங்கப்பட்டை வகைக்குப் பலம்-க, ஏலம், இலவங்கம், ஜாதிக்காய் வகைக்கு பலம்-வ இவை களைச்சூரணித்து படிஆவின்பாலில் சர்க்கரைபலம்-உம-சேர்த்துப் பாகுசெய்து ஷை சூரணத்தைத்தூவி ஆவினெய்பலம்-ம-சேர்த்துக் கிளறி இறக்கி தேன்பலம்-ரு-கூட்டி புன்னைக்காயளவு காலைமாலை சும-நாளுண்ண இருமல், ஈளை, காசம், சுரம்முதலிய ரோகவகைகள் நீங்குமென்றறிக இச்சாபத்தியம்.

தாதுவிர்த்திக்கு மன்மதலேகியம்.

கருவேலம் வித்தின்பருப்புதூள் பலம்-அ, களிப்பாக்குத்தூள் பலம்-அ, கருவேலம்பிசின் பலம்-ந; ஒருசட்டியில்-உ-படி ஆவின் பால்விட்டு ஏடுசட்டி முன்மாவைக் கீழ்மேலிட்டு நடுவில் பிசின் வைத்துமேல்மூடி அடுப்பில்வைத்து சிறுதீயாயெறித்து அரைபடி பால்சுண்டியசமயத்தி லிறக்கி முன்மருந்தைக்கொட்டி நன்ருய்ப் பிசைந்து ஷை பாலில்-கரு பலம் சர்க்கரைபோட்டு பாகுபதத்தில் ஜாதிக்காய், ஜாபத்திரி, ஏலம், இலவங்கம் வகைக்கு பலம்-க, தூள் செய்துபோட்டுக்கிளறி நெய் பலம்-எஉ விட்டுக்கிண்டிஇறக்கி தேன் பலம்-ந உ விட்டு லேகியம் பாக்களவுசெய்து மண்டலம்கொள்ளமேக

ரோகங்கள்நீங்கி வீரியவிர்த்தியுண்டாம், பத்தியம் - கடுகெண்ணை, மீன், கருவாடு முதலியவைநீக்கவும்.

{ கிருஷ்ணலீலாவிநோதக் குளிகையென்னும் தாதுவிர்த்தி லேகியம். }

கியாழவகைகள்.

தனியா படி-வ, பேய்ப்புடல், வில்வம், நெல்லிவேர்க்கு, சிறுதாமுட்டி, பேராமுட்டி நெல்லுபொரி, கோரைக்கிழங்கு, விளாவோடு, நிலவாகை வகைக்கு பலம்-க, நான்குபடிஜலம்விட்டு ஒருபடியாகச் சுண்டக்காச்சவும்

சூரணத்தினுசுகள்.

சுக்கு, மிளகு, வெண்மிளகு, சீரகம், கருஞ்சீரகம், ஏலரிசி,திப்பிலி, ஜாதிக்காய், லவங்கம், லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, குராசானிஓமம், ஜாதிபத்திரி, மராட்டிமொக்கு, வாய்விளங்கம், அக்கிராகாரம், அதிமதுரம், சந்தனம், கோஷ்டம், மோடி,தான்றிக்காய்,நெல்லிக்காய், சூரத்துநிலவாகை, சிவதைவேர், சோம்பு, தக்கோலம்,கடுக்காய்ப்பிஞ்சு, வால்மிளகு, தாளிசப்பத்திரி, அதிவிடயம், சாஜிரா, ரோஜாப்பூ, சூரியகாந்தி, மதனபீசம், வெள்ளைச்சார்வளைவேர்சிந்தில், சர்க்கரை, செண்பகப்பூ வகைக்குப்பலம்-க,பரங்கிச்செக்கைபலம்-ரு, நன்னாரி பலம்-உய், கெஞ்சாவித்து அத்திவித்து, பூனைக்காலிவித்து, முருங்கைவித்து, சப்ஜாவித்து, துளசிவித்து துத்திவித்து,பேதாணவித்து வகைக்கு பலம் க, ஊமத்தைவித்து, ஆலம்வித்து, அரசன்வித்து, நீர்முள்ளிவித்து, விசுப்புகோல்வித்து, கார்போகவித்து,காட்டுவாழைவித்து ஈத்தைச்சூரிவித்து,ஈருவுளிவித்து,வெட்பாலைவித்து. சமுத்திரஜோகிவித்து, முருக்கன்வித்து, பீஜபன்வித்து, வெள்ளரிவித்து ஜாப்ராவித்து, ஆவாரம்வித்து அக்ரோட்வித்து, தம்டோஜிவித்து, பிஸ்த்தோல்வித்து,நிலப்பூசனிவித்துவகைக்கு பலம்-உ தண்ணீர்மிட்டான்கிழங்கு,கன்னியாகுமரிக்கிழங்கு,பூமிசர்க்கரைக்கிழங்கு நிலப்பனைக்கிழங்கு, கோரைக்கிழங்கு, அமுக்கராகிழங்கு,ரேவல்சின்னிக்கிழங்குவகைக்குபலம்-க இவைகளைச்சூரணிக்கவும்பாதாம்பிசின், காட்டுவாபிசின், வேப்பன்பிசின், இலவம்பிசின், விளாம்பிசின் முருங்கைப்பிசின்,வேலம்பிசின், ஆலம்பிசின்,ஆவாரம்பிசின், சாலாம்பிசின் வகைக்கு பலம் உ இவைகளை மேற்கூறிய கியாழத்தில்-அ-ஜாமமூறவைத்து கல்வத்திலறைத்தறைத்துக் கியாழத்திற்கலக்கி வடிகட்டி திப்பியை அப்புறப்படுத்தி-ரு-படி ஆவின்பால் ஒக்கச்சேர்த்து அடுப்பேற்றி சற்றுகொதிக்கவைத்து பனவெட்டு பலம்-உய-கறைத்துப்

பாகுபதத்தில் முன்சூரணத்தைத்தூவிக்கிளறி நெய் பலம்-உ௰-சேர்த்து நீர்வற்றமெழுகுபதத்திற் கிண்டி இறக்கி தேன்பலம்-௰-விட்டுப் பின்வெண்காரபற்பம், சிங்கிபற்பம், பலகறைபற்பம், கல்நார்பற்பம், சலாசத்துபற்டம்,நாகபற்பம் வெள்ளிபற்பம் வகைக்கு பலம்-வ-சேர்த்து ஒன்றாய்த்திரட்டி புன்னைக்காயளவு அந்திசந்திமண்டலம்கொள்ள மேகச்சூடு, பித்தவாய்வு, வெள்ளை, மதுமேகம் காசம், தந்திமேகம், இரத்தவெள்ளை, நீர்ச்சுருக்கு, எலும்புருக்கி, நீரடைப்பு, கல்லடைப்பு, சதையடைப்பு, மலச்சிக்கல், அரைகடி சிரங்கு,கிரந்தி, கபாலச்சூடு, பீனிசம், கண்ணருகல், குத்துவாதம், சத்தி, நாவரட்சி, சுக்கில்வாய்வு, மூர்ச்சைமுதலிய மேகநோய்கள்நீங்கி தேகவாட்டமின்றி சுக்கிலமீறி மகாவிஷ்ணுவாகிய கிருஷ்ணாவதாரனைப்போலமிகு சுகபோகங்களை அநுபவிக்கலாமென்றறிக, அன்றி மேற்கூறியலேகியத்தை உண்டவர்களுக்கு ஒருக்கால் மலச்சிக்கல்நேரிடில் குல்குந்து சமன்கூட்டியுண்ணவும், பத்தியம்-விலாங்கு, காடை அடைக்கலம், உடும்பு, முயல், கோழிமுட்டை, ஆட்டிறைச்சி, முருங்கைப்பிஞ்சு, முருங்கைப்பூ, விளாம்பழம், நெய், சீனி, சற்கண்டு; ஆவின்பால் பொன்னாங்கண்ணி, மணத்தக்காளி, வெந்தயக்கீரை, மூளைக்கீரை, பருப்புக்கீரை, அத்திக்காய், அவரைக்காய், வெண்டைக்காய்முதலியவை சேர்க்கவும். கடுகெண்ணை, மச்சமுதலியவை நீக்கவும், அன்றி மேற்கூறியலேகியத்தையுண்டபின் சாரப்பருப்பு, பாதம்பருப்பு, திராட்சப்பழம், பேரீச்சன், கற்கண்டு, தேன் இவைகளைச் சமன்கொண்டு மட்சாடியிலிட்டு சூரியபுடம் வைத்துவைத்து கொஞ்சம் புசிக்கவும் மிகநன்று.

தாதுவிர்த்திக்குப் பாயாசங்கள்.

ரூமஸ்த்திக்கு விரா-க, நீர்முள்ளிவித்து விரா-உ, கசகசாவிரா-ங இவைகளைப்பொடிசெய்து ஆவின்பாலில்காய்ச்சி-௰-நாளுண்ண தாதுவிர்த்தியுண்டாம்.

ஷை உ - வது.

ரூமஸ்த்திக்கு, சாலாமிசர் சபேதாமிசுறி வகைக்கு விராெ-க பொடித்து ஆவின்பாலிலிட்டுக் காய்ச்சி-௰-நாளுண்ண விந்தூறுங் கேணியாகும்.

ஷை ங - வது.

ஆவின்பால் படி-க, முருங்கைப்பூ பலம்-௰, முருங்கைப்பிசின் பலம்-ரு, ஜாதிக்காய் பலம்-க, சுத்திசெய்த கஞ்சாதூள் விரா-உ-சேர்

த்து வண்டக்காய்ச்சி லேகியஞ்செய்து கொட்டைப்பாக்களவு காலை மாலை-ம-நாளுண்ண சுக்கிலவிருத்தியுண்டாம்.

ஷை ௪ - வது.

முருங்கைஇளம்பிஞ்சு பிடி. க பசும்பாலுழக்கில் போட்டுக்காச்சிக் கடைந்துண்ண மேகரோகங்கள்நீங்கி வீரியவிருத்தியுண்டாம்.

ஷை ரு - வது.

முருங்கைப்பூ பிடி-க, வெள்ளெருக்கம்பூ பிடி-௨-அரைபடி ஆவின்பாலில் போட்டுக்காய்ச்சியுண்ண தாதுபுஷ்டியுண்டாம்.

எண்ணை வகைகள்.

மேகவியாதிகளுக்கு நிலக்கடம்பு எண்ணை.

விளக்கெண்ணை படி-க-ல் நிலக்கடம்பையிலை, சங்கிலை, சங்கங்குப்பி, சிறுசின்னி, நுணா, குமரி, கோழிஅவரை, வெங்காயம் சாறு வகைக்கு படி-அரைக்கால், கழுதைவிட்டைப்பால், புங்கம்வேர்சிவினபால் வகைக்குப்படி அரைக்கால் சேர்த்து பச்சை செங்கத்தாரிப்பட்டை சித்திரமூலவேர்ப்பட்டை வகைக்கு பலம்-வ ஆவின்பாலில் அரைத்துக்கூடப்போட்டு மஞ்சிட்டிவேர், பாங்கிச்செக்கை, கார்போகஅரிசி வெட்பாலையரிசி, வகைக்கு பலம்-வ சூரணித்து ஷை எண்ணையிலொன்றுபடுத்தி கடுகுபதத்தில் காச்சியிறக்கி வடிகட்டி ஜாதிலிங்கம் விரா-க, ஆர்க்கப்பொடித்துப்போட்டு உச்சிக்கரண்டி ஒன்றுவீதம்-எ-நாள் சாப்பிட மேகப்படை, மேகத்தடிப்பு, மேகச்சொரி, சிரங்கு, மேகவாய்வு, சூதகவாய்வு, கட்டி, புண், கிரந்தி, துணைக்கிரந்தி முதலியவைநீங்கும். பத்தியம-இறைச்சி, கத்திரிப்பிஞ்சு, முருங்கைப்பிஞ்சு, வண்டக்காய், அவரை, துவரை, ஓலைவாளைக்கருவாடு முதலியவைஆகும், சுட்டபுளி, வறுத்தவுப்புகூட்டவும், நெய்தாளித்துக்காம்.

மேகத்தினுலிளைத்தவர்களுக்கு நல்லெண்ணை.

நல்லெண்ணை படி-௨, பொடுதலைச்சாறு படி-௨, தேங்காய்ப்பால்படி-௨, வடிகட்டி வெந்தயம் பலம்-௨௨ ஊறவைத்து ஷை பால்விட்டரைத்து பனவெட்டு பலம்-௨௨-சேர்த்துக்கரைத்து ஷை எண்ணையுடன்கலந்துகாய்ச்சிப்பதத்திலிறக்கிகடுகுடன்வைத்துக்கொண்டு அந்திசந்திபாக்களவு கடுகும்தின்று உச்சிக்கரண்டியளவு எண்ணையும் சாப்பிட்டுவர மேகச்சூடு, மேகவாய்வு, சொரி, கைகாலசதி முதலியவைநீங்கும், பத்தியம்-புளி, புகை, புலால்நீக்கி நெய்தாளித்திடும்

சேர்க்கவும், மிளகாய்க்குப்பதில்மிளகும, புளிப்புக்குபதில் எலுமிச்சம்பழமும் சேர்க்கலாம், மறுபத்தியமானபிறகுஸ்நாநஞ்செய்யவும்.

மேகவியாதிகளுக்கு தேங்காய் எண்ணே.

ஒருதேங்காய்த்திருவி பால்பிழிந்து இரசகற்பூரம் விரு க-பொடி செய்து பாலிற்போட்டுக்காய்ச்சிப் பதத்தில் எண்ணேயை வடித்துக் கொண்டு கடுகில்பனைவெல்லம் பலம்-க, கூடப்போட்டுநெகவரைத்து தாதுளங்காய்ப்பிரமாண முண்டைசெய்து காலமே ஒவ்வொரு உண்டையும் பணவெடை எண்ணேயுமுண்டுவர மேகவாய்வு, மேகவூறல், சிரங்கு, நுணுக்கிரந்தி, உஷ்ணகாந்தல் முதலியவைநீங்கும்-இச்சாபத்தியம்.

சகலமேகங்களுக்கு சஞ்சீவிஎண்ணே.

பிரமி, காட்டுமல்லிகை, கொவ்வைத்தண்டு,பொடுதலே,அகத்தி, செருப்படை, பசுமுன்னே,முடக்கொத்தான், கொட்டைக்கரந்தி,சங்கஙிலை, சங்கங்குப்பி, கழற்சி, கம்மாறுவெற்றிலை, கருநொச்சி, வெண்ணொச்சி, வல்லாரை, சிவனைவகைக்கு சாறுபடி ௨, வெங்காயம், நிம்பழம், வகைக்குச்சாறுபடி ௨, கழுதைவிட்டைப்பால் தேங்காய்ப்பால் வகைக்கு படி ௨, விளக்கெண்ணேபடி-உ இவைகளையொன்றுபடுத்தி சன்னலவங்கப்பட்டை, வேம்பாடம்பட்டை, பரங்கிப்பட்டை, சிரகம், பெருஞ்சீரகம், கருஞ்சீரகம், வெந்தயம் வகைக்கு பலம்-க, கல்நார், கல்மதம் வகைக்கு பலம்-௨ ஆவின்பாலிலாட்டி ஷை எண்ணேயிற்கலக்கிகாச்சி மெழுகுபதத்தில் குராசாணிஓமம், கடுகுரோகணி வகைக்கு பலம் க-சேர்க்கவும், பேதியாகவேணுமென்ருல் வாளம் சேர்க்கவும், இந்தஎண்ணேயை உச்சிக்கரண்டிவீதம் எ நாள்கொள்ள மேகக்கிரந்தி, மூலவாய்வு, வட்டை, மேகச்சூடு இவைகள்நீங்கும்,பத்தியம் வியாதிகளுக்குத் தக்கவைசேர்க்கவும் ஷை எண்ணேயைக்காய்ச்சி இறக்கும்போது செம்பூராய்பட்டை தூள்செய்துபோட்டிறக்கவும்.

இடி எண்ணே.

சித்தாமணக்கெண்ணே படி க, இரசம் பலம் வ காம்புபோக்கின பாவட்டையிலை பலம் உ ௦, கொவ்வையிலை பலம் உ ௦, பச்சைவெத்திலை பலம் உ ௦, ஓமம் பலம் ௦, மாவுரலிற்போட்டு இடித்து இரசத்தையும் கூடவிட்டு பூணில்லாவுலக்கையால் நாலுஜாமம்ஜாடி மரத்துடுப்பால் துராவி உச்சிக்கரண்டியளவு எ நாள் உட்கொள்ள படர்தாமரை, நுணுக்கிரந்தி, மருகிரந்தி, கைகறுப்பு, கண்டமாலை, பவுத்திரமேகம், இரணமேகம்,ஊறல்முதலியவைபோகும், பத்தியம் கடும்

பத்தியம், மறுபத்தியம் கழிந்தபிறகு விளக்கெண்ணெயில் ஸ்நானஞ் செய்யவும்.

கல்லுருவி எண்ணெ.

விளக்கெண்ணெ படி க ல், கல்லுருவிப்பூண்டு சமூலமிடித்து தேங்காயளவு கலக்கிக்காய்ச்சிவடித்து ஆழாக்கெண்ணெயை எ நாள் கொள்ள மேகவாய்வுகள், கைகால்பிடிப்பு, வீங்கியிருத்தல், தாழுங் கால்முதலியரோகவகைகள்நீங்கும், பத்தியம் முருங்கைப்பிஞ்சு, அவரைப்பிஞ்சு, கத்தரிப்பிஞ்சு முதலியவையாகும், வறுத்தவுப்பு கூட்டவும், மறுபத்தியமாயினபின் ஸ்நானஞ்செய்விக்கவும்.

குமரி எண்ணெ.

விளக்கெண்ணெ படி க ல் குமரிச்சாறுபடி ૭, ஆவின்பால் படி ૭ கலந்து சீரகம், ஏலம் கிராம்பு, மதுரம், யாசக்காய்,சோஷ்டம்,சுக்கு வகைக்கு பலம் அரைக்கால். வெந்தயம் பலம்-வ, ஓரிலைத்தாமரை பலம் உ, இவைகளைப் பசும்பாலவிட்டரைத்து ஷ எண்ணெயிற் போட்டுக்காய்ச்சிப் பதமாகுமுன் பேயன்வாழைப்பழம் கரு துண்டு துண்டுகளாக்கி எண்ணெவடிக்கிற ஏனத்திற்போட்டு பதத்தில் எண்ணெயை வடித்துக்கொண்டு கரண்டியளவு பிள்ளைகளுக்குத்தக்கவை கொடுக்க சொறி, கரப்பான், சிரங்குபோம் இச்சாபத்தியம்.

குளிர்ச்சிக்கு எண்ணெ.

விளக்கெண்ணெ படி க ல் ஓரிலைத்தாமரைச்சாறுபடி ૭, ஈரவெங்காயச்சாறுபடி ૭, எலுமிச்சம்பழச்சாறுபடி அரை,கத்தாழஞ்சோறு படி அரை, வெந்தயம் பலம் ௰, அரைத்துக்கரைத்துக்காய்ச்சி பதத்தில்வடித்துக் கரண்டியளவுசாப்பிட ஊஷ்ணகாந்தல், மேகச்சூடு முதலியவைபோகும் இச்சாபத்தியம்.

கொட்டைப்பாக்கெண்ணெ.

கொட்டைப்பாக்கு ௱ சீவி இரண்டுபடி ஜலம்விட்டு கால்படியாகக்காய்ச்சி இறுத்துக்கொண்டு விளக்கெண்ணெபடி அரை, வல்லாரைச்சாறுபடி அரை. கூடவிட்டு எரித்து பதத்தில்வடித்து பிள்ளைகள் பெரியவர்களுக்கு தக்கதுகொடுக்க கணச்சூடுதணிந்து சொறி சிரங்கு முதலியவைநீங்கும், பத்தியம் புளி, புலால்நீக்கவும்.

சீதஇரத்தக்கழிச்சலுக்கு எண்ணெ.

விளக்கெண்ணெ படி க ல் கத்தாழஞ்சாறு, காணிச்சாறுவகைக்குபடி அரை கலந்து வெங்காயம் பலம் உ௰ அறிந்துபோட்டு சீரகம

பலம் உ தூள்செய்து ஷை எண்ணெயிலொன்றுபடுத்தி காச்சி வெங்காயம் சிவந்தபதத்திலிறக்கி பெரியவர்களுக்கும், சிறுவர்களுக்கும் உச்சிக்கரண்டிவீதம்-எ நாளுட்கொள்ள சீதக்கழிச்சல், இரத்தக்கழிச்சல், ஊஷ்ணக்கழிச்சல், மூலக்கழிச்சல் முதலியவைபோகும், இச்சா பத்தியம்.

நிம்பழஎண்ணெ.

சித்ராமணக்கெண்ணெ புதுவைபடி இரண்டரை கத்தாழஞ்சாறு, தேசிச்சாறு, வெங்காயச்சாறு வகைக்குப்படி அரையே அரைக்கால், கடுக்காய்த்தோல் பலம் ருவ, சன்னலவங்கப்பட்டை, லவங்கம், மதுரம், வால்மிளகு, கருஞ்சீரகம், கோஷ்டம், சிறுநாகப்பூ வகைக்கு பலம் அரை, சோம்புபலம் அரையே அரைக்கால், வெந்தயம் பலம் அரையே அரைக்கால், ஜாபத்திரி விரா-க, இவைகளை முன்சாறுவிட்டறைத்து எண்ணெயிற்கறைத்து-கூ-நாள் சூரியபுடம்வைத்து பிறகு காய்ச்சி மெழுகுபதத்தில்வடித்து கரண்டியளவு எ நாளுண்ண மூலச்சூடு, கணச்சூடு, கபாலச்சூடு முதலியவைநீங்கும் இச்சாபத்தியம்.

குழந்தைகளுக்கு மாந்தஎண்ணெ.

விளக்கெண்ணெபடி க ல் இண்டைக்கொழுந்து, வெள்ளறுகு, உசிலம்பட்டை, வெள்ளைப்பூண்டு, மஞ்சள்வகைக்கு எலுமிச்சங்காயளவறைத்துக்கறைத்து தும்மட்டிக்காய் தோல்விரைத்தள்ளி பாதியில்லையில்லையாயறிந்துபோட்டு கடுகுபதத்தில்காய்ச்சிவடித்து பிள்ளைகள்பலத்துக்கேற்ற அளவுகொடுக்க சகலமாந்தங்களும் விட்டகலுமென்றறிக, பத்தியம் புளி, புலால்நீக்கவும்.

தேங்காய் எண்ணெ.

வெள்ளறுகு சாறுபடி க, புங்கம்பால்படி க, தேங்காய்ப்பால் படி க, தேங்காயெண்ணெ படி அரை இவைகளை ஒருங்குசேர்த்து கடுகுரோகணி பலம் க, கம்மாறு வெற்றிலைக்காம்பு பலம் க, சுத்தி செய்தவாளம் விரா உ அறைத்து ஷை எண்ணெயிற் கலக்கி கடுகுபதமாய்க்காய்ச்சிறக்கி நீராகாரத்தில் ஒருதுளிமுதல் பலத்துக்கேற்றதுளிகள்விட்டு சாப்பிட மிகுசுகமாகபேதியாகி வெள்ளை, இரணம், கிரந்தி முதலிய மேகநோய்கள்நீங்கும், அன்றிகெற்பந்தரித்தமுதல் ஒன்பது மாதவரையில் மாதமாதந்தவராமற்கொடுத்தால் போதுகாலத்தில் மிகு கஷ்டமின்றி பிள்ளையும்பிறந்து அப்பிள்ளைக்கு புண், சிரங்கு, செவாப்புமுதலிய ரோகங்களணுகியிரா து ஷை எண்ணெ கெற்பஸ்திரீகளுக்கும் மேகங்கண்டவர்களுக்கும், முக்கியமானவையும், அநுபவமாயுங் கண்டெழுதியதென்றறிக இச்சாபத்தியம்.

கணத்தெண்ணெ.

சித்தாமணக்கெண்ணெ படி-க-ல் முசுமுசுக்கை குருவிச்சுபூண்டு, வல்லாரை, நரிபயத்தம், கணப்பூண்டு, கற்றாழைமடல், அகத்தியிலை, வெங்காயம் வகைக்குச்சாறுபடி-வ-சேர்த்து கடுக்காய் பலம் ஒன்ணரையேஅரைக்கால், கருஞ்சீரகம் பலம்-க, துணித்துப்போட்டு வெந்தயம் பலம்-க, சித்தரத்தை பலம்-க, மற்றையமூன்றுமருந்தைஅறைத்துப்போட்டுக்காய்ச்சி மெழுகுபதத்தில்வடித்துக் கரண்டியளவாய்க் கொடுக்கவும், இச்சாபத்தியம்.

வெள்ளெண்ணெ.

ஏலம் லவங்கம், சுக்குவகைக்கு விரா உ சூரணித்து சித்தாமணக்கெண்ணெ உழக்கில்கலந்து பூரம்-விரா-க, பொடித்துப்போட்டு உச்சிக்கரண்டிவீதம்-எ-நாளுண்ண சூலை, மாந்தம், வாய்வு கைகால் பிடிப்பு, வெள்ளைமுதலியரோகங்கள்நீங்கும், கடும்பத்தியம்-மேற்கூறியசூரணத்தையும், பூரத்தையும் ஷை எண்ணெயைவிட்டு கல்வத்தில் நெகிழவறைத்துவறைத்து கலக்கிக்கொள்ளவும்.

இரசகற்பூரஎண்ணெ.

ஆமணக்கெண்ணெ வீசை-க, ஏலம் விரா ந, லவங்கம் விரா-க, சுத்தித்தவாளம் விரா-க, இரசகற்பூரம் விரா கஉ இவைகளை செம்பருத்திச்சாறு உழக்காலாட்டி ஷை எண்ணெயிற்கறைத்து நாடோறும் சூரியபுடம்வைத்து சிறுகரண்டியளவு காலையிலுண்டு தத்தியிலையும் வெந்தயமும் சிவக்கவறுத்து கியாழமிட்டு மாலையிற்கொள்ள மாந்தம், பிடிப்பு மேகவூறல்கள்,கீல்வாய்வுமுதலியவைநீங்கும், கடும்பத்தியம்.

குழம்பு வகைகள்.

விரோசனத்துக்கு பவழக்குழம்பு

ஜாதிலிங்கம், வெண்காரம் வகைக்கு விரா-உ முத்துக்சொட்டைபருப்பு விரா-ச, சுத்திசெய்தவாளம் விரா-அ இவைகளையறைத்துக் குன்றியளவுண்டைசெய்து மாத்திரை ஒன்றையுண்டு குளிர்ந்த ஜலம் உடனே அருந்தபேதியாகும், வெந்நீரருந்தபேதிகட்டும். வாதநோயகளும், இச்சாபத்தியம்.

பஞ்சசூதக் குழம்பு.

வீரம், இரசகற்பூரம், ஜாதிலிங்கம், இரசச்செந்தூரம், சுத்திசெய்த வாளம்வகைக்கு விரா க இவைகளை உள்ளித்தயிலத்தாலாட்டி

மிளகளவுண்ண சூதகவாய்வு, உதிரச்சிக்கல்முதலியவைநீங்கும், வறுத்தஉப்பு, சுட்டபுளிகூட்டவும்.

சேத்துமக் குழம்பு.

திரிகடுகு, திரிபலை, தேத்தான்விரை, சீரகம், மதுரம், இந்துப்பு, அசுமோதகம், சின்னிவிரை, முத்தக்காசு, வெட்டிவேர், சிறுவழுதிலைவேர், நன்னாரிவேர், தூதுவளைவேர் வகைக்குகழஞ்சி-க, இவைகளைச் சூரணித்து தேன்விட்டுக்கிளறி கழற்சியளவு இருபோதுண்ண இருமல், சுவாசம், சேத்துமநோயகலும், இச்சாபத்தியம்.

இந்துப்புக்குழம்பு.

இந்துப்பு, காயம் வெண்காரம், சுக்குவகைக்கு பலம்-வ, முருங்கைவேர்ப்பட்டை இடித்துப்பிழிந்த சார்விட்டு நன்றாயறைத்தபின் கொஞ்சம்தேன்விட்டறைத்து களாக்காயளவுஅந்திசந்தியுண்ணவாய்வு சூலை, குன்மவாய்வு, மலவாய்வுமுதலியவைநீங்கும், இச்சாபத்தியம்.

சண்டமாருதக்குழம்பு.

ஜாதிலிங்கம், அரிதாரம், மனோசிலை, இரசகற்பூரம், கருநாபி, வெண்காரம், கெவுரிவகைக்கு விரா-உ, இந்தசரக்குகளை வெவ்வேறு சட்டியில்வைத்து கொட்டைக்கரந்தைசாற்றாலாவது சம்டழச்சாற்றாலாவது சுருக்கியந்து கல்வத்திட்டு சுத்திசெய்தவாளம் விரா-௰சு ஒக்கச்சேர்த்து வால்மிளகு, குராசானிஓமம், கண்டத்திப்பிலி அரத்தை, கடுக்காய், தானிக்காய், கடுகு, சுக்கு, கடுகுரோகணி, கிராம்பு, பெருங்காயம், கஸ்தூரிமஞ்சள் திப்பிலி, திப்பிலிக்கட்டை, ஆனைத்திப்பிலி, ஓமம், சிறுநாகப்பூ, வாய்விளங்கம், கோஷ்டம், ஜாதிக்காய் வகைக்கு விரா-ச சூரணித்து ஷை மருந்தில்கலந்து ஒந்துப்பு விரா-ச கூடச்சேர்த்து திருகுகள்ளிப்பால், கொடிவேலிக் கியாழம் சமன்கூட்டி ௰உ-ஜாமமாட்டி சிமிழ்தனிலடக்கஞ்செய்யவும்.

அநுபானமும் தீரும்வியாதியும்.

மேற்கூறிய சண்டமாருதக்குழம்பில் மிளகுப்பிரமாணம், அரத்தை சுக்குசூரணத்தில் வைத்துண்ண சுரங்களும், கிராம்பு, திப்பிலி, இஞ்சி, மாவிலிங்கப்பட்டை, காட்டாமணக்கு, வெண்ணொச்சிவேர் இவைகளைஅறைத்து சுரசஞ்செய்து ஷை மருந்தைத்தீட்ட சன்னிபதின்மூன்றும், கடுக்காய்க்கியாழத்தில் இருமலும், தழுதாழை, வெண்ணொச்சிச்சாற்றில் வாதநோய்களும், தூதுபத்திரி, கண்டங்கத்திரி, ஆடாதோடை, சித்தரத்தை, சிறுகாஞ்சோரி, திப்பிலி, கடுக்காய்சமன்கொண்டிடித்து கியாழமிட்டு ஷை மருந்தைவைத்துண்ண

சயரோகமும், பழச்சாற்றிலும், வெள்ளாட்டுப்பாலிலும், கரிசாலைச் சாற்றிலும் மிளகுநீரிலும்வைத்துண்ண இருமல்,பித்தசோகை,காமாலைமுதலியரோகமும், நீர்முள்ளிச்சாற்றில் நவாச்சாரத்தைக்கலந்து ஷை குழம்பைவைத்துண்ண மகோதரம், நீராம்பல், பெருவயிறு, சோகை, பீலிகை, கவுசை, மாந்தம், வீக்கம் முதலிய ரோகவகைகள் நீங்கும் இன்னும் அநுபானமறிந்துதாக்கஅநேகவியாதிகள்நீங்குமென்றறிக. பத்தியம் வியாதிகளுக்குத்தக்கதாகசெய்யவும்.

தயில வகைகள்.

கெந்தகத்தயிலம்.

அமர்சிலைகெந்தகம் பலம்-ரு, வெடியுப்பு பலம்-க, சாரம், வீரம் வகைக்குப்பணவெடை-க, அரிதாரம் பணவெடை-ரு-கல்வத்திலிட்டு ஆவினெய்யால் ஒருஜாமமாட்டி வெள்ளைச்சீலையில்பரவப்பூசி திரித்து கதிர்கம்பியில் கோர்த்துக்கொளுத்தி அடியில் பீங்கானிவைக்க தயிலமிறங்கும். தயிலத்திற்பணவெடை எடுத்து பரங்கிச்செக்கைச் சூரணத்தில்வைத்து சீனிநெய்கூட்டி பத்துநாளுண்ண குட்டம், சயம், குன்மம், சூலை, வலி, இரணம், வெள்ளை, மேகவாய்வு, தமரகவாய்வு, பித்தவாய்வு, சுக்கிலவாய்வு கருமேகம், சொரிவாதம், கைகால்பிடிப்பு முதலியரோகங்கள்நீங்கும், இச்சாபத்தியம்.

வேறு கெந்தகத்தயிலம்.

அமர்சிலைகெந்தகம் பலம்-அ, வெள்ளைச்சார்வளைவேர் இடித்து சார்பிழிந்து ஷை கெந்தகத்தை-அ-ஜாமம்மைபோலாட்டி சுண்டைக்காயளவு குளிகைசெய்து நிழலுலர்த்தி புட்டியிலிட்டு புட்டிவாய்த்தெரிய மண்சீலை ஏ-செய்து புட்டிவாயில் மயிரடைத்து ஒரு சட்டியின் அடியில் புட்டிவாய்க்குச்சரியாய்த்தமரிட்டு புட்டியைக்கவிழ்த்து துவாரத்தில்வைத்து சுற்றிலும் மணல்கொட்டி மேலும் நாலுவிரற்கடைஉயரம் மணலும் கொட்டி-உமி-எருவு அடுக்கி நாலுபுரம் கீழேகல்வைத்து அதற்குமேல் ஷை சட்டியைவைத்து கிழ்பீங்கானைவைத்து தீயிடத் தயிலமிறங்கும், இறங்கியதயிலத்தில் பணவெடை கீழ்க்குறித்தபரங்கிப்பட்டை பதங்கத்தில்வைத்துண்ண புண், கிரந்தி,மதுமேகம், பாண்டு, மகோதரம்,வெள்ளைமுதலியரோகங்கள் நீங்குமென்றறியவும், இச்சாபத்தியம்.

பரங்கிப்பட்டைபதங்கம்.

பரங்கிப்பட்டை. பலம்-ரு,பொடிபொடியாய்க்கண்டமாக்கி,வேசரியின்லத்திச்சாற்றிலும், மேனிச்சாற்றிலும், பொடுதலைச்சாற்றிலும்,

கையான்சாற்றிலும், குப்பிச்சாற்றிலும் தனித்தனிப்பிசரி உலர்த்தி நெல்லிகெந்தி பலம்-க, இரசம் பலம் ௨, லிங்கம் பலம்-௨ பொடித்துக்கூடச்சேர்த்து சட்டியிலிட்டு மேலேவேறுசட்டிவைத்து சிறிய தமர்கள்போட்டு அதற்குமேல் வேறொருசட்டிகொண்டுமூடிஇரண்டு சட்டிகளின்வாய்புரம் மண்சீலைவலுக்கச்செய்துஅடுப்பேற்றிஜாமம்-க-எரித்து ஆரவிட்டெடுத்துச் சூரணிக்கவும், இவைகளிரண்டு மொரு தொடர்.

அன்றி மேற்கூறிய கெந்தகத்தயிலங்களை மூக்கரையன், அண்ணுவிற்புண்ணு, மேகஇரணம், கொறுக்கு, மேகப்படைமுதலியவைகளுக்கு மேலும்பூசகுணமாகும்.

மகாசந்தனாதித்தயிலம்.

பொன்னாங்கண்ணி, மயிர்மாணிக்கம், முசுமுசுக்கை, வல்லாரை, கரிசாலை, செங்கழுனி, கற்றாழை, பாலை, சிறுகீரை, தாழை, பழம்பாசி, தண்ணீர்மிட்டான், தாமரை, வாழைக்கட்டை, நெல்லிக்காய், நெரிஞ்சில், கீழ்க்காய் வகைக்குசாறுபடி அரைக்கால், செவ்விளநீர், ஆவின்பால் வகைக்குப்படி-வ, நல்லெண்ணெ படி-க இவைகளை ஒன்றுபடுத்தியபின் பேராமுட்டி, சித்தாமுட்டி, சந்தனம், வெட்டிவேர், தேவதாரி, அகில், செம்பூராம்பட்டை, முன்னை, கூவிளை, மஞ்சிட்டி, கோரைக்கிழங்கு, மருக்கொழுந்து, ஓரிலைத்தாமரை, மல்லிகைக்கொடி, ஆலம்விழுது நன்னாரி, கூந்தல், நிழல்நாகல், குமுளம் வேர், பற்பாடகம், சீந்தில், விலாமிச்சு, சிறியாணங்கை, நீர்பூலா, அமுக்கரா, விளாவேர், சிறுவாகை வகைக்கு பலம்-ம, உலர்த்தியெடுத்திடித்துப்பானையிலிட்டு-அ-படி ஜலம்விட்டு அரைபடியாகச் சுண்டக்காய்ச்சிறுத்தூஷி எண்ணெயிற்கலக்கி சீரகம், கற்பாசி, செண்பகம், கார்போகவித்து, கஸ்தூரிமஞ்சள், அன்னாசிப்பூ, சடாமாஞ்சில், பெருஞ்சீரகம், கொத்துமல்லி, தாளிசப்பத்திரி, லவங்கப்பட்டை, பத்திரி, கிளிஅரவம்பட்டை, கோஷ்டம், மிளகு பெருங்கிழங்கு, வால்மிளகு, மலையரவம்பட்டை, மதுரம், ஜாஜிரா, பச்சிலைகிச்சிலி, சிறுஏலம் வகைக்கு பலம்-க ஆவின்பால்விட்டரைத்து ஷை எண்ணெயிற்கலக்கி டதயாகதீபம்போலெறித்து நீர்வற்றக்காய்ச்சி கம்பிளிகட்டிப்பிழிந்து ஆறியபின் அம்பர், பச்சைகற்பூரம், சாம்பிராணி, குங்குமப்பூ, புனுகு, கோரோசனை வகைக்கு விரா-க, கல்வத்திட்டுப் பொடித்துப்போட்டு ஷை தயிலத்திற்கலக்கி அத்தயிலத்தை தானியபுடத்தில்-உம-நாள்வைத்து தலைமுழுகிவர பீநிசம், விக்கல், பிரமியம், சூனியம், பித்தம், சயம், வாதநோய், சத்தி, தேகஎரிவு, நெஞ்சிற்புகைதல், புண், கிரந்தி, இரணம்,

மேகச்சூடு, அஸ்திவட்டை, நீரிழிவு, கண்ணெரிவு, கண்ணில்நீர்வடிதல், காமாலை, பித்தத்தால்தலைசுழட்டல், கண்கூசல், கபாலவலி, ஒத்தைத்தலைநோய்முதலிய வியாதிகளைப்போக்குமென்றறிக. பத்தியம-கடுகெண்ணை, மீன், கருவாடு பகல்நித்திரை, மடவார்க்கலவி முதலியவைநீக்கவும்.

இலகுசந்தனாதித்தயிலம்.

நல்லெண்ணை இருநாழி, இளநீர், ஆவின்பால் வகைக்கு இருநாழி, சந்தனம், கோஷ்டம், சதாவேரி, நன்னாரி, முந்திரி, பொன்னாங்கண்ணிவேர், வில்வம், விலாமிச்சு, வெட்டிவேர், சிந்தில், அகில், சித்தாமுட்டி வகைக்குவேர் பலம்-க; இடித்துப்பாண்டத்திட்டு இருகுருணி ஜலம்விட்டு இருநாழியாகக் சுண்டக்காய்ச்சவும், வெண்ணெச்சி, முருக்கன், விழுதி, குமரி, புளியாரை, கொடுப்பை, நறுதாளி வகைக்குசாறுபடி-வ இவைகளையெல்லாம் ஒன்றுபடுத்தியபின், சந்தனம், செங்கழுனி, சாதிக்காய், கோஷ்டம், வசுவாசி, செஞ்சந்தனம், பச்சிலை, செவ்வல்லி, சண்பகப்பூ, கடுகுரோகணி, கச்சோலம், பரங்கிச்செக்கை, ஏலம், லவங்கம், இருவேலி, சடாமாஞ்சில், வால்மிளகு, குராசாணி மஞ்சிட்டி சித்தரத்தை, சிறுநாகப்பூ, தேவதாரம், லவங்கபத்திரி, தாளிசப்பத்திரி, ஜாபத்திரி, மதுரம், சாத்திரபேதி வகைக்குக் களஞ்சி க, ஆவின்பாலாலாட்டி ஷை எண்ணையிற்கலக்கி நீர்வற்றிப்பதமாகக்காய்ச்சி இறக்கி குங்குமப்பூ, கஸ்தூரி, கோஷ்டம், கோரோஜனை வகைக்குப்பணவெடை-க, பொடித்து ஷை தயிலத்திற் கலக்கி தயிலத்தை சிரசில்தேய்த்து வென்னீரால்முழுகிவர நீரிழிவு, காந்தல், நிணமுருக்கி, உடல்வரட்சி, நீர்க்கடுப்பு, நீரடைப்பு சதையடைப்பு, கல்லடைப்பு, நீங்காதவாய்வு, சந்துவலி மூத்திரக்கிரிச்சனம், மண்டைகுலை, வாய்நாத்தம், மண்டையிடி, காதுகுத்தல், காதில்சீய்வடிதல், நெஞ்சிற்புகைதல், முகஎரிப்பு, கைகாலெரிப்பு, கெற்பச்சூலை, உஷ்ணகாந்தல், கனகனப்பு முதலிய ரோகங்கள்நீங்கிப் போமென்றறிக, இச்சாபத்தியம்.

சந்தனாதித் தயிலம்.

நல்லெண்ணைபடி-க, இளநீர்படி-க, பசும்பால்படி-க, பொன்னாங்கண்ணிச்சாறு, முசுமுசுக்கை, ஊசிப்பாலை, சிறுகீரை, கையாந்தகரை, தாமரைவளையம், கூந்தல், குதம்பை, நெய்ச்சட்டி வகைக்குசாறுபடி உ, ஒன்றுபடுத்தி, சந்தனம், அதிமதுரம், மிளகு, சீரகம், சன்னலவங்கப்பட்டை, அகிற்கட்டை, தேவதாரி, சண்பகப்பூ, கஸ்தூரிமஞ்சள், பச்சிலை, வெட்டிவேர், விலாமிச்சன்வேர், சித்தரத்தை, லவங்கப்

பத்திரி, சிறுநாகப்பூ, வால்மிளகு, ஏலம், தாளிசப்பத்திரி, நன்னாரி வேர் மஞ்சிட்டி வகைக்கு பலம்-அரைக்கால் அரைத்துக் கரைத்து நீர்வற்றப்பதத்தில்காய்ச்சி சிரசிலிட்டு வெந்நீரில் ஸ்நானஞ்செய்துவர மேகத்தாலெடுத்தகாந்தல், கண்டத்துக்குமேற்பட்ட வியாதிகளியாவும்நீங்கும், பத்தியம்-கடுகு, எண்ணெ, கருவாடு, பகல்நித்திரை, மடவார்க்கலவிமுதலியவை நீக்கவும்.

அரக்கெண்ணெத்தயிலம்.

நல்லெண்ணெ படி-௭, கொம்பரக்கு பலம்-௫, வெட்டிவேர், சோம்பு சித்தாமுட்டி, செருகங்கிழங்கு வகைக்கு பலம்-௨, பாண்டத்திற்பொடித்துப்போட்டு-௪-படி ஜலம்விட்டு-௭-படி ஜலமாகக்காச்சி ஷை எண்ணெயிற்கலந்து சடாமாஞ்சில், சம்பங்கிமொக்கு வகைக்கு பலம்-வ, சதகுப்பி, கஸ்தூரிமஞ்சள் பலம்-௭, இடித்துச்சூரணித்து எண்ணெயிற்போட்டுக்காய்ச்சி பதத்தில்வடித்துமுழுகிவர சுரங்கள் வாய்வுகள் நீங்கும்-இச்சாபத்தியம்.

அரக்குத்தயிலம்.

நல்லெண்ணெ படி-௭, ஆவின்மோர் படி-௧, பெருங்குரும்பை, செவ்வல்லி, குறுந்து அமுக்கரா, மதுரம் சுக்கு, வசம்பு, மஞ்சள், தேவதாரம், கோஷ்டம் வகைக்குகழஞ்சு-௧ இவைகளை ஆவின்பாலிலரைத்துஷை எண்ணெயிற்கலக்கி நீர்வற்றக்காய்ச்சி பதத்தில்வடிகட்டி மேலுக்குப்பூச சகலசுரங்களும்தீரும்.

பித்தம்-௪௰-க்கு மூதண்டத்தயிலம்.

அறுகம்வேர் பலம்-௪௰, மிளகு பலம்-௰, வெந்தயம் பலம்-௨௭ இவைகளைப் பதினாறுபடிஜலம்விட்டு இரண்டுபடியாகக்காய்ச்சி வடித்துக்கொண்டு நல்லெண்ணெ படி-௧ ஒக்கச்சேர்த்து நீர்வற்றக்காய்ச்சி பதத்தில்வடித்து தலைக்குத்தேய்த்து ஸ்நானஞ்செய்ய பித்தநோய்-௪௰, மேகம்-௨௧, வாதம்-அ௰-முதலியரோகங்கள் நீங்குமென்றறிக, பத்தியம்-கள்ளு, சாராயம், புகை பொடி, கடுகு, எண்ணெ, மீன், கருவாடுமுதலிய சினப்புள்ளவைகளும், பெண்ணாசையும் நீக்கவேண்டுமென்றறிக. அன்றி மகாசந்தனாதி இதற்கொவ்வாதெனக்கூறினோம்.

பித்தத்திற்கு மிளகுதயிலம்.

கெட்டிமிளகு பலம்-௰, அரைப்படி பசும்பாலி லாறுஜாமமூறப்போட்டு மறுபடியும் அரைப்படிபசும்பால் கூடச்சேர்த்து, சிறுதீயாய்ச்சுண்டக்காச்சி ஒருபலகையின்பேரி லூத்திப்பரப்பி ஆறியபின், மிளகை எடுத்து அரைபடி நல்லெண்ணெயிற் போட்டுக்காச்சி-ஏ-அ

மிளகு வெடித்தவுடனிறக்கிவடித்து சிரசிற்றேய்த்து சீயக்காய், சிறு பயறுஅறப்பிட்டு வெந்நீரில்முழுகிவர பித்தம்,பித்தச்சூடு,பித்தஎரிவு கண், கைகால்எரிவு, புகைச்சல், மேகச்சூடு, மேகவட்டை முதலிய ரோகங்கள்நீங்கும், பத்தியம்-புகை புலால், கசப்புள்ளவைகளை நீக்கவும்.

அழிஞ்சல்வேர்தயிலம்.

அழிஞ்சல்வேர் வடக்குபோகிறதைக்கொண்டுவந்துமேல்பரணி சீவி உள்வேரை இழைத்ததூள் பலம்-௨, நல்லெண்ணைபடி-க-சேர்த்து சூரியபுடம்-ம-நாள்வைத்து இறுத்துக்கொண்டுதலைக்குத்தேய்த்து வெந்நீரால் ஸ்நானஞ்செய்துவர பீநிசம், மூக்கடைப்பு காதடைப்பு, மண்டைக்குடைச்சல், பிடரிநோய், ஒருதலைநோய்முதலிய நோய்கள் நீங்கும்-இச்சாபத்தியம்.

இலைத்தயிலம்.

ஊமத்தைச்சாறு, பசுவின்பால்,நல்லெண்ணை வகைக்குப்படி-க, மிளகு பலம்-க, நொச்சிக்கொழுந்து பலம்-க, அபின் விரா-௨ இவைகளை ஆவின்பால் விட்டறைத்துக்காய்ச்சி பதத்தில்வடித்து சிரசிற்றேய்த்து சியக்காயிட்டு வெந்நீரில் ஸ்நானஞ்செய்ய முகவாதஜன்னி, மூர்ச்சை, வலி, தலைவலி, காதடைப்பு, காதுகுத்தல் முதலியவை நீங்கும்-இச்சாபத்தியம்.

ஐந்தெண்ணைத்தயிலம்.

நல்லெண்ணை, வேப்பெண்ணை, புங்கெண்ணை விளக்கெண்ணை, இலுப்பெண்ணை வகைக்குபடி அரைக்கால், இரசம், லிங்கம், கெந்தகம், நொச்சிலை, தாளகம், வெண்காரம், பெருங்காயம்,வாளம் வகைக்கு விரா-அரையே அரைக்கால், பூண்டு பலம்-கல, வசம்பு பலம்-௨ இவைகளை தில்லைப்பால், எருக்கம்பால், ஆலம்பால், கள்ளிப்பால் சமன்கொண்டு ஷை சரக்குகளைஆட்டி சீலையிற்றடவி, உலர்த்தி பந்து சுத்தி இருப்புசிலாக்கில்குத்தி அஞ்செண்ணையு மொன்றாய்க்கலந்து பந்தத்தில்விட்டுக்கொளுத்தி கீழேபீங்கானிவைத்து இறங்குகிறதயிலத்தை மேலுக்குத்துவாலையிட ஜன்னிவாதம், ஜன்னிதோஷ மிவைகள் தீரும்.

சகலபீநிசத்திற்கு தயிலம்.

பொன்னாங்கண்ணி, நீர்ப்பூலா, வல்லாரை, பழம்பாசி, முசுமுசுக்கை, இளநீர், வகைக்குச்சாறுபடி-க,நல்லெண்ணைபடி-க இவைகளை ஒன்றுபடுத்திப் பாண்டத்திட்டு நாடோறும் ஒவ்வொருவிசைத் துழாவி-எ-நாளைக்கு சூரியபுடம்வைத்து ஏலம், கிராம்பு, மிளகு,மது

ரம், கோஷ்டம், சீரகம், கசகசா, வகைக்கு பலம்-வ, தாளிசப்பத்திரி பலம் காலே அரைக்கால், பவழமல்லிகைப்பூ பலம்-஌, குங்குமப்பூ விரா-க இவைகளைச் சூரணித்துப்போட்டு மெழுகுபதத்தில் வடித்து பிறகுகுங்குமப்பூவை வடிசெய்யும் குடுவையில்போட்டு தலைமுழு கவும், சீயக்காய் அறப்புதேய்த்து வெந்நீர்விடவும், பத்தியம் புளி, புகை, கடுகு, எண்ணெ, மீன், கருவாடு, போகம்தவிர்க்கவும்.

நேத்திரநோய்-கூகூ-க்கு தயிலம்.

நல்லெண்ணெ படி-க, பொடுதலைச்சாறு கரிசாலைச்சாறு, பொன் னாங்கண்ணிச்சாறு வகைக்குப்படி-வ, ஒன்றுசேர்த்து எரித்து மெழு குபதத்தில்வடித்து சந்தனத்தூள் பலம்-உ, ஏலம் பலம் உ, வெண் மிளகு பலம்-க, பீதர்ரோகணி விரா-க இந்தசரக்குகளைஒன்றிரண்டா யுடைத்து ஒருசீலையில் கிளிகட்டி வடிகலசத்தில் தோளாந்தரமாய்க் கட்டி சூட்டுடனே எண்ணெயைவடித்து தலைமுழுகும்போது கிளிகட் டியமூட்டையைஎடுத்து அதில்வடிக்கிற எண்ணெயை தலையில்தேய்த் துக்கொண்டு சீயக்காய்க்கொதிப்பித்துவெந்நீரில்முழுக்குசெய்ய நேத் திரநோய்-கூகூ-ம் போம் பத்தியம்-மச்சம், புளி, புகை, போகம் முத லியவை தள்ளவும்.

வில்வத்தயிலம்.

வில்வப்பழத்தின் உட்புளி பலம்-ய,நல்லெண்ணெ படி-க,ஏலம், சுக்கு, மிளகு வகைக்கு பலம்-வ இவைகளைப்பொடிசெய்து ஒரு சீலை யில் பொட்டணமாய்க்கட்டி ஒருஜாடியில் அல்லது பானையில்போட்டு எண்ணெயும்விட்டு ஷைபழமும்போட்டு மேல்மூடி பூமியிற்புதைத்து சய-நாள் அந்திசந்தி ஒருகுடஞ்ஜலம்விட்டு முழுகிவர பித்தம்-சய-ம் விலகிப்போம், இச்சாபத்தியம்.

காதில்வரும்வியாதிகளுக்கு முசுறுமுட்டைத்தயிலம்.

முசுறுமுட்டை, பூநாகம், நண்டிறைச்சி, வெள்ளுள்ளி, கோழி முட்டை, வசம்பு குக்கில், வகைக்கு விரா-ரு, வேப்பெண்ணெயில் போட்டுக்காய்ச்சி பதமாகவடித்து காதில்-ய-நாள்விட்டு இலவம்பஞ்சி அடைத்துவர காதில்சீழ்வடிதல், பூச்சியுண்டாதல், குத்து, காதுமந் தம் முதலியவைநீங்கி செவிகேட்கும்.

பற்பவகைகள்.

தாளகபற்பம்.

தாளகத்தை கற்சுண்ணாம்பில்வைத்துபசுங்கோமயத்தால்-எ விசை தாளித்து அரசம்பட்டையைச் சுட்டசாம்பல்படி-க புளியம்பரணிச்

சாம்பல் படி-க, மருதம்பட்டைச்சாம்பல் படி-க இவைகளை ஒன்று படுத்தி பாதியெடுத்துப் பாண்டத்திட்டு ஷ சுத்திசெய்த தாளகத் துக்கு பூநீர்தட்டிவைத்து மற்றையபாதிசாம்பலை மேலுங்கொட்டி வேறுசட்டிகொண்டு வாய்மூடி-எ சீலை வலுக்கச்செய்து நாலுஜாமம் காடாக்கினியா யெரித்து ஆறியபின்னெடுத்து மேனிச்சார்விட்டு ஒரு ஜாமமரைத்தரைத்து-கூ-எருவில் புடம்-ய-போடபற்பமாகும், ஆகிய பற்பத்தை நெய், தேன், சீனி, திரிகடுகுசூரணம், திப்பிலிச்சூரணம் இவைகளில்-உ-அரிசியெடை வைத்துண்ண சகலகாசரோகங்களும் விட்டோடிப்போம், பத்தியம் வியாதிகளுக்குத்தக்கவைகளாம.

வேறு - தாளகபற்பம்

சுத்திசெய்ததாளகம், இரசம் வெண்காரம் வகைக்கு பலம்-க, கல்வத்திட்டு நற்சங்கனிலைச்சார்விட்டு-உசு-ஜாமமாட்டி உணர்த்திப் பொடிசெய்து காசிகுப்பியில் பாதிமட்டுமடைத்துக் கல்கார்க்கிட்டு எ-சீலைவலுக்கச்செய்து ஆறவிட்டு சட்டியில்-சு-விரற்கடை. உயரம் மணல்பரப்பி ஷ குப்பியைவைத்து மேலும் குப்பிவாய்த்தெரிய மணல்கொட்டி மேல்சட்டிமூடி-சு-ஜாமம் தீபாக்கினியாயும், சு ஜாமம் கமலாக்கினியாயும் சு-ஜாமம் காடாக்கினியாயும் எரித்து ஆறவிட்டு மறுநாளெடுத்துக் குப்பியிலுள்ளமருந்தைக் கல்வத்திட்டு வேறுசுத்தி செய்த இரசம் பலம்-க-சேர்த்து மேனிச்சாற்றால் ஒவ்வொருஜாம மாட்டி-ரு-புடம்-ரு எருவில்போட பற்பமாகும் ஆகிய பற்பத்தை தேன், நெய், திரிகடுகுச்சூரணம் திப்பிலிச்சூரணம், பரங்கிப்பட்டைச் சூரணம் இவைகளில் அரிசிஎடை வைத்து-எ-நாளிருபோதுண்ண மந்தாரகாசம், சுவாசகாசம், சயகாசம் சுரக்காசம், எலும்புருக்கி இருமல் சுரங்கள், வாதநோய், பித்தநோய், சிலேற்பனநோய் முதலி யவைகள்நீங்கும், அன்றி வியாதிகளுக்கேற்றபத்தியம் செய்துக்கொள் ளவும்.

தங்கபற்பம்.

கும்பிடுகிளிஞ்சிசுன்னம் பலம்-உ நவாச்சாரம்பலம்-உ, இந்துப்பு பலம்-க, சீமைவெண்காரம் பலம்-க இவைகளை ஒன்றுசேர்த்தரைத்து ஜெயநீராய்வாங்கி அதற்கு சூரத்துகற்பூரம் பலம்-உ, போட்டுப் பீங் கானிலிட்டு மேல்மூடிவாய்புறம் சீலைசெய்து பூமியில் சமாதிவைத்து எட்டாநாளெடுத்து இரவிலும் வெய்யலிலும்வைக்க கட்டியுப்பாகும், அந்தவுப்பை மறுபடியும் வெய்யலில்மாத்திரம்வைக்க இருகிக்கட்டி வெடிக்கும் அப்படி கட்டியவுப்பில் விருகம், செம்முள்ளிச்சுட்ட

சாம்பலை உப்பாக்கி அந்தஉப்பில் விருகம் சேர்த்து வாய்நீரால் மத்தித்து உ-விருனை-தங்கத்தகட்டிற்பூசி ஓட்டில்வைத்து ருய-எருவில் புடம்போடநீறும், நீறியபற்பத்தை அரிசியெடை தக்கவநுபானங்களில் வைத்துண்ண-சஉசஅ வியாதிகளையும்போக்கி தாதுவிர்த்தியுண்டா மிப்பெருமைபொருந்திய தங்கபற்பமென்றறிக. பத்தியம்-வியாதிகளுக்குத்தக்கவைகளாம்.

இரசவங்கபுட்டிபற்பம்.

இரசம், வெள்ளீயம், கெந்தி, நவாச்சாரம் வகைக்குத்தொல-ரு, லிங்கம், வெண்காரம், சீனக்காரம் வகைக்கு தொலா-உ, இவ்விவழ சரக்கில் வெள்ளியத்தை உருக்கி ரசத்தைத் தொடுத்து மற்றைய வைகுசரக்குகளையு மொன்றாசேர்த்தரைத்து சோடாவாட்டர் புட்டிக்கு எ-சீலைவலுக்கச்செய்து அப்புட்டிக்குள் மேற்படி மருந்துகளைத் தூவிநூற்போலப்போட்டு புட்டிவாய்க்குக் கடுதாசிகட்டி ஒருகுண்டு சட்டிக்கு நடுவேபுட்டியடி அரைவிரல்தெரியத்தமரிட்டு அந்தத்துவாரத்தில் புட்டியையசையாமல் மெல்லவைத்துப் புட்டிக்கு கழுத்தளவு மணலிட்டு கடுதாசியை யவிழ்த்துப்போட்டு வாலையடுப்பில்வைத்துக் கமலாக்கினியா யொருஜாமமாயும், காடாக்கினியாயைந்துஜாமமுமெரித்து ஆறவிட்டு புட்டியை உடைத்துப்பார்க்க மூன்றுவிதங்களாக உள்ளிருக்கும் பற்பத்தை வெவ்வேறெடுத்துவியாதிகளறிந்தும் பெலமறிந்தும் பணவெடைபற்பமெடுத்து வாயிற்போட்டு ஒருமுணர்வெந்நீர்சாப்பிட சகலரோகங்களும் விட்டோடிப்போம், பத்தியம்-வியாதிகளுக்குத்தக்கவைகளாம்.

வெள்ளை அப்பிரகபற்பம்.

இதழிதழாய்ப்பிரித்தவெள்ளை அப்பிரேகம் பலம்-உ, கம்பிபொட்டிலுப்பை வாய்குவிந்தசட்டியில் கொஞ்சம்பறப்பி மேற்படி அப்பிரேகவிதழில் கொஞ்சம்வைத்து மேலும்கொஞ்சம் உப்புபறப்பி இவ்வண்ணம்உப்பையும்அப்பிரேகத்தையுமடுக்கடுக்காயரைசட்டிவரையில்பறப்பிசட்டிவாய்மூடி மண்சீலை ரு-செய்து-ா-எருவிற்புடம்போட்டெடுக்கப்பற்பமாகும் ஆகியபற்பத்திற் காசெடை பிலமறிந்துநெய், தேன், வெண்ணெயிற் கொடுத்துவர குன்மம், குன்மக்கட்டி, வயிற்றுவலி, வாய்வு, உதிரக்கட்டிமுதலிய வியாதிகளைப்போக்கும், பத்தியம்-வியாதிகளுக்குத் தக்கவைகளாம்.

இலிங்கபதங்கபற்பம்.

ஜாதிலிங்கம் பலம்-உ, பூரம் பலம்-க, வீரம் பலம்-வ இவைகளையொன்றிரண்டாய்ப் பொடித்து ஒருசட்டிக்குள் கரியுப்பு படி-க

பொடித்துப்பாதிகொட்டி ஷை மருந்தைப்பரப்பி மேலும் உப்பாலே மூடி மேற்சட்டிக்கு புரசஞ்சாறுவது கலியாணமுருக்கிலைச்சாறுவது தேய்த் துலர்த்தி சட்டியைமூடி சந்துவாய்த்தெரியாது சிலைமண் ௭-செய்து அடுப்பேற்றி-௩-ஜாமமெரித்து ஆறியபின்னசையாமற்சிலை மண்போக்கி மேலேபதங்கமாயேறிவபற்பத்தைச் சுரண்டியெடுத்து சிறுபயறளவு வெல்லத்திற்கொடுக்க மேகவாய்வு சூலை, சன்னி, சுரங்க ளியாவும் நீங்குமென்றறிக, பத்தியம் - வியாதிகளுக்குத் தக்கவை களாம்.

செந்தூர வகைகள்.

இலிங்கச்செந்தூரம்.

ஜாதிலிங்கம் பலம் ௧, சாம்பிராணி பலம் ௧ கூடன் பலம்-௧ இவ் விரண்டையும் கல்வத்திலாட்டமெழுகாகும் அம்மெழுகை-௰ பங்கு செய்து ஒருபங்கை சீலையிலூட்டி ஷை லிங்கத்தைச்சுருட்டி விளக்கில் கொளுத்தி ஆறியபின்முன்போலப் பத்துமுறைசெய்து மேற்சுரண்டி திரிகடுகுசூரணம் சமன்சேர்த்து கல்வத்திலரைக்கபொடித்து பணவெ டை பனைவெல்லத்தில்வைத்துண்ண சூலை, குன்மம், கிரந்தி, பரங் கிப்புண், வாய்வு, கரப்பான், தடிப்பு, வெடிப்பு, சோகை, பாண்டு வண்டுகடி, தோஷம், சன்னி மூர்ச்சைமுதலியதும், இஞ்சிச்சாற்றி லிட மந்தம், வாய்வு, நெஞ்சடைப்பு, வயிற்றெரிவு, காந்தல் முதலி யவைகளும்நீங்கும், இன்னும் வியாதிகளுக்கேற்ற அநுபானங்களில் வைத்துண்ணவும், பத்தியம் வியாதிகளுக்குத்தக்கவைகளாம்.

வேறு லிங்கச்செந்தூரம்.

ஜாதிலிங்கம் பலம்-௧-க்கு ஒருபுட்டிபிராந்தியை ஒருசட்டியி லிட்டு ஷை லிங்கக்கட்டியைவைத்து மேற்சட்டிபொருந்தமூடி மண் சீலை-௭-வலுக்கச்செய்து தீபாக்கினியாய் ஒருஜாமமும், கமலாக்கினி யாய்மூன்றுஜாமமுமெரிக்க செந்தூரமாம். அநுபானம், தேன், நெய்; திரிகடுகுச்சூரணம் இவைகளில் பணவெடைதாக்க சுவாசம், வீக்கம், சுரம், சன்னி, மேகவாய்வுமுதலிய வியாதிகள்போகும் வியாதிகளுக் குத் தக்கபத்தியங்களாம்.

கரியுப்பு செந்தூரம்.

ஒருகுடுவையில் ஆழாக்கு உப்பைக்கொட்டி பொடுதலைச்சாறு ஆழாக்குவிட்டு மேல்மூடிசீலைசெய்து முழப்புடமாவது உலையில்

வைத்தாவதனைத் உருகிவிட்டாயிற்கும் அதையெடுத்துக் கல்வத்தில் வைத்து ஷடிசாறுவிட்டாட்டி வில்லைசெய்துலர்த்தி-ய-எருவில்புடம் போடவும், அன்றி மேற்கூறியதைப்போன்று ய-புடம்போடச் செந்தூரமாம் ஆகிய செந்தூரத்தில் பணவெடை தக்கவநுபானங்களில் வைத்துண்ண குன்மம், சத்திகுன்மம், வாய்வு, வயிற்றுவலி, செரியாமந்தம், வயிற்றிரைச்சல், ஊஷ்ணத்தால் நெஞ்சுகுத்தல், புளித்தவ்யம் முதலியவைபோம். பத்தியம் வியாதிகளுக்குத்தக்கவைகளாம்.

சண்டமாருதச்செந்தூரம்.

பூரம் விரு-ரு, லிங்கம் விரு-அ, வீரம் விரு[illegible]நெல்லிசெந்தி விரு-உ, இரசச்செந்தூரம் விரு[illegible] இவைகளைக்கல்வத்திட்டு உ-ஜாமம் மைபோலாட்டி இரண்டுஅரிசிஎ[illegible]தேனிலும், நெய், மிளகுசூரணத்திலும், சீரகச்சூரணத்திலும் வைத்துண்ண முறைச்சுரம், விடாச்சுரம், நளிர்ச்சுரம், வாதசுரம், பித்தசுரம், சிலேஷ்பனசுரம், தொந்தசுரம்முதலியவைகள்போகும், கடும்பத்தியம்.

அயகெந்திசெந்தூரம்.

சுத்திசெய்த அரப்பொடி பலம்-உ கெந்திபலம்-உ, இவ்விரண்டுங்கல்வத்திட்டு நவாச்சாரம விரு-உ கற்சுண்ணாம்புநீறு பலம்-க, குளிர்ந்தஜலத்தில் போட்டுக்கரைந்து தெளிவிறுத்து இரண்டுஜாமம் நன்றாய் நெகவரைத்து வழித்து ஒருஜானகையில்வைத்து குழம்பிறுகிறமட்டும் உலையில்மெதுவாயூதி பிறகுசற்று அதிகமாயூதச்செந்தூரமாகும் அப்படியாகியசெந்தூரத்தில் அரிசியெடை தக்கஅநுபானங்களில் வைத்துண்ண வாய்வு, பாண்டு, காமாலை, தேகத்தில் நீர்கோர்த்தல் மார்நோய்முதலிய வின்னுமனேகவியாதிகளைப் போக்குமென்றறிக. பத்தியம் வியாதிகளுக்குத்தக்கவைகளாம்.

மண்டூரச்செந்தூரம்.

நாட்சென்ற இரும்புச்சிட்டத்தைக்கொண்டுவந்து நிம்பழச்சாற்றில்-ந-ரு-நாளூரப்போட்டுப் பின்பெடுத்துக் கெந்திசமன்சேர்த்துப் பொற்றலைக்கையான்சாற்றில்-ச-ஜாமமாட்டிப் பில்லைசெய்து ரவியிலுலர்த்தி ஓட்டில்வைத்துசீலைசெய்து-ருய-எருவில்புடம்போடவும்மேற்கூறியவண்ணம் அரைத்தரைத்துப் பத்துபுடம்போடச் செந்தூரமாகும், செந்தூரத்தில்-உ-அரிசியெடை தேன், நெய், வெண்ணை, திரிகடுகசூரணம் இவைகளில்வைத்துண்ண பாண்டு, சோகை, காமாலை, மகோதரம், நீர்க்கோர்வை, பெருவயிறு, சுரங்கள் முதலியவை நீக்கும், பத்தியம்-வியாதிகளுக்குத்தக்கவைகளாம்.

பேதி மாத்திரைகள்.

சுத்திசெய்த வாளம் பலம்-க, சுக்குத்தூள் பலம்-க, லிங்கம் விரு-க. இரசம் விரு-க இவைகளைக் கல்வத்திட்டு ரொட்டியால் ௩-ஜாமமாட்டி சிறுசுண்டையளவு குளிகைசெய்யவும், அநுபானம் சர்க்கரை.

உ - வது.

மிளகு, சுத்திசெய்தவாளம் சமன்கொண்டு சோற்றுப்புஇரட்டி சேர்த்து மலைத்தேனாலாட்டிப் புளியங்கொட்டையளவு குளிகைசெய்யவும். அநுபானம் சீனி.

௩ - வது.

சுத்திசெய்தவாளம் பலம்-ரு கடுக்காய்த்தோல், பன்னீர்ப்பூ இந்துப்பு, ரோகணி, சுக்கு, வெடியுப்பு வகைக்கு பலம்-உ கல்வத்திட்டு நிலவாகைக்கியாழத்தில்-௪ ஜாமமாட்டி சிறுசுண்டைக்காயளவு குளிகைசெய்யவும். அநுபானம்-நிலவாகைக்கியாழம்.

௪ - வது.

முத்துகொட்டை பலம்-௧, சுக்கு பலம்-௨, மிளகு பலம்-க, வெடியுப்பு பலம்-௨, சுத்திசெய்தவாளம் பலம்-௱, கல்வத்திட்டு மலைத்தேனாலாட்டி பட்டாணிப்பிரமாணம் குளிகைசெய்யவும், அநுபானம்-சீனி.

ரு - வது.

மிளகு, சுக்கு, திப்பிலி சீரகம், ஓமம், ரோகணி, கூர்மத்தோடு கோஷ்டம் வகைக்கு பலம்-க முத்துக்கொட்டை பலம்-௨, சுத்திசெய்தவாளம் பலம்-ரு இவைகளை சம்பழச்சாற்றாலாட்டி பட்டாணி வீதம் குளிகைசெய்யவும், அநுபானம்-சீரகச்சூரணம்.

௬ - வது.

சுக்கு, மிளகு, திப்பிலி, சீரகம், ஏலரிசி வகைக்கு பலம்-க, வாளம் பலம்-ரு, லிங்கம் விரு-க, பூரம் விரு-௨ இவைகளைக் கல்வத்திலிட்டு சம்பழச்சாற்றால்-அ-ஜாமமறைத்து சிறியபட்டாணிவீதம் குளிகைசெய்யவும், அநுபானம்-சீனி.

எ - வது.

வாளம், இரசபற்பம், இரசச்செந்தூரம், பூரம் வகைக்குப்பலம்-க மிளகு பலம்-உ இவைகளை நிம்பழச்சாற்றால்-உ-ஜாமமாட்டிசிறியபட்டாணியளவு குளிகைசெய்யவும், அநுபானம்-மிளகுசூரணம்.

பஞ்சபூதவிவரம்.

———*———

பிரிதிவி, அப்பு, தேய்வு, வாய்வு, ஆகாயம் எனப்பெயர் வழங்கியதென்றறிக.

லோகபஞ்சபூதப்பெயர்.

பிரிதிவு தங்கம், அப்பு காரீயம், தேயுவு-செம்பு, வாய்வு-இரும்பு, ஆகாயம்-நாகம் எனப்பெயர்பெற்றதென்றறிக.

லோகபஞ்சபூதவர்ணம்.

பிரிதிவு மஞ்சள், அப்பு-பளிங்கு, தேய்வு சிகப்பு, வாய்வு-கறுப்பு, ஆகாயம் புகை, அன்றி பி மண், அ-தண்ணீர், தே-நெருப்பு, வாய்வு-காற்று, ஆ-விண் எனப்பெயர்பெற்றதென்றறிக.

கருவிபஞ்சபூதவிவரம்.

பிரிதிவு-மலம், அப்பு சிறுநீர், தேய்வு உதிரம், வாய்வு-வாய்நீர், ஆகாயம்-விந்துஎன வழங்கியதென்றறிக.

பாஷாணப்பஞ்சபூதவிவரம்.

பிரிதிவு-தாளகம், அப்பு-வீரம், தேயுவு-லிங்கம், வாயுவு வெள்ளைப்பாஷாணம், ஆகாயம்-கெந்திஎன வழங்கியதென்றறிக.

லவணபஞ்சபூத விவரம்.

பிரிதிவு - கல்லுப்பு-இந்துப்பு-வளையலுப்பு, அப்பு-மூன்றுவிதசாரம், தேயுவு-சவுட்டுப்பு-வெடியுப்பு-சூடன், வாயுவு-வெண்காரம்-அரிசி-பாடிகாரம், ஆகாயம்-பூரம்-வழலைஎனப்பெயர்பெற்றது.

பாஷாணப்பிரிவு பஞ்சபூதவிவரம்.

பிரிதிவு தொட்டி-சிங்கி-கார்முகில்-பவழப்புற்று-தீமுருகல், அப்பு-வெள்ளி-சங்குபாஷாணம்-குதிரைப்பல்-கோழித்தலை-கெந்தி, தேயுவு-சிலை-கெந்தி-வீரம்-தாரம், வாயுவு-பஞ்சபட்சி-ரத்தபாஷாணம் லிங்கம் ஆகாயம் சூதம் என்றறிக.

உபரச பஞ்சபூதவிவரம்.

பிரிதிவு சிலாசத்து-அயக்காந்தம் பூநாகம்-இராசவர்த்தம், அப்பு-சங்கு-கோழியண்டம்-கிளிஞ்சிகண்டு, தேயுவு எலும்பு-இந்திரகோபம்-பயிலிறகு-நிமிளைவெண்காரம், வாயுவு சாத்திரபேதி கல்நார்-கல்

மறும்-அன்னபேதி-ரோமம்;ஆகாயம்-துத்தம்-வைகிராந்தம்-மலைருது-சுக்கான்-மிருதிபாஷாணம் என்றறிக.

அட்டலோகமாரணதிறுசுகள்.

சூதம், கெந்தி காரம், சாரம், வெடி, வெள்ளை, பூரம், வீரம் இவைகளைச் சமன்கொண்டு சம்பழச்சாற்றுலாட்டி உலோகத்தகட்டு களின்மீது சமன்பூசி கெஜபுடமிடினும், பூநீர், கெந்தி, வெடி, காரம், சீனம், சூதம், புனுகு, பூரம், பாஷாணம் வீரம், சாரம் இவைகளைச் சமன்கொண்டு சம்பீரச்சாற்றுலாட்டி மேற்கூறியதைப் போன்று பூசிப்புடமிட்டுப் பின்பற்பங்கள் செந்தூரங்கள்செய்து ரோகிகளுக் குத்தாக்க ஆன்றோர் விளம்பினரென்றறிக,

சத்துருமித்துருவிவரம்.

தங்கச்சத்துரு.

கிமிளை. நாகம்,வெடியுப்பு, கெவுரி, வெள்ளை, சவுட்டுப்பு, தாள கம், வங்கம், சிங்கி, அப்பிரேகம், சிலை, அண்டோடு, குதிரைப்பல் சூதம், கெந்தி, கோமுகம், காந்தம், பொன்னம்பர், சவ்வீரம் முதலி யவைகளாம். மற்றவைகள் மித்துருவெனக்கொள்க.

கருவங்கச்சத்துரு.

அயம் காந்தம், கிமிளை, கிளிஞ்சி, அண்டம், நண்டு, நத்தை, செவுரி, கெந்தி, அப்பிரேகம், வெடியுப்பு, கல்லுப்பு, கல்நார், சாத் திரபேதி முதலியவைகளாம்.

கருவங்கமித்துரு.

பூராகம், மயூரச்செம்பு, நாகம், செம்பு, வெள்ளி, வெள்வங்கம், சூதம் முதலியவைகளாம்,

அயச்சத்துரு.

அப்பிரேகம், வெண்காரம்,அண்டவோடு, வெண்கலம், கிமிளை, வங்கம், கிளிஞ்சி, கெந்தி, சாரம், சிலை, சவ்வீரம், சிங்கி, கெவுரி, வெள்ளை, சிலாசத்து, பூநீறுமுதலியவைகளாம்.

அயமித்துரு.

வெள்ளி, நாகம், காந்தம், செம்பு, பூரம், பூராகம், தங்கம், கெந்தி, மயூரச்செம்பு, குடன்முதலியவைகளாம்,

நாகச்சத்துரு.

கிளிஞ்சி, அண்டம், கல்லுப்பு வெடியுப்பு படிகாரம், வங்கம், தங்கம், வெள்ளி, வெங்கலம், வீரம், மிருதார்சிங்கி, அபினி, மிளகு, வெள்ளை வளையலுப்பு, அன்னபேதிமுதலியவைகளாம்.

நாகமித்துரு.

அப்பிரேகம், இரும்பு, காந்தம், சிலாசத்து, கிமிளை செம்பு, கெவுரி, சூதம், கெந்தி, பூநாகச்செம்பு கருநாகம்,சாரம் முதலியவை களாம்.

துருசுசத்துரு.

சவுட்டுப்பு, தொட்டி, அஞ்சனம், வெடியுப்பு சூடன், அப்பிரே கம், சீனம், வெள்ளைப்பாஷாணம், கல்லுப்பு, மிருதார்சிங்கி, காந்தம், இந்துப்பு, நாகம், வங்கம், சவர்க்காரம் முதலியவைகளாம்.

துருசுமித்துரு.

அரிதாரம், சாரம், வெண்காரம், கெந்தி, சூதம், வீரம், பூரம் சிலை, கெவுரி, லிங்கம் முதலியவைகளாம்.

சாரச்சத்துரு.

கல்லுப்பு, இந்துப்பு, வளையலுப்பு, இரும்பு, காந்தம் வங்கம், அண்டோடு, சுக்கான், சிலை, காரீயம், கடல்நுரை, அப்பிரேகம், சவுட்டுப்பு, கிளிஞ்சல் முதலியவைகளாம்.

சாரமித்துரு.

தாளகம், சிலை, கெந்தி, காரம், வெடியுப்பு, வீரம், லிங்கம், காரீ யம், கல்நார், கெவுரி, நாகம், கிமிளை முதலியவைகளாம்.

வெடியுப்புச்சத்துரு.

காரீயம், சவுட்டுப்பு, சூடன். வெள்ளீயம், துருசுவெள்ளை, இரு ம்பு, செம்பு, காந்தம், சிலை, தொட்டி, கெந்தி, சிங்கி, தீமுருகல், அண்டோடு, வெடியுப்பு முதலியவைகளாம்.

வெடியுப்பு மித்துரு.

இந்துப்பு, கல்லுப்பு, காரம், லிங்கம், வீரம், துத்தம், தாளகம் காந்தம், நாகம், கடல்நுரை, கிமிளை, வெள்ளைகம்பிளி, பழம்புளி, ரோமம் முதலியவைகளாம்.

கல்லுப்புச்சத்துரு.

வீரம், சவுட்டுப்பு, சூடன், காந்தம், இந்துப்பு, சிங்கிபவளப் புற்று, சிலை,பழம்புளிமுதலியவைகளாம்.

கல்லுப்பு மித்துரு.

பூரம், இரும்பு, செம்பு, காரம், கெவுரி, நாகம், கெந்தி, தாளகம், கிமிளை, வெள்ளை, அப்பிரேகம், வங்கம் முதலியவைகளாம்.

காரச்சத்துரு.

சிலாசத்து, புளி, அண்டோடு சூடன், பூரம் சுண்ணவகைகள் முதலியவைகளாம்.

காரமித்துரு.

உபரசங்கள், பாஷாணங்கள், லோகங்கள் முதலியவைகளாம்.

சூதச்சத்துரு.

சிங்கி, கெவுரி, வெள்ளை, குதிரைப்பல், சத்திசாரம், வெடியுப்பு, இரும்பு, காந்தம், சூடன், பொன்னம்பர், பூரம், சவுட்டுப்பு, கிமிளை, பூநீறுமுதலியவைகளாம்.

சூதமித்துரு.

அப்பிரேகம், நாகம், காரீயம், சிலை, கெந்தகம், வெள்ளீயம், வீரம், தாளகம், தொட்டி, வெள்ளி, செம்பு, துருசு, சாரம், வெண்காரம், அஞ்சனக்கல், துத்தம், தீமுருகல், பவளப்புற்று முதலியவைகளாம்.

உப்புபுளிசரக்கு.

மலம்-புளி, சிறுநீர்-உப்பு, வெடி-உப்பு, படிகாரம்-புளி, கல்லுப்பு-உப்பு பழம்புளி புளி சூடன்-உப்பு, துருசு-புளி, கடல்நுரை-உப்பு, கற்சுண்ணநீர் புளி, சூதம்-உப்பு, கெந்தி-புளி, காந்தம்-உப்பு, காடி-புளி, இரும்பு-உப்பு, எரிகாலன்எண்ணை-புளி, தொட்டி-உப்பு, புளியரணை-புளி, பேதி-உப்பு, பொன்னம்பர்-புளி, மாங்கிஷபேதி-உப்பு, கல்மதம்-புளி, வீரம்-உப்பு, புளியாரை-புளி, கெவுரி உப்பு, புளிமாங்காய் புளி, வெண்ணை-உப்பு, பனங்கள்ளு-புளி, வைகிராந்தம்-உப்பு, கிமிளை-புளி, தங்கம்-உப்பு, சிலை-புளி, நாகம்-உப்பு, வீரம்-புளி அப்பிரேகம்-உப்பு, காயசரக்கு-புளி, நாகம்-உப்பு, வீரம் புளி, சாரம்-உப்பு, வெண்காரம்-புளி, பச்சைகற்பூரம்-உப்பு, இந்துப்பு புளிஎனவழங்கியதன்றி ஒன்றிலொன்றடக்கமென்றறிக.

நாதவிந்துசரக்கு

லிங்கம்-நாதம், கல்லுப்பு-விந்து, கிமிளை-நாதம், வெள்ளை-விந்து, கெந்தி-நாதம், இரசம்-விந்து, பூநாகம்-நாதம், வீரம்-விந்து, பூநீறு-

நாதம், சூடன்-விந்து, இரும்பு-நாதம், எவாச்சாரம்-விந்து, காந்தம்-நாதம், கல்மதம்-விந்து, செம்பு நாதம், சிலாசத்து-விந்து, நாகவங்கம் நாதம், பூரம்-விந்துஎனஆன்றோர்கூறியதென்றறிக.

கட்டுவகைகளின்பரீட்சை.

பாஷாணத்தை நெருப்பில்வைத்தூத ஊசிப்புகையாயும், லிங்கம் மணிபோலுருகியும், கல்லுப்புகரியில் உருகியாடவும், நாகம்-கரியில் பொன்போல் கண்விட்டாடியும், வெடியுப்பு - தங்கம்போலிருகியும், சாரம்-ரோமத்தைப்போல்புகைந்தும், சூடன் - எரியாமலும், சீனம் உருக்குமணிபோலும், துருசு-இளகாமலும், இந்து - வெடிக்காமலும் வீரம்-உருகியும், இரசம்-மூசையில்வைத்துருக்கமணிபோலும் கெந்தி நெருப்பிலோடாமலும் ஜெயித்திருந்தால் வாதத்திற்கும் வயித்தியத்திற்கு முபயோகப்படுமென்றறிக. அன்றி, சுண்ணவகைகள் மஞ்சளுக்குசிவக்க மிகநன்று.

எடைகளின் குணமறிய.

வீரம், பூரம், லிங்கம் பாஷாணம், இரசம், கெந்தி, செவுரி, சவுக்காரம், வெடியுப்பு, இந்துப்பு, காந்தம்முதலியவைகள் அளவுபோல்சேராவிடில் கன்மநோய்நீங்காதெனவும்,பிரிதிவு,அப்பு,தேயுவு, வாயுவு, ஆகாயமாகிய கவ, ௯, ௯, ௲, ௨ எடைகளில் ஒன்றுக்கொன்று சற்றுஉயர்ந்தும், தாழ்ந்தும், பேதித்துமிருக்கில் அவுஷதங்கள் பயன்படாதென்றும் மேலோர்கள் கூறியிருக்கின்றனர். அன்றி மேற்கூறியதைப்போன்று முறைபிசகாது ஒவ்வொரு அவுஷதங்களையும்முடித்து வேதையாடில், திரை, சவுடு, களிம்பு ஊரல், சவளை, நமுகலாகிய ஆறுகுற்றங்களுமற்று ஊட்டம் காய்ப்பு, புடநயப்பு, கரகரப்பு முதலியவைபொருந்திய ஏமமாகுமென்றறிக. அவுஷதங்களை முறைபோல்முடிக்கவும், வேதையாடவும் ஆன்றோர்கள்கூறிய தியாவருக்கெனில் பொய், களவு, தந்திரம், ஆசை, கோபம், கள், சூது, காமம்முதலிய தீயகுணங்களையற்ற புண்ணியர்களுக்காம்.

பஞ்சலோகசுத்திகள்.

அயப்பொடியைஎலுமிச்சம்பழரசத்தில் ௩-நாளூறவைத்தெடுத்துக் கழுவிப்போடவும், காவிக்கல்லைப் பழச்சாற்றாலாட்டி தங்கத்தகட்டிற்பூசிபூசி ௭ விசைக் காச்சியெடுக்கவும், குன்றிமணி, வெடியுப்பு, படிகாரம் சமன்சேர்த்து கேசரிலத்திச்சாற்றாலாட்டி செம்புத்தகட்டிற்பூசிக் காயவைத்து சிவக்கக்காச்சியெடுத்து ஷ கேசரியின் நீரில்-௭-விசை உருக்கிச்சாய்க்கவும், சற்றாழைச்சாற்றில் வங்கத்தை

எ-விசை உருக்கிச்சாய்க்கவும், இலுப்பைநெய்யில்நாகத்தை-எ விசை உருக்கிச்சாய்க்கவும்.

பாஷாணவகைகள் சுத்தி.

கெந்தகச்சுத்தி.

நெல்லிக்கெந்தகத்தை ஆவின்பாலில் எ விசை உருக்கிச்சாய்த்து மருதம்பட்டைச்சாம்பலில்வைத்து ஒருஜாமமெரிக்கவும்.

இரசச் சுத்தி.

இரசத்தைக் கல்வத்திலிட்டு நாட்டுச்சர்க்கரையில் ஒருஜாம மறைத்துப் பின்பிரம்மராக்ஷசிச்சாற்றில்-க ஜாமமறைத்தெடுக்கவும்.

சங்குபாஷாணச்சுத்தி.

சங்குபாஷாணத்தை கற்சுண்ணாம்புக்குள்வைத்து சிறுநீரால் எ-விசைதாளித்துப்பின் ஒருசட்டியில் யானையின் சிறுநீர்விட்டு ஷை பாஷாணத்தைப்போட்டு மேல்மூடி-சயி நாள் சமாதியில்வைத்தெடுக்கவும.

கெவுரிசுத்தி.

கெவுரியை முலைப்பாலில்-ங-நாளூறவைத்துப்பின் ஷை பாலால் ச-ஜாமம் சுருக்கீயவும்.

லிங்கசுத்தி.

ஜாதிலிங்கத்தை-ங-நாள் முலைப்பாலிலூறவைத்துப் பின்கொட்டைக்கரந்தைச்சாற்றில்-ச-ஜாமம் சுருக்குதாக்கவும்.

தாளகச்சுத்தி.

தாளகத்தைக் கற்சுண்ணாம்புமத்தியில்வைத்து கேசரியின் சிறுநீரால் எ-விசைதாளித்துப் பின்பனங்கள்ளில்-ச ஜாமம் சுருக்கீய்ந்து செந்நாயுருவிச்சாம்பலில்-ச-ஜாமமெரிக்கவும்.

பூரச்சுத்தி.

பூரத்தைமுலைப்பாலால்-அ-ஜாமம் சுருக்கீய்ந்து அவுஷதங்களில் சேர்த்துக்கொள்ளவும்.

வீரச்சுத்தி.

கற்பூரத்தைத்துளைத்து அத்துளையில்வீரத்தைவைத்துகற்பூரத்தூளால்மூடி கொளுத்தியபின்னெடுத்து ஒருஓட்டில் கெந்தகத்தைப்

பொடித்துப்போட்டு அடியில்தீயிட்டு உருகிநிற்கும்போதுக்ஷீரத்தை மெதுவாய்ப்பிரட்டியெடுக்கவும்.

வெள்ளைப்பாஷாணசுத்தி.

பூநீறு, பொறித்தபடிகாரம், கற்சுண்ணநீறு இவைகளைச் சமன் கொண்டு ஒருபடி எலுமிச்சம்பழரசத்தில் க்ஷீ மருந்தை ஒரு-விரு சுனைடைபோட்டு ஒருநாள்வைக்க முறிந்துதண்ணீராகும், ஆகிய ஜெயநீரை அரைபலம்பாஷாணத்திற்கு சுருக்கீயவும்.

துருசுசுத்தி.

துருசைப்பீங்கானிலிட்டு வெடியுப்பு திராவகம்விட்டு-ரு-நாள் ரவியில்வைத்தெடுக்கவும்.

பால்துத்தம் சுத்தி.

பால்துத்தத்தைக் கிளிகட்டு கேசரியின் சிறுநீரில் ௩-நாளூறி ஆவின்நீரில்-௬-ஜாமமூறியெடுக்கவும்.

மனோசிலைசுத்தி.

மனோசிலையைக்காடியில் கிளிகட்டிஎரித்து வெள்ளாட்டுமூத்திரத்தில் டோலாந்திரமாக எரிக்கவும்.

நேர்வாளசுத்தி.

நேர்வாளத்தை மேதிச்சாணியில் கொதிப்பிக்கவைத்துப் பின் முளைபோக்கி உப்பு, புளி, மிளகாயில்கொதிக்கவைத்து விளக்கெண்ணெயில்வதக்கி எடுக்கவும்.

உபரசவகைகள் சுத்தி.

சிலாசத்துசுத்தி.

சிலாசத்தை நிம்பழச்சாற்றில் கொதிப்பிக்கவைத்துப் பின்வெள்ளெருக்கம்பாலில்-௩-ஜாமமூறவைத்தெடுக்கவும்.

கல்நார் சுத்தி.

எருமைக்கொம்பு கல்நாரைமேதியின்கோமயத்தில்-௩-நாளூறப்போட்டுப்பின் குஞ்சரத்தின்சிறுநீரில் கொதிக்கவைக்கவும்.

வெண்காரச் சுத்தி.

வெண்காரத்தை வங்காரவாசிச்சாற்றில்-௬-ஜாமமாட்டிப் புடம்போட்டெடுக்கவும்.

கல்மதச்சுத்தி.

கல்மதத்தை அமுரியிலும், கழுதைநீரிலும் கழுவியெடுக்கவும்.

பலகாரச்சுத்தி.

படிகாரத்தை வெள்ளாட்டுப்பாலிலும் ஆவின்பாலிலும் ஒவ்வொருஜாமம் ஊறிஎடுக்கவும்.

சிங்கிசுத்தி.

மான்கொம்பை எருமைக்கோமயத்திலும் அமுரியிலும் ஊறி எடுக்கவும்.

பவழச்சுத்தி.

பவழத்தை-ரு-நாள் சம்பீரச்சாற்றில் ஊறப்போட்டு எடுக்கவும்.

பலகரைச்சுத்தி.

பலகரையை நிம்பழச்சாற்றிலும், முசுமுசுக்கைச்சாற்றிலும் ஊறவைத்தெடுக்கவும்.

முரிவு தினுசுகள்.

பாஷாணமுரிவு.

மிளகு, வெண்மிளகு, நீலி, துளசி சிறுகீரை, பாகயிலை, அப்புக்கோவை, ஏரண்ட இலை, பசளை, சம்பீரஇலை, பிரமிஇலை முதலியவைகளாம்.

வீரமுரிவு.

நீலி, மிளகு, சிறுபசளை, எருமைவெண்ணெய், கடல்புளிப்பு, தென்னங்கள், நெருஞ்சிரசம் முத்தெண்ணை, தேங்காய்ப்பால், சோரைக்கிழங்கு, நல்லெண்ணை, கம்மாறுவெற்றிலை, பேய்ப்பீர்க்கு, பழரசம் முதலியவைகளாம்.

இரசகற்பூர முரிவு.

சாட்டரணைச்சாறு, துளசிச்சாறு, பாகலிலைச்சாறு, வெண்மிளகு, சம்பீரச்சாறு, மிளகுமுதலியவைகளாம்.

துருசு முரிவு.

சம்பழச்சாறு, புளித்தமோர், பொடுதலைச்சாறு, கையான்சாறு, காணிச்சாறு, இஞ்சி, தேன், சர்க்கரைமுதலியவைகளாம்.

கெந்தகமுரிவு.

ஆவின்நெய், ஆவின்மோர், ஆவின்பால் முதலியவைகளாம்.

நாபிமுரிவு.

ஆவின்நெய், வெண்மேஷநீர், சிறுகீரைமுதலியவைகளாம்.

இரசவேக்காட்டிற்கு முரிவு.

வெள்ளெருக்கன்வேர், கருந்துளசிவேர், வேலம்பட்டை முதலியவைகளைக் கியாழமிட்டுக்கொப்பளிக்கவும், படிகாரசலம்கொப்பளிக்கவும், பிறகு வெள்வேலம்பிசின், முருங்கைவேர், வெள்ளெருக்கன்வேர், இறங்கழிஞ்சில்வேர், சிவன்வேம்பு இவைகளைச்சமன்கொண்டு பொடித்துப் புகைகாட்டவும்.

பொது முரிவு.

அன்றி பாஷாணவகைகள்சேர்ந்த அவுஷதங்களை யுண்டவர்களுக்கு நாற்பதுநாள் மிளகுகியாழங்கொள்ள அவுஷதவேகங்கள் முறிந்து நாட்குநாள் மலத்தோடுவந்துவிடும்.

ஊழிக்காற்றென்னும் வாந்திபேதி விபரம்.

சாமளாஎன்னும் ஊழிக்காற்றுனது ஆகாயத்திலிருந்துமைபோலும், புகைபோலுமிறங்கி மானிடர்களின் சிரசிற்பட்டு உடனே உதிரத்தை முரித்து நீராக்கி இமைகொட்டுமுன் வாந்தி, பேதி, வயிற்றுவலி, கடுப்பு, நாவரட்சி, தேகநோக்காடு, களைத்தல், பிசின்போல் வியர்வைமுதலியவைகளை யுண்டாக்கி வெகுசீக்கிரத்தில் ஜன்னிவந்தெய்துமென்றறிக.

அன்றி கொம்பன், குடற்படுவன், அக்கரன்என மூவிதபேதிகளாக வமைந்தனவாம்.

கொம்பன்விவரம்.

கொம்பனுனவை இருகண்களைச்சார்ந்து மெய்மறந்து கருப்புநிரமானபேதியும், மஞ்சள்நிரம்யோன்றவாந்தியும்,பிசின்போல்வியர்வையும் நாவரட்சி, ஜன்னி, களை, விக்கல், கொட்டாவி, தேகமுழுமையும் குளிர்ந்திருத்தல்முதலியகுணங்களையுண்டாக்குமன்றி-௩ய-நாழிகையில் ஆவிநீங்குமென்றறிக.

குடற்படுவன்விவரம்

குடற்படுவனுனவை மார்டைச்சார்ந்து மஞ்சணிரமுள்ளபேதியும், பற்பலநிரமுள்ளவாந்தியும், செவியடைப்பு, மூர்ச்சை, அடிவயிறுநோக்காடு, உதிரசீதக்கழிச்சல், கைகால்முதலிய அவயவாதிகளில் சந்துநோதல்,நரம்புகள்வலித்தலாகிய குணங்களையுண்டாக்கி-௩-நாட்கள்சென்று ஆவிமுடிவுபெறுமென்றறிக.

அக்கரன் விவரம்.

அக்கரனுனவை நாபியின்கீழ்சார்ந்து ஊஷ்ணபேதிபோலும், செரியாமந்தம்போலும், சேருபோலும், திப்பிதிப்பியாகவும், வெண்

மையாயும், சாதஞ்சாதமாகவும் பேதியாகுமன்றி குடலிறைதல்,நெஞ்சுகுத்தல், வாய்க்குமட்டல், நாவரட்சி, கைகால்கள்கடுத்தல், வியர்வைதோன்றல், இளைப்பு, வயிர்பிறட்டல்முதலியகுணங்களையும் துர்நாற்றத்தையு முண்டாக்குமென்றறிக.

வாந்திபேதி நிவர்த்திஅவுஷதங்கள்.

சுத்திசெய்தவீரம், பூரம், லிங்கம், பாஷாணம், இரசம்,குடன், அபினி, சுக்குத்தூள், மிளகுதூள்; கஞ்சாவித்துதூள், குங்குமப்பூ, கஸ்தூரி, பச்சைகற்பூரம்,சித்திரமூலத்தூள்வகைக்கு விரு க, கெந்தி விரு-உ இவைகளைக்கல்வத்திட்டெட்டிவேர்கியாழத்தில் ஜாமம்-உ, கொடிவேலிக்கியாழத்தில் ஜாமம்-ந, சாராயத்தில் ஜாமம்-ச, கெஞ்சாக்கியாழத்தில் ஜாமம்-அ-ஆட்டி மிளகளவு குளிகைசெய்தியவும், அன்றி நாவரட்சிகண்டால் மாவிலிங்கப்பட்டை, முருங்கைப்பட்டை, புளியம்பட்டை, கொடிவேலிப்பட்டை, செந்நாயுருவி, செம்முள்ளி, தெங்குபிஞ்சு, வெள்ளெருக்கன்பூ. சிவனார்வேம்பு, அதிமதுரம், அக்கிராகாரம் இவைகளை நறுக்கிப்பாண்டத்திட்டு ச-படி ஜலம்வார்த்து அரைபடியாகச் சுண்டக்காச்சி ஒருவிருகனெடை கஸ்தூரிகலந்து கொஞ்சம் கொஞ்சமாகக்கொடுத்துவரவும்.

உ-வது மருந்து.

கெந்தகத்தைப்பொடித்து ஓட்டில்வைத்து அடியில்தியிட எரியும் அப்போது வீரத்தைமெதுவாய்ப் பிரட்டிஎடுத்து பொடித்துவைத்துக்கொண்டும் எட்டியின்வடவேரைச் சூரணித்தும் சமன்சேர்த்துக்கலந்து பணவெடைதேனில் இழைத்து உள்ளுக்குக்கொடுத்து தும்பைவேர்கியாழமிட்டு உடனேகொடுக்கவும்.

ந-வது மருந்து.

சிறுஅர மாம்பச்சரிசி, பொரித்தவெண்காரம்,பொற்றலைக்கையாணிலை, நாயுருவியிலை சமன்கொண்டு கடம்பையிலை இரட்டிசேர்த்து மூசாம்பரம் ஒன்றுகூட்டிக்கல்வத்திலாட்டி மல்துவரைப்பிரமாணம் குளிகைசெய்து குளிகைஒன்றைத் தேனில் அல்லது எட்டி, கெஞ்சாக்கியாழத்தில் தாக்கவும்.

மேற்கூறிய ஊழிக்காற்றென்னும் சாமளாதேவியாகிய வாந்திபேதியானதுமநுநீதிவழுவாதுசெய்கோலோச்சிசெய்யுமரசன்பாலும், சிவயோகியர்பாலு மணுகாதென்றறிக.

{ சசசஅ வியாதிகளுக்கு முதற்காரணமாகிய மனோவலியின் விவரம். }

நவநிதிகளைப் போக்கடித்ததாலும், மனதிற்கினிய மனையாளை இழந்ததாலும், தாமெண்ணியகாரியம பயன்படாமையாலும், தாய்,

தந்தை, தம்பி, தமையன், தோழன், சுற்றம் இவைகளைப்பரிகொடுத்த தாலும் இன்னும் அநேகவிதகஷ்டசாத்தியத்தினாலும் எண்ணியெண்ணிவாடி துக்கசாகரத்திலாழ்ந்தியதால் மூலாதாரத்திலிருந்து அக்கினிமீறி சிரசளவின்பாய்ந்து பித்தம்மேலிட்டு இருகண்களில் தாரை தாரையாய்நீர்வடிதலும், தேகநோக்காடும், படுக்கை பொருந்தாமையும், கொட்டாவி, சோம்பல், பெருமூச்சு, பிரலாபம், நித்திரைடங்கம், நினையாதவைகளை நினைத்துப்புலம்பல், சிலவேளை ஞானிபோலிருத்தல், சிலவேளை சிரித்தல், சிலவேளை அழுதல், சிலவேளை கோபித்தல், சிலவேளை தயிரியமாய்ப்பேசல், சிலவேளை ஒருவரோடு பேசுவதைப்போல் தானேபேசுதல் சிலவேளை பிணம்போலிருத்தல் பிரரைநிந்தித்தல், ஒருவர் சுபகாரியங்களைப்பேசுகையில் அசுபகாரியங்களாகக்கவனித்தல், கெட்டவிஷயங்களை நல்விஷயங்களாகநினைத்தல், யாதின்பேரிலும் பிரியப்படாமை, நடுவிரவில் எழுந்துட்கார்ந்து யோசித்தல், சற்றுநினைவிழத்தல், சிலவேளை மனந்திடுக்கிடல் சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம் துரியாதீதம்என்னும் பஞ்சாவஸ்தைகளுள்ளுமூன்று வெகுவாய்த்துக்கித்தல் இன்னும் பற்பல விகாரகுணங்களை யுண்டாக்குமென்று ஆன்றோர்களால் பற்பலசாத்திரங்களில் விரிவாய்ச்சொல்லியதை இங்ஙனம் சுருக்கமாய்க் கூறலாயிற்று.

அன்றிமேற்கூறிய மனோவலியானது-௬௬௬அ-வியாதிகளை வருவிப்பதற்கு தூண்டுகோலாயினதென்றும், இவை அவுஷதங்களால் நீங்காதென்றும் முன்னோர்களால் விவரிக்கலாயிற்று.

அக்கொடிய மனோவலி நீங்குவதெவ்விதமெனில், அவரவர்கொண்டகருத்துகள் எக்காலம்நிறைவேறுமோ அக்காலம் அம்மனோவலி அவரைவிட்டுநீங்குமென்றறிக.

இதுவரையில் நாடிகளினடைகளும், அந்நாடிகளால் விளங்கும் நோயின்சாரங்களும தக்கஅவுஷதங்களும், பொதுஅவுஷதங்களும், பத்தியபாகங்களும், சுத்திவகைகளும், சத்துருமித்துருசரக்குகளும், முரிவுதினுசுகளும், பஞ்சபூதசரக்குகளும், உப்புபுளி சரக்குகளும், நாதபிந்துசரக்குகளும் கட்டுவகைகளின்பரிட்சைகளும் அட்டலோக மாரணதினுசுகளும், எடைகள்குணமும் முடிவுபெற்றது.

இனிகுழந்தைகளுக்கு உண்டாகும் நோயின்குணமும், அதற்குத்தக்க அவுஷதங்களும் பத்தியபாகங்களும் அடங்கிய சிசுவாகடத்தில் சிலது சொல்லுவோமாக.

உ

கடவுட்டுணை.

சிசுவாகடத்திரட்டு.

மாதாபிதாவால் பிள்ளைக்குவரும்நோய்கள்.

தாய்தந்தையர்கள் புணர்ச்சிபேதங்களாலும், அவர்கள்செய்த கர்மாநுசாரங்களினாலும் உதிக்கும் குழந்தைக்கு மாந்தம், கணம், கரப்பான், தோஷம், அக்கரம், கிரந்தி, செங்கிரந்தி கருங்கிரந்தி, செவ்வாப்பு, பேய்த்தோஷம், பக்ஷிதோஷம், பாலகிரகதோஷம், குளிதோஷம், எட்சிதோஷம், புள்ளுதோஷம், தேரைதோஷம்; சோகை, காமாலை, வைசூரிமுதலியவைகள் வந்தெய்ததென்றறிக, அன்றி குழந்தைபிறந்தபிறகுதாய்முலைப்பாலாலும்குற்றம்வந்ததெனக் கூறினோம்.

மாந்தரோக உற்பத்தி.

எருமைப்பால், நெய், கதலி, தேங்காய், இளநீர், கடலை, வெல்லம், புளித்தமோர், மாங்கிஷம் கனிகள், மலைத்துவரை, உளுந்து, மொச்சை, புளியங்கொட்டை, உளுவை, வாளைமீன், கெண்டை, கிழங்குவகைகள் முதலியவை தாய்அருந்தி அம்முலைப்பாலை சேய்க்கு ஊட்டினதினால் மாந்தரோகம் வந்தெய்ததென்றறிக.

மாந்தரோகத்தொகைகள்.

வாதமாந்தம், பித்தமாந்தம், செறிமாந்தம், சேஷ்மமாந்தம், விஷமாந்தம், வாலைமாந்தம், சுரமாந்தம், நீர்மாந்தம், செரியாமாந்தம், கட்டுமாந்தம், பால்மாந்தம், துலையாமாந்தம், எரிமாந்தம், தலைமாந்தம், கணமாந்தம், வலிப்புமாந்தம், சுழிமாந்தம், மூக்குமாந்தம், ஜன்னிமாந்தம், ஊதுமாந்தம், வீக்கமாந்தம், எனஇருபத்தியொன்றாகவழங்கியதென்றறிக.

பொதுமாந்தரோகங்களின்குணம்.

குழந்தைகனமாயிருக்கும், பிரண்டையைப்போல் கால்கள்பின்னும், கண்கள்சிவக்கும், உடம்பில் நோய்காட்டும், கையில்தங்காது,

அழுகுரல்தாழ்ந்திருக்கும் கண்குழிந்திருக்கும், வயிறுகழியும் வாய் நாறும், கைகால்கள்குளிர்ந்துகாணும், முலையுண்ணாது, வாந்திபண்ணும், வாய், நாக்கு, உலர்ந்துகாணும், மயக்கமுண்டாம், பசியில்லாமல் காமவிகாரங்கொண்டவர்களைப்போல் சோர்ந்துகிடக்கும், சீதமும் மலமுங்கலந்துபோகும், கெட்டபால்போலும், தெளிந்ததண்ணீர்போலும் வயிறுகழியும், உள்ளங்கைகால்குளிர்ந்துகாணும், வெதும்பும், கண்சுழலும், தேகம்வியர்க்கும், கண்ணாடியைப்போல் முகமினுமினுப்பாயிருக்கும், பொதுமாந்தரோகங்களின்குணமென்றறிக.

அன்றி ஒவ்வொருவியாதியின் உற்பத்திகளும், அதனதன்தொகுப்புகளும், ஒவ்வொன்றின்குணங்களும், வியாதிகளுக்குத்தக்க பற்பலஅவுஷதபாகங்களும் தனித்தனிஎடுத்துச்சொல்ல இங்ஙனம் இடம்போதாமையால் சுருக்கமாய்ப்பொதுஅவுஷதங்களாக அடியிற் கூறுவோமாக.

குழந்தைகளுக்குப் பொதுஅவுஷதங்கள்.

மாந்தத்துக்கு பச்சிலைச்சாறு.

நொச்சி, பொடுதலை, நுணா, உத்தாமணி, இன்னான்கும் சமன்கொண்டிடித்துச் சார்பிழிந்து சற்றுஅடுப்பில்கொதிக்கவைத்து காலாழாக்குவீதம்-௩-நாள் காலையில்கொடுக்கவும், அன்றிமேற்கூறியதைப்போல் நாடோறும்வெவ்வேறுசெய்யவும்.

மாந்தத்துக்கு குழம்பு.

வெற்றிலைக்காம்பு-கக, வசம்புஐந்திடை, உள்ளி இரண்டிடை, திப்பிலி ஒருஇடை, இவைகளைவெதுப்பிஅரைத்து குழந்தைகளுக்கு தக்கபடி வெந்நீரிற்கலந்தீயவும்.

மாந்தத்துக்கு குடிநீர்.

ஓமம், உள்ளி, மிளகு, திப்பிலி இவைகளைப்பொடித்து துணியில்மூட்டைகட்டி நாழிநீரில்போட்டெட்டிலொன்றாய்க்காச்சிகொடுக்கவும்.

மாந்தத்துக்கு கியாழம்.

நுணா, நொச்சில் உத்தாமணி, கெச்சைக்காய்வேர் வகைக்குப் பிடி-க இவைகளைச் சட்டியில்கருக்கி நாழிநீர்விட்டு அடுப்பேற்றி ஓமம், வசம்பு, சுக்கு, மிளகு, பொடுதலைக்காய், திப்பிலி, இவைகளை வகைக்குஒருவிராகனெடைகொண்டு நல்லெண்ணெயிற்சிவக்கவறுத்து

பொட்டணமாய்க்கட்டி ஷை நீரில்போட்டுக்காய்ச்சி ஒருசங்குகொடுக்கவும்.

மாந்தத்துக்கு குளிகை.

வாய்விளங்கம், சுட்ட ஆமைஓடு, மிளகு பொடுதலேக்காய், வசம்பு, திப்பிலி, கழல்பருப்பு இவைகளைச்சமன்கொண்டு பொடுதலைச்சாற்று லாட்டிப் பட்டாணிப்பிரமாணம் குளிகைசெய்யவும்.

அநுபானம்.

ஷை குளிகை ஒன்றைக் கண்டங்கத்திரிக்கியாழத்திடை மாந்தமும், உத்தாமணிக்கியாழத்தில் வயிர்பொருமலும் வாந்தியும், ஓமக்கியாழத்தில் கழிச்சலும் தேனில் வாதசீதளமும், முலைப்பாலில் மூக்குமாந்தமும், இஞ்சிச்சாற்றில் மயக்கமும் நீங்கும்.

உளைமாந்தம்; உட்சுரம், எலும்புருக்கிக்குமருந்து.

புல்லுருவியும், கருப்புக்கட்டியும் எள்ளெண்ணெயில்அறைத்து சுண்டைக்காயளவு கொடுக்கவும்.

சுழிகணம், உப்பிசம், கோழைக்கட்டு, இளைப்புக்கு மருந்து.

குப்பைமேனிச்சாற்றால் உப்பைஅறைத்து வேப்பெண்ணெயில் மத்தித்து இரண்டுகாசெடை-ங-நாள் கொடுக்கவும்.

மாந்ததோஷம் வலிப்புமலக்கட்டுக்குமருந்து.

நல்வேளைஇலை, வசம்பு, வள்ளியிலை சமன்கொண்டு இடித்து வெதுப்பிப்பிழிந்து குழந்தைகளுக்குத் தக்கபடி-வ-உ-ஆ-க-சங்கு வீரம் கொடுக்கவும்.

மாந்தம், வயிறுவலி, செரியாமாந்தத்துக்கு மருந்து.

உத்தாமணிச்சாறுஆழாக்கில் வசம்பு, திரிகடுகு, கோரோசனை இவைகள் வகைக்கு விராகனெடை-உ, உத்தாமணிக் கொழுந்து விராகனெ-ச ஒன்றுசேர்த்தறைத்து தக்கபடிகொடுக்கவும்.

மாந்தவலிப்பு காக்கைவலிப்புக்கு மருந்து.

கொடிவேலிவேர்பட்டை, சங்கன்வேர்த்தோல், எருக்கன்வேர் பட்டை வகைக்கு விராகனெ-ங இவைகளை வெந்நீர்விட்டு நன்றாயறைத்துக்கலக்கி வடிகட்டி குங்குமப்பூ ஒருவிராகனெடைபோட்டு தக்கபடி கொடுக்கவும்.

{ மாந்தவீக்கம், விஷவீக்கம், சுரம், நீர்க்கட்டுக்கு கியாழம். }

பூவரசம்பழுப்பு, சங்கன்வேர்ப்பட்டை சீந்திற்கொடி, துளசி, சுக்கு, வரமுள்ளி, முருங்கையீர்க்கு, நீர்முள்ளிவேர், சார்வளைவேர், பிரமியிலை, மருள்கிழங்கு, தூதுவேளை, சிறுகுறிஞ்சான்வேறு, சத்தி சாரணைவேர், கருஞ்சீரகம் இவைகளை வகைக்கு விரா-ரு-கொண்டு படி ஜலம்விட்டு அழாக்குஜலமாகக் காய்ச்சி-௩-நாள் ஆறுவேளை கொடுக்கவும்.

உப்பல்மாந்தத்துக்கு மருந்து.

குப்பைமேனியும் உப்பும்கசக்கி சார்பிழிந்து இரண்டுகாசெடை வீதம் ௩-நாள் கொடுக்கவும்.

மாந்தப்பொருமலுக்கு எண்ணை.

அரைபடிவிளக்கெண்ணையில் பேய்மிரட்டி, பொடுதலை, பிரமியிலை, வேலி, துளசி, துத்தி, அகத்திஇலை வகைக்குசாறுபடி-வ, பச்சைமஞ்சள் சாறுபடி-வீசம் சேர்த்துக்கலக்கி ஓமம், சுட்டஆமையோடு, உள்ளி, வசம்பு வகைக்குப்பலம்-வ இடித்து ஷை எண்ணையுடன்கலந்து பதமாகக்காய்ச்சி அந்த எண்ணையில் ஒரு காசெடை எடுத்து வெண்காயம் பணவெடைபொறித்துப்போட்டு பெருங்காயம் பணவெடை இழைத்துக்கலந்துகொடுக்கமுதல்நாள்பேதிஅதிகமாகக் கிளறி மறுநாள்முதற்கொண்டு பொருமல், சத்திமாந்தம் முதலியவை நீங்கும்.

அமுர்தாதிக்குளிகை.

அதிமதுரம், சண்பகப்பூ, ஏலம், கோரோசனை, சாத்திரபேதி, வெட்டிவேர், கோஷ்டம், மாசிப்பச்சை, விலாமிச்சுவேர் இவைகளைச் சமன்கொண்டு ஆதண்டைச்சாறுவிட்டு ஒருஜாமமாட்டி, குன்றியளவுண்டைசெய்து ஒருவுண்டையை முலைப்பாலில்தாக்க நீர்க்கணமாந்தம்-அ, குடற்படுவன், நீர்ப்பாடு, கறப்பப்பாடு, நாவரட்சி, சுரம், குலை எரிவு, வெப்பு தோஷம்முதலியவைகள் நீங்கும்.

கொதிப்பு கணத்துக்கு எண்ணை.

சித்தாமணக்குபடி-க, சம்பழச்சாறு, இலந்தைச்சாறு, நெல்லிச்சாறு வகைக்குபடி-வ ஒன்றுசேர்த்துக் கருஞ்சீரகம் பலம்-வ பொடித்துப்போட்டு-எ-சுத்திசெய்த கற்றாழைச்சோற்றை ஒருபலம் விட்டு எல்லாம் ஒன்றாய்க்கலந்து அடுப்பேற்றி கற்றாழைச் சிவந்த சமையத்தில் காச்சிஇறக்கி உச்சிக்கரண்டி வீதம் அந்திசந்திகொடுக்க

கொதிப்பு கணம்-மிஅ, கணச்சூடு, அத்திசுரம், அஸ்திவெட்டை, யேகவகை, பித்தவெட்டை முதலியவைபோகும் இவ்வெண்ணெ குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும் ஆகும்.

எரிகணத்துக்கு எண்ணெ.

தென்னங்குறும்பைச்சாறு, தகரைச்சாறுவகைக்குபடி-வ,பழம்பாசிச்சாறுபடி-உ, உள்ளி, குமரிவேர், நுணவகைக்குச் சாறுபடி காலேஅரைக்கால் எள்ளெண்ணெ படி-க, இவைகளை ஒன்றுபடுத்தி ஏலம், இலவங்கப்பட்டை, கோஷ்டம், நற்சீரகம், சந்தனம் மதுரம் வகைக்கு கழஞ்சி உ பொடித்துப்போட்டு எண்ணெயைக் கடுகுபதத்திற்காய்ச்சி இறக்கிவடிகட்டி காசெடை உள்ளுக்குக்கொடுக்கவும்.

முக்குகணத்திற்கு எண்ணெ.

நாழிஎள்ளெண்ணெயில் முலைப்பால், நிம்பச்சாறு குமரிச்சாறு, கண்ணிச்சாறு வகைக்குப்படி-வ சேர்த்துக்கலக்கி வில்வம், விலாமிச்சு, விஷ்ணுகாந்தி, சோரைக்கிழங்கு, ஓரிலைத்தாமரை, முருங்கைவித்து, துளசிவித்து கோங்குபிசின், ஆவாரைப்பிசின், கோஷ்டம், மதுரம், அக்கிராகாரம், தாளிசம், வகைக்குப்பலம்-க-வறுத்துப்பொடித்து ஷை எண்ணெயிற்போட்டுக்கடுகுபதமாகக்காச்சி காசெடைஉள்ளுக்குக்கொடுத்து இண்டந்தண்டை ஊதிநறுக்கி சீரகத்தைப்பொடித்துப்போட்டு தண்ணீர்படி-வ வார்த்து எட்டிலொன்றாகக்காச்சியாழம்வார்க்கவும்.

முக்கல்வயிற்றுக் கடுப்புக்கு.

பரித்திப்பிஞ்சு ஜாதிக்காய், கிராம்பு விடையம், அரத்தை, ஓமம், இலங்தைவித்து இவைகளை சமன்கொண்டு பொன்வறுப்பாக்கிச்சூரணித்து திரிகடிப்பிரமாணம் கன்னிடையன் தயிரில்கலந்து கொடுக்கவும்.

சீதக்கடுப்புக்கு மருந்து.

பருத்திவித்து,ஜாதிக்காய் நன்னாரிவேர், வட்டதிப்பிலி, சீரகம், கிராம்பு இவைகளைச்சமன்கொண்டு பொன்வறுப்பாக்கிச்சூரணித்துச் சிறுபுள்ளடிச்சாற்றிலாட்டி பட்டாணியளவுகொடுக்கவும்.

பதினெட்டுகணம், வெட்டைசுரம்
உலர்ந்ததேகத்திற்குஎண்ணெ.

எள்ளெண்ணெபடி-க, எ-சுத்திசெய்தகற்றாழைச்சோறு தேங்காயளவு ஒன்றாகலந்து வெந்தயம் ஒருகாசெடை பொடித்துப்போட்டு

கூட ஈருள்ளி ஒருபலம்அரிந்துசேர்த்து அடுப்பேற்றி மெழுகுபத மாகக்காச்சி ஒருஉச்சிக்கரண்டிவீதம் கொடுக்கவும்.

{ தோஷம்-கூ, மாந்தம்-கூ, தெற்கத்துக்கணமுதலாகிய ௰அ-கணத்திற்கும் எண்ணை. }

ஈயத்தண்டு, தூதுவளை, சங்கங்குப்பி, உத்தாமணி, பூவரசு, குப்பைமேனி, ஆடாதோடை, சத்திசாரணை, பூலா, நரிபயற்றன், பிரமி, வேளை, கற்றாழை இவைகளின்வேர்சமன்கொண்டு இடித்துப் பிழிந்தசாறுபடி-க, விளக்கெண்ணைபடி-உ ஒன்றுபடுத்தி கருஞ்சீர கம், ஓமம், பூண்டு கோரோசனை, சண்பகம், வசம்பு, ஜாதிக்காய், தான்றிக்காய் வகைக்குப்பலம்-வ பொடித்து டி எண்ணையிற்கலக்கி பதமாய்க்காச்சிவடித்திறக்கி உச்சிக்கரண்டிவீதம் கொடுக்கவும்.

கணம்-௰அ-க்கு நெய்.

மாதளை சமூலம்வாங்கி இடித்துச் சார்பிழிந்து அரைபடி சடா யில்விட்டு சீந்தில்சர்க்கரை பலம்-௰-சேர்த்துக்குழம்பாக்கி பசுவெண் ணை பலம்-உ௰-கூடவிட்டு பதமாய்க்கிண்டி ஜாதிக்காய், ஜாதிபத்திரி, ஏலரிசி வகைக்குப் பலம்-வ சூரணித்துப்போட்டு நெய்பதமாய்க்காய் ச்சி இறக்கிவடிகட்டி உச்சிக்கரண்டிவீதம் உள்ளுக்குக்கொடுக்கவயிற் றிரைச்சல், கழிச்சல், வெட்டை, கணம்-௰அ-ம் போகும்.

அதிமதுரமாத்திரை.

மதுரம் விடையம், ஜாதிக்காய், மாதுளம்பூ, சீரகம் இவைகளைச் சமன்கொண்டு பொன்வறுபபாக்கிச் சூரணித்து மாதுளம்பழச்சார், அல்லது புளியாரைச்சாற்றில் ஒருஜாமமாட்டி தூதுளங்காய்ப் பிர மாணம் குளிகைசெய்துகொடுக்க வெப்புக்கழிச்சல்தீரும்.

அமிர்தசஞ்சீவிக்குளிகை.

சாத்திரபேதி, கோஷ்டம், ஏலம், இலவங்கம், சந்தனம், கடுகு ரோகணி, இலுப்பைப்பூ, நன்னாரி, விலாமிச்சு, வெட்டிவேர், திப் பிலி, மதுரம், கோரைக்கிழங்கு, முந்திரிகை, பேரீச்சு இவைகளைச் சமன்கொண்டு கருப்பஞ்சாற்றாலாட்டிக் கடலைப்பிரமாணம் குளிகை செய்து முலைப்பால், வெந்நீரில்தாக்க அஷ்டகணங்கள், சுரம், தாகம் முதலியவைகள் நீங்கும்.

பூபதிமாத்திரை.

சந்தனம், நன்னாரி, புளியன்வித்துஓடு, சாத்திரபேதி, கோரைக் கிழங்கு ஓரிலைத்தாமரை, சிறுகீரை, நாயுருவி, வல்லாரை, ஜாதிக்

காய், ஜாதிபத்திரி, செண்பகம், கல்நார், திப்பிலி, இருவாட்சி,நற்சீரகம், கருஞ்சீரகம்,இலவங்கப்பட்டை,ஏலம்,உருத்திராட்சம்,கோரோசினை, பொன்னுங்கண்ணிவேர் குப்பைமேனிவேர் இவைகளைச்சமன்கொண்டு சூரணித்து வல்லாரைச்சாறும், காணிச்சாறும்சமன்கொண்டு ஷ சரக்குகளைநன்றாயாட்டி தேத்தான்வித்தளவு குளிகைசெய்து தக்க அநுபானங்களிலீய அட்டகணம், மாந்தம், பொருமல் முதலியவைநீங்கும்.

பேதிக்கு அமிர்தசஞ்சீவி லிங்கக்குழம்பு.

ஜாதிலிங்கம்-விரா-உ, வெண்காரம்-விரா-உ, ஆமணக்குவித்து விரா-ச,வாளம்-விரா-அ இவைகளை நன்றாயாட்டி குன்றியளவுண்டை செய்து குளிர்ந்தநீரில்தாக்க பேதியாகும், வெந்நீர்கொடுக்க பேதிகட்டும். வாதம், குன்மம், கரப்பன்முதலியவைகள்போகும், அன்றிகுழந்தைகளுக்குச்சொல்லும் அவுஷதங்களையெல்லாம் இந்நூலிற்கூறியவாறுபோல் சுத்திசெய்துக்கொள்ளவும்.

பேதிபூபதிமாத்திரை.

இரசம், சுக்கு, வெண்காரம், கெந்திவகைக்குப் பலம்-வ.நேர்வாளம் பலம்-க இவைகளைக் குளிர்ந்தநீராலாட்டிப் பனிப்பயரளவு குளிகைசெய்து குளிர்ந்தநீரில்தாக்கப் பேதியாகும், வெந்நீர்கொடுக்கப்பேதிகட்டும்,ஊதுமாந்தம்,பொருமல் வாதம்முதலியவைபோகும்.

ஏலாதிமாத்திரை.

ஏலம், மாசிக்காய், திப்பிலி. கோரோசனை,கோஷ்டம் மாஞ்சில், சீரகம், கருஞ்சீரகம், அக்கிராகாரம் இவைகள் வகைக்குப்பலம்-வ, பொன்வறுப்பாக்கிச்சூரணித்து முலைப்பாலால்-உ-ஜாமமறைத்து கடலைப்பிரமாணம் குளிகைசெய்து முலைப்பாலில்கொடுக்க கணக்காச்சல் நீங்கும்.

சட்டுவாதிமாத்திரை.

ஜாதிக்காய், ஜாதிபத்திரி, இலவங்கம், ஏலம், மதுரம், விடயம், அபினி கஞ்சா, குராசானிஓமம், கோரைக்கிழங்கு, வெந்தயம், சீரகம், சிறுநாகப்பூ, புளியாரை,காட்டாத்தி, மாதளம்பிஞ்சு, வாழைப்பூ வகைக்குப்பலம்-க இவைகளை இடித்துச்சூரணித்து ஆவின்பாலில் பிட்டுவைத்து வாழைப்பூச்சாற்றாலாவதுமாதளம்பழச்சாற்றாலாவது ஆட்டி மிளகுப்பிரமாணம் குளிகைசெய்து சர்க்கரையில்தாக்க பேதிகட்டும்.

கற்பூராதிமாத்திரை.

பச்சைகற்பூரம், கெந்தி, இந்துப்பு, லவங்கம், ஜாதிக்காய், ஜாதி பத்திரி வகைக்குகழஞ்சி க, இவைகளை கிம்பழச்சாற்ருலாட்டி உளுந் தளவுகுளிகைசெய்து இஞ்சிச்சுரசம், சர்க்கரை, சுக்கில் குளிகைஒன் றைத்தாக்க மாங்கிஷசுரம்முதலாகிய சகலசுரங்களும் விட்டோடிப் போம்.

கோடாசுழிமாத்திரை.

கோரோசனை-விரு உ,கடுகுரோகணி-விரு-க,நேர்வாளம்-விரு-க இவைகளை முலைப்பாலாலாட்டிப் பயறளவு குளிகைசெய்து குளிகை ஒன்றை இஞ்சிச்சாற்றிலிட வாதசுரமும் முலைப்பாலில் பித்தசுரமும் ஆடாதோடை கண்டங்கத்திரிகியாழத்திலிட சிலேற்பனசுரமும்தூது வளைப்பிட்டவியலில் சன்னிசுரமும்நீங்கும்.

கோரோஜனை மாத்திரை.

மாசிக்காய், திப்பிலி, கோஷ்டம், கருஞ்சீரகம், அக்கிராகாரம், அரத்தைவகைக்கு-விரு-உ, கோரோசனை விரு சு இவைகளைமுலைப் பாலால் ஒருஜாமமாட்டி பயறளவுகுளிகைசெய்து பாவையர்பாலில் குளிகைஒன்றைதிட்ட மாந்தகணம், ஜன்னி,பொருமல், சீதளம் முத லியவைபோம்.

சஞ்சீவிக் குளிகை.

நாபி, கருநாபி, வாலரசம், கெந்தி, வெண்காரம், சுக்கு, தான் றிக்காய்,மிளகு,திப்பிலி வகைக்குகழஞ்சி-க, வாளம்கழஞ்சி-டு இவை களைக் கையாந்தகரைச்சாற்ருல் நாளொன்றுக்குஒருஜாமமாக-எ-நாள் ஆட்டி குன்றியளவு வுண்டைசெய்து குளிகைஒன்றை ஜாதிக்காய்ச் சூரணத்தில்தாக்க மூலவாய்வும், சிறுநீரில் பற்பலவாய்வுகளும், எலி மிச்சம்பழச்சாற்றில் விஷங்களும், நொச்சிச்சாற்றில் மூலம், வலி, குன்மமும் முருங்கைப்பட்டைச்சாற்றில் சூலைரோகமும், வெண் மரிப்பாலில் சயரோகங்களும், மருதான்றிச்சாற்றில் ஐவகைப்பிர மியமும், விளக்கெண்ணெயில் மலச்சிக்கலும், சீந்தில்சாற்றிலிட எரி குன்மமும் நீங்கும்.

விரோசன சண்பகப்பூமாத்திரை.

ஏலம், இலவங்கம், கோஷ்டம், கடுகுரோகணி வகைக்குப் பலம்-வ, சண்பகப்பூ பலம்-க வாளம் பலம்-உ இவைகளை வெந்நீர் விட்டரைத்து மிளகளவு குளிகைசெய்து தேன்,சுக்குகியாழத்திலிட வும் பேதியாகும். வசம்பைச் சுட்டுக்கொடுக்கபேதிகட்டும்.

இரசச்செந்தூரமாத்திரை.

இரசச்செந்தூரம் கடுக்காய் தான்றிக்காய், நெல்லிக்காய், சுக்கு; மிளகு, திப்பிலி, குங்குமப்பூ, கஸ்தூரி ஏலம், கோரோசினை வகைக்கு பலம்-வ, லவங்கம் விரா க இவைகளைக் கருநொச்சிச்சாறுவிட்டு ஒரு ஜாமமாட்டி சிறுபயறளவுகுளிகைசெய்து துளசிச்சாற்றிலிட மாந்தம், கணசுரம், வயிற்றுப்பல் முதலியவைநீங்கும்.

கஸ்தூரிமாத்திரை.

கஸ்தூரி விரா க, குங்குமப்பூ விரா-உ, கோரோசினை விரா-ஈ இவைகளை முலைப்பாலாலாட்டி குன்றியெடை குளிகைசெய்து தக்க அநுபானங்களிலிட தோஷசன்னி மாந்தசன்னி, பித்தசுரம், வாந்தி முதலியவைநீங்கும்.

இராமபாணக்குளிகை.

மஞ்சள், ஜாதிக்காய், சுக்கு, மிளகு திப்பிலி, இலவங்கம், கடுகு ரோகணி, மரமஞ்சள், நாபி இவைகளைச் சமன்கொண்டு சூரணித்து எலுமிச்சம்பழச்சாறுவிட்டு-சு ஜாமம் விடாமலாட்டிப் பயறளவுகுளிகைசெய்து தேன் முலைப்பாலில்தாக்க சகலசுரங்களும், சன்னிமுதலியதும்நீங்கும்.

பச்சைகற்பூரமாத்திரை.

பச்சைகற்பூரம், இலவங்கப்பட்டை, ஜாதிக்காய் வகைக்கு கழஞ்சி-உ, சுத்தித்தவாளம் கழஞ்சி சு இவைகளைக் கற்றாழைச்சாற்றாலாட்டி உளுந்துபிரமாணம் குளிகைசெய்து சர்க்கரையில் குளிகை ஒன்றைத்தாக்க சகலசுரங்களும் மூன்றேமுக்கால்நாழிகையில் விட்டோடிப்போம், அன்றி வெவ்வேறுவியாதிகளுக்குத்தக்கஅநுபானங்களிலிட மற்றவியாதிகளும் நீங்கும்.

பாலசஞ்சீவிமாத்திரை.

வெண்காரம் துத்தம், கோரோசினை, கொள்ளுக்காய், வேளை, கடுகுரோகணி வகைக்குகழஞ்சு-ஈ இவைகளை அகத்தியிலைச்சாற்றால் ஒருஜாமமாட்டி சிறுபயறளவுண்டைசெய்து ஜாபத்திரிச் சூரணத்திலும், பனைவெல்லத்திலும், வெந்நீரிலும்தாக்க கணமாந்தம், வயிற்றுளைவு, சன்னிசுரம் முதலியவைநீங்கும்.

குருமாத்திரை.

சண்பகப்பூ விலாமிச்சுவேர், கோஷ்டம், ஏலம், கோரோஜினை, சாத்திரபேதி, மதுரம், வெட்டிவேர், மாசிப்பச்சைவகைக்கு கழஞ்சி-க

இவைகளை வெட்டிவேர்க்கியாழத்தில்ஒருஜாமமாட்டி குன்றியளவுண்டைசெய்து மாத்திரைஒன்றை முலைப்பாலிலாவது, வெந்நீரிலாவது இழைத்துக்கொடுக்க மாந்தம்முதலியவைகள் நீங்கும்.

பூரமாத்திரை.

சுத்திசெய்தபூரம் பலம் உ, இலவங்கம், ஏலம், வசம்பு, சீரகம், மாசி, அதிவிடயம் வகைக்கு பலம்-வ இவைகளைமாசிப்பத்திரிவேரின் சாற்றால் ஒருஜாமமும், விஷ்ணுகரந்தைச்சாற்றால் ஒருஜாமமுமாட்டி கொத்துமல்லியளவு குளிகைசெய்து, குளிகைஒன்றை தேன், முலைப்பாலில்தாக்க மாந்தரோயங்கள் யாவும்நீங்கும்.

வில்வாதிமாத்திரை.

பச்சைகற்பூரம், இலவங்கம் வால்மிளகு, சிறுநாகப்பூ, கடுகுரோகணி, ஏலம், சடாமாஞ்சி, சுக்கு, சீரகம், ஆலம்பருப்பு இவைகளைச் சமன்கொண்டு பொற்றலைபின்சாற்றால்-ரு-ஜாமமாட்டிஒன்பதுநாள் மிளகளவுகுளிகைசெய்து தேன்முலைப்பாலில்தாக்க நாட்பட்ட மந்தசுரம் முதலியவைபோம்.

விழுங்குமாத்திரை.

சுத்திசெய்தஜாதிலிங்கம், பூரம், ஏலம் பூங்காவி வகைக்கு பலம்-வ இவைகளைக் கோதும்பைக்கஞ்சியால் இரண்டுஜாமமாட்டி, பயறளவுண்டைசெய்து சாதத்திலாவது, மாசிப்பத்திரி கியாழத்திலாவது தாக்க செவ்வாப்பு, கரப்பான், மாந்தம்முதலியவைநீங்கும்.

வேறு ஏலாதிமாத்திரை.

ஏலம், இலவங்கம் மதுரம், வெட்டிவேர், சுக்கு, நன்னாரி மூந்திரிகை, பேரீச்சு, விலாமிச்சு, கோரோசினை, தாளிசப்பத்திரி, கிலப்பனை, சடாமாஞ்சில், சந்தனம், தேவதாரம், திப்பிலி, இலுப்பைப்பூ, வகைக்குகழஞ்சு-க இவைகளைச்சூரணித்துக் கடுகுரோகணிக் கியாழத்தாலாட்டிக் குன்றிமணிப்பிரமாணங் குளிகைசெய்துநிழலுலர்த்தி மாத்திரைஒன்றை முலைப்பாலிலிட பற்பலமாந்தகணங்களும், முதியார்கூந்தல்கியாழத்திலிட பற்பலஜன்னிவகைகளும் நிவர்த்தியாகும்.

பாசுபதக்குளிகை.

ஜாதிக்காய் இலவங்கம், ஓமம், இருசீரகம், சுக்கு, திப்பிலி, கஸ்தூரிமஞ்சள், வசம்பு, பெருங்காயம் இவைகளைச் சமன்கொண்டுவெள்ளைகாக்கணன் வேர்ப்பட்டை ஒன்றுசேர்த்து வெந்நீரால் ஒருஜாமமாட்டி சிறுசுண்டைக்காயளவு குளிகைசெய்து குளிகைஒன்றை வெந்

நீரில்-எ-நாள்தாக்க சளி இருமல், கக்கல், காய்ச்சல், அள்ளு,சன்னி தோஷம், வலி, விஷங்கள் மந்தம்,வயிற்றுநோவு,பொருமல், இரைச்சல் முதலியவைகளீங்கும்,பத்தியம் உப்பாகாது வெந்நீர்ஜாதம் தாயருந்தவும்.

வேறு பாலசஞ்சீவிமாத்திரை.

கஸ்தூரி, இலவங்கப்பத்திரி, செவியம், திப்பிலி அதிவிடையம், கருஞ்சீரகம் அக்கிரகாரம், கடுகுரோகணி, ஜாதிக்காய், ஜாபத்திரி, சற்கடகசிங்கி குராசாணிஓமம், கஸ்தூரி, கோரோசினை, குங்குமப்பூ, பூரம் இவைகளைச் சமன்கொண்டு இஞ்சிச்சாற்றில் ஒருஜாமமும், கையான்சாற்றில் ஒருஜாமமும், நாரத்தங்காய்ச்சாற்றில் ஒருஜாமமும் நன்றாயாட்டிப் பயறளவுகுளிகைசெய்து முலைப்பால், தேன், இஞ்சிச் சாற்றில்தாக்க எட்டிதோஷம், நீர்ப்புள்ளுதோஷம், பரவைதோஷம், நளிர்ச்சுரம், கழிச்சல், இருமல், ஈளை, காசம், கணம், மாந்தம், செவ்வாப்பு முதலியவைகளீங்கும்.

அடைக்கியாழம்.

கிம்பழச்சாற்றில்-ரு-நாளூறப்போட்டு சுத்திசெய்த செங்கல்சிட்டம் பலம்-அ, மாயிலை, நீர்முள்ளி, கீழ்க்காய்நெல்லி,கரிசலாங்கண்ணி வகைக்கு பலம் ரு,சீரகம் பலம்-க இவைகளைநறுக்கிப் பாண்டத்திட்டு அ படி நீர்விட்டுச் சுண்டக்காய்ச்சி அடைக்கியாழமாக்கி அந்திசந்தி கொடுக்க பாண்டு, சோகை, காமாலை முதலியவைகள் நீங்கும்.

மசாரநோய்க்குநெய்.

செந்நாயுருவிவேர், குப்பைமேனிவேர், கொழிஞ்சிவேர், தாதுவேளைவேர், வசம்பு, சுக்கு, மஞ்சள் இவைகளை ஆவின்பாலாலாட்டி ஆவின்நெய் உழக்கில்கலந்துமெழுகுபதமாகக்காய்ச்சி உச்சிக்கரண்டி வீதம்கொடுக்க மசாரநோய்நீங்கும்.

மாந்தகோடாரி எண்ணை.

ஆடுதிண்டாப்பாளை, நல்வேளை, மணித்தக்காளி, கழற்சி, துளசி, நீலி வகைக்குஇலைச்சாறு படி அரைக்கால் ஆவின்நெய்படி-வ ஒன்றாய் சேர்த்து கஸ்தூரிமஞ்சள் கோஷ்டம், கருஞ்சீரகம், கடுகுரோகணி வகைக்கு விராகனெடை பொடித்துப்போட்டுக் கடுகுபதமாகக்காய்ச்சி வடி செய்து அந்திசந்திகாசெடை உள்ளுக்குத்தாக்க சகலமாந்தவகைகளும்நீங்கி நல்லஇரத்தப்பரவி குளிர்ச்சிதந்து குழந்தையின் தேகபுஷ்டியுண்டாம்.

வல்லாரைநெய்.

வல்லாரைவேர் பலம்-ரு, இடித்துப் பாண்டத்திட்டு-அ-படி ஜலம்வார்த்து ஒருபடியாகச்சுண்டக்காய்ச்சி, ஒருபடி ஆவின்நெய் கலந்து சுக்கு ஏலம் ஜாதிக்காய்,தாளிசப்பத்திரி, ஜாதிபத்திரி, கோஷ்டம், விலாமிச்சு, வெட்டிவேர், நற்சீரகம், தான்றிக்காய், தக்கோலம், வெங்காரம், வில்வம் சண்பகப்பூ, குங்குமப்பூ, கஸ்தூரிமஞ்சள் இம்பூரா, கச்சோலம், மல்லி, கடுகுரோகணி வகைக்கு விரா-உ இவைகளை ஆவின்பாலாலாட்டி ஷ நெய்யிற்கலந்து நெய்பதமாகக்காய்ச்சி உச்சிக்கரண்டிவீதம்கொடுக்க பேரர்மாந்தம், தோந்தமாந்தம்,மேகம், காசம், விஷநோய், ஈளை, இருமல், இரைப்பு, மூலகணம், உட்சுரம், சத்தி சுவாசசுரம் முதலியவைநீங்கும், இவை சிறுவர்களுக்கும் பாலியர்களுக்கும் கொடுக்கலாம்.

இனிப்புச்சுகபேதிக்குழம்பு

ஓமம், சுக்கு, மிளகுவகைக்கு விரா-ந, கடுகுரோகணி பலம்-ந இவைகளைச்சூரணித்து, ரஸ்தாளிவாழைப்பழம் பலம்-ய, திராட்சப்பழம், கற்கண்டுவகைக்குபலம்-ரு, சுத்திசெய்தவாளம் பலம்-ரு,கடுகுநெய் பலம்-க, ஆவின்நெய் பலம்-உ, மலைத்தேன் பலம்-ரு இவைகளை ஒன்றுசேர்த்து கல்வத்திலிட்டு நாற்சாமம்நன்றாயாட்டி சற்சாடியில்விட்டு காற்றுபோகாமல் கார்க்கிட்டுமூடி, பணவெடைகுழந்தைகளுக்கு அப்பத்தில்தடவிகொடுக்கபேதியாகும், பேதிமீறினல் வசம்பைச்சுட்டு தேனிலிழைத்துக்கொடுக்கவும். இவைபெரியவர்களுக்கும் பெண்களுக்கும், கெற்பஸ்திரீகளுக்கும் ஆகும்.

வச்சிரகண்டிலேகியம்.

மரனப்பூ, காட்டாத்திப்பூ, வால்மிளகு, சுக்கு, அதிவிடயம், கசகசா, இலவங்கம். ஏலம் வகைக்கு பலம்-க,இவைகளைச்சூரணித்து பனைவெல்லம் பலம்-ய, நல்லஜலம் படி உ, கறைத்து அபினி, கெஞ்சா வகைக்கு விரா-க, அறைத்துக்கலக்கிப் பாகுபதத்தில் ஷ சூரணத்தைக்கொட்டிக்கிளறி ஆவின்நெய்படி-வ-சேர்த்துக்கிண்டி இறக்கி தேன் பலம்-ரு-விட்டு சுண்டையளவு லேகியஞ்செய்து இருவேளை கொடுக்க மாந்தம், சன்னி, காச்சல், அதிசாரபேதி, முறைக்காச்சல், அட்டகணம், பொருமல், விம்மல், இருமல், கோழை, சுவாசகாசம், ஈளை, இரைப்பு, சத்தி, மூர்ச்சை, கரப்பன், மூலம் முதலியவை நீங்கும்.

வெந்தயக்களி.

வெந்தயம் பலம்-க, ஆவின்பால்படி க-சேர்த்து நன்றாய்வெந்த பிறகு அரைவீசைசீனிபோட்டு தக்கநெய்விட்டுக் குட்டாமல், கருகா

மல் பதமாய்க்களிபோலக்கிண்டி கெச்சைக்காயளவு அந்திசந்திகொடுக்க இரத்தக்கடுப்பு, வயிற்றிலெரிச்சல், மூலக்கடுப்புமுதலியவைகள் நீங்கும்.

தேங்காய் எண்ணெ.

ஏலம், கஸ்தூரிமஞ்சள், கார்போகஅரிசி, சருஞ்சீரகம், கடுக்காய்த்தோல், நீடமுத்துவகைக்கு விரு ச ஊமத்தைக்காய்க்குள் வைத்து சீலைசெய்து காய்மாத்திரம் வேகும்பதமாய்ப் புடமிட்டுப் பின்காய்க்கி உள்ளிருக்கும் சரக்குகளைக்காயவைத்து இடித்துச்சூரணித்து தேங்காயெண்ணெயால் நன்சாட்டி ஆழாக்குத்தேங்காயெண்ணெயில்கலக்கி மூன்றுநாள்சூரியபுடம்வைத்து சொரிசிரங்கு,கரப்பன் இவைகளுக்கு மேற்பூசநீங்கும்.

நல்லெண்ணெ.

எள்ளெண்ணெ படி ௧, மருட்கிழங்கு, உள்ளி,சீரகம்,ரோகணி, விளங்கம் வகைக்கு பலம் க இவைகளை ஆவின்பாலாலாட்டிஷை எண்ணெயிற்கறைத்து நிம்பழச்சாறுபடி-வ சேர்த்து பதமாய்க்காய்ச்சி வடிசெய்து இரண்டுகாசெடை உள்ளுக்குக்கொடுக்கமாந்தம், கணம்முதலியவைநீங்கும்.

சோதிரிஷிதைலம்.

கியாழம்.

அவுரி, முன்னை, சார்வேளை, அழிஞ்சில், சிவனார்வேப்பு, சிறுபுள்ளடி, நற்சங்கன், செங்கத்தாரி நிலவாகை புங்கன், நொச்சில், பூவரசு, குட்டிக்களா குதம்பை, குமிழன் குட்டிவிளா, முருங்கை, மிளகரணை, முட்காவேளை, பாவட்டை, வெட்பாலை, வெள்ளெருக்கன், கண்டங்கத்திரி, சித்திரமூலம் தூதுளை, பெருங்குதம்பை, ஓரிதழ்த்தாமரை, உத்தாமணி, விஷ்ணுகாந்தி சத்திசாரணை,நன்னாரி, எலியாலன்முதலிய வேர்தினுசுகள் வகைக்கு விரு-ம-நறுக்கிப்போட்டுப் பாண்டத்திட்டுக் கியாழமிடவும்.

சாறுவகைகள்.

நற்பாகல், நாய்ப்பாகல், ஆடாதோடை, சின்னி, வெள்ளெருக்கன், புங்கன், நிம்பழம், முடக்கற்றான், காட்டுக்குறிஞ்சான் மாவிலிங்கம் வகைக்கு இலைச்சாறுபடி-வ-பிழிந்துவேறுபாண்டத்தில்வைக்கவும்.

சிறுநீர்வகைகள்.

பசு, எருமை, வெள்ளாடு, சிறுவர்கள்நீர்வகைக்கு மூத்திரவகைகள்படி-வ ஒன்றுசேர்த்தொருபாண்டத்தில் வைக்கவும்.

கற்கவகைச் சூரணங்கள்.

கருஞ்சீரகம், கஸ்தூரிமஞ்சள், மஞ்சள், மரமஞ்சள், வாய்விளங்கம், கடுக்காய், சிட்டம், சதகுப்பி, சிற்றரத்தை, பேரரத்தை செண்பகப்பூ, திப்பிலி, பெருங்காயம், ஜாதிக்காய் செவ்வியம், மைசாட்சி; வகைக்கு விரா-௬, வசம்பு, உள்ளி வகைக்குவிராகனெடை-௰, வலம்புரிக்காய் விரா-௰௬ இவைகளை இடித்துச்சூரணித்து மேற்கூறியவேர் வகைகளின் கியாழத்தால்-௪-ஜாமமும், இலைச்சாற்றால்-௪-ஜாமமும், மூத்திரவகைகளில்-௪-ஜாமமும் நன்றாயாட்டிப் பாண்டத்திட்டு வேப்பெண்ணெ, விளக்கெண்ணெவகைக்கு நாழிவிட்டுக்கலக்கிஅடுப்பேற்றி வவ்வால்-உ, காகம்-க, ஓணான்-க, முயல் க, சிற்றோணான்-௩, உடும்பு-க, பாம்பு-க இவைகளை அறுத்து உதிரத்தை ஷை எண்ணெயிற்கலந்தும் தோல், இறகு, குடல், எலும்புமு தலியவைபோக்கி கண்ட துண்டங்களாக்கி கூடச்சேர்த்து இரண்டுஜாமமெரித்து இறக்கி மறுநாள் அடுப்பேற்றி மெழுகுபதமாகக்காய்ச்சி இறைச்சிகளை அப்புறப்படுத்தி வடிகட்டி காசெடை உள்ளுக்குக்கொடுத்து தலைமுழுதுந்தேய்த்தூஉடம் பெங்குப்பூசிவர குமரகண்டவலி, பிறவலி, காக்கைவலி, சன்னிவலி, உள்வலி, ரணவலி, முகவாதவலி, முக்கன்னிவலி கண்ணிமைவலி, குதிரைவலி, நடுக்குவலி, முசல்வலி, பாரிசவாய்வு, சந்துவாய்வு முடக்குவாய்வு, உள்ளங்கால்வாய்வு, உச்சிவாய்வு, கணுவாய்வு முதலியவை நீங்கும். பத்தியம் புளி, புகை, புலால், கடுகெண்ணெ முதலியதும் நீக்கவும்.

ஜாதிக்காய் எண்ணெ.

ஜாதிக்காய், ஜாதிபத்திரி, ஏலம், கோஷ்டம், அதிவிடயம், குங்குமப்பூ, அதிமதுரம், சுண்டுபரங்கி, சித்திரமூலம், சுக்கு, செவ்வியம், பேரரத்தை, பொற்கடுக்காய், தான்றிக்காய், மாசிக்காய், நற்சீரகம், வால்மிளகு, குராசானிஓமம், சதகுப்பி, சித்திரமூலம் வகைக்கு விரா-உ, ஓமம் விரா-௫, வசம்பு விரா-௬ இவைகளைச் சூரணித்து ஈயத்தண்டு, பழம்பாசி, இலைக்கொழுந்து, நுணா, நாவற்கொழுந்து, விடத்தாரி, கருவேலம், சங்கிலை கெச்சக்காயிலை, கொட்டைசரந்தை, கிலுகிலுப்பை, சடைச்சி, குதிரைவாலி, சிறுபுள்ளடி, கண்டங்கத்திரி, ஜோகி, செருப்படை, துளசி, தும்பை, கோழிஅவரை, ஆடாதோடை, வல்லாரை, பொடுதலை, வேளை, தவசிமுருங்கை, வரப்பூலாவகைக்கு இலைச்சாறு படி அரைக்கால் விளக்கெண்ணெ படி-க ஒன்றாய்க்கலந்து முலைப்பால் ஆழாக்கும் சேர்த்து திருநீற்றுபத்திரிவேரும், கருவேப்பிலை ஈர்க்கு நறுக்கிக் கூடப்போட்டுப் பரமாய்க்காய்ச்சி உச்சிக்

கரண்டிவீதம்கொடுக்க கணம், மாந்தம், நீர்மேகம், கிரந்திமுதலியவை நீங்கும்.

சூரியபுடதைலெண்ணே.

சிறுபுள்ளடியிலே, கழல்கொழுந்து, அவுரி, பொடுதலை வகைக்கு பிடி-க வையாநறுக்கி ஆழாக்கு நல்லெண்ணெயில்போட்டு சூரியபுடம் வைத்து உள்ளுக்குகொடுத்து மேலும்பூச கணமாந்தம்போம்.

முடுகுதயிலம்.

வெள்ளைப்பூண்டு பலம்-ய, கடுகு பலம்-ய-சேர்த்து குழித்தயிலமிறக்கி துவாலையிட உரம்வீழ்தல்முதலியவைநீங்கும்.

வேப்பெண்ணே.

வேப்பெண்ணெபடி-உ, சங்கிலைச்சார், பாவட்டைச்சார், முசுமுசுக்கை வகைக்கு படிஅரைக்கால் ஷ எண்ணெயிற்சேர்த்து, சுக்கு, திப்பிலி, வசம்பு, மிளகு நற்சீரகம், கருஞ்சீரகம், கஸ்தூரிமஞ்சள், பூண்டுவகைக்கு விரு-க-பொடித்துப்போட்டு மெழுகுபதமாகக்காய்ச்சி வடிசெய்து தட்டெடைகொடுக்க சன்னி, சுரம், கபம், மாந்தம் முதலியதும் நீங்கும்.

பதினெட்டுகரப்பானுக்கு எண்ணே.

பூவரசு, செய்கத்தாரி, கண்டங்கத்திரி, நிலவாகை வகைக்கு விரு-ய, நறுக்கிக்கியாழமிட்டு மிளகு, சதகுப்பி, வசம்பு, வலம்புரிக்காய், வெள்ளுள்ளி, பரங்கிப்பட்டை, கார்போகஅரிசி, கடுகு சீரகம் வகைக்குகழஞ்சி-உ இவைகளைச்சூரணித்து முலைப்பாலலாட்டி ஷ கியாழத்தில்கறைத்து வேறுமுலைப்பால்படி-வ-விட்டு விளக்கெண்ணெ படிசேர்த்து மெழுகுபதமாகக்காச்சிவடிசெய்து உச்சிக்கரண்டிவீதம் உள்ளுக்குக்கொடுத்து மேலும்பூச கரப்பன்-யஅ, மாந்தம், கணம்-யஅம் போகும்.

இருமலுக்குச்சூரணம்.

கண்டங்கத்திரிவிரை, அமுக்கரா, திப்பிலி இவைகளைச் சமன்கொண்டுசூரணித்து ஆவின்பாலில் பிட்டுவைத்து உணர்த்தி சீனி சமன்சேர்த்து திரிகடிப்பிரமாணம்-ய நாள் இருவேளைகொள்ள வாந்தி, சுரம், இருமல், ஈளைமுதலியதுநீங்கும்.

அபினிமாத்திரை.

அதிவிடயம், ஜாதிக்காய், ஜாதிபத்திரி, கடுக்காய், தான்றிக்காய், மிளகு, சீரகம், கருஞ்சீரகம் வகைக்கு விரு-உ, ஏலம் விரு-க இவைகளையிடித்துச்சூரணித்து அபின் விரு-உ-சேர்த்து மாதளிர் அத்திப்

பட்டைக்கியாழம்வைத்து அக்கியாழத்தால் ஷை சரக்குகளை ஓருசாம மாட்டி அடையாகத்தட்டிக்காயவைத்துப் பின் அரசிலைபத்துசுற்றிப் பத்திதருவிற்புடம்போடவும். மேற்கூறியவண்ணம் அறைத்தறைத்து அடைகட்டிக் காயவைத்து-ம-புடம்போட்டுக் கல்வத்திலிட்டு கெஞ் சாக்கியாழத்தில் நாலுஜாமமாட்டிக் குன்றியளவுண்டைசெய்துகுளிகை ஒன்றைதேனில்தாக்க சிதபேதி, அதிசாரபேதி, கனாக்கழிச்சல், ஊஷ் ணபேதி முதலியவைபோகும்.

உப்பல்மாந்தக்குளிகை.

முட்காவேளை ஓமம், கடுகுரோகணி வகைக்கு பலம்-க இடித் துச்சூரணித்து சோத்துப்பு பலம்-வ-சேர்த்து மேனிச்சாற்றால் ஒரு ஜாமமாட்டிக் குன்றியளவுண்டைசெய்து இஞ்சிச்சாற்றில் அல்லது தேனில்தாக்க வயிறுப்பல், மந்தம், பொருமல் முதலியவை நீங்கும். இதுவரையில் சிசுவாகடம் முடிவுபெற்றது.

மேற்கூறிய சிசுவாகடத்தின் அவுஷதங்களுக்குச் சிலகடும்பத தியம் சொன்னதுபோக, மற்றவைகளுக்கெல்லாம் சிசுவின் தாயார் இறைச்சி, கடுகு, நல்லெண்ணை, மாப்பண்டம், கிழங்குவகைகள்முத லியவை நீக்கவேண்டும்.

அன்றி இதிற்கூறிய அவுஷதங்களில் சேர்ந்துவரும் கற்கவகை களைச்சூரணித்து ஆவின்பாலில் பிட்டுவைத்துணர்த்தி சேர்த்துக் கொள்ளவும்.

இனி இரண்டாம்பாகம், மூன்றும்பாகம் அச்சிடும்போது கடை யில் சிசுவாகடத்தில் சிசுக்களுக்குநோய்வருமாறும், தக்கஅவுஷதங் களும், உற்றபத்தியபாகங்களும், ஒத்தஅநுபானங்களும், சுத்திவகை களும் நன்காராய்ச்சிசெய்து வெகுதெளிவாய் எழுதுவோமாக.

இந்த இராஜவயித்தியபோதிநிஎன்னும் புத்தகத்தில் பாஷாணங் களின் கட்டுவகைகளையும், சுண்ணவகைகளையும், முன்னோர்கள்கூறிய முப்புமுடிக்காமையாலும்,அநுபவமின்மையாலும் எழுதப்படவில்லை.

கும்பமுனி போகமுனி புண்ணாக் கீசர் கோரக்கர் யூகிமுனி நந்தி தேசர், அம்புவியில் தன்வந்திரி யானோர் பாதம் ஆவலுடன் சென்னி மிசை வைத்து போற்றி, இம்மையுளோ ரெவற்குமுபயோக மாக யிசைக்கவெண்ணி செய்யுளெலாம் வசன மாக்கி, செம்மையா யிராஜ வயிதியந்தா னென்று செப்பினேன் முதற்பாகம் முற்று முற்றே.

இராஜவயித்தியபோதிநி

முதற்பாகம் - முற்றிற்று.